
# 1980 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 19</u>

**02.01.1980** வரக்கூடிய உலகம் எப்படி இருக்கும்?

**04.01.1980** நிகழ்கால ராஜ்ய அதிகாரிதான் எதிர்கால ராஜ்ய அதிகாரி!

**07.01.1980** சங்கமயுகத்தின் இராஜபதவி மற்றும் சத்யுகத்தின் இராஜபதவி!

**09.01.1980** ஆன்மீக ஆடை மற்றும் ஆன்மீக அலங்காரம்!

**14.01.1980** ஆன்மீக சேனைகளுடன் ஆன்மீக தளபதியின் சந்திப்பு!

**16.01.1980** ஆல்மைட்டி அத்தாரிட்டி (அனைத்து சக்திகளின் அதிகாரி) ராஜயோகி சபை மற்றும் மக்கள் விரும்பும் சபை!

**18.01.1980** நினைவு நாளன்று குழந்தைகளுக்காக பாப்தாதாவின் அறிவுரைகள்!

**21.01.1980** தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்துதல்) செய்வதற்கான விதி!

**23.01.1980** பவித்ரத்தின் (தூய்மையின்) மகத்துவம்!

**25.01.1980 பிந்துவின் (ஞானக் கடல் பரமாத்மா) சந்திப்பு பிந்துவுடன் (ஆத்மா)!**

**28.01.1980** சம்பூர்ண பிரம்மாவிற்கும் மற்றும் பிராமணர்களின் சம்பூர்ண சொரூபத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்திற்கான காரணம் மற்றும் நிவாரணம்!

**30.01.1980** அன்பு, உதவி மற்றும் சக்தி சொரூபத்தின் பரீட்சை தாள்களின் சோதனை மற்றும் அதன் முடிவு!

**01.02.1980** சூட்சும வதனத்தின் காரிய நடவடிக்கைகள்!

**04.02.1980** பாக்கிய விதாதா பாபா மற்றும் பாக்கியசாலி குழந்தைகள்!

**06.02.1980** அசரீரி ஆவதற்கான சுலபமான விதி!

**07.02.1980** விசித்திரமான இராஜ தர்பார்!

**09.02.1980** மதுபன் நிவாசிகளின் சிறப்பு!

**28.11.1980** சம்பூர்ண நிலை அடையும் வழி!

**30.12.1980** சிநேகம், சகயோகம், மற்றும் சக்தி சொரூபத்தின் சோதனைத்தாள், அதன் முடிவும்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 02.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# வரக்கூடிய உலகம் எப்படி இருக்கும்?

இன்று பாப்தாதா எந்த சபையை பார்த்துக் கொண்டிருக்கிறார்? இது இறைவனின் குழந்தைகளாக இருப்பவரிலிருந்து எதிர்காலத்தில் இளவரசன் இளவரசிகளாக ஆகப்போகிறவர்களின் சபை ஆகும். உண்மையான தந்தையின் குழந்தைகள் அனைவரும் இறைவனின் குழந்தைகளாவீர்கள். இந்த போதை எப்பொழுதுமே இருக்கிறதா? மகாராஜாவின் குழந்தைகளின் வாழ்க்கையை விட இந்த வாழ்க்கை பல மடங்கு உயர்ந்தது. அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் தன்னுடைய உயர்ந்த நிலையை தெரிந்து கொண்டே நிரந்தரமாக அந்த போதையில் இருக்கிறீர்களா? இன்று வதனத்தில் தந்தை (சிவபாபா) மற்றும் தாதா (பிரம்மபாபா) இருவர்களுக்கிடையே இந்த இறை குழந்தைகளின் மகத்துவம் எவ்வளவு உயர்ந்தது என்று ஆன்மீக உரையாடல் நடந்தது. எதிர்கால வாழ்க்கையின் அனைத்து சம்ஸ்காரம் இந்த வாழ்க்கையிலிருந்து தான் ஆரம்பம் ஆகிறது. எதிர்காலத்தில் இராஜ வம்சமாக இருக்கும் காரணத்தினால், இராஜ்ய அதிகாரியாக இருக்கும் காரணத்தினால் எப்பொழுதும் அனைத்து செல்வங்களில் நிரம்பியவராகி ஒவ்வொரு பொருளும் அளவற்று நிரம்பியிருக்கும். எப்பொழுதும் இராஜ பதவியின் அந்த உயர்ந்த நிலையில் ஒவ்வொரு பிறவியையும் கழிப்பீர்கள். அனைத்து பிராப்திகளும் ஒவ்வொருவரின் வாழ்க்கையில் உங்களுக்கு சேவை செய்வதற்காக நாலாபுறங்களிலும் சுற்றிக் கொண்டே இருக்கும். உங்களுக்கு பிராப்தியின் இச்சை இருக்காது ஆனால் அனைத்து பிராப்திகளும் என்னுடைய எஜமானன் என்னை காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்ற இச்சை உள்ளதாக இருக்கும். நாலா புறங்களிலும் சாதனங்களின் சுரங்கங்கள் நிரம்பி இருக்கும். ஒவ்வொரு சாதனமும் அவரவர்களின் சுகம் கொடுப்பதற்காக எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கும். எப்பொழுதும் குஷியின் இசை இயல்பாகவே ஒலித்துக் கொண்டிருக்கும். அதை வாசிப்பதற்கான அவசியம் இருக்காது

உங்களுடைய படைப்பாகிய வனஸ்பதி தன்னுடைய விஷ்வபதியின் எதிரில் இலைகளை ஆட்டுவதினால் விதவிதமான இசையை ஒலிக்க வைக்கும். மரங்களின் இலைகள் ஆடுவது அசைவதினால் வகை வகையான இயற்கையான இசையாக அது ஒலிக்கும். எப்படி இன்றைய நாட்களில் அனேக விதமான இசையை போலியாக உருவாக்குகிறார்கள், அதே போல் பறவைகள் எழுப்பும் ஒலி வகை வகையான இசையாக இருக்கும். உயிருள்ள பொம்மைகளுக்குச் சமமாக அனேக விதமான விளையாட்டை உங்களுக்கு காண்பிப்பார்கள். எப்படி இன்றைய நாட்களில் இங்கு மனிதர்கள் பொழுது போக்கிற்காக விதவிதமான மொழிகளைக் கற்றுக் கொள்கிறார்கள். அதே போல் அங்கே உள்ள பறவைகள் வகைவகையான அழகான இனிமையான ஒலிகள் மூலமாக உங்களுடைய சைகைகளின்படி மனமகிழும் பொழுது போக்கிற்கான இசையை ஒலிப்பார்கள். இதே விதமாகவே பழங்களும் பூக்களும் இருக்கும். பழம் அந்த மாதிரி வகை வகையான ரசம் (சாறு) நிரம்பியதாக இருக்கும். எப்படி இங்கு தனித்தனியாக உப்பு, இனிப்பு மற்றும் மசாலா ஆகியவை போட்டு பழச்சாறை தயாரிக்கிறீர்கள், அதே போல் அங்கே இயற்கையாகவே பழங்கள் வகை வகையான சாறு நிரம்பியதாக இருக்கும். இந்த சீனி ஆலை ஆகியவை இருக்காது ஆனால் சீனி பழம் இருக்கும். எப்படிப்பட்ட சுவை வேண்டுமோ அதை இயற்கையான பழத்திலிருந்து தயாரிக்க முடியும். இந்த இலைகள் கீரைகளின் சப்ஜிகள் (சமைத்த காய்கறி) இருக்காது ஆனால் பழங்கள் மற்றும் மலர்களின் சப்ஜிகள் இருக்கும். மலர்கள் மற்றும் பூக்களின் சப்ஜிகளைத் தயாரிப்பார்கள். பால் நதியாக ஓடும். நல்லது இப்பொழுது குடிப்பீர்களா என்ன? இயற்கையான பழச்சாறின் பழம் வேறாக இருக்கும், அருந்துவதற்கான பழம் வேறாக இருக்கும், குடிப்பதற்கானது வேறாக இருக்கும். கஷ்டப்பட்டு பழத்திலிருந்து சாறை பிழிய வேண்டியதாக இருக்காது. ஒவ்வொரு பழமும் அந்த அளவு நிரம்பி இருக்கும். எப்படி இப்பொழுது தேங்காய் தண்ணீர் குடிக்கிறீர்கள் இல்லையா? அதே போல் பழத்தை எடுத்தீர்கள் கொஞ்சம் அழுத்தினீர்கள் மற்றும் அதைக் குடித்தீர்கள். குளிப்பதற்காக தண்ணீர் இருக்கும். அதுவும் எப்படி இன்றைய நாட்களின் கங்கை ஜலம் அதற்கு மலைகளிலிருக்கும் மூலிகைகளின் காரணமாக விசேஷ மகத்துவம் இருக்கிறது, கிருமிகள் உருவாவதில்லை, எனவே தூய்மையானது

என்று வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. அதே போல் அங்கே மலைகளில் நறுமணம் நிறைந்த மூலிகைகள் இருக்கும் என்பதால் அங்கிருந்து தண்ணீர் வரும் காரணத்தினால் இயற்கையாகவே நறுமணம் நிறைந்ததாக இருக்கும். வாசனைப் பொருட்களை போடுவதில்லை ஆனால் இயற்கையாகவே மலைகளைக் கடந்து அந்த மாதிரி நறுமணம் நிறைந்த மூலிகைகளைக் கடந்து வருவதினால் நறுமணம் நிறைந்த நீராக இருக்கும். அங்கே அமிர்தவேளையில் பாடல் உங்களை எழுப்பாது, பறவைகளின் இயற்கையான ஓசையே இசைபாக இருக்கும். அதைக் கேட்டு நீங்கள் எழுவீர்கள். எழும் நேரம் காலை நேரமாகத் தான் இருக்கும் ஆனால் அங்கே களைப்படைந்தவர்களாக இருக்க மாட்டார்கள். ஏனென்றால் எப்பொழுது சைத்தன்ய தேவதைகள் காலையில் எழுகிறார்கள் என்பதினால் தான் பக்தியிலும் பக்தர்கள் அதிகாலையில் எழுந்து எழுப்புகிறார்கள். பக்தியின் மகத்துவமும் அமிர்தவேளை நேரத்தினுடையதாகும். அதிகாலையில் தான் எழுவார்கள் ஆனால் எப்பொழுதுமே பிரகாசமாக ஒளி விட்டுக் கொண்டிருக்கும் ஜோதியாக இருப்பார்கள். அங்கு கடுமையான வேலை எதுவும் கிடையாது எந்த கடுமையான வேலையும் கிடையாது, புத்திக்கான வேலையும் கிடையாது. எந்த சுமையும் கிடையாது எனவே விழித்திருப்பது மற்றும் தூங்குவது இரண்டும் சமமாக இருக்கும். எப்படி காலையில் எழுந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது யோசிக்கிறீர்கள் இல்லையா, அந்த மாதிரி அங்கே இந்த எண்ணம் வராது. நல்லது அங்கே படிப்பீர்களா என்ன? அல்லது படிப்பதிலிருந்து விடுபட விரும்புகிறீர்களா? அங்கே உள்ள படிப்பும் ஒரு விளையாட்டாக இருக்கும். விளையாட்டை விளையாடிக் கொண்டே படிப்பார்கள். தன்னுடைய இராஜ்யத்தின் ஞானத்தையோ வைத்துக் கொள்வார்கள் தான் இல்லையா. அப்படி இராஜ்யத்தின் ஞானம் தான் படிப்பு ஆனால் அங்கே உள்ள முக்கியமான பாடம் ஓவியம் வரைவதாகும். சிறு குழந்தைகள், பெரியவர்கள் அனைவரும் கலைஞர்களாக இருப்பார்கள், ஓவியர்களாக இருப்பார்கள். இசை, ஓவியம் மற்றும் விளையாட்டு. இசை என்றால் பாடல் கலையின் இசையை பாடுவார்கள், விளையாடுவார்கள் இதிலேயே படிப்பை படிப்பார்கள். அங்கே உள்ள சரித்திரமும் சங்கீதம் மற்றும் கவிதைகளில் இருக்கும், நேரடியாக போர் அடிக்கும் மாதிரியாக (மனம் சோர்வு அடையும் மாதிரி) பாடம் இருக்காது நடனமும் ஒரு விளையாட்டு தான் இல்லையா. நாடகமும்

நடிப்பார்கள் ஆனால் சினிமா இருக்காது. நாடகம் சிரிப்பூட்டும் பொழுது போக்காக இருக்கும். நாடகசாலைகள் மிக அதிகமாக இருக்கும். அங்கே உள்ள மாளிகைகளின் உள்ளேயே விமானங்களும் வரிசையாக நிறுத்தப்பட்டு இருக்கும். மேலும் விமானத்தை ஓட்டுவது கூட மிகச் சுலபமாக இருக்கும். அணு சக்தியின் ஆதாரத்தில் அனைத்து காரியங்களும் நடக்கும். உங்கள் காரணமாக இந்த கடைசி கண்டுபிடிப்பு வந்திருக்கிறது.

பணத்தில் தங்க நாணயங்கள் இருக்கும் ஆனால் இன்றைய நாட்களில் இருப்பது போல் இருக்காது ரூபம் வடிவம் மாறி இருக்கும். மிக நல்ல நல்ல வடிவத்தில் இருக்கும். கொடுக்கல் வாங்கல் நிமித்த மாத்திரம் இருக்கும். எப்படி இங்கே மதுபன்னில் பரிவாரமாக இருந்த போதிலும் பொறுப்பாளர்களாக தனித்தனியாக ஆக்கியிருக்கிறோம் இல்லையா? தனித்தனியாக இலாக்காக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பரிவாரமாக இருந்த போதிலும் பொறுப்பில் இருப்பவரிடமிருந்து பெறுகிறீர்கள் தான் இல்லையா? ஒருவர் கொடுக்கிறார், இன்னொருவர் பெறுகிறார். அதே போல் அங்கேயும் குடும்ப முறை இருக்கும். கடைக்காரர் மற்றும் வாடிக்கையாளர் என்ற உணர்வு இருக்காது. எஜமானத்தன்மையின் உணர்வு தான் இருக்கும். அவர்களுக்குள் பண்டமாற்றம் மட்டும் செய்வார்கள். கொஞ்சம் கொடுப்பார்கள், கொஞ்சம் பெறுவார்கள். குறைவோ யாருக்கும் இருக்காது. பிரஜைக்கும் குறை இருக்காது. பிரஜையும் தன் உடலை நிர்வகிப்பதற்காக பல மடங்கு நிரம்பியவராக இருப்பார். எனவே நான் முதலாளி, நான் வாடிக்கையாளர் என்ற உணர்வு இருக்காது. அன்பு நிறைந்த கொடுக்கல் வாங்கல் இருக்கும். கணக்கு வழக்கின் இழுபறி இருக்காது. கணக்குப் பதிவேடு இருக்காது.

இரத்தினம் பதித்த கிரீடம் இருக்கும். இயற்கையாகவே இசை ஒலித்துக் கொண்டிருக்கும். கஷ்டப்பட்டு இசைப்பதாக இருக்காது. விரல் வைத்தீர்கள் மற்றும் இசைந்தது. ஆடையே மிக நல்லதாக அணிவீர்கள். எப்படிப்பட்ட காரியமோ அதற்கேற்றபடி ஆடை இருக்கும். எப்படிப்பட்ட இடமோ அதற்கேற்றபடி ஆடை இருக்கும். வேறு வேறு காரியத்தில் வேறு வேறு ஆடை அணிவீர்கள். அலங்காரமும் அனேக விதமாக இருக்கும். வகை வகையான கிரீடம் இருக்கும், நகைகள் இருக்கும்

ஆனால் சுமை உள்ளதாக இருக்காது பஞ்சையும் விட லேசானதாக இருக்கும். உண்மையான தங்கமாக இருக்கும் மேலும் அதில் வைரம் விதவிதமான வண்ணத்தின் ஒளியை பரப்பக்கூடியதாக ஒவ்வொரு வைரமும் பார்க்கத் தென்படும். ஒரு வைரத்திலிருந்து ஏழு வர்ணங்கள் தென்படும். இங்கே விதவிதமான வண்ணங்கள் அடங்கிய ட்யூப் லைட் போடுகிறீர்கள் தான் இல்லையா? அங்கே வைரமே விதவிதமான வண்ணங்களின் ட்யூப் மாதிரி பிரகாசிக்கும். ஒவ்வொருவரின் மாளிகையும் பல வண்ணங்கள் அடங்கிய லைட் மூலம் அலங்கரிக்கப்பட்டதாக இருக்கும் எப்படி இங்கே அனேக கண்ணாடிகள் வைத்து ஒரு பொருளை அனேக ரூபத்தில் காண்பிக்கிறீர்கள், அதே போல் அங்கே உள்ள நகைகள் அந்த மாதிரி இருக்கும். அதன் மூலம் மேலே உள்ள காட்சி ஒன்றிற்கு பதிலாக அனேக ரூபங்கள் தென்படும். தங்கத்தின் லைட் மற்றும் வைரத்தின் லைட் அதாவது ஜொலிப்பு இரண்டும் இணைந்து மாளிகை மிக பிரகாசமாக மின்னிக் கொண்டிருப்பதாகத் தென்படும். சூரியனின் கிரணங்களிலிருந்து வைரங்கள் மற்றும் தங்கம் அந்த மாதிரி பிரகாசிக்கும் ஆயிரம் லைட்கள் எரிவது போல் இருக்கும். இவ்வளவு வயர்கள் ஆகியவற்றிற்கு அவசியமே இல்லை. மிக அழகான விதவிதமான எப்படி இன்றைய நாட்களின் இராஜ குடும்பத்தின் விளக்குகள் நன்றாக ஒளி வீசுவதைப் பார்த்திருக்கிறீர்கள். அனேக விதமான விளக்குகளின் டிசைன்களைப் பார்த்திருக்கிறீர்கள். அங்கே உண்மையான வைரங்களாக இருக்கும் காரணத்தினால் ஒரு தீபம் அனேக தீபங்களின் காரியம் செய்யும். அதிகமாக உழைக்க வேண்டியது இருக்காது. அனைத்தும் இயற்கையாக இருக்கும்.

மொழி மிக சுத்தமான ஹிந்தி தான் இருக்கும். ஒவ்வொரு வார்த்தையும் பொருளைக் குறிப்பதாக இருக்கும். அந்த மாதிரி மொழி இருக்கும். வெளிநாட்டினர்களை பார்த்து உங்களுடைய இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா எங்கே செல்லும்? அங்கே மாளிகை கட்ட வேண்டாம், மாளிகையையோ பாரதத்தில் தான் கட்ட வேண்டும். அங்கே விடுமுறையில் சுற்றி வருவதற்காகச் செல்ல வேண்டும். அது பிக்னிக்கிற்கான இடமாக இருக்கும், சுற்றுவதற்கான ஸ்தானமாக இருக்கும். அதுவும் மிகக்க குறைந்த எண்ணிக்கையில் தான் இருக்கும். அனைத்தும் இருக்காது. விமானத்தை முடுக்கி விட்டீர்கள் மேலும்

சப்தத்தையும் விட அதற்கு முன்பாக சென்றடைந்து விடும். அந்த அளவு அதிக வேகத்தில் செல்லும் விமானமாக இருக்கும். எப்படி தொலைபேசி பேசிக் கொள்கிறீர்கள் இல்லையா, அந்த அளவு விரைவில் விமானத்தினால் சென்றடைந்து விடுவீர்கள். எனவே தொலைபேசி மூலம் சொல்வதற்கான அவசியம் இருக்காது. விமானமும் குடும்பத்திற்கானதாகவும் இருக்கும், மேலும் ஒவ்வொருவருக்கானதாக தனிப்பட்டதாகவும் இருக்கும். எந்த நேரம் எது தேவையோ அதை உபயோகியுங்கள். இப்பொழுது நீங்கள் விமானத்தில் அமர்ந்து விட்டீர்கள். இப்பொழுதோ சத்யுகத்தின் விமானத்தை விட்டு விட்டு புத்தியின் விமானத்தில் வந்து விடுங்கள். புத்தியின் விமானமும் அந்த மாதிரி வேகம் உள்ளதாக இருக்கிறதா? எண்ணத்தின் அளவு வேகமுடையதாக இருக்கிறதா? எண்ணத்தை உருவாக்கினீர்கள். மேலும் சந்திரன், நட்சத்திரங்களையும் தாண்டி நம்முடைய வீட்டை சென்றடைந்தீர்கள். அந்த மாதிரி புத்தியின் விமானம் எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கிறதா? எப்பொழுதும் தடைகளிலிருந்து விலகியிருக்கிறதா? அதனால் எந்த விதமான விபத்தும் ஏற்பட வேண்டாம். பரந்தாமம் செல்ல விரும்புனீர்கள். மேலும் பூமியையே விட முடியவில்லை. மேலும் ஏதோ மலையோடு மோதி கீழே விழுந்து விட்டீர்கள். வீணான எண்ணம் கூட மலையோடு மோதுவது தான். அப்படி விபத்துக்களிலிருந்து விடுபட்ட எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கும் புத்தியின் விமானம் அப்படி இருக்கிறதா? முதலில் இந்த விமானத்தில் எப்பொழுது அமர்வீர்களோ அப்பொழுது தான் அந்த விமானம் கிடைக்கும். அந்த மாதிரி எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கிறீர்களா? எப்படி சொர்க்கத்தின் விஷயங்களில் ஆமாம் ஆமாம் என்று கூறிக் கொண்டே வந்தீர்கள் அதே போல் இந்த விஷயங்களிலும் ஆமாம் ஆமாம் என்று கூறுவதில்லை.

இன்று வதனத்தில் சொர்க்கத்தின் வரைபடத்தை எடுத்தோம், அதனால் உங்களுக்கும் கூறினோம். பிரம்மாபாபா சொர்க்கத்தில் செல்வதற்காக தயார் ஆகிக் கொண்டிருக்கிறார் இல்லையா? அதனால் சொர்க்கத்தின் வரைபடத்தையும் எடுத்தோம். நீங்கள் அனைவரும் தயாராக இருக்கிறீர்கள் தான் இல்லையா? என்ன தயார் ஆக வேண்டும் அதையோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? யார் தந்தையுடன் சொர்க்கத்தின் கேட்டை (வாசலை) 'பாஸ்' (கடந்து) செல்வீர்கள்?

அதற்கான 'பாஸ்'ஐ (அனுமதி அட்டை) பெற்று விட்டீர்களா? கேட் பாஸையோ பெற்றுவிட்டீர்கள் ஆனால் தந்தையுடன் கேட் பாஸ் செய்வதற்கான பாஸ் இருக்க வேண்டும். ஒன்று விஜ.பி கேட் பாஸ் இருக்கும் மற்றும் இன்னொன்று ஜனாதிபதியின் பாஸ்-ம் இருக்கும். இது விஷ்வபதிக்கான கேட் பாஸ் ஆகும். நீங்கள் எந்த கேட் பாஸ் பெற்றிருக்கிறீர்கள்? தன்னுடைய பாஸை சோதனை செய்யுங்கள்.

அந்த மாதிரி தற்சமயம் தந்தையின் குழந்தையாக இருப்பவரிலிருந்து மகாராஜாவின் குழந்தை ஆகக்கூடிய இயற்கையின் அதிபதியிலிருந்து உலகின் அதிபதியாக ஆகக்கூடிய, மாயாவை வென்றவரிலிருந்து உலகை வென்றவராகக்கூடிய, ஒரு எண்ணத்தின் விதி மூலமாக வெற்றியை அடையக்கூடிய அந்த மாதிரியான அனைத்து வெற்றி சொரூப, எப்பொழுதும் உடன் இருக்கக்கூடிய மேலும் பாஸ் உடன் இருந்து பாஸ் (கடந்து) செய்யக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு (டெல்லி மண்டலம்): 1) தன்னுடைய இராஜ்யத்தை அலங்கரிப்பதற்காக நினைவு மற்றும் சேவையின் சமநிலை வையுங்கள்! அனைவருமே தன்னுடைய இராஜ்யத்தின் செய்தியையோ கேட்டீர்கள். இப்பொழுது இராஜ்யத்தை தயார் செய்வதற்காக டெல்லியில் இருப்பவர்களுக்கு விசேஷ பொறுப்பு இருக்கிறது. அந்த மாதிரி பொறுப்புள்ளவர் என்று புரிந்து நடந்து கொள்கிறீர்களா? சேவை மற்றவர்கள் செய்ய வேண்டும் மற்றும் பலனை நான் அனுபவிக்க வேண்டும் என்று அப்படி இல்லையே? சேவை செய்து பலனை அனுபவிக்க வேண்டும். பொதுவாகக்கூட வேலை செய்து, தன்னுடைய உழைப்பினால், அன்போடு ஒருபொருளை தயார் செய்கிறார் என்றால், அவருக்கு விசேஷமான குஷி இருக்கும். அப்படி நீங்கள் அனைவரும் விசேஷமாக எந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இராஜ்யத்தை தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். இராஜ்யத்தை அலங்கரிப்பவர்கள் சேவை மற்றும் நினைவின் சமநிலையில் இருங்கள். ஒவ்வொரு எண்ணத்தில் கூட சேவை இருக்கட்டும். எப்பொழுது ஒவ்வொரு எண்ணத்தில் சேவை இருக்கிறது என்றால் வீணானவைகளிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். எனவே எந்த எண்ணம் எழுந்தது எந்த விநாடி கடந்து சென்றதோ அதில்

சேவை மற்றும் நினைவின் சமநிலை இருந்ததா என்று சோதனை செய்ய வேண்டும். அப்படியானால் அதன் முடிவாக என்ன இருக்கும்? ஒவ்வொரு அடியிலும் முன்னேறும் கலை இருக்கும். ஒவ்வொரு அடியிலும் பலமடங்கு சேமிப்பு ஆகிக் கொண்டே இருக்கிறது என்றால் தான் இராஜ்ய அதிகாரி ஆவீர்கள். எனவே சேவை மற்றும் நினைவிற்கான சர்ட் வையுங்கள். சேவை வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஆகி விட வேண்டும். எப்படி உடலில் அனைத்து அங்கங்களும் அவசியமாக இருக்கிறதோ, அதே போல் பிராமண வாழ்க்கைக்கான விசேஷ அங்கம் சேவை ஆகும். சேவைக்கான வாய்ப்பு அதிகமாக கிடைப்பது கூட பாக்கியத்தின் அடையாளமாகும். ஸ்தானம் கிடைப்பது, மற்றவர்களின் நல்ல தொடர்பு கிடைப்பது, வாய்ப்பு கிடைப்பது இதுவும் பாக்கியத்தின் அடையாளம் ஆகும். உங்கள் அனைவருக்கும் சேவைக்கான பொன்னான வாய்ப்பு இருக்கிறது. உயரே தாண்டிச் செல்வதற்கான சகயோகம் கிடைத்திருக்கிறது. எனவே சேவை செய்ததற்கான நிரூபணம் கொடுக்க வேண்டும். மனதால், வாய்மொழியால், உடலால் செய்யும் காரியத்தினால், உறவு மற்றும் தொடர்பு மூலம் தினசரி சேவைக்கான மதிப்பெண்களை அவசியம் சேமிக்க வேண்டும். ஒவ்வொரு சேவை நிலையங்களிலும் ஒவ்வொரு வகையான நினைவுச்சின்ன பூச்செண்டு அவசியம் இருக்க வேண்டும். அனைத்து விதமான வி.ஐ.பி-யின் ஒரு முன்மாதிரி இருக்க வேண்டும். விஐ.பி-யின் சேவையை முக்கியமான ஸ்தானங்கள் செய்ய வேண்டும்.

**2) ஒரே சீரான நிலையை உருவாக்குவதற்கான சுலபமான வழி -ஒரு தந்தையோடு அனைத்து உறவுகளின் அனுபவம் செய்யுங்கள்!**
எப்பொழுதும் ஒரு தந்தையின் நினைவில் இருக்கக்கூடிய, ஒரு தந்தையுடன் அனைத்து உறவுகளை வைத்து நடந்து கொள்ளக்கூடிய ஒரே சீரான நிலையில் இருக்கிறீர்களா? ஒரு தந்தை மூலமாக அனைத்து ரசனை அதாவது அனைத்து பிராப்தியின் அனுபவம் செய்யக்கூடியவர் என்ற இதைத் தான் ஒருவரின் ரசனையின் நிலையில் இருப்பவர் என்று கூறுவது. அந்த மாதிரி இருக்கிறீர்களா? இன்னொருவர் கொஞ்சம் கூட தென்பட வேண்டாம் தென்படும் அளவிற்கு ஏதாவது இருக்கிறதா? தந்தையைத் தவிர வேறு ஏதாவது பார்ப்பதற்கான பொருள் இருக்கிறதா? தந்தையைத் தவிர வேறு யாராவது கூறுபவர்கள் இருக்கிறார்களா அதனால் அவரிடமிருந்து

கேட்க வேண்டியது இருக்கிறதா? அனேகரைப் பார்த்தும் ஆகி விட்டது கேட்டும் ஆகி விட்டது. மேலும் அதற்கான விளைவுகளையும் பார்த்தாகி விட்டது இப்பொழுது ஒருவரின் நினைவில் ஒரே சீரான நிலை. அனேகர்களை விட்டுவிட்டு ஒருவரின் நினைவு, ஒருவரை பாருங்கள், ஒருவரிடமிருந்து கேளுங்கள் மற்றும் ஒருவரோடு அமருங்கள். அனேகர்களுடன் உறவை வைத்து நடந்து கொள்வது கடினமாக இருக்கும். ஒருவருடன் வைத்துக் கொள்வது சுலடமாக இருக்கும். அனேக ஜென்மங்களில் அனேகர்களுடன் உறவுகளை வைத்து வந்திருக்கிறீர்கள். தந்தையுடன் வேறு, ஆசிரியரிடம் வேறு, குருவுடன் வேறு.இப்பொழுது சுலபமான வழியாக ஒருவருடன் அனைத்து உறவுகளையும் வைத்து நடந்து கொள்ளுங்கள் என்று தந்தை கூறியிருக்கிறார். எங்கு பார்த்தாலும் அங்கு ஒருவரை மட்டும் பாருங்கள். இந்த விஷயத்தின் பாவனையின் காரணமாகத் தான் பக்தி மார்க்கத்தில் எங்கும் நிறைந்தவர் என்று கூறி விட்டார்கள். நீயே நீ தான் என்று அவர்கள் கூறிவிடுகிறார்கள். நீங்கள் எப்பொழுதும் தந்தையின் துணையின் அனுபவம் செய்கிறீர்கள். எங்கு சென்றாலும் அங்கு தந்தையின் அனுபலமே இருக்கட்டும்.

**3) என்னுடையது என்பதை முடிப்பதினால் டபுள் லைட்டின் நிலை!** அனைவரும் தந்தையிடமிருந்து முழுமையான அதிகாரத்தைப் பெற்று விட்டீர்களா? முழுமையான அதிகாரத்தை பெறுவதற்காக பழையவை அனைத்தையும் கொடுக்க வேண்டியதாக இருக்கும். அப்படி இரண்டு ஒப்பந்தங்களையும் செய்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது உன்னுடையதாக இருப்பது அனைத்தும் என்னுடையது ஆனால் என் மேல் கை வைக்காதீர்கள் என்று அப்படி இல்லையே? எப்பொழுது ஒரு வார்த்தை மாறி விடுகிறது என்றால் அதாவது என்னுடையது என்பது உன்னுடையதில் மாறிவிடுகிறது என்றால் டபுள் லைட் ஆகி விடுகிறார்கள். கொஞ்சமாவது என்னுடையது வந்தது என்றால் மேலே இருந்து கீழே வந்து விடுகிறார்கள். உன்னுடையது உனக்கே அர்ப்பணம் என்பவர் எப்பொழுதும் டபுள் லைட் மற்றும் எப்பொழுதும் மேலே பறந்து கொண்டே இருப்பார் அதாவது உயர்ந்த நிலையில் இருப்பார்.

வரதானம்: திட எண்ணம் மூலமாக பலஹீனங்கள் என்ற கலியுகத்து மலையை அகற்றக்கூடிய சக்தி நிறைந்த சொரூபமானவர் ஆகுக!

மனமுடைந்து போவது, ஏதாவது விதமான சம்ஸ்காரம் மற்றும் சூழ்நிலையின் வசமாகி விடுவது, நபர் மற்றும் சாதனங்களின் பக்கம் ஈர்க்கப்படுவது -இந்த அனைத்து பலஹீனங்கள் என்ற கலியுகத்து மலையை திட எண்ணம் என்ற விரல் கொடுத்து நிரந்தரமாக அகற்றுங்கள் அதாவது வெற்றி அடைபவராக ஆகுங்கள். வெற்றி என்னுடைய கழுத்தின் மாலை என்ற இந்த நினைவின் மூலமாக எப்பொழுதும் சக்தி நிறைந்த சொரூபமானவர் ஆகுங்கள். இது தான் தந்தையின் அன்பிற்கான பிரதிபலன் கொடுப்பதாகும். எப்படி சாகார பாபா (பிரம்மாபாபா) தன்னுடைய நிலையின் ஸ்தம்பமாக ஆகிக் காண்பித்தார், அதே போல் தந்தையைப் பின்பற்றி நடப்பவராகி அனைத்து குணங்களின் ஸ்தம்பம் ஆகுங்கள்.

**சுலோகன்: சாதனம் சேவைகளுக்காகத் தான் இருக்கிறதேயன்றி ஓய்வு விரும்பியாக ஆவதற்காக அல்ல!**

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 04.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிகழ்கால ராஜ்ய அதிகாரிதான் எதிர்கால ராஜ்ய அதிகாரி!

அனைவரும் தன்னைத்தான் டபுள் ராஜ்ய அதிகாரி என்று அறிகிறீர்களா? நிகழ்காலத்திலும் ராஜ்ய அதிகாரி. மேலும் எதிர்காலத்திலும் கூட ராஜ்ய அதிகாரியாக உள்ளீர்கள். நிகழ்காலம் என்பது எதிர்காலத்தின் கண்ணாடியாகும். நிகழ்கால நிலை அதாவது கண்ணாடி மூலமாக தன்னுடைய எதிர்காலத்தைத் தெளிவாகப் பார்க்க முடிகின்றதா? எனக்குள் ரூலிங் பவர் (ஆளும் சக்தி} எந்தளவு இருக்கின்றது, விசேஷமான காரியம் செய்யக்கூடிய விசேஷமான காரியகர்தா சூட்சம சக்திகள் அதன் மீது எந்தளவு என்னுடைய அதிகாரம் இருக்கின்றது. எண்ணத்தின் சக்தி மீது, புத்தியின் மீது, தன்னுடைய சமஸ்காரத்தின் மீது எந்தளவு அதிகாரத்தின் சக்தியுள்ளது என்பதை நிகழ்கால மற்றும் எதிர்கால ராஜ்ய அதிகாரியாகும் குழந்தைகள் சோதனை செய்ய வேண்டும். இந்த விசேஷமான மூன்று சக்திகள் தான் ராஜ்ய அதிகாரி ஆவதில் சதா சகயோகி அதாவது ராஜ்ய காரியங்களை செய்வதில் முக்கியமான காரியகர்த்தாவாகும். ஒருவேளை இந்த மூன்று காரியகர்த்தாவும் ஆத்மா உங்களுடைய அதாவது ராஜ்ய அதிகாரியினுடைய தூண்டுதல்படி காரியம் செய்யுமேயானால் சதா அந்த ராஜ்யம் சரியான படி நடக்கும், எப்படி பாபா கூட மூன்று மூர்த்திகள் மூலமாசு காரியம் செய்ய வேண்டி யுள்ளது. எனவேதான் மூன்று மூர்த்திகளுக்கு புகழும், பூஜையும் நடைபெறுகின்றது. மும்மூர்த்தி சிவா என்று சொல்கின்றோம் அல்லவா? ஒரு பாபாவினுடைய மூன்று விசேஷமான காரியகர்த்தாக்கள் மூலமாக உலக காரியத்தை செய்விக்கின்றார் அல்லவா? அப்படி நீங்கள் ஆத்மாக்கள், படைப்பவராக இருக்கின்றீர்கள். மூன்று விசேஷ சக்திகள் அதாவது திரிமூர்த்தி சக்திகள் உங்களுடைய விசேஷமான காரியகர்த்தாவாகும். நீங்கள் கூட இந்த மூன்று படைப்பினுடைய படைப்பாளர்கள், எனவே சோதனை செய்யவும்

## 1980 அவ்யக்த முரளி

உங்களுடைய மூன்று படைப்புகளும் உங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் உள்ளதா?

மனம் உற்பத்தி செய்யக்கூடியது அதாவது எண்ணங்களைப் படைக்கக்கூடியது. புத்தி தீர்மானம் செய்யக்கூடியது, அதாவது, பாலனைக்கு சமமான காரியத்தை செய்யக்கூடியது. சமஸ்காரம் என்பது நல்லது கெட்டதை மாற்றக்கூடியது. எப்படி பிரம்மா ஆதி தேவனாக இருக்கின்றார். அப்படி முதல் -ஆதி சக்தி மனம் அதாவது எண்ணத்தின் சக்தியாகும். ஆதி சக்தி சரியாக உள்ளது என்றால் மற்ற காரியகர்த்தா துணைவர்களும் சரியாக காரியம் செய்வார்கள். ராஜாவாகிய நான் என்னுடைய ஆதி சக்தியான மனதை முதல் காரியகர்த்தா சதா அருகாமையில் உள்ள துணைவனைப்போல் தூண்டுதல்படி நடக்கின்றதா? ஏனென்றால் மாயை எதிரி கூட இந்த ஆதி சக்தியைத்தான் பங்காளி அதாவது துரோகியாக்கி விடுகின்றது. மேலும் ராஜ்ய அதிகாரத்தையடைய முயற்சி செய்கின்றது. எனவே ஆதி சக்தியை தன்னுடைய அதிகார சக்தியின் ஆதாரத்தின் சகயோகி விசேஷமான காரியகர்த்தாவாக்கி நடத்தவும். எப்படி ராஜா எந்த காரியமும் செய்வதில்லை, பிறரை செய்விக்கின்றார். ராஜ்ய காரியத்தை செய்யும் சபை தனியாக இருக்கும். ஒருவேளை அவர்கள் சரியாக இல்லையென்றால் ராஜ்யத்தில் பிரச்சனை ஏற்படும். அதுபோல ஆத்மா செய்ய வைக்கக்கூடியது. இந்த விசேஷமான மூன்று சக்திகள் காரியம் செய்யக்கூடியுது. முதலில் இந்த மூன்றின் மீதும் நடத்தக்கூடிய சக்தி இருந்ததேயானால் சாகார கர்மேந்திரியங்கள் அதனுடைய ஆதாரத்தில் சரியான வழிப்படி செல்லும் கர்மேந்திரியங்களை நடத்துவதுகூட இந்த சக்திகள்தான். இப்பொழுது நடத்தக்கூடிய சக்தி எவ்வளவு வந்துள்ளது என்பதை சோதனை செய்யவும்.

எப்படி இரட்டை வெளிநாட்டினராக இருக்கிறீர்களோ, அப்படி டபுள் ரூலர்ஸ் ஆக இருக்கின்றீர்களா? ஒவ்வொருவருடைய ராஜ்ய காரியங்களும் அதாவது சுய ராஜ்யமும் சரியாக நடக்கின்றதா? எப்படி சத்திய யுகத்தின் ராஜ்யத்கிறகு புகழ் இருக்கின்றது. ஒரே ராஜ்யம். அதுபோல இப்பொழுது சுய ராஜ்யத்திலும் கூட ஒரே ராஜ்யம் அதாவது ஆத்மாவினுடைய தூண்டுதல்படி அனைத்தும் நடக்கின்றதா? ஒரே

தர்மம் அதாவது ஒரே தாரணை சதா சிரேஷ்டாச்சாரி முன்னேறும் கலையின் செல்ல வேண்டும். மனம் தன்னுடைய மன வழியைச் செலுத்துவது, புத்தி தன்னுடைய தீர்மானத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவது, கலப்படம் செய்வது, சமஸ்காரம் ஆத்மாவை ஆட்டி வைக்கக்கூடியதாக உள்ளதென்றால் அதனை ஒரே தர்மம், ஒரே ராஜ்யம் என்று சொல்ல முடியாது. உங்களுடைய ராஜ்யத்தின் நிலை என்ன? திரிமூர்த்தி சக்திகள் சரியாக உள்ளனவா? எப்பொழுதாவது சமஸ்காரம் குரங்கைப்போல ஆட்டி வைக்கவில்லைதானே? குரங்கு என்ன செய்யும்? மேலே கீழே குட்டிக்கர்ணம் அடிக்கும். சமஸ்காரத்தில் கூட சில நேரம் முன்னேறும் கலை, சில நேரம் இறங்கும் கலையாகி விடுகின்றது, இது குரங்கின் ஆட்டம் அல்லவா? இந்த சமஸ்காரம் உங்களை ஆட்டிவிக்கவில்லை தானே? அனைத்தும் கட்டுப்பாட்டில் இருக்கின்றதுதானே? புத்தி எதனையும் கலப்படம் செய்யவில்லைதானே? எப்படி தற்காலத்தில் உலகத்தினர் கலப்படம் செய்கின்றார்கள் அல்லவா? அப்படி புத்தி தீர்மானிக்கும் சக்தியில் கலப்படம் செய்து விடுகின்றதா? எப்போதும் புத்தி கலப்படம் செய்யாமல் இருக்கின்றதா? சில நேரம் சரியானது, சில நேரம் வீணானது என்றால் கலப்படம் ஆகி விட்டதல்லவா?

அயல்நாட்டில் மாயை வருகின்றதா? வெளிநாட்டினரிடம் மாயை வரக்கூடாது ஏனென்றால், அயல்நாட்டில் நிகழ்கால சமயத்தில் சிறிது நேரத்தில் உயரவும் செய்கின்றார்கள். கீழே விழவும் செய்கின்றார்கள். சிறிது காலத்தில் அனைத்து வித அனுபவமும் செய்து முடித்து விட்டார்கள். எப்படி ஏதாவது ஒரு பொருளை அதிகமாக சாப்பிட்டால் மனம் நிறைந்து விடும். அப்படி அயல்நாட்டில் கூட முழுமையான வேகம் இருப்பதால் அயல்நாட்டு குழந்தைகள் அனைவரும் இதனால் களைப்படைந்து உள்ளார்கள். யார் மிகவும் களைத்திருக்கின்றார்களோ அவர்கள் படுத்ததும் தூங்கி விடுவார்கள். ஆழமான தூக்கத்தை அனுபவம் செய்வார்கள். அயல்நாட்டுக் குழந்தைகளை மாயை சிறிது காலத்தில் நீண்ட நேரத்தின் அனுபவத்தை செய்வித்து விட்டது. இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? எந்த புதிய பொருளுக்காக தேடுதல் இருந்ததோ அது கிடைத்து விட்டது. பிறகு மாயை ஏன் வருகின்றது? வரக்கூடாதல்லவா? பிறகு ஏன் வருகின்றது? மாயை பழைய வாடிக்கையாளன். மாயைக்கு புதிய வாடிக்கையாளன் நன்றாக

கிடைத்து விட்டால் பழைய வாடிக்கையாளரை விட்டுவிடும். நடத்தக்கூடிய சக்தி இருப்பவரிடம் மாயை வர முடியாது. எங்கு செயல் செய்பவர் புத்திசாலியாக உள்ளாரோ, கவனத்துடன் இருக்கின்றார்களோ? மாயை பார்க்கின்றது, அங்கு மாயை வருவதற்கு தைரியம் வைக்க முடியாது. ரூலிங் பவர் எந்தளவு இருக்கின்றது என்பதை சோதனை செய்யவும். ஒருவேளை பவர் இல்லையென்றால் அதற்கான காரணம் என்ன? காரணத்தை நிவாரண ரூபத்தில் மாற்றவும். காரணம் முடிவடைகின்றது என்றால் மாயை முடிவடைந்து விட்டது. மாயையின் முக்கியமான ரூபம் காரண ரூபத்தில் வருகின்றது. காரணத்தை நிவாரண ரூபமாகச் செய்தீர்களென்றால் மாயை சதா காலத்திற்கும் இல்லாமல் போய்விடும்.

இன்று சந்திப்பதற்காக வந்திருக்கின்றார். முரளி நிறைய கேட்டுவிட்டீர்கள், இப்பொழுது அப்படிப்பட்ட முரளிதரன் ஆகவும். மாயை முரளிக்கு முன்னால் அர்ப்பணம் ஆகி விட வேண்டும். அப்படிப்பட்ட முரளிதரன் தானே? அவர் ஸ்தூலமான முரளியை வாசிக்க கூடியவர், அதனை மிக நன்றாக வாசிக்கின்றீர்கள், இதில் கூட முரளிதரன் ஆகவும், மாயை சரண்டர் ஆக்க வைப்பதற்கான முரளி. இந்த இசையும் இசைப்பீர்களல்லவா? இசை வாசிப்பதில் நிறைய பேருக்கு ஆர்வம் உள்ளது. எந்த நேரம் இசை வாசிக்கின்றீர்களோ? அந்த நேரம் மாயையை வெல்லக்கூடிய இந்த இசையும் வருகின்றதா? என்பதை சோதனை செய்யவும். இந்த ரகசியமான இசையை சதா வாசித்துக் கொண்டேயிருந்தால் மாயை கூட சதா காலத்திற்கு சரண்டர் ஆகி விடும். அப்படி இசை வாசிக்க வருகின்றதா? விதேசிகள் கூட பல மடங்கு பாக்கியசாலிகள், தூரத்திலிருந்து வந்தாலும் பல மடங்கு பாக்கியம் கிடைக்கின்றது. எவ்வளவு இந்த தேசத்திலிருப்போர் ஒரு வருடத்தில் அடைகின்றார்களோ அதனைக்காட்டிலும் அதிகமாக வெளிநாட்டினர் குறைந்த நேரத்தில் பிராப்தியடைகின்றார்கள். சிறப்பான பாலனை கிடைக்கின்றது.

அனைவருடைய கவனமும் வெளிநாட்டினர் மீது விசேஷமாக இருக்கின்றது. எனவே விசேஷமான பாலனையின் ரூபம், பிரத்யட்ச பலனின் ரூபத்தை விசேஷமாக வெளிப்படுத்த வேண்டுமல்லவா? எப்படி ஸ்தாபனை நேரத்தில் சிறப்பான பாலனை தரப்பட்டதோ

அதுபோல உங்களுக்கும் கூட சிறப்பான பாலனை கிடைத்துக் கொண்டிருக்கின்றது. முதலில் பாலனை அடைந்தவர்கள் பாலனை பிரதிபலன் சேவையினுடைய ஸ்தாபனை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? சேவையை முடித்து வைக்க போகின்றீர்களா? மேலும் சம்பூர்ணத்தா, பிரத்யட்சத்தாவின் பெயரை வெளிப்படுத்தப் போகின்றீர்களா? அப்பொழுது நீங்கள் முடிவிற்கான தேதியை நிச்சயப்படுத்த வேண்டும். இப்பொழுது அனைவருடைய எதிர்ப்பார்ப்பும் உங்கள் மீதுதான் இருக்கும். வினாசம் எப்பொழுது ஆகும் என்று பாப்தாதாவிடம் கேட்டால் வெளிநாட்டினரிடம் கேளுங்கள் என்று பாப்தாதா கூறுவார். இந்த தேசத்தில் இருப்பவர்கள் ஸ்தாபனைக்கான பொறுப்பை எடுத்துக் கொண்டார்களல்லவா? வெளிநாட்டினரும் ஏதாவது பொறுப்பு எடுக்க வேண்டுமல்லவா? அயல்நாடு என்பது அழிவிற்குட்பட்டது. பாரதம் அழிவற்ற தேசமாகும் என்றாலும் பாரதவாசிகள் ஸ்தாபனை செய்தார்கள் என்றால், வினாச காரியத்திற்கு விசேஷமான நிமித்தமாவார்கள். பாரதவாசிகள் யக்ஞ ஸ்தாபனைக்கு நிமித்தமாகி தன்னுடையதை அர்ப்பித்து ஸ்தாபனை செய்தார்கள். யக்ஞத்தைப் படைத்தார்கள். நீங்கள் கடைசி அர்ப்பணம் செய்து முடித்து விடவும். பிறகு வெற்றி வெற்றி என்ற முழக்கமே ஏற்படும். இப்பொழுது மிக வேகமாக கடைசி ஆஹூதி (அர்ப்பணம்) செய்யவும். அனைவரும் சேர்ந்து ஒன்றாக ஒரே எண்ணத்துடன் சுவாஹா செய்தீர்கள் என்றால் முடிந்துபோய்விடும். இதற்கான தேதியை எப்பொழுது சொல்லப் போகின்றீர்கள்? 80-ல் அல்லது 81-ல் செய்யப்போகின்றீர்களா? இந்த தேதியை கூறவும், (ஒருமுறை மதுபனில் மீண்டும் வந்திருக்கின்றீர்கள்) வினாசம் ஆரம்பமானதென்றால் நிரந்தரமாக வந்து விடுவீர்கள். எனவே பெரிய ஹாலைக் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். தன்னுடைய ஓயர்லெஸ் தொடர்பை மட்டும் சரியாக வைத்துக்கொள்ளவும். இங்கு ஒயர்லெஸ் என்பது நிர்விகாரி நிலை என்பதாகும். நீங்கள் வந்து விடுங்கள் என்ற வார்த்தை வயர்லெஸ் மூலமாகத்தான் உங்களை வந்து சேரும். ஒருவேளை ஒயர்லெஸ் சரியாக இல்லையென்றால் வார்த்தை வந்து சேராது, பாபாவினுடைய கட்டளை கிடைக்காது. ஸ்தூலமான சாதனங்கள் மூலமாக சப்தம் வராது. நிர்விகாரி புத்தி தான் கடைசி கட்டளையை கைப்பற்ற முடியும். எனவே வேக வேகமாகச் செய்யுங்கள். வேகமாக நேரம் வந்து விடும். முதலில் சக்திசாலியான மைக் தயார் செய்யவும். இந்த மைக் மூலமாக பாரதத்தில்

சென்றடையும், மேலும் எப்படி தேர்தல் நடக்கும் பொழுது முதல் நாளே விளம்பரங்களை நிறுத்தி விடுகின்றார்கள். பிறகுதான் தேர்தல் நடைபெறுகின்றது. எனவே மைக் மூலமாக ஒலியை பரப்புங்கள். பிறகு அதுவும் அமைதியாகி விடும். பிறகு ரிசல்ட் வெளிப்படும். இப்பொழுது விளம்பரத்திற்கான மைக் எவ்வளவு தயார் செய்திருக்கின்றீர்கள்? முதலில் செய்தி பரவும். பிறகு ஆழ்ந்த அமைதி ஏற்படும். பிறகு சப்தத்தை வெளிப்படுத்தக்கூடிய பார்ட் முடிந்து விடும், பிறகு மாற்றம் ஏற்படும். இப்பொழுது முதல் ஸ்டேஜ் தான் நடந்துக் கொண்டிருக்கின்றது. முதல் நிலைக்குத்தான் நேரம் ஆகும், பிறகு இரண்டாவது ஸ்டேஜிற்கு நேரம் ஆகாது.

ஆஸ்திரேலியா: ஆஸ்திரேலியாவின் குழந்தைகள் அனைவரிலும் மிகப் பெரிய விசேஷம் என்ன? தெரியுமா? ஆஸ்திரேலியாவிருக்கு மற்ற தர்மத்தில் நடிப்பதற்கான நிமித்தமான நேரம் இப்பொழுது முடிவடைந்து விட்டது. எனவே தன்னுடைய சொந்த தர்மத்தின் அறிமுகம் கிடைத்தவுடன் வேகமாக வந்து விட்டார்கள். பிறரை கொண்டு வருவதிலும் மிகுந்த ஆர்வம் உள்ளது. மற்ற தர்மத்திற்கு தற்காலிக நேரம் என்பது வெளிப்படுகின்றது. அந்த நேரமும் முடிந்து விட்டது. எனவே யார் வந்தாலும் நம்முடையவராக அனுபவம் ஆகின்றது. இது கூட சிறப்புத்தன்மையாகும். மற்ற தர்மம் என்ற உணர்வு ஏற்படுவதில்லை. ஆஸ்திரேலியாவில் அதாவது அயல்நாட்டில் இருந்தாலும் கூட தாகத்திலுள்ள ஆத்மாக்களாகத் தென்படுகின்றார்கள். எனவே இந்த தன்மையானது, இவர்கள் நம்முடையவர் என்பதை உணர்த்துகின்றது. தவறி நாங்கள் மற்றொரு தர்மத்திற்குச் சென்றுவிட்டோம் என்பதைத் தான் நீங்களும் கூட அனுபவம் செய்கின்றீர்களல்லவா? சேவைக்காக அதுவும் சிறிது நேர நடிப்பு கிடைத்துள்ளது. இல்லையென்றால் வெளிநாட்டு சேவை எப்படி நடக்கும்? அங்கிருப்பவர்கள் நிமித்தமானதால்தான் வெளி நாட்டவருக்கு சேவையை செய்விக்கின்றார். பாண்டவர்கள் மறைமுகமான வேடத்தில் இங்கும் அங்கும் சேவைக்காகச் சென்றார்கள் என்று கூறப்படுகிறதல்லவா? நீங்கள் கூட ரூபம், தர்மம் மாறி பாண்டவர்கள் சேவைக்காக சென்றீர்கள் ஆனால் நீங்கள் பாண்டவ சேனைகள்தான். இப்பொழுது குணம், தேசம், கடமை. எல்லாமே மாறிவிட்டது. ஆஸ்திரேலியாவில் வசித்தாலும் தன்னை

அங்கிருந்தாலும் மதுபன் நிவாசி என்று புரிந்துள்ளீர்களா? பிறவி எடுத்த வீடு மதுபன் தானே? சாகார வீடு மதுபன், மேலும் நிராகார வீடு பரந்தாமம். ஆஸ்திரேலியா உங்களுடைய அலுவலகம். எப்படி அலுவலகத்திறகு காரியத்திற்காக செல்கின்றோம், அதுபோல நீங்களும் சேவைக்காக சென்று கொண்டிருக்கின்றீர்கள். அலுவலகத்திற்குச் சென்றாலும் வீட்டை மறப்பதில்லை அல்லவா? வீட்டினுடைய விலாசம் யாராவது கேட்டால் என்ன விலாசத்தை நீங்கள் கெடுப்பீர்கள்? பாண்டவ பவன்! இந்த நினைவில் நீங்கள் இருந்தால் விடுப்பட்ட மனோநிலையில் இருப்பீர்கள். அலுவலகத்தில் இருக்கும் பொருட்கள் மீது ஒருபோதும் உங்களுக்கு பற்று ஏற்படாது, ஏனென்றால் அது பணிக்காக உள்ள பொருளாகும். நம்முடையதல்ல. அப்படி விடுபட்டு இருக்கின்றீர்களா? எவ்வளவு அன்பான பொருளாக இருந்தாலும், கவர்ச்சிக்கக் கூடிய உடனிருக்கும் துணை அலுவலராக இருந்தாலும், அலுவலக காரியத்தில் உள்ளவர்களுக்கு என்று நியமம் இருக்கின்றது. அலுவலக காரியத்தில் உடனிருக்கிறார்கள், பிறகு விடுபட்டு விட வேண்டும். தவறியும் யார் மீதாவது அன்பு ஏற்பட்டால் அது நல்லதல்ல என்று கருதப்படுகிறது. வீட்டில் உள்ளவரிடம் தான் அன்பு செலுத்துவார்கள், அலுவலகத்தில் உள்ளவரிடம் அலுவல் தான் செய்ய வேண்டும். அப்படி நடக்கின்றீர்களா?

ஆஸ்திரேலியாவினர் சேவையை அதிகப்படுத்தியுள்ளீர்கள்தானே? இப்பொழுது அங்கு எவ்வளவு இடங்கள் உள்ளன? (5) ஒவ்வொருவரும் தன்னுடைய ராஜ்யத்திற்காக தன்தன் பிரஜைகளை அவசியம் உருவாக்கத்தான் வேண்டும். (வினாசத்தில் நாங்கள் என்ன ஆவோம்?) வினாசத்தில் முழு ஆஸ்திரேலியாவும் ஒரு சிறிய தீவாகி விடும். சிறிது தண்ணீரில் கீழே சென்றுவிடும், சிறிது மேலே இருந்து விடும். நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள். வினாசத்திற்கு முன்பே உங்களுக்கு அழைப்பு வந்து சேர்ந்து விடும். அப்பொழுது நீங்கள் பாதுகாப்பிற்கான இடத்திற்கு வந்து சேர்ந்து விடுவீர்கள். சூளைக்கு நடுவில் பூனைக்குட்டிகள் பாதுகாப்பாக இருந்தது என்ற புகழ் எனவேத்தான் பாடப்பட்டுள்ளது. ஏனென்றால் யார் பாபா நினைவில் இருக்கும் குழந்தைகளோ அவர்கள் வினாசத்தில் வினாசம் ஆகமாட்டார்கள், தூய்மையான முறையில் சரீரம் விடுவார்கள்; வினாசத்திற்கு இடையில் சரீரம் விடமாட்டார்கள். எந்தவொரு விஷயமானாலும் அரீரியாகி விடவும். தனக்குத்தானே

சரீரம் விட வேண்டும் என்ற எண்ணம் செய்ததும் விட்டுவிடுவீர்கள். முழு நாளும் இடையே இடையில் அசரீரி ஆதற்கான பயிற்சியை அவசியம் செய்யவும். முழு நாளில் எப்படி ட்ராஃபிக் கண்ட்ரோல் பாட்டு ஒலித்ததும் அப்படியே காரியங்கள் செய்து கொண்டிருந்தாலும் இடை இடையில் தன்னுடைய நிகழ்ச்சியை தானே செட் செய்யவும். அப்பொழுது தொடர்பு இணைந்தேயிருக்கும். அதன் மூலமாக பயிற்சியாகிக் கொண்டேயிருக்கும்.

எப்பொழுது வேண்டுமோ அப்பொழுது வேலையை விட்டுவிடலாம், பிறகு எப்பொழுது வேண்டுமோ சேர்ந்து கொள்ளலலாம் என்ற விசேஷத்தன்மை உங்களிடம் உள்ளதல்லவா? நிர்பந்தன் ஆத்மாக்கள், மனம், மற்றும் சம்ஸ்காரத்தின் பந்தனமும் இல்லையல்லவா? எப்படி தேகம், தேக தர்மத்திலிருந்து சுதந்திரமாக உள்ளீர்கள். மற்றபடி சிறிது நினைவு, சேவைக்கான பந்தனத்தையும் அழித்து விடவும். அனைவரும் உயரம் தாண்டிச் செல்லக்கூடியவர்கள்.

வரதானம்: நிமித்தமானவன் என்ற நினைவு மூலமாக தன்னுடைய ஒவ்வொரு எண்ணத்தின் மீதும் கவனம் கொடுக்கக்கூடிய நிவாரண சொரூபம் ஆகுங்கள்!

நிமித்தமாகி இருக்கும் ஆத்மா மீது அனைவருடைய கவனமும் செய்கின்றது. எனவே நிமித்தமானவர்கள் தன்னுடைய எண்ணத்தின் மீதும் கூட கவனம் செலுத்த வேண்டும். ஒருவேளை நிமித்தமானவர்கள் ஒரு காரணம் சொன்னாலும் அவர்களை பின்பற்றுபவர் பல காரணங்களை கூறுவார்கள், ஒருவேளை நிமித்தமானவரிடம் ஒரு பலவீனம் இருந்ததென்றால், அதனை மறைக்க முடியாது. எனவே விசேஷமாக தன்னுடைய எண்ணம், வார்த்தை, கர்மத்தின் மீது கவனம் வைத்து, நிவாரண சொரூபம் ஆகவும்.

சுலோகன்: எவரிடம் குணங்கள் மற்றும் விசேஷத்தின் அபிமானம் இல்லையோ அவர்களே ஞானம் நிறைந்த ஆத்மா!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 07.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கமயுகத்தின் இராஜபதவி மற்றும் சத்யுகத்தின் இராஜபதவி!

இன்று பாப்தாதா சங்கமயுகத்தின் எந்த துக்கமுமில்லாத உலகின் மகாராஜாக்களின் சபையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சங்கமயுகமே துக்கமில்லா உலகம் தான். சங்கமயுத்தைச் சேர்ந்த அனைத்து பிராமணர்களும் துக்கமில்லா உலகின் மகாராஜாக்கள் ஆவார்கள். சத்யுகத்து மகாராஜா பதவி இந்த சங்கமயுகத்தின் துக்கமற்ற உலகின் மகாராஜாவின் எதிரில் ஒன்றுமே இல்லை. தற்சமயத்தின் பிராப்தியின் போதை, குஷி, சத்யுகத்தின் மகாராஜ பதவியை விட பலமடங்கு உயர்ந்தது. இன்று வதனத்தில் சத்யுகத்தின் மகாராஜ பதவி மற்றும் சங்கமயுகத்தின் மகாராஜ பதவி என்ற இந்த இரண்டிற்குமான வித்தியாசத்தின் மேல் ஆன்மீக உரையாடல் நடந்து கொண்டிருந்தது. சத்யுக இராஜ்யத்தின் விஷயங்களையோ முந்தைய நாளில் மிகவும் கேட்டீர்கள். மேலும் அதிகமாக குஷியும் அடைந்தீர்கள் ஆனால் சங்கமயுகத்தின் உயர்ந்த நிலை எவ்வளவு உயர்ந்தது என்ற அதன் அனுபவம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் தான் இல்லையா?

1) சத்யுகத்தின் ஒரு நாள் நடவடிக்கைகளில் இயற்கையின் இனிமையான இசை உங்களை எழுப்பும் ஆனால் சங்கமயுகத்தின் பிராமணர்களின் ஆதி காலமாகிய அமிர்தவேளையிலிருந்து அதனுடைய உயர்ந்த நிலை எவ்வளவு மகானாக இருக்கிறது என்று பாருங்கள். அங்கே (சத்யுகத்தில்) இயற்கையின் சாதனம் இருக்கிறது. மேலும் சங்கம யுகத்தில் ஆதிகாலத்தில் அதாவது அமிர்தவேளையில் யார் எழுப்புகிறார்? இயற்கையின் தலைவனான சுயம் பகவான் உங்களை எழுப்புகிறார்.

2) இனிமையான இசையாக எதைக் கேட்கிறீர்கள்? தந்தை தினசரி "குழந்தைகளே, இனிமையான குழந்தைகளே' என்று கூறி அழைக்கிறார். இந்த இயற்கையான இசை, ஈஸ்வரிய இசை சத்யுகத்தின் இயற்கையின் இசையை விட எவ்வளவு மகானாக

இருக்கிறது. நீங்கள் அதன் அனுபவிகள் தான் இல்லையா? அப்படியானால் சத்யுகத்தின் இசை மகானாக இருக்கிறதா அல்லது இந்த சங்கமயுகத்தின் இசை மகானாக இருக்கிறதா? கூடவே சத்யுகத்தின் சம்ஸ்காரம் மற்றும் பிராப்தியை உருவாக்கும் மற்றும் நிரப்புவதற்கான நேரம் இதுவாகும். சம்ஸ்காரத்தை நிரப்புகிறீர்கள், பிராப்தி உருவாகிறது. இந்த அனைத்தும் இந்த சங்கமயுகத்தில் தான் நடக்கிறது.

3) அங்கே மரங்களின் சதோபிரதான மிக சுவையான சாறு நிறைந்த பழங்களை உண்பீர்கள். இங்கே விருட்சபதி (கல்ப விருட்சத்தின் தலைவன்) சிவபாபா மூலமாக அனைத்து உறவுகளின் சுவையை, அனைத்து பிராப்திகள் நிரம்பிய உடனடி பலன் என்ற பழத்தை அருந்துகிறீர்கள்.

4) அது பொற்காலத்தின் பழமாகும். மேலும் இது வைர காலத்தின் பழமாகும் என்றால் எது உயர்ந்தது?

5) அங்கே தாச தாசிகளின் கைகளால் வளர்வீர்கள், இங்கே தந்தையின் கைகளால் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

6) அங்கே மகான் ஆத்மாக்கள் தாய் தந்தையராக இருப்பார்கள். இங்கே பரமாத்மா தாய் தந்தையாக இருக்கிறார்.

7) அங்கே இரத்தினங்கள் பதித்த ஊஞ்சலில் ஆடுவீர்கள். இங்கே மிக உயர்ந்த ஊஞ்சல் எது, அதையோ தெரிந்திருக்கிறீர்கள். தந்தையின் மடி என்ற ஊஞ்சல். குழந்தைகளைப் பொறுத்தவரை மிகப் பிரியமான ஊஞ்சல் தாய் தந்தையின் மடி ஆகும். ஒரு ஊஞ்சல் மட்டுமில்லை, விதவிதமான ஊஞ்சல்களில் ஆட அதீந்திரிய சுகத்தின் ஊஞ்சல், குஷிகளின் ஊஞ்சல், அங்கே இரத்தினம் பதித்த ஊஞ்சல் மேலும் இங்கு இந்த முடியும். ஊஞ்சல் எவ்வளவு மகான் ஆனது.

8) அங்கு இரத்தினங்களை வைத்து விளையாடுவீர்கள், பொம்மைகளுடன் விளையாடுவீர்கள். உங்களுக்குள் விளையாடுவீர்கள் ஆனால் இங்கு தந்தை கூறுகிறார் என்னோடு விளையாடுங்கள், எந்த ரூபத்தில் விரும்புகிறீர்களோ அந்த ரூபத்தில் விளையாட முடியும். தோழனாகி விளையாட முடியும், நண்பனாகியும் விளையாட முடியும். குழந்தையாகியும் விளையாட முடியும், குழந்தையாக ஆக்கியும் விளையாட முடியும். இந்த மாதிரியான (விளையாடுவதற்கான) அழியாத பொம்மையோ எங்குமே கிடைக்காது.

அது உடையாது. அழியாது மேலும் செலவும் செய்ய வேண்டியதாக இருக்காது.

9) அங்கே மிக ஓய்வாக மெத்தையில் தூங்குவீர்கள், இங்கு நினைவு என்ற மெத்தையில் தூங்கி விடுங்கள்.

10) அங்கே நித்திரை உலகத்திற்கு சென்று விடுவீர்கள், ஆனால் சங்கமயுகத்தில் தந்தையுடன் சூட்சும வதனத்தில் சென்று விடுங்கள்.

11) அங்கே விமானத்தில் ஒரு உலகத்தை மட்டும் தான் சுற்றி வர முடியும், இப்பொழுது புத்தி என்ற விமானம் மூலமாக மூன்று உலகங்களை சுற்றி வர முடியும். அங்கே விஷ்வநாத் என்று அழைக்கப்படுவீர்கள்

12) மேலும் இப்பொழுது திரிலோகிநாத் ஆக இருக்கிறீர்கள்.

13) அங்கு இரண்டு கண்கள் உடையவராக இருப்பீர்கள். இங்கு மூன்று கண்கள் உடையவராக இருக்கிறீர்கள்.

14) சங்கமயுகத்தை ஒப்பிடும் போது அதாவது ஞானம் நிறைந்த சக்தி நிறைந்த ஆனந்தம் நிறைந்தவராக இருக்கிறீர்கள், இதை ஒப்பிடும் போது அங்கே என்னவாக ஆகி விடுவீர்கள்? ராயல் முட்டாள் ஆகி விடுவீர்கள்.

15) உலகின் கணக்குப்படி உயர்ந்த பூஜைக்குரியவராக இருப்பீர்கள். உலகிலுள்ளவர்கள் மூலமாக மதிப்பிற்குரியவர்களாக இருப்பீர்கள் ஆனால் ஞானத்தை ஒப்பிடும் போது மிகப் பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விடும்.

16) இங்கோ காலை வணக்கம், இரவு வணக்கம் தந்தையோடு செய்கிறீர்கள் மேலும் அங்கே ஆத்மாக்கள் ஆத்மாக்களுடன் செய்வீர்கள்.

17) அங்கே உலக ராஜ்ய அதிகாரியாக இருப்பீர்கள், இராஜ்யம் செய்பவராக இருப்பீர்கள். மேலும் இங்கே உலகிற்கு நன்மை செய்பவர். பெரும் வள்ளல், வரம் அளிப்பவராக இருப்பீர்கள். அப்படியானால் உயர்ந்தவர்களாக யார் ஆனார்கள்? சத்யுகத்தின் விஷயங்களைக் கேட்டோ குஷி அடைந்தீர்கள் இப்பொழுது நிரந்தர குஷி சொரூபமானவராக ஆகி விடுங்கள்

18) அங்கே வகைவகையான உணவுகளை உண்ணுவீர்கள் மேலும் இங்கே பிரம்மா போஜனம் உண்கிறீர்கள். அதனுடைய மகிமையாக தேவதைகளின் போஜனத்தை விட மிக உயர்ந்தது என்று கூறப்படுகிறது. எனவே எப்பொழுதும் சத்யுகத்தின் பிராப்திகள் மற்றும்

தற்சமயத்தின் மகத்துவம் மற்றும் பிராப்தியை சேர்த்தே வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது தற்சமயத்தை தெரிந்து ஒவ்வொரு விநாடி மற்றும் எண்ணத்தை உயர்ந்ததாக ஆக்க முடியும். புரிந்ததா?

இன்று பஞ்சாப் மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். பஞ்சாபிற்கு இரண்டு விசேஷங்கள் இருக்கின்றன. ஒன்று பஞ்சாபின் தண்ணீர் மற்றும் இன்னொன்று பஞ்சாபின் விளை நிலம். அந்த அரசாங்கம் பஞ்சாபில் இரண்டு விசேஷங்களை காண்பித்தார்கள். மேலும் பாண்டவ அரசாங்கத்தின் தரப்பிலிருந்து பஞ்சாப் என்ன விசேஷத்தை காண்பித்திருக்கிறது. பஞ்சாப் ஞான நதிகள் என்ற கரங்களை உருவாக்கியிருக்கிறார்கள் ஆனால் அதிசயமும் செய்திருக்கிறார்கள். பஞ்சாபின் நதிகள் பஞ்சாபிலேயே அதிகமாக இருக்கின்றன. நாலாபுறங்களுக்கும் குறைவாகச் செல்லும். பஞ்சாபின் நதிகள் பஞ்சாபிலேயே இருக்கின்றன. எனவே பஞ்சாபின் தண்ணீர் பிரபலமாகி விட்டது. எப்படி பஞ்சாபில் சீசன் இல்லாவிட்டாலும் தானியங்களை பயிரிட்டு மகசூல் செய்கிறார்கள், அந்த மாதிரி சாதனங்களை உருவாக்கியிருக்கிறார்கள். எனவே பஞ்சாடைச் சேர்ந்தவர்களுக்கு 12-மாதங்களிலும் 12-பழங்களை கொடுக்க வேண்டும். எப்பொழுது அறிவியல் சக்தி மூலமாக சீசன் இல்லாமலேயே தானியங்களை விளைய வைத்து விடுகிறார்கள் என்றால் அமைதியின் சக்தி என்ற சங்கமயுகத்தின் முழு சீசன் இருந்த போதிலும் ஒவ்வொரு மாதத்திற்கான பழத்தை கொடுக்க முடியாதா? எப்படி அவர்கள் சாதனங்களை உபயோகித்துக் கொண்டே நடக்கமுடியாதவற்றை சம்பவமாக்கி காண்பித்திருக்கிறார்கள் என்றால் (யோக) சாதனா (இடைவிடாத பயிற்சி) மூலமாக பஞ்சாபின் பூமியை மாற்றம் செய்யுங்கள். பிரத்யக்ஷ பலன் கொடுக்க வேண்டும். பஞ்சாபிற்கு இந்த புது வருடத்தில் ஒரு சுலோகனை நினைவு வைக்க வேண்டும். எந்த சுலோகன்? உடனடி தானம் மகா புண்ணியம்! இப்பொழுதோ ஞான கங்கைகளுக்கு பங்கு இருக்கிறது. பாண்டவர்கள் முதுகெலும்பாக இருக்கிறார்கள் ஆனால் பொறுப்பில் இருப்பவர்களாக சக்திகளைத்தான் முன்னுக்கு வைப்போம். இதிலேயும் கூட பாண்டவர்களுக்கு நன்மை இருக்கிறது, இல்லையென்றால் அவர்கள் தடியடி வாங்க வேண்டியது இருக்கும். முக்கியமாக பஞ்சாபிலேயோ மிக தடியடி விழும். எனவே சக்திகள் வழிகாட்டியாகவும் மற்றும்

பாண்டவர்கள் கார்டு (பாதுகாப்பவர்) ஆகவும் இருப்பது சரியாகும். கார்டு மற்றும் காட் (கடவுள்) இராசி ஒத்துப்போகிறது. எப்படி தந்தை முதுகெலும்பாகி சக்திகளை முன்னுக்கு வைக்கிறாரோ அதே போல் பாண்டவர்களும் தந்தைக்குச் சமமாக முதுகெலும்பாகி சக்திகணை முன்னுக்கு வையுங்கள். அப்படி இந்த புது வருடத்தில் பஞ்சாப் என்ன புதுமையை காண்பிக்கும்? பூமியின் மாற்றத்தின் புதுமையை காண்பிப்பீர்கள். புரிந்ததா?

வெளிநாட்டு சேவையில் நல்ல நல்ல மகாவீரர்கள் மற்றும் மகா வீராங்கனைகள் அறிவியலின் மேல் அமைதி சக்தி மூலமாக வெற்றி அடையக்கூடியவர்கள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். நல்ல நல்ல சேவைக்குத் தகுதியான, தந்தையின் புஜங்கள் தயார் ஆகியிருக்கின்றன. வலது கரம் ஆவார்கள். வலது கரம் மூலமாக எப்பொழுதும் உயர்ந்த மற்றும் சுலபமாக காரியம் நடக்கும். அப்படி வெளிநாட்டில் வலது கரங்கள் தயார் ஆகிக் கொண்டிருக்கின்றன. நல்லது. பின்பு சந்திக்கும்பொழுது விசேஷங்களைக் கூறுவோம். பாரதம் மற்றும் வெளிநாட்டின் இரண்டு குழந்தைகளுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். இருவர்களும் அருகிலிருந்தும் மற்றும் தூரத்திலிருந்தும் சந்திப்பைச் செய்வதற்காக வந்து சேர்ந்து விட்டார்கள்.

அந்த மாதிரி எப்பொழுதும் தந்தையோடு சந்திப்பை செய்யக்கூடிய, இரவு பகலாக 'ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாரும் இல்லை' என்ற இதே எண்ணத்தில் இருக்கக்கூடிய, எப்பொழுதும் உலக ஆத்மாக்களுக்கு அனைத்து பொக்கிஷங்கள் மூலம் பெரும் தானம் மற்றும் வரதானம் கொடுக்கக்கூடிய, எப்பொழுதும் சங்கமயுகத்தின் விசேஷத்தை எதிரில் வைத்து உயர்ந்த பாக்கியத்தின் நினைவு சொரூபமான, அந்த மாதிரி எப்பொழுதும் உயர்ந்த உள்உணர்வு, உயர்ந்த எண்ண அலைகள் மூலமாக உலகிற்கு நன்மை செய்யும் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

பார்ட்டிகளுடன் சந்திப்பு: பஞ்சாப் மண்டலம்: கர்ம இந்திரியங்களின் ராஜா தான் ராஜ்ய அதிகாரி! பஞ்சாபைச் சேர்ந்தவர்கள் விசேஷ ஆத்மாவாக ஆன காரணத்தினால் அவசியம் விசேஷ பலன் கொடுக்க

வேண்டியதாக இருக்கும். பஞ்சாபில் முக்கியமாக அகால தக்த்-ன் நினைவுச் சின்னம் இருக்கிறது. எங்கு ஆசனத்தின் நினைவுச் சின்னம் இருக்கிறதோ அங்கே வசிப்பவர்கள் அவர்களும் எப்பொழுதும் அழியாத ஆசனத்தில் (அகால தக்த்-ல்) அமர்ந்திருப்பார்கள். விலகி பார்வையாளராகி தன்னுடைய கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியங்கள் செய்யும் சுயராஜ்ய அதிகாரியாக ஆகியிருக்கிறீர்களா? அழியாத ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஆத்மா என்றால் இராஜ்ய அதிகாரி என்பதாகும். அந்த மாதிரி இராஜ்ய அதிகாரி ஆகி நடந்து கொள்கிறீர்களா? கர்ம இந்திரியங்களுக்கு அடிமையாகவோ ஆவதில்லையே. எங்கு அடிமைத்தனம் இருக்குமோ அங்கு பலஹீனம் இருக்கும். அரைக்கல்பம் பலஹீனமானவராக இருந்தீர்கள். இப்பொழுது உங்களுடைய இராஜ்யத்தை அடைந்து விட்டீர்களா? இராஜ்யம் மற்றும் அதிகாரத்தை பெற்ற பிறகு அடிமைத்தனம் முடிவடைந்து விடுகிறது. அப்படி நீங்கள் இராஜ்ய அதிகாரிகள் தான் இல்லையா? எந்தவொரு கர்ம இந்திரியமும் அதாவது காரியம் செய்பவர் உங்கள் மேல் இராஜ்யம் செய்யவில்லையே? எப்படி இன்றைய உலகத்தில் பிரஜைகள் மேல் பிரஜையின் இராஜ்யம் இருக்கிறது. அதே போல் உங்களுடைய வாழ்க்கையில் பிரஜையின் இராஜ்யமோ இல்லை தான் இல்லையா?. இந்த கர்ம இந்திரியங்கள் தான் பிரஜைகள். பிரஜைகளின் இராஜ்யத்தில் எப்பொழுதும் குழப்பம் இருக்கும். மேலும் இராஜாவின் இராஜ்யத்தில் ஸ்திரமான இராஜ்யம் நடக்கும். அப்படி ஆடாத அசையாத உறுதியான இராஜ்யம் நடந்து கொண்டிருக்கிறது தான் இல்லையா?

தற்சமயம் எண்ணத்தின் நிலைகுலைவது கூட பெரிய விஷயமாக கருதப்படும். முன்பு ஒரு காலம் இருந்தது, அப்பொழுது எண்ணத்தை சுதந்திரமாக விட்டு விட்டிருந்தீர்கள், வார்த்தை மற்றும் செயல்கள் மேல் கவனம் வைத்திருந்தீர்கள் ஆனால் இப்பொழுது மனதில் கூட குழப்பம் இருக்கக்கூடாது, ஏனென்றால், இறுதியில் மனசக்தி மூலமாகத் தான் உலக மாற்றம் ஏற்படும். இப்பொழுது மனதில் எழும் ஒரு எண்ணம் கூட வீணானது என்றால், மிக அதிகமானவற்றை இழந்தீர்கள் என்பதாகும். ஒரு எண்ணத்தைக் கூட சாதாரண விஷயம் என்று நினைக்காதீர்கள். அந்த அளவு கவனம் இருக்க வேண்டும். இப்பொழுது நேரம் மாறி விட்டது முயற்சி செய்வதின் நிலையும் மாறி விட்டது. எனவே எண்ணத்தில் கூட முற்றுப்புள்ளி தேவையாக

இருக்கிறது. மனதில் எழும் எண்ணங்கள் மேலும் கவனம் இருக்க வேண்டும். இதைத் தான் முன்னேறும் கலை என்று சொல்வது. எப்பொழுகும் முன்னேறும் கலை இருக்க வேண்டும் என்பது தான் நீங்கள் செய்ய வேண்டிய இப்பொழுதைய ஒரு உறுதியான முடிவாகும்.

அவ்யக்த பாப்தாதாவுடன் வெளிநாட்டு சகோதர சகோதரிகளின் தனிப்பட்ட சந்திப்பு:

லண்டன்: எப்பொழுதும் தன்னுடைய ஹோலி லேன்ட்-ன் நினைவில் இருக்கிறீர்களா? ஹோலி லேன்ட்-ல் இருப்பவர்கள் எப்பொழுதும் தன்னுடைய ஹோலி (தூய்மை) நிலையில் நிலைத்திருப்பார்கள். எப்பொழுதும் தன்னை சம்பூர்ண தூய்மையான ஆத்மாவின் நிலையில் அனுபவம் செய்கிறீர்களா? எப்பொழுது இங்கு தூய்மையின் கிரீடம் அணிந்தவராக ஆகிறீர்களோ அப்பொழுது தான் அங்கேயும் இரத்தினம் பதித்த கிரீடம் கிடைக்கும். எப்பொழுதும் தன் மேல் ஒளியின் கிரீடம் இருப்பதாக அனுபவம் செய்யுங்கள், யார் இராஜ்குமார் மற்றும் இராஜகுமாரிகளாக இருப்பார்களோ அவர்கள் கிரீடம் அணிந்தவர்களாக இருப்பார்கள். நீங்களோ இறைவனின் குழந்தைகள் கிரீடம் இல்லாதவர்களாக எப்படி இருக்க முடியும்? லண்டனில் இருப்பவர்கள் அனைவரும் கிரீடம் அணிந்திருப்பவர்கள் தான் இல்லையா? நீங்கள் அந்த மாதிரி கிரீடம் அணிந்தவர்களாக இருக்க வேண்டும், அனைவரும் உங்களுடைய கிரீடத்தைப் பார்த்து நமஸ்காரம் செய்ய வேண்டும். தூய்மையான ஆத்மாக்கள் நாங்கள் தூய்மையின் ஒளிக் கிரீடம் அணிந்திருப்பவர்கள் என்ற இந்த நினைவிலேயே எப்பொழுதும் இருங்கள். மாயா உங்களுடைய கிரீடத்தை இறக்கி வைப்பதில்லையே? இப்பொழுது மாயாவிற்கு இங்கேயே விடை கொடுத்து விட்டுச் செல்ல வேண்டும். மாயாவின் ரூபத்தை மாற்றம் செய்து விட்டுச் செல்ல வேண்டும். எதிரிக்குப் பதிலாக பொம்மையின் ரூபத்தில் வரட்டும். இந்த புதிய வருடத்தில் இந்த மாற்றத்தை செய்யுங்கள்.

அமெரிக்கா: ஐந்து பாண்டவர்கள் இருக்கிறார்கள். ஐந்து பாண்டவர்களும் சென்ற கல்பத்திலும் என்ன அதிசயம் செய்தார்கள். ஐவராக இருந்த போதிலும் எவ்வளவு மிகப் பெரிய சேனை மேல் வெற்றி அடைந்தவராக ஆனார்கள். வெற்றிக் கொடியை பறக்க விடுபவர்கள். பாண்டவ சேனைகள் நீங்கள் தான் இல்லையா?

ஒவ்வொரு பாண்டவர்களும் எத்தனை பேருக்குச் சமமானவர்கள். அது மிகப் பெரிய சேனை, இது ஐந்து பாண்டவர்கள். அப்படியானால் எவ்வளவு மதிப்புள்ளவர்கள் மற்றும் விலைமதிக்க முடியாதவர்கள். இப்பொழுது அமெரிக்காவின் நாலாபுறங்களிலும் பரந்து சென்று விடுங்கள். எப்படி வலை விரிக்கப்படுகிறது இல்லையா? அதே போல் நீங்கள் யோக சக்தியின் பயை விரித்தீர்கள் என்றால் அலைந்து கொண்டிருக்கு ஆத்மாக்கள் யாரெல்லாம் இருப்பார்களோ அவர்கள் வந்தடைந்து விடுவார்கள். அமெரிக்காவில் விசேஷமாக குஷி மற்றும் சாந்தியின் அபிலாஷை உள்ள ஆத்மாக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு குஷி மற்றும் சாந்தியின் தானம் கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் அதிகமானவர்களின் ஆசீர்வாதம் கிடைத்து விடும்.

கயானா பார்ட்டி: அனைவரும் சேவைக்குத் தகுதியான இரத்தினமாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? ஒவ்வொருவரின் மனதிலும் சேவையின் சம்ஸ்காரம் எப்படி உடலில் இரத்தம் நிரம்பியிருக்கிறதோ அந்த மாதிரி நிரம்பியிருக்கிறது. எப்படி ஒருவேளை இரத்தம் வெளியாகி விட்டது என்றால் உடலும் உபயோகமற்றதாக ஆகி விடுகிறது. அதே போல் சேவை செய்யவில்லை என்றால் உயிரோடு இருந்தும் இறந்தவர்களுக்கு சமமானவர்கள் மாதிரி ஆகி விடுகிறீர்கள். சேவை தான் பிராமண வாழ்க்கைக்கான விசேஷ ஆதாரம் ஆகும். அனைவரின் மனதிலும் சேவையே நிரம்பியிருக்கட்டும். சேவைக்குத் தகுதியானவர் என்பதின் திலகம் அனைவரின் நெற்றியில் இடப்பட்டு இருக்கட்டும். கயானாவைச் சேர்ந்தவர்களும் சேவை செய்தததற்கான நல்ல ஆதாரத்தை கொடுத்திருக்கிறார்கள். கயானாவின் விசேஷமான நபர்களின் உதாரணம் கொடுத்து அனேக இடங்களில் சேவை நடக்கும். கயானாவின் சேவையில் விசேஷமான பொறுப்பில் இருப்பவர்கள் உருவாகியிருக்கிறார்கள். எப்படி கண்களில் மணி நிரம்பியிருக்கிறது. அதே போல் யார் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட பாப்தாதாவின் இரத்தினங்களாக இருக்கிறார்களோ அவர்களும் கண்களில் நிரம்பி இருக்கிறார்கள்.

ஜெர்மனி பார்ட்டி: (1) ஜெர்மனி குரூப் மிக அதிசயம் செய்ய வேண்டும். ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் வரும் நாட்களுக்காக அந்த மாதிரி ஒரு

குரூப்பை தயாரியுங்கள், அந்த குரூப் வந்து எதிர்காலத்தில் உங்களுடைய சேவையின் பொறுப்பாளர் ஆக வேண்டும். சத்யுகத்தில் கூட அணுசக்தியின் மூலம் காரியம் நடக்க வேண்டும். அப்படி ஜெர்மனியின் தொடர்பில் வந்திருக்கும் ஆத்மாக்கள் அந்த மாதிரி காரியம் செய்வதற்கு பொறுப்பாளர்கள் ஆவார்கள். நீங்களோ அதிபதி ஆவீர்கள் ஆனால் தொடர்பில் அந்த மாதிரி வருவார்கள், அவர்களே சேவையின் பொறுப்பாளர்களாக ஆவார்கள். அப்படி ஜெர்மனிக்கு மிகுந்த சேவை செய்ய வேண்டும். தைரியமுள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. யார் தொடர்பில் வருகிறார்களோ அவர்களுக்கு சேவை செய்து கொண்டே செல்லுங்கள்.

2) சுயதரிசன சக்கரதாரி ஒருபொழுதும் இறங்கும் கலை மற்றும் ஏறும் கலையின் சுழற்சியிலேயே சுற்றிக் கொண்டிருக்க முடியாது. இப்பொழுது கடந்ததை கடந்ததாக்குங்கள். எப்படி சென்ற வருடம் முடிவடைந்ததோ அதே போல் இந்த பழைய சம்ஸ்காரமும் முடிவடைந்து விடட்டும். சம்ஸ்காரத்தின் ரூபத்தின் மாற்றம் இருக்க வேண்டும். சம்ஸ்காரம் தான் விதை. ஒருவேளை விதை அழிந்து விட்டது என்றால் மரம் வளராது. மரம் முளைக்கக் கூடாது என்பதற்காக அதன் விதையை நெருப்பில் போடுவார்கள். அப்படி பலவீனங்களின் சம்ஸ்காரம் என்ற விதையை நினைவின் முழு ஈடுபாடு என்ற நெருப்பில் எரித்து விட்டீர்கள் என்றால், மரம் விளையவே செய்யாது. பலஹீனங்களின் சம்ஸ்காரம் என்ற விதையை நினைவின் அக்னியில் எரித்து விடுங்கள், பின்பு மரம் உருவாகாது அதாவது எண்ணம், சொல், செயலில் பலஹீனம் வராது, எப்படி ஹோலியை எரிப்பதில் எவ்வளவு திறமை நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள். அதே போல் ஹோலி (தூய்மை) ஆவதின் ஹோலியை (பழையது) எரித்தீர்கள் என்றால் ஹோலி (தூய்மை) ஆகி விடுவீர்கள். பலஹீனங்களை எரித்து விட்டீர்கள் என்றால் தடைகளை அழித்தவர் ஆகி விடுவீர்கள். நான் தடையை அழிப்பவன் என்ற இந்த பட்டத்தை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். தனக்கும் சேர்த்து முழு உலகிற்கும் தடைகளை அழிப்பவர் நீங்கள். இப்பொழுது உலக சேவையில் ஈடுபடத்தான் வேண்டும்.

வரதானம்: ஈஸ்வரிய போதை மூலமாக பழைய உலகை மறக்கக்கூடிய அனைத்து பிராப்திகள் நிரம்பியவர் ஆகுக!

எப்படி அந்த போதை அனைத்தையும் மறக்க வைத்து விடுகிறது. அதே போல் இந்த ஈஸ்வரிய போதை துக்கங்களின் உலகை சுலபமாகவே மறக்க வைத்து விடுகிறது. அந்த போதையிலோ மிக நஷ்டம் இருக்கும். அதிகமாக குடிப்பதினால் அழிந்து விடுவார்கள் ஆனால் இந்த போதை அழியாதவராக ஆக்கி விடும். யார் எப்பொழுதும் ஈஸ்வரிய போதையிலேயே மூழ்கியிருக்கிறாரோ அவர் அனைத்து பிராப்திகள் நிரம்பியவர் ஆகி விடுகிறார். ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற நினைவு தான் போதையை ஏற்றும். இந்த நினைவு மூலமாகத் தான் சக்தி வந்து விடும்.

**சுலோகன்: ஒருவர் மற்றவரை காப்பி (Copy) செய்வதற்கு பதிலாக தந்தையை காப்பி (Copy) செய்யுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 09.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக ஆடை மற்றும் ஆன்மீக அலங்காரம்!

இன்று பாப்தாதா விசேஷமாக நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் ரமணிகரமான தோற்றத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்து புன்முறுவலிட்டுக் கொண்டும் இருந்தோம். மேலும் சில இடங்களில் விசேஷமாக சிரிப்பும் வந்து கொண்டிருந்தது. அது என்ன தோற்றமாக இருந்தது? சங்கமயுகத்தைச் சேர்ந்த, அனைத்தையும் விட மிக உயர்ந்த வைரத்திற்குச் சமமான யுகத்தின் வாசிகள், மிக உயர்ந்த பாப்தாதாவின் குழந்தைகள், ஈஸ்வரனின் குழந்தைகள், பிராமண குலத்தின் உயர்ந்த ஆத்மாக்களை மற்றும் செல்லமான வெகுகாலத்திற்குப் பிறகு கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாப்தாதா விசேஷமாக முழு நாளிற்காக விதவிதமான ஆடை மற்றும் அலங்காரம், கூடவே அமர்வதற்கான ஸ்தானம் மற்றும் ஆசனம் எவ்வளவு உயர்ந்ததாக கொடுத்திருக்கிறோம் என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதன் மூலம் எப்படி நேரமோ அதற்கேற்றபடி ஆடை மற்றும் அலங்காரத்தையுமே செய்ய முடியும். சத்யுகத்தில் விதவிதமான ஆடைகள் மற்றும் அலங்காரத்தை மாற்றிக் கொண்டே இருப்பீர்கள் ஆனால் சம்ஸ்காரத்தையோ இங்கே தான் நிரப்ப வேண்டும் இல்லையா? பிரம்மாபாபா சங்கமயுகத்தின் விதவிதமான ஆடைகள் மற்றும் அலங்காரத்தினால் பிராமண குழந்தைகளை அலங்கரித்திருக்கிறார் ஆனால் ரமணீகரமான தோற்றமாக என்ன பார்த்தோம்? இவ்வளவு அழகான ஆடை மற்றும் அலங்காரம் இருந்தபோதிலும் சில சில குழந்தைகள் பழைய ஆடை மற்றும் மண்படிந்த அழுக்கான ஆடையை அணிந்து விடுகிறார்கள்.

அமிர்தவேளையின் ஆடை மற்றும் அலங்காரத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? முழு நாளிற்கான விதவிதமான ஆடை மற்றும்

அலங்காரத்தைத் தெரிந்திருக்கிறீர்களா? பாப்தாதா மூலமாக குழந்தைகளுக்கு விதவிதமான பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. அப்படி விதவிதமான பட்டங்களின் (சுயகௌரவங்களின்) நிலை என்ற ஆடை மற்றும் விதவிதமான குணங்களின் அலங்காரத்தின் செட் (அனைத்தும் அடங்கிய) ஆகும். எத்தனை விதமான ஆடைகள் மற்றும் செட் இருக்கின்றன. எப்படி ஆடையோ அப்படி அலங்காரத்தின் செட் மேலும் அதே போலவே அலங்கரிக்கப்பட்ட சீட்டில் (இருக்கையில்) எப்பொழுதும் செட் (அமர்ந்து) ஆகி இருங்கள். உங்களுடைய ஆடைகளை எண்ணினீர்கள் என்றால் எத்தனை இருக்கும்? அதே பட்டத்தின் (சுயகௌரவத்தின்) நிலையில் நிலைத்திருப்பது என்றால் ஆடைகளை அணிவது ஆகும். சில நேரம் விஷ்வ கல்யாணகாரியின் (உலகிற்கு நன்மை செய்பவர்) ஆடையை அணியுங்கள். சில நேரம் மாஸ்டர் சர்வ சக்திவானின் மற்றும் சில நேரம் கயதரிசன சக்கரதாரியின் ஆடையை அணியுங்கள். எப்படி நேரமோ, எப்படி காரியமோ அதற்கு ஏற்றாற்போல் ஆடையை அணியுங்கள். கூடவே விதவிதமான குணங்களின் அலங்காரம் செய்யுங்கள். இந்த விதவிதமான அலங்காரங்களின் செட்டை தாரணை செய்யுங்கள். கையில் கழுத்தில், காதுகளில் மற்றும் நெற்றியில் அலங்காரம் இருக்கட்டும். நெற்றியில் நான் ஆனந்த சொரூபமானவன் என்ற நினைவை வையுங்கள் -இது நெற்றியின் நெத்திச்சூடி ஆகி விட்டது. வாய் மூலமாக அதாவது கழுத்திலும் ஆனந்தம் கொடுக்கக்கூடிய விஷயங்கள் இருக்கட்டும் -இது கழுத்தின் மாலை ஆகி விட்டது. கைகள் மூலமாக அதாவது காரியத்தில் ஆனந்த சொரூபத்தின் நிலை இருக்கட்டும் -இது கைகளின் வளையல்கள் ஆகும். காதுகள் மூலமாகவும் ஆனந்த சொரூபமாக ஆவதற்கான விஷயங்களை கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் -இது காதுகளின் அலங்காரம் ஆகும். கால் மூலமாக ஆனந்த சொரூமாக ஆக்குவதின் சேவையின் பக்கம் கால் இருக்கட்டும் அதாவது ஒவ்வொரு அடியிலும் ஆனந்த சொரூபம் ஆவது மற்றும் ஆக்குவதற்காக மட்டும் கால் எழட்டும் இது கால்களுக்கான அலங்காரம் ஆகும். இப்பொழுது ஒரு செட் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? முழுமையான செட்டை தாரணை செய்து விட்டீர்களா? அந்த மாதிரி வேறு வேறு நேரத்தில் வேறு வேறு செட்டை தாரணை செய்யுங்கள். செட்டை தாரணை செய்யவோ தெரியும் இல்லையா? அல்லது காதுகளுடையதை

# 1980 அவ்யக்த முரளி

அணிந்தீர்கள் என்றால் கழுத்தினுடையதை விட்டு விடுவீர்களா? பொதுவாகவே இன்றைய உலகத்தில் செட்டை அணிவதற்கான பழக்கம் இருக்கிறது. அப்படி உங்களுடைய இத்தனை உயர்ந்த அலங்காரத்தின் செட் இருக்கிறது. அதை ஏன் தாரணை செய்வதில்லை? ஏன் அணிவதில்லை? இவ்வளவு அனைத்து விதவிதமான அழகான ஆடைகளை விட்டு விட்டு தேக அபிமானத்தின் நினைவு என்ற மண்ணால் அழுக்கான ஆடையை ஏன் அணிகிறீர்கள்.

இன்று ஆடை மற்றும் அலங்காரத்தின் போட்டியை பார்த்தோம். எந்தக் குழந்தைகள் முழு நாளும் அலங்கரிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும் எந்தக் குழந்தைகள் ஆடையை மாற்றுவதிலும் அணிவதிலுமே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்? இந்த நேரம் ஒரு ஆடையை அணிவார்கள். அடுத்த நேரம் அந்த ஆடையை களைந்து விட்டு மோசமான ஆடையை அணிவார்கள், அதிக நேரம் உயர்ந்த அழகான ஆடையை அணியவே முடியாது. அப்படி என்ன பார்த்தோம். சிலர் முற்றிலும் துர்நாற்றம் வீசும் ஆடையையும் அணிந்து விடுகிறார்கள். எந்த தூர்நாற்றம்? உடலின் சம்மந்தம் மற்றும் உடலின் பதார்த்தங்களின் மேல் இருக்கும் பற்றுதலின் துர்நாற்றம் வீசும் ஆடை அந்த துர்நாற்றம் தொலைதூரத்திலிருந்தே வந்து கொண்டிருந்தது. சிலர் அழுக்கான தோலாலான ஆடையை அணிந்திருந்தார்கள் அதாவது குற்றம் நிறைந்த பார்வையின், தோலை பார்க்கும் பார்வையின் அந்த மாதிரி அழுக்கான தோலால் ஆன ஆடையையும் அணிந்திருந்தார்கள். சிலருடைய ஆடையில் அழுக்கான கரையும் படிந்திருந்தது. அழுக்கான கரை என்றால் மற்றவர்களின் அவகுணம் அதாவது கரையை தன்னுள் தாரணை செய்வது, அப்படி மிகவும் அழுக்கான கறை படிந்த ஆடையும் இருந்தது. சிலருடைய ஆடையிலோ மிக மோசமான இரத்தக்கரைகளும் இருந்தன. அவை ஏன் இருந்தன? அடிக்கடி பாவம் செய்வது அதாவது ஆத்ம கொலை செய்வது. ஆத்மாவின் உயர்ந்த நிலையின் கொலை செய்வது, அந்த மாதிரி ஆடை அணிந்தவர்களும் இருந்தார்கள். இப்பொழுது யோசித்து பாருங்கள் எங்கே அழகான பட்டங்களின் நிலையின் ஆடை மேலும் இந்த அழுக்கான ஆடைகள் எங்கே இருக்கின்றன. உயர்ந்த ஆத்மாக்களின் ஆடையும் உயர்ந்ததாக வேண்டும். அப்படி என்ன பார்த்தோம்? சில சில குழந்தைகள் முழு நாளும் அதே உயர்ந்த ஆடையில், அலங்காரத்தின் செட்டால்

அலங்கரிக்கப்பட்டு இருக்கையில் நன்றாக அமர்ந்திருந்தார்கள். மேலும் சிலர் நல்ல ஆடை இருந்தபோதிலும், அணிய விரும்பினால் கூட அணிமுடியாமல் இருந்தார்கள், எனவே அமிர்தவேளையில் இருந்தே உயர்ந்த அலங்காரத்தின் செட்டை தாரணை செய்யுங்கள், எப்பொழுது உயர்ந்த பட்டங்களின் ஆடையை அணிவீர்களோ, குணங்களின் அலங்காரத்தை செய்வீர்கள் என்றால் எப்படி சத்யுகத்தில் விஷ்வ மகாராஜா மற்றும் விஷ்வ மகாராணியின் ராஜ உடைக்குப் பின்னால் தாச தாசிகள் ஆடையை கையால் தூக்கிக் கொண்டு வருவார்கள், அதே போல் இப்பொழுது மாயாவை வென்ற சங்கமயுகத்தின் சுயராஜ்ய அதிகாரிகளின் பட்டங்கள் என்ற ஆடையில் நிலைத்திருக்கும் நேரத்தில் இந்த ஐந்து தத்துவங்கள், இந்த ஐந்து விகாரங்கள் உங்களுடைய ஆடையை பின்னாலிருந்து தூக்கிக் கொண்டு வருவார்கள் அதாவது அடிமையாகி நடந்து கொள்வார்கள். அப்படி இந்தக் காட்சியை, எப்படி மாயாவை வென்றவரின் பின்னால் இந்த இராவணனின் பத்து தலைகள் பத்து சேவாதாரியாகி பின்னால் வருவார்கள் என்பதை எதிரில் கொண்டு வாருங்கள் ஆனால் எப்பொழுது ஆடையோடு இறுக்கமாக இருக்கிறீர்களோ மேலும் நிரந்தரமாக அதாவது மிக நீளமானதாகவும் அகலமானதாகவும் இருக்கிறதோ அப்பொழுது இந்த பத்து சேவகர்கள் உங்களின் பின்னாலே தூக்கிக் கொண்டே வருவார்கள். இன்றைய நாட்களின் இராஜா இராணிகளும் இந்த பீதாம்பரத்தை கையால் தூக்கும் அளவிற்கு மிக நீளமானதாக அணிவார்கள், ஒருவேளை நிரந்தரமாக நீளமாக இல்லை, பட்டங்களில் இறுக்கமாக இல்லை என்றால், இதே சேவாதாரிகள் ஆடையை களைந்து விடுவார்கள். ஏனென்றால் தொய்வாக இருக்கும் இல்லையா? எனவே இப்பொழுது திட எண்ணத்தின் மூலம் பட்டங்களின் ஆடையை இறுக்கமாக ஆக்குங்கள். திட எண்ணம் தான் பெல்ட் ஆகும். இதன் மூலம் இறுக்கமாக்கினீர்கள் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பீர்கள். மேலும் எப்பொழுதும் சேவகர்கள் அடிமையாக இருப்பார்கள். விகாரம் பரிவர்த்தனை ஆகி சகயோகி, சேவாதாரி ஆகி விடும். இப்பொழுது ஆடை அணிவது எப்படி என்று தெரிந்து விட்டதா? இறுக்குவது எப்படி என்றும் தெரிந்து விட்டதா? எந்த நேரம் எந்த ஆடையை விரும்புகிறீர்களோ அதை அணியுங்கள் ஆனால் அழுக்கான ஆடையை அணியாதீர்கள். விதவிதமான ஆடை மற்றும் விதவிதமான அலங்காரத்தின் லாபத்தை எடுங்கள். பிரம்மாபாபா மற்றும் பாப்தாதா சங்கமயுகத்தின் சீர்வரிசை

கொடுத்திருக்கிறார். லவ் மேரேஜ் (காதல் திருமணம் செய்திருக்கிறீர்கள் என்றால் சீர்வரிசையும் கிடைக்கும் இல்லையா? அப்படி இந்த விதவிதமான அலங்காரத்தின் செட் மற்றும் அழகான ஆடை இவை தான் சீர்வரிசை ஆகும். பாப்தாதாவின் சீர்வரிசையை விட்டுவிட்டு பழைய சீர்வரிசையை உபயோகிக்காதீர்கள். சில குழந்தைகள் பாப்தாதாவின் சீர்வரிசையையும் அவசியம் பெற்றுக் கொள்வார்கள். மேலும் பெற்றும் இருக்கிறார்கள் ஆனால் கூடவே பழைய ஆடையையும் மறைத்து வைத்திருக்கிறார்கள். எனவே சில நேரம் அதை அணிந்து விடுகிறார்கள். இந்த மாதிரியும் சில குழந்தைகள் செய்கிறார்கள். எப்பொழுது பழைய பற்றுதல் ஏற்பட்டு விடுகிறது என்றால் பழைய ஆடையை அணிந்து விடுகிறார்கள். விலைமதிக்க முடியாத ஆடையை விட்டு விட்டு கிழிந்த ஆடையை அணிந்து விடுகிறார்கள். எனவே அந்த மாதிரி செய்யாதீர்கள். இப்பொழுது வரையிலும் மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்றால் அதை எரித்து விடுங்கள். மேலும் எரித்து விட்டு சாம்பலையும் தன்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள். அதையும் கடலில் போட்டு விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டு இருப்பீர்கள். மேலும் பாப்தாதாவுடன் இதய சிம்மாசனதாரியாக இருப்பீர்கள். ஆசனத்திலிருந்து இறங்கினீர்கள் என்றால் தூக்கு கயிறின் மேடை வந்து விடும். சில நேரம் பேராசையின், சில நேரம் பற்றுதலின் தூக்கு கயிறு வந்து விடும். எனவே தூக்கு கயிறின் ஆசனத்தை விட்டு விட்டு இதய சிம்மாசனதாரியாக ஆகி விடுங்கள். சீர்வரிசை பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது தான் இல்லையா? அதை உபயோகியுங்கள். சீர்வரிசையை வைத்துக் கொள்ள மட்டும் செய்யாதீர்கள். மிக நன்றாக இருக்கிறது, மிக நன்றாக இருக்கிறது என்று பார்த்துக் கொண்டு மட்டும் இருக்காதீர்கள் ஆனால் தாரணை செய்யுங்கள். மேலும் ஆடைக்கான போட்டியில் முதல் எண்ணில் வந்து விடுங்கள். மேலும் வரிசை எண் கிடைப்பது நிரந்தரத்தின் மேல் இருக்கிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். ஆடையை அணிவதோ அனைவருக்கும் தெரியும், ஆனால் ஆடை எப்பொழுதுமே டிப் டாப் ஆக இருக்க வேண்டும் என்ற இது தெரிவதில்லை. அப்படி எப்பொழுதும் நன்றாக அலங்கரிக்கப்பட்டவருக்கு வரிசை எண் முன்னுக்கு கிடைக்கிறது. போட்டியில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் நம்பர் ஒன் பெறுவார்களா அல்லது பாரதத்தைச் சேர்ந்தவர்கள் பெறுவார்களா? எவ்வளவு

விரும்புகிறீர்களோ அவ்வளவு பெற முடியும். வெளியுலகத்திலோ பரிசின் காரணமாக ஒருவருக்குத் தான் முதல் எண் கிடைக்கும் இங்கேயோ அனேகர்களை முதல் எண்ணாக ஆக்க முடியும், இங்கு குறைவில்லா பொக்கிஷம் இருக்கிறது. எனவே எவ்வளவு பேர்கள் முதல் எண்ணில் வருவீர்களோ அவ்வளவு அவர்களுக்கு முதல் பரிசு கிடைத்து விடும். நல்லது. நாளையிலிருந்து என்ன செய்வீர்கள்?

அமிர்தவேளையிலிருந்து விதவிதமான ஆடை மற்றும் அலங்காரத்தின் செட் மூலம் அலங்கரிக்கப்பட்டு முழு நாளும் தந்தையுடன் இருங்கள். அமிர்தவேளையிலிருந்தே முதல் நம்பரின் ஆடையை அணியங்கள். அந்த மாதிரி அலங்கரிக்கப்பட்ட பிரியதர்சினிகளைத் தான் உடன் அழைத்துச் செல்வோம். மற்றவர்களை அழைத்துச் செல்ல மாட்டோம். யார் போட்டியில் முதல் எண்ணில் வருவாரோ அவர் தான் உடன் இருப்பார் மற்றும் உடன் செல்வார். யார் இருக்கவே இல்லையோ அவர் செல்லவும் மாட்டார். எனவே "உடன் இருப்போம், உடன் செல்வோம்" என்ற இந்த சுலோகளை எப்பொழுதும் நினைவில் வையுங்கள் அதாவது இந்த திலகம் இட வேண்டும். போட்டியில் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று புரிந்து கொள்கிறீர்கள் தான் இல்லையா? தந்தை, பிரம்மாபாபாவிற்கு வதனத்தில் இதைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறார். குழந்தைகளின் நினைவோ பிரம்மாபாபாவிற்கும் இருக்கிறது. அப்படி குழந்தைகளின் நிலைமையைக் காண்பித்துக் கொண்டே இருக்கிறார்.

அந்த மாதிரி எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டவர்களுக்கு, சங்கமயுகத்து உயர்ந்த வாழ்க்கையின் மகத்துவத்தை தெரிந்திருக்கும் மகான் ஆத்மாக்களுக்கு, எதிரியையும் சேவாதாரி ஆக்கக்கூடிய, சகயோகியாக ஆக்கக்கூடிய அந்த மாதிரி மாஸ்டர் சர்வ சக்திவான் எப்பொழுதும் தந்தை மற்றும் நீங்கள் என்ற இந்த விசித்திர ஜோடி ரூபத்தில் இருக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குக் தகுதியான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

<u>சேவைக்குத் தகுதியான குழந்தைகளுக்காக பாப்தாதாவின் இனிய மகாவாக்கியங்கள்:</u> சேவைக்குத் தகுதியான குழந்தைகளின்

மகிமையோ மிகவும் மகான் ஆனது. ஏனென்றால் தந்தைக்குச் சமமாக இருக்கிறார்கள் இல்லையா? தந்தையும் குழந்தைகளின் சேவை செய்ய வருகிறார். மேலும் நீங்களும் பொறுப்பாளராக இருக்கிறீர்கள் என்றால் சமநிலை ஆகி விட்டது இல்லையா? சமமாக இருப்பவர்களின் மகிமை இருக்கும். சமமாக இருப்பவர் தான் எப்பொழுதும் உடன் இருக்க முடியும். சமமாக இல்லை என்றால் உடனும் இருக்க மாட்டார். தந்தைக்குச் சமமான என்றால் எப்பொழுதும் சுயகௌரவத்தில் இருப்பவர். எப்படி தந்தை தன்னுடைய சயகௌரவத்தை எப்பொழுதேனும் மறக்கிறாரா என்ன? எனவே தந்தைக்குச் சமமான என்றால் எப்பொழுதும் சுமானத்தில் இருப்பவர். அந்த மாதிரி இருக்கிறீர்களா? எப்பொழுதும் தந்தை மற்றும் சேவை இந்த இரண்டுமே எப்படி உடலின் நினைவு இயல்பாகவே இருக்கிறது. அதே போல் தந்தையின் நினைவு மற்றும் சேவையும் இயல்பாகவே நினைவில் இருக்கட்டும். ஒருவேளை நீங்களும் கடின உழைப்பு செய்து நினைவில் இருந்தீர்கள் என்றால் மற்றவர்களை சகஜயோகியாக எப்படி ஆக்குவீர்கள்? சேவைக்குத் தகுதியான குழந்தைகளின் தகுதியே சகஜயோகி, இயல்பான யோகி என்பதாகும்.

இப்பொழுது நேரத்திற்குத் தகுந்தாற்போல் கடின உழைப்பு முடிந்து விட வேண்டும். ஒருவேளை இப்பொழுது கூட கடினம் அனுபவம் ஆகிறது அல்லது ஏன் என்ன என்ற கேள்வி எழுகிறது என்றால். தன்னுடைய காரியத்தை செய்ய முடியாது. ஏன், என்ன என்று சொல்வது என்றால் வரிசையில் நிற்பது. ஒருவேளை நீங்களே வரிசையில் இருக்கிறீர்கள் என்றால் மற்றவர்களை திருப்தியான ஆத்மாவாக எப்படி ஆக்க முடியும்? நீங்களே பெறுபவர்களாக இருந்தீர்கள் என்றால் வள்ளலாக எப்படி ஆவீர்கள்? சேவாதாரி என்றால் கொடுத்துக் கொண்டே இருங்கள், கூடவே பெற்றுக் கொண்டும் இருங்கள். யார் அவரே ஏன், என்ன என்று கூறுபவராக இருக்கிறார் என்றால் அவரோ பிச்சைக்காரன் மாதிரி யாசிப்பவராக இருப்பார். சக்தி கொடுங்கள், சகயோகம் கொடுங்கள். நான் இந்தக் காரியத்தை செய்து கொண்டிருக்கிறேன். நீங்கள் வெற்றி கொடுங்கள். இந்த வேண்டுதல் கூட ராயலான பிச்சைக்காரத்தன்மை தான். யார் அவரே பிச்சைக்காரரின் வரிசையில் இருக்கிறார் என்றால் அவர் வள்ளலாகி மற்றவர்களுக்கு எப்படி கொடுக்க முடியும்? இப்பொழுது குழந்தைப் பருவம் முடிவடைந்தது. குழந்தைப் பருவத்தில்

அனைத்தும் அனுமதிக்கப்பட்டன, அழுவது, உணர்வில் வருவது, எண்ணங்களுக்கும் அனுமதி இருந்தது, ஆனால் இப்பொழுது இல்லை. இப்பொழுகோ முதிர்ந்த நிலை வரை வந்தடைந்து விட்டீர்கள் இல்லையா. குழந்தைப்பருவத்தின் விஷயங்கள் வயது முதிர்ந்த நிலையில் இருப்பதில்லை. இதில் ஏன், என்ன என்பது இருக்காது. ஏன், என்ன என்று கூறுகிறார் என்றால் குழந்தைத்தனம் உள்ளவர். யார் பேபி (குழந்தை) ஆக இருப்பாரோ அவர் பீபியாக (மனைவி) ஆக முடியாது. இப்பொழுதோ கணவன் மற்றும் மனைவிக்கான ஒப்பந்தம் ஆகும். இப்பொழுது குழந்தைத்தனம் முடிவடைந்தது. தந்தைக்குச் சமமாக ஆகி விட்டீர்கள் என்றால் கணவன் மற்றும் மனைவியாக ஆகி விட்டீர்கள். சிறு குழந்தைகளை சமம் என்று சொல்ல மாட்டார்கள். எப்பொழுது குழந்தை பெரியவராகி விடுகிறார் அல்லது தந்தை ஆகி விடுகிறார் என்றால் அப்பொழுது சமமானவர் என்று கூறப்படும். அப்படி இப்பொழுது குழந்தைத்தனம் முடிவடைந்தது.

சம்ஸ்காரம் ஒத்துப்போவதில்லை, என்ற இந்த எண்ணமும் வர வேண்டாம். ஒத்துப்போக வைக்கத் தான் வேண்டும். ஒத்துப்போவதில்லை என்று யார் கூறுவார்? இவர் மாறுவதில்லை. கேட்பதில்லை, இந்த இல்லை. இல்லை என்ற மொழி (வார்த்தை) யாருடையது? இப்பொழுதோ கண்டிப்பாக நடக்க வேண்டுமே தான். சரி, என்றிருக்க வேண்டும். இல்லை என்ற வார்த்தை முடிவடைந்தது. அப்படி அனைவருமே ஆம், ஆம் என்று கூறுபவர்கள் தான் இல்லையா? இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்டவராக ஆகுங்கள், எல்லைக்குப்பட்டதை விடுங்கள். ஏதாவது ஜோனின் ஹெட் (தலைமை பதவி) ஆக இருக்கிறார் என்றால் இதுவும் எல்லைக்குட்பட்டதாக ஆகி விட்டது. படத்தின் உள்ளே பாருங்கள், உங்களுடைய ஜோன் எது? புள்ளி. அப்படியானால் எல்லைக்குட்பட்டது ஆனது இல்லையா. இப்பொழுது இந்த இடத்தைச் சேர்ந்தவன் என்ற இதுவும் வேண்டாம். இந்த இடத்திலேயே நான் நன்றாக இருக்கிறேன் என்ற இதுவும் வேண்டாம். எல்லைக்கப்பாற்பட்ட அதிபதி ஆக வேண்டுமா அல்லது ஒரு இடத்தின் அதிபதி ஆக வேண்டுமா? கொஞ்சம் இடமாற்றம் ஆனது என்றால் மனநிலை மாறிவிட்டது என்று அந்த மாதிரியும் வேண்டாம். இப்பொழுது அங்கே இங்கே அனுப்புவோம், தயாராக இருக்கிறீர்களா? வெளிநாட்டிற்கு அனுப்புவோம் அல்லது எந்த இடத்திற்காவது

அனுப்புவோம், ஆனால் வெளிநாட்டிற்கு அனுப்பினாலும், பாரதத்திற்குள் அனுப்பினாலும் எதற்கும் தயார் நிலையில் இருக்க வேண்டும். எப்பொழுது போக வேண்டும் என்றால் சக்தி தானாகவே கிடைத்து விடுகிறது. அப்படி நாளையிலிருந்து அனைவரையும் மாற்றம் செய்யலாமா, புதிய கற்றறிக்கையை வெளியிடுவோம். பிறகு இப்பொழுது தயாராவதற்காக இன்னும் ஒரு வருடம் கொடுங்கள், நான்கு மாதங்கள் மட்டும் கொடுங்கள், இரண்டு தங்கள் கொடுங்கள் என்று அப்படியோ கூற மாட்டீர்கள் தான் இல்லையா? தைரியம் இருக்கிறதா?

நம்முடையது என்று என்னதான் இருக்கிறது. ஒருவேளை நம்முடையது என்றால் அனைத்துமே நம்முடையது, நம்முடையது இல்லை என்றால் எதுவுமே நம்முடையது இல்லை. எது தந்தையினுடையதோ அது நம்முடையது. தந்தையினுடையது எல்லைக்கப்பாற்பட்டது, உங்களுடையதும் எல்லைக்கப்பாற்பட்டது. அனைவரும் நம்முடையவர்கள், இதைத் தான் எல்லைக்கப்பாற்பட்ட நிலை என்று கூறுவது.

அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா எப்பொழுதும் விசேஷமாக சகயோகம் கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறார். ஏனென்றால் யார் சேவையில் பொறுப்பாளர் ஆகியிருக்கிறாரோ அந்த விசேஷ சேவாதாரிகளுக்கு விசேஷ சகயோகம் எப்பொழுதும் கிடைக்கத்தான் செய்கிறது. விசேஷமான காரியம் செய்பவர்களோ முதலில் நினைவில் வருவார்கள் இல்லையா? உலகியல் முறையில் கூட யாராவது சரித்திரத்தை நினைவு செய்தீர்கள் என்றால் சரித்திரத்தில் கூட முதலில் யார் நினைவில் வருவார்? யார் விசேஷமாக இருப்பாரோ அவருடைய நினைவு தான் வரும் இல்லையா? சங்கமயுகத்தின் சரித்திரத்தில் கூட யார் எந்த அளவு விசேஷ சேவதாரியாக இருக்கிறாரோ அவர் விசேஷமான ஆத்மா ஆவார். அப்படி பாப்தாதா எப்பொழுது நினைவு செய்கிறார் என்றால் முதன் முதலில் இயல்பாகவே அவர் நினைவில் வருவார். நினைவு செய்யுங்கள் என்று இதைச் சொல்வதற்கான அவசியமும் இல்லை. விசேஷமான நினைவிற்கான பிரதிபலன் பெறுபவராக மட்டும் ஆகுங்கள். தந்தை அனைவருக்கும் நினைவின் பிரதிபலனைக் கொடுக்கிறார் ஆனால்

பெறுபவர்கள் சில நேரம் அலட்சியத் தின் காரணமாக பெறுவதில்லை. தந்தையிடம் என்னவெல்லாம் இருக்கிறதோ அவை அனைத்தும் கொடுப்பதற் காகத் தான் இருக்கின்றன. அப்படி தந்தை அனைவருக்கும் கொடுக்கிறார் ஆனால் பெறுபவர்கள் வரிசைக் கிரமமாக இருக்கிறார்கள்.

வரதானம்: கேட்பதின் கூடவே சொரூபம் ஆகி மனதின் மனமகிழ்ச்சி மூலமாக எப்பொழுதும் சக்திசாலியான ஆத்மா ஆகுக!

தினசரி மனதில் தனக்காகவும் அல்லது மற்றவர்களுக்காகவும் ஊக்கம் உற்சாகத்தின் எண்ணத்தை கொண்டு வாருங்கள். நீங்களும் அதே எண்ணத்தின் சொரூடம் ஆகுங்கள். மேலும் மற்றவர்களின் சேவையிலும் ஈடுபடுத்தினீர்கள் என்றால் தன்னுடைய வாழ்க்கையும் நிரந்தரமாக உற்சாகம் நிறைந்ததாக ஆகி விடும். மேலும் மற்றவர்களுக்கும் உற்சாகம் கொடுப்பவராக ஆக முடியும். எப்படி மனமகிழ்விக்கான நிகழ்ச்சி நடக்கிறது. அதே போல் மனதிற்காக மனமகிழ்ச்சியின் நிகழ்ச்சியை தயாரியுங்கள், என்ன கேட்கிறீர்களோ அதன் சொரூபம் ஆனீர்கள் என்றால் சக்திசாலி ஆகி விடுவீர்கள்.

சுலோகன்! உயர்ந்த காரியத்தின் ஞானம் தான் உயர்ந்த அதிர்ஷ்டத்தின் ரேகையைப் போடுவதற்கான எழுதுகோல் ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 14.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆன்மீக சேனைகளுடன் ஆன்மீக தளபதியின் சந்திப்பு!

இன்று முக்கியமாக எந்த சபை கூடியிருக்கிறது? இந்த சபையை, தன்னுடைய இரட்டை சேவாதாரி குழந்தைகளை யார் இரட்டை சேவாதாரி மற்றும் இரட்டை ஞானம் நிறைந்தவராக இருக்கும் குழந்தைகளாக இருக்கிறார்களோ அந்த மாதிரி குழுவைப் பார்த்து இன்று வதனத்தில் ஒரு விசேஷ உரையாடல் நடந்தது. பிரம்மாபாபா கூறினார்- இவர்கள் விசேஷமாக என்னுடைய புஜங்கள் ஆவார்கள். சிவபாபா கூறினார் -இவர்கள் என்னுடைய ருத்ர மாலை ஆவார்கள். ருத்ர மாலையின் விசேஷ மணிகள் ஆவார்கள். அந்த மாதிரி பேச்சு நடந்து கொண்டே சிவபாபா, பிரம்மாபாபாவிடம் கேட்டார், உங்களுடைய இந்த அனைத்து புஜங்களும் வலது கரங்களா அல்லது இடது கரங்களும் இருக்கிறார்களா? வலது கரம் என்றால் எப்பொழுதும் சமமானவர்கள், சுத்தமானவர்கள் மற்றும் சத்தியமானவர்கள். அப்படியானால் அனைவரும் வலது கரங்களாக இருக்கிறார்களா? அதற்கு பிரம்மாபாபா புன்முறுவலிட்டார். மேலும் புன்முறுவலிட்டுக் கொண்டே ஒவ்வொருவரின் கணக்கோ உங்களிடம் இருக்கவே இருக்கிறது என்று கூறினார். அப்படி கணக்கைப் பார்க்கும் விஷயம் வந்தது, ஒவ்வொரு குழந்தையின் கணக்கு எதிரில் வெளிப்பட்டது. எப்படி வெளிப்பட்டது? ஒரு கடிகாரத்தின் ரூபத்தில் வெளிப்பட்டது. அதில் ஒவ்வொருவரின் நான்கு பாடங்களின் நான்கு பாகம் இருந்தது. எப்படி இங்கே சிருஷ்டி சக்கரத்தின் படத்தை உருவாக்குகிறீர்கள் அந்த மாதிரி. ஒவ்வொரு பாகத்திலும் தனித்தனியான முட்கள் இருந்தன. அவை ஒவ்வொருவரின் நான்கு பாடங்களின் சதவிகிதத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தன. அனைவரின் கணக்கு மிகத் தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தது. கணக்கைப் பார்த்துக் கொண்டே பாப்தாதா நேரத்தை காட்டும் கடிகாரம் மற்றும் குழந்தைகளின் முயற்சி செய்வது என்ற கடிகாரம் இரண்டையும் பார்த்து என்ன தென்படுகிறது என்று

அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். நேரத்தின் கடிகாரம் மற்றும் குழந்தைகளின் முயற்சியின் கடிகாரம். இந்த இரண்டிலும் பெரும்பான்மையோரின் இரண்டு பாகங்கள் அதாவது இரண்டு பாடங்களின் முடிவு 75-சதவிகிதம் இருந்தும் சரியாக இருந்தது ஆனால் இரண்டு பாடங்களின் சதகி விகிதத்தின் முடிவில் மிகக் குறைவாக இருந்தது. எனவே இந்த ரிசல்ட்டின்படி எவரெடி குரூப் என்று கூறுவோமா? என்று பாப்தாதா கூறினார். எப்படி விநாஷத்தின் பொத்தானை அழுத்த வேண்டும் என்பது மட்டும் தான் பாக்கி இருக்கிறது. ஒரு நொடிக்கான விஷயம் என்று சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதே போல் ஸ்தாபனைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கும் குழந்தைகள் ஒரு நொடியில் தயாராகி விட வேண்டும், அந்த மாதிரி நினைவிற்கான சக்திசாலியான பொத்தான் தயாராகியிருக்கிறதா? நினைத்தீர்கள் மற்றும் அசரீரி ஆனீர்கள். நினைத்தீர்கள் மற்றும் அனைவரின் உலகிற்கு நன்மை செய்பவர் என்ற உயர்ந்த நிலையில் நிலைத்து விட்டீர்கள். மேலும் அதே நிலையில் நிலைத்திருந்து, பார்வையாளரின் பார்வையோடு விநாஷ லீலையைப் பார்க்க முடிய வேண்டும். உடலின் அனைத்து ஈர்ப்புகளும் சம்மந்தம், பதார்த்தம், சம்ஸ்காரம் என்ற இந்த அனைத்து ஈர்ப்பிலிருந்தும் விடுபட்டு, இயற்கையின் மேலே கீழே செல்லும் ஈர்ப்பிலிருந்து விலகி ஃபரிஷ்தா ஆகி மேலே உள்ள நிலையில் நிலைத்திருந்து சாந்தி மற்றும் சக்தியின் கிரணங்களை அனைத்து ஆத்மாக்களுக்கும் கொடுக்க முடிய வேண்டும். அப்படி நினைவின் சக்திசாலியான பொத்தான் தயாராகியிருக்கிறதா? எப்பொழுது இரண்டு பொத்தான்களும் தயாராகி விடுமோ அப்பொழுது முடிவு ஏற்பட்டு விடும்.

இந்த குரூப்பைப் பார்த்து வதனத்தில் கணக்கு வெளிப்பட்டது. எப்படி உடல் வலிமை உள்ள சேனையிலும் அனேக விதமான போர் வீரர்கள் இருப்பார்கள். சிலர் எல்லைக்குச் செல்பவர்களாக. யுத்த மைதானத்தில் செல்பவர்களாக அதாவது நேரடியாக யுத்தம் செய்பவராக, இன்னொருவர் அவரைப் பராமரிப்பவராக பின்னால் இருப்பார்கள். இயக்குநரோ முதுகெலும்பாக இருப்பார். அதே போலவே இந்த குரூப் மைதானத்தில் சேவை செய்யக்கூடிய குரூப் ஆகும். மைதானத்தில் வரக்கூடிய சேனையின் ஆதாரத்தினால் தான் வெற்றி மற்றும் தோல்விக்கான விஷயம் இருக்கும். ஒருவேளை மைதானத்தில்

வருபவர்கள் பலஹீனமாக ஆயுதம் இல்லாத, மிகவும் பயப்படுபவர்களாக இருக்கிறார்கள் என்றால் ஒருபொழுதும் இயக்குநருக்கு வெற்றி கிடைக்க முடியாது. உலக நன்மை செய்வதற்கான மைதானத்தில் இது சேவாதாரி குரூப் ஆகும். இந்த குரூப் வீரம் நிறைந்தது. எதிர்நோக்கும் சக்தி அதாவது அனுபவம் செய்விக்கும் சக்தி, அனைவருக்கும் உயர்ந்த சரித்திரம் மூலமாக பாப்தாதாவின் சித்திரத்தைக் காண்பிக்கும் சக்தி, அந்த மாதிரி ஆயுதம் தரித்தவராக இருக்கிறீர்களா? என்ன நினைக்கிறீர்கள் -அந்த மாதிரி சக்தி சொரூபமான குரூப் ஆக இருக்கிறீர்களா? நான்கு பாடங்களிலும் நான்கு அலங்காரத்தையும் தரித்தவராக இருக்கிறீர்களா? நீங்கள் இரண்டு கைகள் உள்ள சக்தி சொரூபமா அல்லது நான்கு கைகள் உள்ளவரா? இந்த நான்கு அலங்காரம் நான்கு பாடங்களின் அடையாளம் ஆகும். அப்படியானால் அனைத்து அலங்காரங்களையும் தனக்குள் கொண்டு வந்திருக்கிறீர்களா? அல்லது சிலர் இரண்டைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், சிலர் மூன்றைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் அல்லது ஒன்றை கொண்டு வந்திருக்கிறீர்கள் என்றால் இன்னொன்று விடுபட்டு விடுகிறதா? அப்படி இந்த குரூப்பின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டீர்களா?

சேவையின் மைதானத்தில் வரக்கூடிய குரூப் ஆகும். அதாவது வெற்றிக்கான ஆதாரமானவர்கள் அடங்கிய குரூப் ஆகும். ஆதாரமானவர்கள் உறுதியாக இருக்கிறீர்கள் தான் இல்லையா, ஆதாரம் ஆடக்கூடியதாக இல்லை தான் இல்லையா? ஞானம் மற்றும் சேவை என்ற இந்த இரண்டு பாடங்களில் 75-சதவிகிதத்தைப் பார்த்தோம். அதே போல் நினைவு மற்றும் தாரணை இந்த இரண்டு பாடங்களிலும் இன்னும் அதிக கவனம் கொடுத்து நான்கு அலங்காரம் தரித்தவராக ஆகுங்கள். இல்லை என்றால் உலகின் ஆத்மாக்களுக்கு முழுமையான சாட்சாத்காரம் செய்விக்க முடியாது. எனவே இந்த இரண்டு அலங்காரங்களை தாரணை செய்வதற்காக விசேஷமாக என்ன கவனம் வைப்பீர்கள். நீங்கள் குடும்பத்தின் மற்றும் ஈஸ்வரியு அப்படி இரட்டை சேவாதாரி ஆவீர்கள். உடல் நிர்வாகத்திற்காகவும் மற்றும் ஆத்மா நிர்வாகத்திற்காகவும் அப்படி இரட்டை சேவை கிடைத்திருக்கிறது. மேலும் இரண்டு சேவைகளுமே பாப்தாதாவின் டைரக்ஷன்படி கிடைத்திருக்கிறது ஆனால் இரண்டு சேவைகளிலும்

நேரத்தின், சக்திகளின் சமமான கவனம் கொடுக்கிறீர்களா? தராசில் இரண்டு பக்கங்களிலும் சமமாக வைக்கிறீர்களா? முள்ளை சரியாக வைக்கிறீர்களா அல்லது முள் இல்லாத தராசை வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? ஸ்ரீமத் தான் முள். ஒருவேளை ஸ்ரீமத் என்ற முள் சரியாக இருக்கிறது என்றால் இரண்டு பக்கமும் சமமாக இருக்கும். அதாவது தராசின் சமநிலை சரியாக இருக்கும். ஒருவேளை முள்ளே சரியில்லை என்றால் சமநிலை இருக்க முடியாது. சில சில குழந்தைகள் ஒரு பக்கத்தின் எடையை அதிகமாக வைக்கிறார்கள். எப்படி? குடும்பப் பொறுப்பை கண்டிப்பாக செய்ய வேண்டும் என்று அப்படி நினைக்கிறார்கள். மேலும் ஈஸ்வரிய பொறுப்பை செய்யவோ வேண்டும் என்று அப்படி கூறுகிறார்கள். அது கண்டிப்பாக செய்ய வேண்டும் மற்றும் இது செய்யவோ வேண்டும். எனவே ஒரு பக்கத்தின் எடை அதிகமாகி விடுகிறது. பிறகு முடிவாக என்ன ஆகிறது? சுமை அவரையே கீழே கொண்டு வந்து விடுகிறது. மேலே எழ முடியாது. சுமையுள்ள பக்கம் எப்பொழுதுமே கீழே தரையில் பட்டு விடும். மேலும் லேசானது மேலே எழுந்திருக்கும். மேலும் சமமாக இருப்பவரும் மேலே எழுவார். கீழே பூமியில் தொடாமல் இருக்கும். பூமியில் படும் காரணத்தினால் பூமியின் ஈர்ப்பின் வாமாகி விடுகிறார்கள். சுமையின் காரணமாக ஈஸ்வரிய சேவையின் மைதானத்தில் லேசானவராகி எப்பொழுதும் வெற்றி அடைபவராக ஆக முடியாது. கர்ம பந்தனத்தின், சமூக மரியாதையின் சுமை கீழே கொண்டு வந்த விடுகிறது. எந்த சமுதாயத்தை விட்டு விட்டாகி விட்டதோ அந்த சமுதாயத்தின் மரியாதைகளை வைக்கிறார்கள். மேலும் எந்த சங்கம யுகத்தின் மற்றும் சங்கம சமுதாயத்தினராகி விட்டார்களோ அந்த (பிராமண) சமுதாயத்தின் மரியாதை வைப்பதை மறந்து விடுகிறார்கள். எந்த சமுதாயம் அழியக்கூடியதோ அந்த சமுதாயத்தின் (உலகீய) மரியாதையை எப்பொழுதும் நினைவில் வைக்கிறார்கள். மேலும் எந்த சமுதாயம் அழியாததோ எந்த சமுதாயத்தின் மூலம் எதிர்கால சமுதாயம் உருவாக வேண்டுமோ, அந்த சமுதாயத்தின் நினைவூட்டிய போதிலும் சில நேரம் மட்டுமே நினைவு சொரூபம் ஆகிறார்கள். குடும்ப விவகாரம் மற்றும் ஈஸ்வரிய விவகாரம் இரண்டின் சமநிலை வைப்பது என்றால் எப்பொழுதும் இரண்டிலும் லேசானவராக இருப்பது மற்றும் வெற்றி அடைவது.

உண்மையில் குடும்ப விவகாரம் என்ற வார்த்தையை மாற்றுங்கள். குடும்பம் என்ற வார்த்தையை சொன்னவுடனேயே குடும்பஸ்தன் ஆகி விடுகிறீர்கள். எனவே நீங்கள் குடும்பஸ்தன் அல்ல, டிரஸ்டி ஆவீர்கள். குடும்ப விவகாரம் அல்ல, டிரஸ்ட் விவகாரம் ஆகும். குடும்பஸ்தன் ஆகிறீர்கள் என்றால் என்ன செய்கிறீர்கள். குடும்பஸ்தன் செய்யும் விளையாட்டு எது? குடும்பஸ்தன் ஆகுகிறீர்கள் என்றால் சாக்குபோக்கு அதிகம் சொல்வீர்கள். இப்படி மற்றும் அப்படி என்ற பாஷை அதிகம் பேசுவீர்கள். அப்படியானது இல்லையா, இப்படி இருக்கிறது இல்லையா? விஷயத்தை அதிகரிக்க தொடங்கி விடுவீர்கள். செய்யத்தான் வேண்டும் இதை நீங்களும் தெரிந்திருக்கிறீர்கள், இதுவோ அப்படியே தான், இப்படியே தான் என்ற இந்த பாடத்தை தந்தைக்கும் கற்பிக்கத் தொடங்கி விடுகிறீர்கள். டிரஸ்டி ஆகி விட்டீர்கள் என்றால் சாக்கு போக்கு கூறுவது முடிவடைந்து, முன்னேறும் கலையின் தொடக்கம் ஏற்பட்டு விடும். அப்படி இன்றிலிருந்து தன்னை குடும்ப விவகாரத்தில் இருப்பவர் என்று நினைக்காதீர்கள், டிரஸ்ட் விவகாரம். பொறுப்பு இன்னொருவருடையது, நீங்கள் கருவியாக மட்டும் இருக்கிறீர்கள். எப்பொழுது இந்த மாதிரி எண்ணத்தில் மாற்றம் செய்தீர்கள் என்றால், வார்த்தை மற்றும் செயலில் மாற்றம் ஏற்பட்டே விடும். அப்படி இந்த குரூப்பில் ஒவ்வொருவருமே மிக அதிசயக் காரியம் செய்ய முடியும். கர்ம யோகி, சகஜ யோகியின் ஒவ்வொரு உதாரணம் அனேக ஆத்மாக்களை உயர்ந்த ஒப்பந்தம் செய்வதற்குக் காரணமாக ஆக்க முடியும். மேலும் எல்லைக்குட்பட்ட குருவாக யார் இருக்கிறார்களோ அவருடைய ஒரு சிஷ்யன் ஆசனத்தில் அமர்ந்து தன்னுடைய குருவின் பெயரை புகழடையச் செய்வார். மேலும் இங்கு சத்குருவின் இத்தனை அனைத்து சிம்மாசனதாரி குழந்தைகள் நீங்கள், ஒவ்வொரு குழந்தையும் எவ்வளவு உயர்ந்த காரியம் செய்ய முடியும்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் அந்த மாதிரி சேவைக்குத்தகுதியான, உலகில் பெயரை புகழடையச் செய்யக்கூடிய உலகிற்கு நன்மை செய்யும் குழந்தை என்று நினைக்கிறார். எப்பொழுது ஒரு தீபம். தீபமாலையை உருவாக்கி விடுகிறது என்றால், நீங்கள் ஒவ்வொரு தீபமும் முழு உலகில் தீபாவளி செய்து விடுவீர்கள். இந்த குரூப்பிற்கு என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

விதவிதமான குரூப்பிற்கு விதவிதமான துறையைச் சேர்ந்த ஆத்மாக்களின் சேவாதாரியாகி அனைவரின் சத்கதி மற்றும் உயர்ந்த வாழ்க்கையை உருவாக்குவதற்கான ஆதாரமானவர் ஆக வேண்டும். எப்படி இரட்டை வெளிநாட்டினர் இருக்கிறார்கள். அதே போல் இது இரட்டை ஞானம் நிறைந்த நிலை மற்றும் இரட்டை சேவைக்குத் தகுதியானவர்கள். எனவே ரிசல்ட்டாக கூட இருமடங்கு வெளியாக வேண்டும். அந்த மாதிரி எப்பொழுதும் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபட்ட, எப்பொழுதும் பந்தனமற்ற வாழ்க்கையில் இருக்கக்கூடிய, உலகின் காட்சி பெட்டகத்தில் விசேஷ காட்சி பொருளாக இருப்பவர்களுக்கு, உலக மாற்றம் செய்ய ஆதாரமானவர்களுக்கு, எப்பொழுதும் ஸ்ரீமத்தின் ஆதாரத்தில் சுயநன்மை மற்றும் உலக நன்மை செய்பவர்களுக்கு. அந்த மாதிரி நிரந்தர உலக சேவாதரிகளுக்கு எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

டாக்டர்களுக்காக அவ்யக்த பாப்தாதாவின் இனிய மகாவாக்கியங்கள்: இரட்டை டாக்டர்களின் குரூப் தான் இல்லையா? எப்படி அனைத்து டாக்டர்களும் தன்னுடைய எல்லைக்குட்பட்ட மருத்துவத் துறையில் விசேஷ நிபுணர்களாக இருக்கிறீர்கள். அதே போல் ஆன்மீக மருத்துவத்தில் விசேஷமாக எந்த சேவைக்கு பொறுப்பாளர் ஆகியிருக்கிறீர்கள். எப்படி எல்லைக்குட்பட்ட மருத்துவத்தில் சிலர் கண்களின், சிலர் விஷேஷமாக தொண்டையின். சில மருத்துவர்கள் மருந்துகள் கொடுப்பவராக மட்டும் இருப்பார்கள். அப்படி இந்த ஆன்மீக மருத்துவத்தில் என்ன விசேஷங்கள் இருக்கின்றன? ஒரு நொடியில் யாருடைய பழைய சம்ஸ்காரம் என்ற நோயை கண்களின் பார்வை மூலமாக அகற்றி விட வேண்டும். அதாவது அந்த நேரம் அந்த நோயிலிருந்து அவரை மறக்க வைத்து விட வேண்டும், அந்த மாதிரி விசேஷம் நிறைந்த டாக்டர்களா நீங்கள்? எப்படி அவர்கள் கண்களை சரி செய்து விடுகிறார்கள். அதே போல் தன்னுடைய பார்வை மூலமாக யாருடைய பழைய சம்ஸ்காரத்தையாவது முதலில் உள்ளடக்கி விட வேண்டும். பிறகு அழித்து விட வேண்டும், அந்த நேரம் அமைதிப்படுத்தி விட வேண்டும். அந்த மாதிரி விசேஷங்கள் நிறைந்த டாக்டர்களா நீங்கள்? இது கண்களின் டாக்டருக்கானது, அவர் பார்வை மூலமாகவே

மாற்றம் செய்து விட வேண்டும். எப்படி டாக்டர்கள் மாத்திரை கொடுத்து கொஞ்ச நேரத்திற்காக வலியை உள்ளடக்கி வைத்து விடுகிறார்கள். அதே போல் கண்களின் டாக்டரான நீங்கள் பார்வையாலேயே அவரைத் திருப்தி படுத்தி விட வேண்டும். எல்லைக்குட்பட்டதின் விஷயம் அல்ல ஆனால் ஆன்மீக விஷயமாகும். ஆன்மீகக் கண்களின் டாக்டர் என்றால் ஆன்மீகப் பார்வை மூலம் சிகிச்சை கொடுப்பவர்.

**2) அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர்கள்:** எப்படி நீங்கள் ஆபரேஷன் செய்கிறீர்கள் அதே போல் தனக்குள் என்ன சக்திகள் இருக்கின்றனவோ இந்த சக்திகள் தான் இயந்திரங்கள் ஆகி விட வேண்டும். அந்த இயந்திரங்கள் மூலமாக அவர்களின் பலஹீனங்கள் அகன்று விடும். எப்படி உங்களுடைய தியேட்டரின் இயந்திரங்கள் மூலமாக அறுவை சிகிச்சை செய்கிறீர்கள், நோயாளியின் இயந்திரத்தையோ உபயோகிப்பதில்லை, அதே போல் தன்னுடைய சக்திகளின் இயந்திரம் மூலமாக நோயை சரி செய்து விடுங்கள். காம விகாரியை காமமற்றவராக்கி மற்றும் கோபப்படுபவரை கோடமற்றவராக ஆக்கி விட வேண்டும். இதற்காக சகித்துக் கொள்ளும் சக்தியின் இயந்திரத்தை உபயோகிக்க வேண்டியதாக இருக்கும், அந்த மாதிரி ஆப்பரேஷன் செய்யும் டாக்டர் தானே நீங்கள் இல்லையா? எப்படி அவர்களின் கண், மூக்கு அனைத்திற்கும் தனித்தனியான நிபுணர்கள் இருப்பார்கள். அதே போலவே இங்கேயும் தனித்தனி சிறப்புக்கள் இருக்கின்றன. இங்கேயும் யாராவது எவ்வளவு பட்டங்களைப் பெற விரும்புகிறார்களோ அந்த அளவு பெற முடியும். யார் அனைத்து விசேஷங்களில் ஆல் ரவுண்டராகி விடுகிறாரோ அவர் பெயர் பெற்றவராகி விடுகிறார்.

டாக்டர்களோ மிகுந்த சேவை செய்ய முடியும். ஏன்? ஏனென்றால் நோயாளி அந்த நேரம் முற்றிலும் பிச்சைக்காரன் ரூபத்தில் வருகிறார்கள். ஒருவேளை அந்த நேரம் டாக்டர் அவருக்கு பொய்யான மருந்தை கொடுத்து விடுகிறார். தண்ணீர் மட்டும் கொடுத்து விட்டார் என்றால் கூட பாவனையின் காரணமாக அவர் சரியாகி விடுகிறார். அவருக்கு குஷியின் பானிக் கிடைத்து விடுகிறது அதன் மூலம் சரியாகி விடுகிறார். மருந்தின் மூலம் சரியாவதில்லை, ஆனால் குஷியின் காரணமாக சரியாகி விடுகிறார். அப்படி டாக்டர்களிடம் பிச்சைக்காரனின் ரூபத்தில் வருகிறார்கள். கொஞ்ச நேரத்திற்காவது

கூட வலியை அகற்றி விடுங்கள், நீங்கள் அந்த நேரம் அவர்களுக்கு என்ன கூறினாலும் கேட்பதற்குத் தயாராகி விடுவார்கள். எப்படி இன்ஜக்ஷன் போட்டு ஒரு நொடியில் அவருடைய வலியின் உணர்வுகளை மறக்க வைத்து விடுகிறீர்கள் அதே போல் ஞானத்தின் இன்ஜக்ஷன் போட்டு பழைய சம்ஸ்காரத்தின் உணர்வுகளை மறக்க வைத்து விட வேண்டும். அந்த மாதிரியான இன்ஜக்ஷன் உங்கள் அனைவரிடமும் இருக்கிறது தான் இல்லையா? யார் முதலில் தனக்கு இன்ஜக்ஷன் போட்டு சம்ஸ்காரங்களை மறக்க முடியுமோ, அவரே தான் பிறகு தன்னுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் மற்றவர்களுக்குப் போட முடியும். அப்படி இரட்டை டாக்டர்களுக்கு ஏதாவது விசேஷங்கள் இருக்க வேண்டும் இல்லையா? இப்பொழுது யார் வந்தாலும் உங்களிடம் அவரை அனுப்புவோம். கேஸ் திரும்பிச் சென்று விடக்கூடாது அந்த மாதிரியும் ஆகி விடக் கூடாது. சேவையில் முன்னேறிச் செல்வதற்கான மிக நல்ல வாய்ப்பாகும். டாக்டர்களோ ஒரு நாளில் அதிகமான பிரஜைகளை உருவாக்க முடியும். தினசரி பிரஜைகள் ஏற்கனவே தயாராகி உங்களிடம் வருகிறார்கள், தேடுவதற்காக செல்ல வேண்டியதாக இருக்காது. எப்படி மகாநாடுகள் கண்காட்சிகளில் எவ்வளவு செலவு செய்து அழைக்கிறார்கள், உங்களுக்கோ மிகவும் சுலபம். ஒருவேளை சம்மந்தத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் அவர் குழந்தையாகவும் ஆக முடியும். சிலர் நன்றாக இருக்கிறது என்று கூறிக் கொண்டே சென்றும் விடுவார்கள் ஆனால் அவர் இறுதி நேரத்தில் குழப்பமான நேரத்தில் விருப்பமுடையவராகி உணரும் சக்தியின் கூடவே வருவார்கள். எனவே சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். உங்களுடைய இஷ்ட பக்தர்கள் அவசியம் ஏற்றுக் கொள்வார்கள். வேறு எதுவம் இல்லை என்றால் கூட அவசியம் உங்களுடைய பக்தனாக ஆகி விட வேண்டும். ஒருவேளை இறுதியில் இவர் செய்தியை நன்றாகக் கொடுத்தார். செய்தி கொடுப்பவராக இருந்தார், தூதுவனாக இருந்தார் என்ற இதையும் யோசித்தார் என்றால் பக்தன் ஆகி விடுவார். இறுதி நிலை பக்தன் ஆகும். அவரும் வேண்டும் தான் இல்லையா?

இந்த நேரம் யார் வருகிறார்களோ அவர்கள் ஏழு நாட்கள் பாடத்தினால், தன்னுடைய தைரியத்தினால் இந்த மார்க்கத்தில் செல்பவர்களாக குறைவானவர்கள் தான் இருப்பார்கள். கடைசி வேர் அல்லவா? கடைசி

வேரில் சக்தி இருக்காது. எனவே இப்பொழுதைய ஆத்மாக்களுக்கு தன்னுடைய சக்திகளின் சகயோகம் மூலமாக முன்னேற்றம் செய்வதற்கான நேரம் ஆகும். உங்களை ஒப்பிடும் போது இன்றைய ஆத்மாக்கள் மிக கால தாமதம் ஆகி விட்டார்கள். ஏனென்றால் இறுதி வேர் ஆகி விட்டார்கள். எனவே நீங்கள் உற்சாகம் கொடுத்து அவர்களை நடத்து விக்க வேண்டும். நீங்கள் மகாதானி, வரதானி ஆக வேண்டும். அவர்கள் அவர்களுடைய ஆதாரத்தில் செல்ல முடியாது. எனவே ஒரு நொடியில் அனுபவம் செய்விக்கக்கூடிய அந்த மாதிரி சக்திசாலியான இயந்திரத்தைக் கண்டுபிடியுங்கள். இப்பொழுது உங்கள் போன்றவர்களின் எண்ணிக்கையை அதிகரியுங்கள். இப்பொழுது அந்த மாதிரி இன்ஜக்ஷன் தயார் செய்யுங்கள். அதைப் போட்டவுடன் உணர்வை இழந்து விட வேண்டும். அந்த உலகத்திலிருந்து உணர்விழந்து இந்த உலகத்திற்கு வந்து விட வேண்டும். அந்த மாதிரியான இன்ஜக்ஷன் தயார் செய்ய வேண்டியதாக இருக்கும். இந்த வருடத்தில் எத்தனை எண்ணிக்கைகளை அதிகரிப்பீர்கள் என்று இப்பொழுது பார்க்கலாம். குறைந்தது உங்களைப் போன்றவர்கள் எங்களுக்கு கூறவேயில்லை என்று புகார் கொடுக்கக் கூடாது. ஒருவேளை நாங்கள் எழவில்லை என்றால் எங்களை எழுப்ப வேண்டியது கடமை தான் இல்லையா என்ற புகாரும் கொடுப்பார்கள். ஒரு தடவை அழைப்பிதழ் கொடுத்தீர்கள், நோட்டீஸ் அனுப்பினீர்கள் என்றால் எப்படி எழுவார்கள். யார் கும்பகர்ணனின் தூக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறாரோ அவரை எழுந்திருங்கள் என்று ஒரு தடவை சப்தம் கொடுத்தால் அவர் எப்படி எழுவார்? எனவே அடிக்கடி எழுப்ப வேண்டியதாக இருக்கும். நல்லது.

வரதானம்: குழு ஒற்றுமை என்ற கோட்டையை உறுதியாக்கக்கூடிய அனைவரின் அன்பிற்குரிய திருப்தியான ஆத்மா ஆகுக!

குழுவின் சக்தி விசேஷமான சக்தி ஆகும். ஒரு வழியில் நடக்கும் குழுவின் கோட்டையை யாராலும் அசைக்கக் கூட முடியாது ஆனால் இதற்கான ஆதாரம் ஒருவர் இன்னொருவரின் அன்பானவர் ஆகி அனைவருக்கும் மரியாதை கொடுப்பது. மேலும் சுயம் தான் திருப்தியாக இருந்து அனைவரையும் திருப்தி படுத்துவது யாரும் தொந்தரவு ஆக வேண்டாம். மேலும் யாரையும் தொந்தரவு செய்ய

வேண்டாம். அனைவரும் ஒருவர் இன்னொருவருக்கு சுபபாவனை மற்றும் சுப காமனாவின் சகயோகம் கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால். இந்தக் குழுவின் கோட்டை உறுதியாகி விடும். குழுவின் சக்தி தான் வெற்றிக்கான விசேஷ ஆதார சொரூபமாகும்.

சுலோகன்: எப்பொழுது ஒவ்வொரு காரியமும் யதார்த்தமாக யுக்தியுக்தாக இருக்கிறதோ அப்பொழுது தான் பவித்ர ஆத்மா என்று கூறுவோம்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

# 16.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஆல்மைட்டி அத்தாரிட்டி (அனைத்து சக்திகளின் அதிகாரி) ராஜயோகி சபை மற்றும் மக்கள் விரும்பும் சபை!

இன்று முழு கல்பத்தின் மிக உயர்ந்த பிராமணர்களின் மற்றும் இராஜயோகிகளின் சபையை பார்த்துக் கொண்டிருந்தோம். ஒரு பக்கம் இன்றைய நாட்களின் அற்ப காலத்து இராஜ்யத்தின் இராஜ்ய சபை மற்றும் லோக் சபை (பாராளுமன்றம்/மக்கள் சபை). இன்னொரு பக்கம் ஆல்மைட்டி அத்தாரிட்டி மூலமாக உருவாக்கப்பட்டிருக்கும் இராஜயோகி சபை, மக்கள் விரும்பும் சபை இரண்டு சபைகளுமே அவரவர்களின் காரியம் செய்து கொண்டிருக்கின்றன. எல்லைக்குட்பட்ட மக்கள் சபை எல்லைக்குட்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கை உருவாக்குகிறது. மேலும் மக்கள் விரும்பும் பிராமண சபை அழியாத சட்டம், ஒழுங்கின் இராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எப்படி அந்த மக்கள் சபை மற்றும் இராஜ்ய சபையில் தலைவர்கள் அவரவர்களின் அற்ப புத்தி மற்றும் அற்ப காலத்தின் விதவிதமான சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார்கள். அதே போல் பிராமணர்களின் இராஜ சபை மற்றும் இராஜயோகி சபை உலக நன்மைக்கான விதவிதமான சிந்தனைகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள். அது சுயநலமானது மற்றும் இது உலக நன்மைக்காக இருக்கிறது. எனவே தான் மக்கள் விரும்புபவர்களாக ஆகிறீர்கள். சுயநலம் இருக்கிறது என்றால் (தன்) மனம் விரும்பியது என்று கூறுவோம். உலக நன்மைக்கான சிந்தனை இருக்கிறது என்றால், மக்கள் விரும்புவது மற்றும் பிரபுவின் விருப்பமானவர்களாகி விடுகிறீர்கள். எந்தவொரு எண்ணத்தையும் மற்றும் சிந்தனையையும் செய்கிறீர்கள் என்றால், இந்த சிந்தனை மற்றும் எண்ணம் தந்தைக்கு விருப்பமானதா மற்றும் பிரபுவின் விருப்பமானதா என்று முதலில் சோதனை செய்யுங்கள். யார் மீதாவது மிக அதிகமான அன்பு

ஏற்படுகிறது என்றால் பின்பு அவருடைய விருப்பமே தான் நம்முடைய விருப்பமாக ஆகி விடுகிறது. எது தந்தையின் விருப்பமோ அது உங்களுடைய விருப்பம் மேலும் யார் தந்தையின் விருப்பமானவர்களாக ஆகி விட்டார்களோ அவர்கள் மக்களின் விருப்பமானவர்களாக ஆகியே விடுகிறார்கள். ஏனென்றால் முழு உலகிற்கும் மற்றும் மக்களுக்கும், தெரிந்தாலும் மேலும் தெரியாவிட்டாலும், பார்த்தாலும் அல்லது பார்க்காவிட்டாலும் மிக அதிகமாக விருப்பமானவர்கள் யார்? தர்மத் தந்தைகள் தன்னுடைய தர்மத்தின் ஆத்மாக்களுக்கு மிகப் பிரியமானவர்கள் ஆனால் தர்ம தந்தைகளுக்கும் பிரியமானவர் ஒரே ஒரு தந்தை பரம்பிதா தான். எனவே அனைவரின் வாயிலிருந்தும் அவ்வப்பொழுது வேறு வேறு மொழியில் ஒரு தந்தையை அழைத்தல் தான் வெளியாகிறது. அப்படி எந்த தந்தை மக்களால் விரும்பப்படுபவராக இருப்பாரோ. அவருடைய விருப்பமானவர்களாக யார் இருப்பார்களோ அவர்கள் இயல்பாகவே மக்களுக்கு விருப்பமானவர்களாக ஆகி விடுகிறார்கள். யார் தந்தையின் விருப்பமானவர்களோ அவர்கள் மக்களுக்கு விருப்பமானவர்களாக இயல்பாகவே ஆகி விட்டார்கள். எனவே எனக்கு மக்கள் விரும்பிய சபைக்காக வேட்பு மனு தாக்கல் செய்ய அனுமதி கிடைத்து விட்டதா? என்று தன்னைத் தானே கேளுங்கள். தந்தையோ உங்களை தேர்ந்தெடுத்து விட்டார். இப்பொழுது தந்தையினுடையவராக ஆகியிருக்கிறீர்கள், தந்தையோ ஏற்றுக் கொண்டு விட்டார் இருந்தாலும் தந்தையும் ஒவ்வொரு நாளும் வரிசைக்கிரமம் என்று கூறுகிறார். 8-மணி மாலையின் முதல் எண் எங்கே இருக்கிறது மற்றும் 16000-ன் மாலையில் கடைசி எண் எங்கு இருக்கிறது. இருவருமே குழந்தைகளாகி இருக்கிறார்கள் ஆனால் வித்தியாசம் எவ்வளவு ஆகி விட்டது. இவ்வளவு வித்தியாசம் ஏன் ஏற்பட்டது அதற்கான மூல காரணம் என்ன? ஒரு தந்தையின் குழந்தையாக இருந்த போதிலும் இவ்வளவு வித்தியாசம் ஏன் இருக்கிறது?

ஒரு வகையினர் உலக நன்மையின் காரியம் செய்பவர்கள். இன்னொருவர்கள் காரியம் செய்பவர்களை மற்றும் காரியத்தை மகிமை செய்பவர்கள். மேலும் இன்னொரு வகையினர் மகிமைக்குத் தகுதியானவர்களாக ஆக்கக்கூடியவர்கள். ஒன்று செய்வது, இன்னொன்று செய்ய வேண்டும், இருக்க வேண்டும், ஆக வேண்டும்

என்றிருப்பது. எனவே ஒரு தந்தையின் குழந்தை ஆன போதிலும் எவ்வளவு வித்தியாசம் ஆகி விடுகிறது. வேண்டும்' என்பதை 'இருக்கிறது என்பதில் மாற்ற வேண்டும். யார் எப்பொழுதும் இருக்கிறது, இருக்கிறது என்று கூறுவாரோ அவர் ஐயோ, ஐயோ என்பதிலிருந்து விடுபட்டு விடுகிறார். வேண்டும் என்பவர்கள் சில நேரம் மிகுந்த ஊக்கத்தில் ஆடிக் கொண்டே இருப்பார்கள். சில நேரம் தடையில் அய்யோ, அய்யோ என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் மக்கள் விரும்பும் சபையின் உறுப்பினர்கள் இல்லை. எப்படி வெளியுலகில் கட்சியின் உறுப்பினர்கள் அதிகமாக இருப்பார்கள் ஆனால் சபையின் உறுப்பினர்கள் மிகக் குறைவாக இருப்பார்கள். இங்கேயும் பிராமண குடும்பத்தின் நபராக அவசியம் இருக்கிறார், ஆனால் மக்கள் விரும்பும் சபையின் உறுப்பினர் அதாவது சட்டம் மற்றும் ஒழுங்கின் இராஜ்ய அதிகாரத்தை பெறக்கூடிய அதிகாரி ஆத்மாக்களின் பட்டியலில் வர மாட்டார்கள். அவர்கள் இராஜ சிம்மாசனத்தின் அதிகாரி மேலும் இவர்கள் இராஜ்யத்தில் சில நேரம் உங்களை தன்னிடம் அழைத்து விடுகிறார். இந்தக் காரியத்தைத் தான் முழு நாளும் செய்து கொண்டிருக்கிறார். சில நேரம் விளையாடுவார் மற்றும் விளையாட வைப்பார், சில நேரம் தன்னுடன் சேவையில் ஈடுபடுத்துவார். சில நேரம் காட்சிகள் காண்பிப்பதற்காக தன்னுடன் அழைத்துச் செல்வார். மேலும் சில நேரம் சாட்சாத்காரம் செய்விப்பதற்காக அனுப்பி வைக்கிறார். ஏனென்றால் சில சில பக்தர்கள் அந்த மாதிரி பிடிவாதம் பிடிப்பவர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு தங்களுடைய இஷ்ட தேவதையின் காட்சிகள் கிடைக்காமல் திருப்தி ஆவதில்லை. தந்தையே அவர்கள் எதிரில் பிரத்யக்ஷம் ஆனாலும் அவர்கள் தங்களுடைய இஷ்ட தேவதைகளைத் தான் விரும்புவார்கள். எனவே விதவிதமான இஷ்ட தேவதைகள் மற்றும் தேவிகளை பக்தர்களிடம் அனுப்பத் தான் வேண்டியதாக இருக்கிறது. வேறு என்ன செய்கிறோம்? சில நேரம் விசேஷமாக அன்பிற்குரிய மற்றும் சகயோகி குழந்தைகளுக்கு பிரத்யேகமாக காதில் சக்திக்கான மந்திரத்தையும் கொடுக்கிறோம். ஏன் கொடுக்கிறோம்? ஏனென்றால் சில காரியங்கள் அந்த மாதிரி வருகின்றன. அதில் விசேஷ ஆத்மாக்கள் மற்றும் நெருக்கமான குழந்தைகள் பொறுப்பிலிருப்பவராக இருக்கும் காரத்தினால் தைரியம், உற்சாகம் மற்றும் தாங்கள் பிராப்தி செய்திருக்கும் சக்திகள் மூலம் காரியம் செய்வதற்காக வந்தே

விடுகிறோம். இருந்தும் சில இடங்களில் எப்படி ராக்கெட் மிக உயர்வான இடத்திற்குச் செல்ல வேண்டியது இருக்கிறது என்றால் அதிகப்படியான சக்தி மூலம் மேலே கொண்டு செல்லப்படுகிறது, பிறகு எந்த ஆதாரமற்ற நிலைக்கு வந்து விடுகிறது. அட்படி சில இடங்களில் அந்த மாதிரி காரியங்கள் வந்து விடுகின்றன. அவற்றிற்கு ஒரு நொடிக்கான சமிக்ஞையின் அவசியம் மட்டும் இருக்கிறது. அந்த டச்சிங் (உணர்த்துதல்) ஆவது என்றால் காதில் சக்தியின் மந்திரத்தை சொல்லது.

நல்லது. துறைகளை உருவாக்குவது வந்திருக்கிறது என்றால் தந்தையும் துறைகளாக்கும் தன்னுடைய காரியத்தை வதனத்தில் என்னென்ன நடக்கிறது என்பதையும் கூறினார். எனவே இதை ஏன் கூறினோம் என்றால் இப்பொழுது கூட தன்னுடைய அதிகப்படியான பரீட்சைக்காக தயார் செய்ய முடியும். சில நேரம் இரண்டாவது முறையும் பரீட்சை எழுதுகிறார்கள் இல்லையா? அப்படி தூய்மை என்ற பரீட்சையை இப்பொழுது கூட அதிகப்படியாக சேர்த்துக் கொள்ள முடியும். அதனால் மதிப்பெண்கள் சேமிப்பாகி விடும். ஏனென்றால் முக்கியமான ஆதாரம் முக்கியமான ஞானத்தை பகுத்தறிவது தூய்மை ஆகும். தூய்மையின் ஆதாரத்தில் சகஜயோகா, சகஜ ஞானம் மேலும் சகஜ தாரணை மற்றும் சேவை செய்ய முடியும். நான்கு பாடங்களின் அஸ்திவாரம் தூய்மை ஆகும். எனவே முதலில் இந்தப் பரீட்சை தாள் சோதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. முடிவை பின்பு கூறுவோம். நல்லது.

அந்த மாதிரி ஒவ்வொரு எண்ணத்தில் பிரபுவின் விருப்பமான மற்றும் மக்களின் விருப்பமானவர்களாக இருப்பவர்களுக்கு, ஒவ்வொரு காரியத்தில் அதிகாரியாகி கர்ம இந்திரியங்கள் மூலம் காரியம் செய்விப்பவர்களுக்கு, அதாவது இராஜ்ய சபையின் அதிகாரிகளுக்கு, எப்பொழுதும் தந்தையுடன் மனம் மற்றும் காரியத்தில் உலக சேவையின் துணைவர்களாக இருப்பவர்களுக்கு, எப்பொழுதும் எண்ணம் மூலமாக வாயுமண்டலத்தை உயர்ந்ததாக ஆக்கக்கூடிய, தன்னுடைய மகாவரதானி (வரமளிக்கும் பெருவள்ளல்) உள்உணர்வு மூலம் எண்ண அலைகளை பரப்பக்கூடிய அந்த மாதிரி நெருக்கமான

மற்றும் சகயோகி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**வெற்றிக்கான ஆதாரம் -நிர்ணய சக்தி, கட்டுப்படுத்தும் சக்தி (அதிகாரிகள் குரூப்பிற்காக) ஆ்ஃபிசர்கள் (அதிகாரிகள்):** அவர்கள் காரியத்தில் எப்பொழுதும் வெற்றி அடைய, அவர்களிடம் இருக்க வேண்டிய விசேஷமே நிர்ணய சக்தி மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி தான். ஆ்ஃபீசர்களில் ஒருவேளை இந்த இரண்டு சக்திகளும் இருக்கின்றன என்றால், அவர்கள் தன் கீழே வேலை செய்பவர்களை நடத்துவதில் வெற்றியாளராக இருப்பார்கள். மேலும் காரியத்திலும் வெற்றி அடைவார்கள். எப்படி நீங்கள் அந்த அரசாங்கத்தின் அதிகாரிகளாக இருக்கிறீர்களோ அதே போல் பாண்டவ அரசாங்கத்தின் ஈஸ்வரிய காரியத்திலும் அனேக ஆத்மாக்களின் காரியாலயத்தின் அதிகாரி ஆவீர்கள். அது எல்லைக்குட்பட்ட காரியாலயம் மேலும் இது எல்லைக்கப்பாற்பட்டது. எப்படி அந்த அரசாங்கத்தின் வேறு வேறு இலாக்களின் அதிகாரிகளாக இருக்கிறீர்கள், அதே போல் பாண்டவ அரசாங்கத்தின் உலக நன்மை காரியத்தில் அதிகாரிகளாக இருக்கிறீர்கள். கட்டுப்படுத்தும் சக்தி மற்றும் தீர்மானிக்கும் சக்தி என்பதை அதிகாரிகளின் தகுதி என்று கூறியிருந்தோம். அப்படி இந்த ஈஸ்வரிய காரியத்திலும் யாரிடம் இந்த இரண்டு விசேஷ சக்திகளும் இருக்கின்றனவோ அவர் தான் வெற்றி அடைபவராக ஆகிறார். முதலில் எப்பொழுதும் ஏதாவது ஆத்மா தொடர்பில் வருகிறார் என்றால், இவருக்கு எதன் அவசியம் இருக்கிறது என்று அவருடைய நாடி பிடித்து பார்க்க முடிய வேண்டும். இவருக்கு என்ன வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அதே விருப்பத்தின் ஆதாரத்தில் தான் அவரை திருப்தியாக்க முடியும். சேவையில் தன்னுடைய கட்டுப்படுத்தும் சக்தி மூலமாக மற்றவர்களின் சேவைக்கு பொறுப்பாளர் ஆகுங்கள். எப்பொழுது மற்றவர்களின் சேவை செய்கிறீர்கள் என்றால் தன்னைக் கட்டுப்படுத்தும் சக்தியின் காரணமாக மற்றவர்கள் மேல் அந்த உறுதியான நிலையின் பிரபாவம் ஏற்படுகிறது. எப்படி அந்த அதிகாரிகளின் தகுதிகள் இருக்கின்றனவோ அதே போல் இங்கேயும் இந்த தகுதிகள் தேவையாக இருக்கிறது. ஒருவேளை அரசாங்கம் திருப்தியாகி விட்டது என்றால் ஒருவரை ஆளுநராகவும் ஆக்கி விடும் ஆனால் இங்கே உலக நன்மையின் சேவையில்

சேவாதாரி ஆவதினால் உலகின் இராஜா ஆகி விடுவார். அப்படி இந்த இரண்டு சக்திகள் விசேஷமாக தனக்குள் எப்பொழுதும் இருக்க வேண்டும். பிறகு எப்பொழுதும் வெற்றி தான்.

பாண்டவ அரசாங்கத்தினுடைய நல்ல அதிகாரிகளாக இருக்கிறீர்கள் தான் இல்லையா? உலக நன்மை செய்யும் காரியத்தின் அலுவலகத்தை அந்த மாதிரி நல்ல முறையில் நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அதிகாரிகளுக்கும் சேவை செய்வதற்கான மிக நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் தொடர்பில் அனேக ஆத்மாக்கள் வந்து கொண்டே இருப்பார்கள். தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களை ஈஸ்வரிய தொடர்பில் கொண்டு வருவது என்ற இதுவும் நல்ல வாய்ப்பு தான் இல்லையா? அப்படியானால் பாண்டவ அரசாங்கத்தின் தொடர்பில் எத்தனை பேர்களை கொண்டு வருவீர்கள்? தொடர்பில் கொண்டு வருவதினால் ஒரு தடவையாவது அமைதியின் அனுபவம் செய்தார்கள் என்றால் அடிக்கடி உங்களை மகிமை செய்வார்கள். இப்பொழுது பிரஜைகளை அதிகரிப்பதற்காக அலுவலகத்தை திறங்கள். எப்படி உங்களுடைய அந்த அலுவலகத்தை கவனித்துக் கொள்கிறீர்கள். அதே போல் இந்த அலுவலகத்தையும் கவனியுங்கள். உங்களுடைய அனுபவத்திலும் விசேஷ சக்தி இருக்கிறது. அந்த அனுபவத்தைக் கேட்டும் கூட அனேகர்களுக்கு மிகுந்த அனுபவம் ஆகும் இன்றைய நாட்களில் கேட்பது சொல்வது இருக்கிறது ஆனால் அனுபவம் இல்லை. அனுபவத்தின் விரும்பிகளாக அனைவரும் இருக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு அனுபவியாக இருப்பீர்களோ அந்த அளவே அனுபவம் செய்விக்க முடியும். அனைத்து அதிகாரிகளும் சகஜயோகிகள் தான் இல்லையா? அல்லது சில நேரம் சகஜயோகி மற்றும் சில நேரம் கடின யோகியா? உலகீய சேவையும் தொடர்பை அதிகரிப்பதற்கான சேவை ஆகும்.

**வரதானம்: உலக நன்மையின் பொறுப்பை உணர்ந்து நேரம் மற்றும் சக்திகளின் சிக்கனம் செய்யக்கூடிய மாஸ்டர் படைப்பவர் ஆகுக!**

உலகின் அனைத்து ஆத்மாக்களும் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுடைய குடும்பமாகும். எவ்வளவு பெரிய குடும்பமாக இருக்குமோ அந்த அளவே சிக்கனத்தில் கவனம் செலுத்தப்படுகிறது.

அப்படி அனைத்து ஆத்மாக்களையும் எதிரில் வைத்து, தன்னை எல்லைக்கப்பாற்பட்ட சேவைக்கான பொறுப்பாளர் என்று புரிந்து தன்னுடைய நேரம் மற்றும் சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்துங்கள். தனக்காக மட்டுமே சம்பாதித்தீர்கள், சாப்பிட்டீர்கள் மற்றும் இழந்தீர்கள் என்று அப்படி அலட்சியமானவர் ஆகாதீர்கள். அனைத்து பொக்கிஷங்களின் பட்ஜெட்டை தயாரியுங்கள். மாஸ்டர் படைப்பவர் ஆகுக என்ற வரதானத்தை நினைவில் வைத்து நேரம் மற்றும் சக்தியின் கையிருப்பை சேவைக்காக சேமிப்பு செய்யுங்கள்.

**சுலோகன்: யாருடைய எண்ணம் மற்றும் வார்த்தை மூலமாக அனைவருக்கும் வரதானங்கள் பிராப்தி ஆகிறதோ அவர் தான் பெரும் வள்ளல் ஆவார்!**

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

## 18.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா, மதுபன்

## நினைவு நாளன்று குழந்தைகளுக்காக பாப்தாதாவின் அறிவுரைகள்!

இன்று நினைவு நாளின் நினைவு சொருப அதாவது சக்தி சொரூப குழந்தைகளைப் பார்த்து பாப்தாதாவும் எப்பொழுதும் சக்திசாலியானவர் ஆகுக என்ற வரதானம் கொடுக்கிறார். எப்படி இன்றைய இந்த நினைவு நாளன்று இயல்பாகவே நினைவு சொரூபமாக இருந்தீர்கள், ஒரே ஒரு எண்ணத்தின் லயிப்பில் மூழ்கியிருந்தீர்கள், ஒரு தந்தையைத் தவிர வேறு யாரும் இல்லை -அந்த மாதிரி சகஜயோகி, நிரந்தர யோகா நிறைந்த, ஜீவன் முக்த், எப்பொழுதும் ஃபரிஷ்தா சொரூபமானவர் ஆகுக!

இன்றைய நாளில் அனைத்து குழந்தைகளின் சார்ட் (முழு நாள் நிலை) தந்தைக்குச் சமமான அவ்யக்த வதனவாசி. எப்பொழுதும் அன்பான, அன்பில் ஐக்கியமாகியிருந்த நிலையாக இருந்தது. அதே போலவே தந்தைக்குச் சமமாக விலகிய மற்றும் எப்பொழுதும் அன்பானவர் ஆகுக. நாலாபுறங்களின் குழந்தைகளுடைய இன்றைய சக்திசாலியான நாளன்று தந்தையை வெளிப்படுத்துவதற்கான ஒரே ஒரு திட எண்ணம் இப்பொழுது கூட தந்தையிடம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அனைத்து குழந்தைகளும் தங்களுடைய ஒரே ஒரு ஊக்கம் உற்சாகம் நிறைந்த எண்ணத்தினால் பாரதம் மற்றும் வெளிநாட்டில் சேவையின் மேடையில் சிலர் மனதால், சிலர் உடலால் ஈடுபட்டு இருக்கிறார்கள். இங்கே இருந்த போதிலும் பாப்தாதா வின் எதிரில் அனைத்து குழந்தைகளின் சேவையின் ஊக்கம் உற்சாகம் நிரம்பிய முகம் எதிரில் இருக்கிறது. பாப்தாதாவிற்கு உலகைச் சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும். எவ்வளவு நேரத்தில் நீங்கள் அறிவியல் சாதனங்களாகிய தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக சுவிட்ச் ஆன் செய்து பார்க்கிறீர்கள் மற்றும் கேட்கிறீர்களோ அந்த நேரத்தில் பாப்தாதா உலகைச் சுற்றி வந்து விடுகிறார். பாப்தாதா ஒவ்வொரு

ஸ்தானத்தின் குழந்தைகள் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறார். எப்படி இன்றைய நாளில் அனைவரிடமும் ஒரே ஒரு சேவைக்கான ஆர்வம் இருந்தது. ஒவ்வொருவரின் புத்தியில் பிரத்யக்ஷத்தின் கொடி பறந்து கொண்டிருக்கிறதா? அல்லது உலகில் இந்தக் கொடியை பறக்க விடலாமா? அனைவரின் இதயத்தில் பாப்தாதா மட்டும் இருந்தார். மேலும் அனைவரும் எப்படி இதயத்தைக் கிழித்து தந்தை எங்கள் இதயத்தில் இருக்கிறார் என்று காண்பிப்பதற்கான முயற்சியை நடை முறையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தின் அனைவரின் ரூபம் நினைவுச்சின்னத்தில் வர்ணிக்கப்பட்ட சேவகன் ஹனுமானுக்குச் சமமாக இருந்தது. சிலர் எண்ணத்தின் அம்பு எய்து கொண்டிருந்தார்கள். அந்த உயர்ந்த எண்ணத்தின் மூலம் வாயுமண்டலம் மூலமாக தந்தையை வெளிப்படுத்த வேண்டும் என்று. சிலர் தன்னுடைய வாயின் அன்பு நிறைந்த மற்றும் சக்திசாலியான பேச்சினால் தந்தையை வெளிப்படுத்துவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த மாதிரி நினைவு மற்றும் சேவையின் சமநிலையில் இருந்த காட்சியை பாப்தாதா பார்த்துக் கொண்டி ருந்தார். அன்பும் இன்று சம்பூர்ண ரூபத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் சக்தி சொரூபமும் இன்று சேவைக்காக வெளிப்படும் ரூபத்தில் இருந்தது. இன்றைய இந்த நாளில் சமமாக எப்பொழுதும் நினைவு மற்றும் சேவையின் சமநிலையில் இருங்கள்.

இந்த வருடம் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் தகுதிக்கு ஏற்றாற்போல் ஆஸ்தி கொடுப் பதற்கான வருடம் ஆகும். அனைத்து துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கும் தகுதிக்கு ஏற்றாற்போல் திருப்தியடையச் செய்வதற்கான வருடம் ஆகும். முக்கியமாக இந்த வருடத்தில் நினைவு மற்றும் சேவையில் சமநிலை வையுங்கள் மற்றும் எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்தவர்களாக இருங்கள். கூடவே அனைத்து ஆத்மாக் களுக்கும் ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டே இருங்கள். இந்த வருடத்திற்கான குழு ரூபத்திற்கான விசேஷ சுலோகன் தனக்காக மற்றும் அனைவருக்காக எப்பொழுதும் தடைகளை அழிப்பவர் ஆக வேண்டும். அதற்கான சுலபமான வழி கேள்விக்குறிக்கு நிரந்தரமாக விடை கொடுப்பது, மேலும் முற்றுப்புள்ளி மூலமாக அனைத்து சக்திகளின் முழுமையான கையிருப்பை வைப்பது. இந்த

வருடத்தில் விசேஷமாக அனைவரும் தடைகள் தாக்க முடியாத ஒளி வடிவமான ஃபரிஷ்தா ஆடையை எப்பொழுதும் அணிந்திருங்கள். மண்ணால் ஆன ஆடையை அணியாதீர்கள், மேலும் எப்பொழுதும் அனைத்து குணங்கள் என்ற நகைகளால் அலங்காரம் செய்யப்பட்டவராக இருங்கள். விசேஷமாக எட்டு சக்திகளின் ஆயுதங்கள் மூலம் எப்பொழுதும் அஷ்ட சக்தி என்ற ஆயுதம் தரித்த சம்பன்ன மூர்த்தியாகி இருங்கள். எப்பொழுதும் தாமரை மலரின் ஆசனத் தில் தன்னுடைய உயர்ந்த வாழ்க்கையின் காலை வையுங்கள். வேறு என்ன செய்வீர்கள்?

தினசரி அமிர்தவேளையில் உலகிற்கு வரம் அளிக்கும் சொரூபத்தில் உலகிற்கு நன்மை செய்யும் தந்தையின் கூடவே இணைந்த ரூபமானவராகி உலகிற்கு வர மளிக்கும் சக்தி மற்றும் உலகிற்கு நன்மை செய்யும் சிவன். சிவன் மற்றும் சக்தி இணைந்த ரூபத்தினால் மனதின் எண்ணங்களினால் மற்றும் உள் உணர்வு மூலமாக எண்ண அலைகளின் நறுமணத்தினைப் பரப்புங்கள். எப்படி இன்றைய நாட்களில் ஸ்தூல நறுமணத்தின் சாதனமாக விதவிதமான நறுமணத்தை பரப்புகிறார்கள். சிலர் ரோஜாவின் நறுமணம், சிலர் சந்தனத்தின் நறுமணம் பரப்புகிறார்கள். அதே போல் உங்கள் மூலமாக சுகம், சாந்தி, சக்தி, அன்பு, ஆனந்தத்தின் விதவிதமான நறுமணம் பரவட்டும். தினசரி அமிர்தவேளையில் விதவிதமான உயர்ந்த எண்ண அலைகளின் நீர் ஊற்றுக்குச் சமமாக ஆத்மாக்கள் மேல் பன்னீர் தெளியுங்கள். எண்ணத்தின் தாளியங்கி சுவிட்ச்சை மட்டும் ஆன் செய்ய வேண்டும். இது தெரியும் தான் இல்லையா? ஏனென்றால் இன்றைய உலகில் அசுத்த உள்உணர்வின் துர்நாற்றம் மிக அதிகமாக இருக்கிறது. அதை நறுமணம் நிறைந்ததாக ஆக்குங்கள். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

இந்த வருடத்தில் என்னென்ன பழைய மற்றும் புதிய சேவைக்கான விதவிதமான சாதனங்கள் இருக்கின்றனவோ அவற்றையும் உடல், மனம், பணம், நேரம் ஆகிய என்னென்ன இருக்கின்றனவோ அனைத்தையும் ஈடுபடுத்தி, அனைத்து ஆத்மாக்களிலிருந்தும் எந்த ஆத்மாக்கள் முக்தியின் ஆஸ்திக்குத் தகுதியானவர்கள் மேலும் யாருக்கு என்ன தகுதியோ அவர்களுக்கு அதே போல் செய்தி கொடுத்து

முடிவு செய்யுங்கள். இப்பொழுது சேவையின் கோப்பை (ஃபைல்) முடிவு செய்யுங்கள். எப்படி கோப்பின் ஒவ்வொரு காகிதத்திலும் அதிகாரி தன்னுடைய கையெழுத்திட்டு முடித்து மேலே அனுப்பி வைக்கிறார், அதே போல் நீங்கள் அனைத்து சேவாதாரிகள் மற்றும் ஒவ்வொரு ஆத்மாக்கள் மீதும் முக்தி மற்றும் ஜீவன் முக்தியின் கையெழுத்திடுங்கள். முடிந்தது என்ற முத்திரை இட்டீர்கள் என்றால் கோப்பு முடிவடைந்து விடும். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? தேர்ந்தெடுக்கும் இயந்திரத்தை அதிவேகமாக இயக்குங்கள். எத்தனை கோப்புகளை தயார் செய்கிறீர்கள் என்று பார்க்கலாம். கோப்பை முதலில் வெளிநாடு தயார் செய்கிறதா? அல்லது பாரதம் தயார் செய்கிறதா? என்று பார்க்கலாம். யாருக்கு எந்த மதத்தில் செல்ல வேண்டுமோ அதற்கான முத்திரை இட்டு விடுங்கள். இன்று பாப்தாதா நாலாபுறங்களின் அனைத்து அன்பான மற்றும் சேவாதாரி குழந்தைகளுக்கு அன்பு நினைவு கொடுக்கிறார். இன்றைய நாளில் உடலால் வேண்டுமென்றால் பற்பல ஸ்தானங்களில் இருக்கிறார்கள் ஆனால் மனதால் தந்தையை வெளிப்படுத்துவதற்கான முழு ஈடுபாட்டின் காரணமாக தந்தையின் பக்கம் தான் மன்மனாபவ இருந்தது.

அந்த மாதிரி எப்பொழுதும் அன்பு மற்றும் சேவையில் அழியாதவராக இருக்கக் கூடிய, எப்பொழுதும் தந்தையின் சேவையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடிய, பிரத்யக்ஷத்தின் கொடியைப் பறக்க விடக்கூடிய அனைத்து வெற்றி அடையும் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

(இன்று ஜானகி தாதி பாபாவிடம் விடை பெற்று லண்டன் சென்று கொண்டிருக்கிறார் -அப்படி பாப்தாதா அனைவரிடமிருந்து விடை பெறுவதற்காக ஜானகி தாதியை ஆசனத்தில் தனது அருகில் அமர வைத்தார்). பாப்தாதாவிற்கும் நெருக்கமான குழந்தைகளின் மரியாதை வைக்க வேண்டியதாக இருக்கிறது. எனவே தான் பாப்தாதா பாராட்டுக்கள் கொடுக்கிறாரேயன்றி விடை கொடுப்பதில்லை. பார்க்கப்போனால் இவரோ மஸ்த் ஃபகீர். (மிக போதையிலிருப்பவர்) உலகத்தை வலம் வருவதில் தந்தை குழந்தைகளுடன் ஸ்தூலமாகவும் செல்கிறார். பொதுவாக ஒரு நொடியில் உலகைச் சுற்றி வலம் வந்து

விடுவார் ஆனால் சாகார ரூபத்தில் குழந்தைகள் மூலமாக சேவையின் வலம் வருகிறார். தந்தைக்கு உலகத்தை வலம் வரும் அதாவது சேவையின் வலம் வருவதை செய்வதற்காகத் தான் சென்று கொண்டிருக்கிறீர்கள். இந்த வருடத்தின் விசேஷம் சக்கரவர்த்தி ஆகுக. உங்கள் முன்னுக்கு தந்தை இருப்பார், பின்னால் நீங்கள் இருப்பீர்கள். நீங்கள் தந்தையை சுற்றி வலம் வரச் செய்வீர்கள் மற்றும் தந்தை உங்களோடு சேர்ந்து உலகை சுற்றி வந்து கொண்டிருப்பார்.

(இனிமையான தாதி பாப்தாதாவின் எதிரில் வந்து அமர்ந்தார்). இன்று வதனத்தில் அனைத்து குழந்தைகளும் மிக அன்போடு வந்து சேர்ந்து விட்டிருந்தார்கள் ஆனால் இன்றைய சக்திசாலியான நாளை கொண்டாடுவதற்காக சேவைக்காக வெளி இடங்களில் சென்ற உயர்ந்த ஆத்மாக்களும் வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்களுடைய ஆன்மீக உரையாடலும் மிக நன்றாக இருந்தது. அவர்கள் தன்னுடைய உலக சேவையின் அதிசயமான பங்கை பார்த்து மகிழ்ச்சி அடைந்து; கொண்டிருந்தார்கள். வேறு உடல் மூலமாக உலக சேவைக்கான ஆன்மீக ரகசியம் நிரம்பிய பங்கு எது என்று பாப்தாதா கூறிக் கொண்டிருந்தார். உலகின் பதீத பாவனி சரஸ்வதி நதியின் வர்ணனையே குப்த (மறைமுக) சேவாதாரி. கங்கை மற்றும் யமுனை வெளிப்படையாக பிரசித்தி ஆகியிருக்கின்றன ஆனால் சரஸ்வதியின் சேவையை குப்த ரூபத்திலும் காண்பித்திருக்கிறார்கள். மேலும் வெளிப்பட்ட ரூபத்தில் வீணை வாசிப்பது போன்று நினைவுச் சின்ன ரூபத்திலும் இருக்கிறது. மேலும் குப்த ரூபத்தில் குப்த நதியின் ரூபத்தில் நினைவுச் சின்னம் இருக்கிறார். இரண்டு பங்குகளுமே அதிசயமானது. ஜென்மம் மூலமாக சேவையின் பங்கிற்கான சம்மந்தம் இருக்கிறது. எங்கு வெற்றியோ அங்கு ஜென்மம் சில ராஜ்யத்தில் வெற்றி இல்லை ஆனால் ஜென்மம் மூலமாக விகாரங்கள் மேல் வெற்றி ஆகி விடுகிறது. எங்கு ஜென்மமோ அங்கு வெற்றி இருக்கிறது, எங்கு வெற்றியோ அங்கு ஜென்மம் என்று அப்படி கிடையாது. என்னென்ன கொஞ்சம் வர்ணனை இருக்கின்றனவோ அவை நடை முறையில் பங்காக இருக்கத்தான் செய்யும். இப்பொழுது இந்த விசே சேவாதமி நேரத்தின் மற்றும் சாகார சேவாதாரிகளின் சேவையின் முடிவுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் எப்பொழுது சாகார சேவையின் பங்கு முடிவடை கிறதோ அப்பொழுது தான் புதிய

இராஜ்யத்தின் கொடுக்கல் வாங்கலின் அதிசயமான பங்கின் தொடக்கமாக இருக்கும். அப்படி அனைவரையும் விட முன்பாகச் சென்று இருக்கும் (அட்வான்ஸ் பார்ட்டி) குரூப், அதிலேயும் யார் பெயர் பெற்ற ஆத்மாக்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய குழு மிகவும் உறுதியாக இருக்கிறது. உயர்ந்த ஜென்மம், முதல் ஜென்மத்தை கொடுப்பதற்காக நிலத்தை தயார் செய்வதற்கான அதிசயமான பங்கு இந்த ஆத்மாக்கள் மூலமாக அதிவேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. எப்படி விநாசம் செய்விப்பவர்கள் பொத்தானை அழுத்துவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்களோ அதே போல் தெய்வீக ஜென்மம் மூலமாக ஸ்தாபனை செய்விப்பதற்காக பொறுப்பாளர் ஆகியிருக்கும் முன்னதாகவே செய்யும் சேவையின் பார்ட்டி டச்சிங் (உணர்த்துதல்) செய்வதற்காக, செய்தி கொடுப்பதற்காக பிரத்யக்ஷம் செய்வதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை சம்மந்தத்தின் அன்புடன் பிரத்யக்ஷம் செய்வோம். இதுவும் விசித்திர கதைகளின் ரூபத்தில் ஸ்தாபனையின் போது ஜென்மத்தின் பங்கு அடங்கியிருக்கிறது. முதலில் கிருஷ்ணன் பின்னால் இராதை வருவார்கள் இல்லையா? ஜென்ம ஸ்தானம் மற்றும் அவருடைய நிலை இரண்டின் சம்பூர்ண காரியத்தை முடித்து விட்டு அதற்குப் பின்னால் இராதாவின் பிறவி ஏற்படும். எனவே அவர் பெரியவராக மற்றும் இவர் சிறியவராக ஆகி விடுவார். எப்படி இங்கேயும் சேவையின் களத்தில் முதலில் ஜகதம்பா நிலத்தை தயார் செய்வதற்காக சென்றார். அதன் பின்பு தந்தை சென்றார். அந்த மாதிரி ஜகதம்பா மற்றும் நெருக்கமான குழந்தை விஷ்வ கிஷோர் துணையாக இருந்தார், அனைத்தையும் எதிர்கொள்பவராக இருந்தார். மைதானத்தில் முன்னுக்கு சேவையில் வருபவர்கள் இருந்தார்கள். அதே போலவே வேறு ரூபத்தில் காரியத்தின் சம்ஸ்காரம் அதுவே தான். இருவருமே ஸ்தாபனையின் ஆரம்ப கதையில் ஹீரோ பங்கு செய்பவர்கள். கர்ப மாளிகையை தயார் செய்வித்துக் கொண்டு இருக்கிறார்கள். இங்கேயும் காரிய நடவடிக்கையில் பொறுப்பாளராக இருவர்ந் கள் இருந்தார்கள். அப்படி இந்த மாளிகை தயார் செய்பவரும் அந்த மாதிரி சக்திசாலி அங்கு உங்கள் அனைவரில் யார் விசேஷமாக அஷ்ட ரத்தினமாக இருக்கிறார்களோ அவர்களுக்காக தயார் செய்து கொண்டிருக்கிறார்கள், மாளிகை தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது தயார் ஆகி விடுமோ அப்பொழுது தான் ஆத்மாக்கள் அங்கே செல்வார்கள்

இல்லையா? அப்படி இப்பொழுது தூய்மையற்ற உலகத்தில் தூய்மையான மாளிகை தயார் செய்ய வேண்டும் என்பது எவ்வளவு உயர்ந்த காரியம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எனவே இந்தக் காரியத்தை செய்ய முடியும் அளவிற்கு அந்த மாதிரியான சக்திசாலியான ஆத்மாக்கள் வேண்டும். அப்படி, இப்படி இருப்பவர்கள் செய்ய முடியாது. அவர்களும் எந்த தேதிக்குள் மாளிகை தயார் ஆக வேண்டும் என்று தேதியைக் கூறுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களோ சாகார சேவையின் பங்கு எப்பொழுது முடிவடைகிறது அப்பொழுது தான் எங்களுடைய காரியத்தின் தொடக்கம் ஆரம்பமாகும். இவர்களுடைய முடிவு, எங்களுடைய தொடக்கம். முதல் முடிவு ஏற்படும் அப்பொழுது தான் தொடக்கம் ஏற்படும். அப்படியானால் சேவ பங்கின் முடிவு தேதி எது? அதே தேதி பிறகு ராஜ்யத்தின் ஆரம்ப தேதியாக இருக்கும். அவர்களுடைய ஆன்மீக உரையாடலைக் கேட்டீர்களா? பொதுவாக அனைத்து ஆத்மாக்களும் வெளிப்பட்டிருந்தார்கள் ஆனால் அவர்களிலும் குரூப்கள் இருந்தார்கள்.

சேவைக்கு தகுதியான குழந்தைகளைப் பார்த்து பாபா கூறினார்: சேவைக்கான திட்டத்தையோ அனைவரும் மிக நன்றாக தயாரித்திருக்கிறீர்கள் ஆனால் அனைத்து சேவை திட்டங்களும் எப்பொழுது வெற்றி அடையும் என்றால் எப்பொழுது பொறுப்பாளர் ஆகியிருப்பவர் விசேஷமாக மூன்று விஷயங்களின் கவனம் கொடுக்கிறாரோ அப்பொழுது தான்.

1) ஒன்று எந்த ஆத்மாவிடம் என்ன விசேஷம் இருக்கிறதோ அந்த விசேஷத்திற்கு மதிப்பு கொடுத்து அவரின் எதிரில் ஊக்கம் உற்சாகத்தைக் கொண்டு வருவது, அதற்காக பொறுப்பாளர் ஆகியிருப்பவர் களைப்பற்ற சேவாதாரியாக வேண்டும்.

2) தன்னுடைய சேவை நிலையத்தில் மேலும் தொடர்பில் இருக்கும் வேறு சேவை நிலையம் என்னென்ன இருக்கின்றனவோ அவற்றின் சூழ்நிலையை ஆன்மீக மாக ஆக்கி வைக்க வேண்டும். அதன் மூலம் தன்னுடைய மற்றும் வரும் ஆத்மாக் களில், யார் புதியவர்களாக வருகிறார்களோ அவர்களுக்கு சுலபமாக முன்னேற்றம் ஏற்பட வேண்டும். ஏனென்றால் சூழல் நன்கு நிலத்தை தயாரிக்கிறது. எனவே

சேவை நிலையத்தின் சூழ்நிலை ஆன்மீகமாக இருக்க வேண்டும். யாரெல்லாம் சேவை நிலையத்தில் வருகிறார்களோ அவர்கள் தங்களுடைய குடும்ப விவகாரத்தின் பிரச்சனைகளோடு வருகிறார்கள், குடும்ப சூழ்நிலையால் மூலம் களைப்படைந்தவராக இருப்பார் கள். எனவே அவர்களுக்கு அதிகப்படியான உதவியின் அவசியம் தேவை. அவர்களுக்கு ஆன்மீகச் சூழ்நிலையின் சகயோகம் கொடுத்து அவர்களை சுலபமாக முயற்சி செய்பவர்களாக ஆக்க வேண்டும். எப்படி குளிர்சாதன பெட்டி இருக்கிறது என்றால், சூழ்நிலையை உருவாக்கி விடுகிறது. குளிர் காலத்தில் ஒருவேளை வெப்பமான ஸ்தானம் கிடைத்து விட்டது என்றால் அதனுள் சென்றவுடனேயே சௌகர்யமான நிலையை உணருவார்கள், இதே முறையில் ஆன்மீகத்தின் ஆதாரத்தில் சேவை நிலையத்தில் அந்த மாதிரி சூழ்நிலை இருக்க வேண்டும். அதன் மூலம் இந்த இறம் சுலபமாகவே முன்னேற்றம் அடைவதற்கான இடம் என்று அனுபவம் செய்யட்டும். எனவே சேவை நிலையத்திற்குள் வருகிறார்கள் என்றால் வந்தவுடனேயே வெளி யுலகத்தின் மற்றும் சேவை நிலையத்தின் வித்தியாசத்தை அவர்கள் உணரட்டும். அதன் மூலம் அவர்கள் இயல்பாகவே ஈர்க்கப்பட வேண்டும்.

3) பிராமண பரிவாரத்தின் விசேஷம் அனேகர் இருந்த போதிலும் ஒன்றாக இருப்பது. அப்படி ஒவ்வொரு சேவை நிலையத்தின் எண்ண அலைகளும் அந்த வேண்டும். மாதிரி இருக்க வேண்டும் ஆதன் மூலம் இவர்கள் அவேகர்கள் இல்லை ஆனால் ஒருவர் என்று அனைவருமே உணர வேண்டும். ஒற்றுமையின் எண்ண அலைகள் முழு உலகில் ஒரு தர்மம் ஒரு இராஜ்யத்தை ஸ்தாபனை செய்யும். இந்த விசேவு கவனம் கொடுத்து வேற்றுமையை அகற்றி ஒற்றுமையைக் கொண்டு வர வேண்டும்.

இந்த புது வருடத்தில் விசேஷமாக இந்த மூன்று விஷயங்களை நடைமுறையில் கொண்டு வாருங்கள். கேட்பது மற்றும் கூறுவதோ நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இந்த வருடம் இந்த மூன்று விஷயங்களையும் நடைமுறையில் கொண்டு ரெ வேண்டும். சேவாதாரி தனக்காக அன்றி சேவைக்காகத் தான் இருக்கிறார். தன்னுடைய அனைத்தையும் சேவைக்காக அர்ப்பணம் செய்யவர். எப்படி சாகார பாடா சேவையில் எலும்புகளையும் அர்ப்பணம் செய்தார் தான் இல்லையா? அதே போல் ஒவ்வொரு கர்மேந்திரியம் மூலமாக

## 1980 அவ்யக்த முரளி

எப்பொழுதும் சேவை நடந்து கொண்டே இருக்க வேண்டும். வாய் மூலமாகவும் சேவை, கண்கள் மூலமாகவும் சேவை அப்படி சேவையே சேவை என்றிருக்க வேண்டும். நீங்கள் அனைவருமே அந்த மாதிரியான சேவாதாரிகள்தான் இல்லையா?

திட்டத்தை நன்றாக தயாரித்திருக்கிறீர்கள் இப்பொழுது நடைமுறையில் பட்டியல் வரும். எப்படி திட்டத்தின் கோப்பு வந்து விட்டது. அதே போல் திட்டத்தின் முடிவும் வரும். நல்லது -அனைவரும் 108-ன் மாலையில் வருபவர்கள் தான் இல்லையா? அனைத்தும் தானாகவே அறிவிப்பாகி விடும். தன்னுடைய இருக்கையை ஒவ்வொரு வரும் எடுத்துக் கொண்டு தன்னுடைய எண்ணை அறிவிப்பார்கள். சேவையின் இருக்கை எண்ணை அறிவிப்பார்கள். சேவை மைக்காக உருவாகும் வாயின் மைக் அறிவிப்பு செய்யாது. நல்லது.

✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲✲

# 21.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தந்தையை பிரத்யக்ஷம் (வெளிப்படுத்துதல்) செய்வதற்கான விதி!

இன்று பாப்தாதா பரமாத்மா ஞானத்தின் பிரத்யக்ஷ சொரூப அதாவது நடைமுறையில் இரட்டை ரூப குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒன்று மாயா ப்ரூஃப் (பலஹீனங்கள் தாக்க முடியாத), இரண்டாவது உயர்ந்த வாழ்க்கையின் மற்றும் பிராமண வாழ்க்கையின், உயர்ந்ததிலும் உயர்ந்த தன்னுடைய ஆன்மீக வாழ்க்கை-ஈஸ்வரிய வாழ்க்கைக்கான ப்ரூஃப் (நிரூபணம்). உயர்ந்த ஞானத்தின் ப்ரூஃப் -உயர்ந்த வாழ்க்கை ஆகும். அந்த மாதிரி டபுள் ப்ரூஃப் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எப்பொழுதும் தன்னை பரமாத்மா ஞானத்தின் பிரத்யக்ஷமான ஒரு எடுத்துக்காட்டு மற்றும் நிரூபணம் என்று புரிந்து கொள்வதினால் நிரந்தரமாகவே மாயா ப்ரூஃப் ஆக இருப்பீர்கள், ஒருவேளை நடைமுறை எடுத்துக்காட்டில் ஏதாவது பலஹீனம் இருக்கிறது என்றால் பரமாத்மா ஞானத்தையும், மற்றவர்களுக்கு என்ன சபால் விடுகிறீர்களோ அதை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் இன்றைய நாட்களின் அறிவியல் யுகத்தில் ஒவ்வொரு விஷயத்தில் நடைமுறை எடுத்துக்காட்டு மற்றும் நிரூபணம் மூலமாகத்தான் புரிந்து கொள்ள விரும்புகிறார்கள். கேட்பதிலும் சொல்வதினாலும் நிச்சயம் செய்வதில்லை. பரமாத்மா ஞானத்தை நிச்சயம் செய்வதற்காக வெளிப்படையான நிரூபணத்தை பார்க்க விரும்புகிறார்கள். வெளிப்படையான நிரூபணம் உங்கள் அனைவரின் வாழ்க்கை. உங்கள் வாழ்க்கையிலும் இதுவரையிலும் எந்தவொரு ஆத்ம ஞானி மகான் ஆத்மாக்களும் செய்ய முடியாத உருவாக்க முடியாத விசேஷங்கள் தென்பட வேண்டும். அந்த மாதிரி நடக்க முடியாதவை கூட நடக்கின்ற விஷயங்கள் பரமாத்மா ஞானத்தின் வெளிப்படையான நிரூபணம் ஆகும். அனைத்தையும் விட நடக்க முடியாத ஆனால் நடக்கின்ற விஷயம் எதுவென்றால் இல்லறத்தில் இருந்து கொண்டே அதிலிருந்து விலகி அப்பாற்பட்ட

உணர்வில் இருப்பது. இல்லறத்தில் இருந்து கொண்டே இந்த உடல் மற்றும் உடலின் உலகத்தின் உறவுகளிலிருந்து விலகி இருப்பது, பழைய உள்உணர்விலிருந்து விலகியிருப்பது அதாவது விடுபட்டு இருப்பது, ஒட்டாமல் இருப்பது. இதைத் தான் விலகி மற்ற உணர்வில் இருப்பது என்பதாகும். அப்படி இல்லறத்தில் இல்லை ஆனால் துறவறத்தில் இருக்கிறீர்கள். பார்ப்பது உடலை ஆனால் ஆழ்மனதின் உள்உணர்வில் ஆத்ம ரூபம். தொடர்பில் உலகியல் சம்மந்தத்தில் வந்தாலும் சகோதரன் சகோதரனின் சம்மந்தத்தில் இருக்க வேண்டும். இந்த பழைய உடலின் கண்களினால் பழைய உலகின் பொருட்களைப் பார்த்துக் கொண்டே பார்க்காமல் இருப்பது, அந்த மாதிரி இல்லறத்தில் இருப்பவர்கள் அதாவது சம்பூர்ண தூய்மையான வாழ்க்கையில் இருப்பவர்கள் என்ற இதைத் தான் பரமாத்மா ஞானத்தின் நிரூபணம் என்று கூறுவது இதை மகான் ஆத்மாக்கள் கூட அசம்பவம் அதாவது அப்படி இருக்க முடியாது என்று நினைத்தார்கள் ஆனால் பரமாத்மா ஞானி இதை மிக சலடமான விஷயமாக அனுபவம் செய்கிறார்கள். அவர்கள் அசம்பவம் என்று கூறுகிறார்கள். நீங்கள் சுலபம் என்று கூறுகிறீர்கள். நீங்கள் கூறுவது மட்டுமல்ல ஆனால் உலகின் எதிரில் ஆகிக் காண்பிக்கிறீர்கள். இன்று வரை பக்த மாலையில் முதல் மற்றும் இரண்டாவது மணிகளும் பரமாத்மாவை சந்திப்பது கடினம் என்றும் பல பிறவிகளுக்குப் பிறகு கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் இருக்கலாம் இதையும் நிச்சயம் என்று நினைப்பதில்லை. ஒரு விநாடியின் காட்சியை மகான் பிராட்தி என்று நினைக்கிறார்கள், தந்தை எப்படி இருக்கிறாரோ அப்படியே தன்னுடையவர் ஆகி விட வேண்டும் அல்லது என்னை அவருடையவர் ஆக்கி விட வேண்டும் என்ற இதை அசம்பவம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் இறைவனே என்று நீளமாக கூவி அழைத்து மனமுடைந்து போய் விடுகிறார்கள். மேலும் நீங்கள் அனைவரும் இறைவா என்று நீளமாக கூவி அழைப்பதற்குப் பதிலாக வீட்டில் அமர்ந்து கொண்டே ஒவ்வொரு கல்பத்தின் தன்னுடைய அதிகாரத்தை அனுபவம் செய்கிறீர்கள், அவர்கள் சந்திப்பது கடினம் என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்களோ சந்திப்பு எம்முடைய அதிகாரம் என்று நினைக்கிறீர்கள். அதிகாரி வாழ்க்கை என்றால் தந்தையின் அனைத்து பொக்கிஷங் களினால் நிரம்பிய வாழ்க்கை. இந்த நடைமுறை அனுபவ வாழ்க்கை கூட விசேஷமாக பரமாத்மா ஞானத்தின் எடுத்துக்காட்டு அதாவது நிரூபணம் ஆகும். பரமாத்மா

என்று கூறுவது என்றால் தந்தை என்று கூறுவது. தந்தையின் உறவிற்கான நிரூபணம் ஆஸ்தி, ஆத்ம ஞானத்தின் மற்றும் மகான் ஆத்மாக்களின் சம்மந்தம் சகோதரன் சகோதரனுக்கானது. தந்தை இல்லை என்றால் ஆஸ்தியும் இல்லை. ஆத்ம ஞானி மகான் ஆத்மாக்கள், ஆத்மா சகோதரன் சகோதரன் ஆவார்கள். அவர்கள் பரமாத்மா தந்தை அல்ல, எனவே அழியாத ஆஸ்தியை விரும்பினால் கூட அதன் அனுபவம் செய்ய முடிவதில்லை. பரமாத்மா ஞானத்தின் சுலபமான அடையாளம் வாழ்க்கையில் ஆஸ்தியை நடைமுறையில் அடைந்திருப்பது இந்த அழியாத ஞானம், பிராப்தியின் அனுபவம் நிறைந்த வாழ்க்கை, பரமாத்மாவை வெளிப்படுத்த முடியும். அப்படி இது விசேஷமான ஒரு எடுத்துக்காட்டாகும்.

தந்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் -புது வருடத்திற்காக இந்த திட எண்ணத்தை எடுத்திருக்கிறீர்களா? அனைவருமே எண்ணத்தை வைத்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி பிரத்யக்ஷம் செய்வதற்கான சாதனம் டபுள் ப்ரூ்ப் (இரட்டை உதாரணமாக ஆவது. எனவே இந்த எடுத்துக்காட்டு நிரூபணம், தூய்மை மற்றும் பிராப்தி இரண்டுமே அழியாததாக இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். அற்ப புத்தி உள்ள ஆத்மா அற்ப காலத்தின் பிராப்தியை செய்விக்கிறது. அழியாத தந்தை அழியாத பிராப்தி செய்விக்கிறார். பரமாத்மா சந்திப்பு மற்றும் பரமாத்மா ஞானத்தின் விசேஷமே அழியாதது என்பது தான். அப்படியானால் அழியாதவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? முயற்சி செய்பவர்கள் என்று நீங்கள் கூறுவீர்கள் ஆனால் முயற்சி மற்றும் உடனடி பிராப்தி, இது தான் பரமாத்மா பிராப்தியின் விசேஷம் ஆகும். சங்கமயுகம் முயற்சி செய்பவரின் வாழ்க்கை மற்றும் சத்யுகம் பிராப்தியின் வாழ்க்கை என்று அப்படியில்லை ஆனால் சங்கமயுகத்தின் விசேஷம் ஒரு அடி எடுத்து வைத்தீர்கள் என்றால் ஆயிரம் அடி பிராப்தியை அடைவீர்கள். மேலும் வேறு எந்த யுகத்திலும் ஒன்றிற்குப் பல மடங்காக கிடைப்பதற்கான பாக்கியம் இல்லவே இல்லை. இந்த டாக்கியத்தின் கோட்டை சுயம் பாக்கியத்தை உருவாக்கும் தந்தையே வந்து பிரம்மா மூலமாக இப்பொழுது போடுகிறார் எனவே பிரம்மாவை பாக்கியத்தை அளிப்பவர் என்று கூறுகிறார்கள். பிரம்மா எப்பொழுது பாக்கியத்தை கொடுத்தாரோ அப்பொழுது தூங்கிக் கொண்டிருந்தீர்களா என்ன என்கிற கூற்றும் இருக்கிறது. சங்கமயுகத்தின் விசேஷமே

முயற்சி மற்றும் பிராப்தி சேர்ந்தே இருப்பது. இன்னும் அதிகமாக சத்யுக பிராப்தியையும் விட விசேஷமாக தந்தையின் பிராப்தியின் பலனும் இப்பொழுது தான் கிடைக்கிறது. இந்த நேரத்தின் பிராப்தி பரமாத்மாவுடன் நேரடியாக அனைத்து உறவுகளையும் வைப்பது எதிர்காலத்து பிராப்தியோ தேவ ஆத்மாக்களின் சம்மந்தம் என்ற ரூபத்தில் இருக்கும். இப்பொழுதைய பிராப்தி மற்றும் எதிர்காலத்து பிராப்தியின் வித்தியாசத்தையோ தெரிந்தும் கொள்கிறீர்கள், மேலும் ஏற்கனவே கூறியும் இருந்தோம். எனவே முயற்சி செய்பவர் அல்ல, ஆனால் உயர்ந்த பிராப்தி உடையவர் என்று புரிந்து ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறீர்களா? முயற்சி செய்பவர் என்று மட்டும் சொல்வது என்றால் அலட்சியமுடையவராக ஆவது மேலும் பலன் மற்றும் பிராப்தியிலிருந்து வஞ்சிக்கப்பட்டவராக இருப்பது. பிராப்தியின் ரூபத்தையோ எப்பொழுதும் எதிரில் வையுங்கள். பிராப்தியைப் பார்த்து சுலபமாகவே ஏறும் கலையின் அனுபவம் செய்வீர்கள். சங்கமயுகத்தின் விசேஷங்களின் நினைவு சொரூபமாக எப்பொழுதும் இருந்தீர்கள் என்றால், விசேஷ ஆத்மாவாக ஆகியே விடுவீர்கள்.

(இந்த மார்க்கத்தில்) சென்று கொண்டிருக்கும்போதே சில குழந்தைகள் கடினமாக உணர ஆரம்பிக்கிறார்கள். சில நேரம் சுலபம் என்றும் சில நேரம் கடினம் என்றும் நினைக்கிறார்கள். சில நேரம் குஷியில் ஆடுகிறார்கள். சில நேரம் மனமுடைந்து போய் அமர்ந்து விடுகிறார்கள். சில நேரம் தந்தையின் மகிமை பாடுகிறார்கள் மற்றும் சில நேரம் 'என்ன மற்றும் எப்படி என்ற மகிமை பாடுகிறார்கள். சில நேரம் சுத்த எண்ணங்களின் அனைத்து பொக்கிஷங்களின் பிராப்தியின் மாலையை உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள், சில நேரம் வீணான எண்ணங்களின் புயலின் வசமாகி கடினம், கடினம் என்ற மாலையை உருட்டுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? முயற்சி செய்பவர் என்று மட்டும் நினைக்கிறார்கள், பிராப்தியை மறந்து விடுகிறார்கள். என்ன விட வேண்டும் என்பதை எதிரில் வைக்கிறார்கள். மேலும் என்ன அடைய வேண்டும் என்பதை பின்னால் வைக்கிறார்கள் ஆனால் விட வேண்டியதை பின்னால் வைக்க வேண்டும். பெற வேண்டியதை முன்னால் வைக்க வேண்டும். பெறும் நேரத்தில் ஒருபொழுதும் பின்னோக்கிச் செல்வதாக இருக்காது, முன்னோக்கிச் செல்வதாக இருக்கும். பெற வேண்டும் என்பதை நினைவில் வைப்பது என்றால்

தந்தையின் எதிரில் இருப்பது. விட வேண்டியதை அதிகமாக வர்ணனை செய்கிறீர்கள். இதையும் செய்தேன். இதையும் செய்ய வேண்டும் அல்லது செய்து தான் ஆக வேண்டும் என்ற இதை அதிகமாக யோசிக்கிறீர்கள். என்ன கிடைத்துக் கொண்டிருக்கிறது மற்றும் பிராப்தியாக என்ன உருவாகிக் கொண்டிருக்கிறது அதை குறைவாக யோசிக்கிறீர்கள். எனவே வீணானதின் எடை சுமையாகி விடுகிறது. சுத்த எண்ணங்களின் எடை குறைந்து விடுகிறது. எனவே முன்னேறும் கலைக்குப் பதிலாக சுமை இயல்பாகவே கீழே கொண்டு வந்து விடுகிறது அதாவது இறங்கும் கலையின் பக்கம் சென்று விடுகிறீர்கள். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது என்ற இந்த பாடலைப் பாட மறந்து விடுகிறீர்கள். இந்த ஒரு பாடலை மறப்பதினால் அனேக விதமான ஏமாற்றம் அடைகிறீர்கள். பாடலைப் பாடினீர்கள் என்றால், ஏமாற்றங்களும் அகன்று விடும். சோர்வடைவது முடிந்து விடும் எப்படி ஸ்தூல பாடல் கூட உங்களை எழுப்புகிறது தான் இல்லையா? இந்த அழியாத பாடலை பாடிக் கொண்டே இருங்கள். என்ன அடைய வேண்டுமோ அதை அடைந்தாகி விட்டது மேலும் பிராப்தியின் குஷியில் ஆடிக் கொண்டே இருங்கள். பாடிக் கொண்டே மற்றும் ஆடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் ஏமாற்றம் அடைவது முடிவடைந்து விடும். அப்படி இரட்டை நடைமுறை ஆதாரத்தின் மூலமாக தந்தையை பிரத்யக்ஷம் செய்யுங்கள். இது தான் பிரத்யக்ஷம் செய்வதற்கான விதி. இதை நடைமுறையில் காரியங்கள் செய்து கொண்டே எடுத்துக்காட்டு உதாரணம் என்ற சைத்தன்ய மியூசியமாகி (அருங்காட்சியகம்) விடுங்கள். மேலும் நடமாடும் புரொஜக்டர் ஆகி விடுங்கள்.

சரித்திரத்தைப் படைக்கும் படவிளக்கக் கண்காட்சி ஆகி விட்டீர்கள் என்றால், ஆங்காங்கு கண்காட்சி மற்றும் மியூசியம் ஏற்பட்டு விடும். செலவு குறைவாகவும் சேவை அதிகமாகவும் ஆகி விடும். நீங்களே கண்காட்சி ஆக வேண்டும். நீங்களே வழிகாட்டி ஆகுங்கள். இன்றைய நாட்களில் நடமாடும் நூலகம், கண்காட்சிகளை உருவாக்குகிறார்கள் தான் இல்லையா. இவ்வளவு பிராமணர்கள் நடமாடும் கண்காட்சிகள், மியூசியம் ஆகி விட்டார்கள் என்றால் பிரத்யக்ஷம் எவ்வளவு காலத்தில் ஆகும். புரிந்ததா? இந்த வருடம் இவ்வளவு நடமாடும் கண்காட்சிகள் மற்றும் புரொஜக்டர் முழு உலகின் நாலாபுறங்களிலும் பரவலாகி

விட்டீர்கள் என்றால், சிக்கனத்தின் விளம்பரம் ஆகி விடும். செலவு செய்ய வேண்டியதாக இருக்காது ஆனால் செலவுக்காக பணம் கொடுப்பவர்கள் வந்து விடுவார்கள். செலவுக்குப் பதிலாக இனாம் கிடைக்கும்.

குஜராத் மாநிலமோ பெரியது தான் இல்லையா? எண்ணிக்கையிலோ நிச்சயமாகப் பெரியதே தான்! இப்பொழுது சாட்சாத் ரூபத்திலும் பெரியவராகிக் காண்பிக்க வேண்டும். குஜராத்தின் நிலம் நல்ல நிலமாகும். எங்கு நிலம் நல்லதாக இருக்குமோ அங்கு சக்திசாலியான விதை போடுகிறார்கள். சக்திசாலியான விதை என்பது வாரிசு தரத்தின் விதை ஆகும். அந்த மாதிரி வாரிசின் விதை போட்டு பழத்தை உருவாக்குங்கள். நன்றாக விளையும் நிலம் என்றால் அனைத்தையும் விட உயர்ந்த பழம் கொடுக்கக்கூடியது. எண்ணிக்கையின் அளவோ மிக அதிகமாக உள்ளது, தரமும் இருக்கிறது. இன்னும் அதிகம் உருவாக்குங்கள். ஒவ்வொரு தரமுள்ளவர்களும் வாரிசு குரூப்பை உருவாக்க வேண்டும். குஜராத்தில் சுலபமாக உருவாகவும் முடியும். இப்பொழுது விஸ்தாரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. எனவே வாரிசை மறைந்து விட்டார்கள். இப்பொழுது அவர்களை பிரத்யக்ஷம் செய்யுங்கள். குஜராத் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? மற்றவர்கள் தொடர்பில் கொண்டு வரட்டும், நீங்கள் சம்மந்தத்தில் கொண்டு வந்தீர்கள் என்றால் நம்பர் ஒன் ஆகி விடுவீர்கள். இந்த வருடத்தின் திட்டத்தையும் கூறினோம். இப்பொழுது விஸ்தாரத்தில் பிஸியாக ஆகி விட்டீர்கள். வகை வகையான மரம் வளர்கிறது என்றால், விதை மறைந்து விடுகிறது, பிறகு இறுதியில் விதை தான் வெளியாகிறது. விஸ்தாரத்தில் அதிகமாக பிஸியாகி விட்டீர்கள். இப்பொழுது மீண்டும் விதை அதாவது வாரிசு தரமானவர்களை உருவாக்குங்கள், எது தொடக்கத்தில் நடந்ததோ அதை இறுதியிலும் செய்யுங்கள், நல்லது.

எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டிருக்கும், பிராப்தியின் பாடலைப் பாடிக் கொண்டிருக்கும், பிரத்யக்ஷ பலனை அனுபவம் செய்யும், தன்னை எடுத்துக்காட்டு உதாரணம் ஆக்கி, தந்தையை பிரத்யக்ஷம் செய்யும், அந்த மாதிரி டபுள் ப்ரூஃப் உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) இந்த பிராமண வாழ்க்கையின் லட்சியமே நரனிலிருந்து நாராயணன் ஆவது மற்றும் லட்சுமி ஆவது.** அப்படியானால் நீங்கள் தெய்வீக குணங்கள் நிறைந்த தேவதை சொரூபத்தில் நினைவில் இருப்பவர்களாகி இருக்கிறீர்களா? ஒருபொழுதும் தன்னுடைய லட்சியத்தை மறக்கக்கூடாது. எப்பொழுதும் தன்னுடைய தெய்வீக குணங்களின் நினைவு சொரூபமாக இருக்கிறீர்களா? லட்சுமி சொரூபம் என்றால், செல்வத்தின் தேவி மற்றும் நாராயணன் சொரூபம் என்றால் இராஜ அதிகாரி. லட்சுமியை செல்வத்தின் தேவி என்று கூறுகிறார்கள். அந்த (பௌதீக) செல்வம் அல்ல, ஆனால் ஞானத்தின் பொக்கிஷங்கள் என்ன கிடைத்திருக்கிறதோ அந்த செல்வத்தின் தேவிகள். நீங்கள் அனைவரும் செல்வத்தின் தேவிகள் தான் இல்லையா? யார் செல்வத்தின் தேவியாக இருப்பாரோ அவர் எப்பொழுதும் அனைத்து பொக்கிஷங்களினால் நிரம்பி இருப்பார் எப்பொழுதிலிருந்து பிராமணன் ஆனீர்களோ அப்பொழுதிலிருந்து பிறப்புரிமையாக என்ன கிடைத்திருக்கிறது? ஞானத்தின், சக்திகளின் பொக்கிஷம் கிடைத்திருக்கிறது இல்லையா? அப்படியானால் அதிகாரம் உடன் இருக்கிறதா அல்லது வங்கியில் இருக்கிறதா? வங்கியில் வைத்தீர்கள் என்றால் குஷி இருக்காது, வங்கியில் வைப்பது என்றால் உபயோகம் செய்யாதது, ஒரு பக்கமாக வைத்து விடுவது. எவ்வளவு உபயோகம் செய்வீர்களோ அந்த அளவு குஷி அதிகரிக்கும். இந்த பொக்கிஷத்தை தன்னுடன் வைத்துக் கொள்வதில் எந்த ஆபத்தும் இல்லை, எப்பொழுது பெரும் வள்ளல், வரமளிக்கும் வள்ளல் ஆக வேண்டும் என்றால் பாதுகாப்பு பெட்டகத்தில் லாக்கரில்) எப்படி வைப்பீர்கள். எனவே தினசரி தனக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷங்களைப் பாருங்கள் மற்றும் தனக்காகவும் மேலும் மற்றவர்களுக்காகவும் உபயோகம் செய்யுங்கள். பெரும் வள்ளல் என்றால் நிரந்தரமாக இடைவிடாது கொடை இருந்து கொண்டே இருப்பது. ஒரு நாள் செய்தீர்கள், பிறகு ஒரு மாதம் கழித்து செய்தீர்கள் என்றால் பெரும் வள்ளல் என்று சொல்ல மாட்டோம். பெரும் வள்ளல் என்றால் எப்பொழுதுமே கொடை கொடுத்துக் கொண்டே இருப்பது. எப்பொழுதுமே நிரம்பி இருப்பது. எப்படி பாபாவின் பண்டாரா எப்பொழுதுமே நடந்து கொண்டிருக்கிறது இல்லையா? தினசரி கொடுக்கிறார். அப்படி குழந்தைகளின் வேலையும் தினசரி

கொடுப்பது, இந்த பெட்டகம் திறந்திருந்தது என்றால் திருடன் வர மாட்டான். மூடி வைத்திருந்தீர்கள் என்றால் திருடன் வந்து விடுவான். பொதுவாகவே எவ்வளவு அதிகமாக பூட்டை தயாரித்திருக்கிறார்களோ அந்த அளவு அதிகமாக திருடர்கள் ஆகி விட்டார்கள். முந்தைய காலங்களில் திறந்த பெட்டகமாக இருந்தது என்றால் இவ்வளவு அதிகமாக திருடர்கள் இருக்கவில்லை, எனவே உங்களுடைய பெட்டகம் எப்பொழுதுமே திறந்திருக் கட்டும். இதுவரையிலும் என்ன நடந்திருந்ததோ அதற்கு முற்றுப்புள்ளி இடுங்கள். கடந்ததை சிந்தனையில் கொண்டு வராதீர்கள். இதைத் தான் தீவிரமாக முயற்சி செய்வது என்று கூறுவது. ஒருவேளை கடந்ததை நினைவு செய்தீர்கள் என்றால் நேரம், சக்தி, எண்ணம் அனைத்தும் வீணாகி விடுகிறது. இப்பொழுது வீணாக்கு வதற்கான நேரம் இல்லை. சங்கம யுகத்தின் இரண்டு விநாடியைக்கூட வீணாக்கினீர்கள் என்றால் அனேக விநாடிகளை வீணாக்கி விட்டீர்கள். சங்கமயுகத்தின் மதிப்பை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? சங்கமயுகத்தின் ஒரு விநாடி எத்தனை வருடங்களுக்குச் சமமானது? அப்படி ஒரிரண்டு விநாடி இழக்கவில்லை, ஆனால் அனேக வருடங்களை இழந்து விட்டீர்கள். எனவே இப்பொழுது முற்றுப்புள்ளி இடுங்கள். யாருக்கு முற்றுப்புள்ளி இடத் தெரியுமோ அவர் எப்பொழுதும் முழுமையாக இருப்பார்.

**2) எப்பொழுதும் தன்னுடைய சுப பாவனை மூலம் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கிறீர்களா?** எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் ஆனால் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காக சுபபாவனை வையுங்கள். சுபபாவனை வெற்றியை பிராப்தி செய்விக்கும். சுபபாவனையோடு சேவை செய்வதின் அனுபவம் இருக்கிறதா? சப்பாவனை என்றால் இரக்க மனம். எப்படி தந்தை அபகாரிகள் மேலும் உபகாரம் செய்பவராக இருக்கிறார். அதே போலவே உங்கள் எதிரில் எப்படிப்பட்ட ஆத்மா இருந்தாலும் ஆனால் தன்னுடைய இரக்க உணர்வு மூலமாக சுபபாவனை மூலமாக அவற்றை மாற்றம் செய்து விடுங்கள். எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் மணலிலும் பயிரை விளையச் செய்ய முடியும் என்றால் அமைதி சக்தி உள்ளவர்கள் பூமியை மாற்றம் செய்ய முடியாதா? எண்ணம் கூட உலகைப் படைத்து விடுகிறது. எனவே எப்பொழுதும் பூமியை மாற்றம் செய்வதற்கான சுபபாவனை இருக்கட்டும். தன்னுடைய முன்னேறும் கலையின் எண்ண அலைகள்

மூலமாக பூமியைப் பரிவர்த்தனை செய்து கொண்டே இருங்கள். சுயமாற்றம் மூலம் உலக மாற்றம் ஆகி விடும். பூமியில் ஏர் உழுபவர்கள் தான் நீங்கள் இல்லையா? களைப்படைபவர்களோ இல்லை. ஏர் உழுபவர்கள் நல்ல களைப்பற்றவர்களாக இருப்பார்கள். கட்டாந்தரை நிலத்தையும் பசுமையாக்கி விடுகிறார்கள். இப்பொழுது மனமுடைந்தவர் ஆக வேண்டாம், மனமகிழ்ச்சி நிரம்பி இருந்தீர்கள் என்றால், உங்களுடைய குஷி அனைவரையும் தானாகவே கவர்ந்திழுக்கும். நல்லது.

3) மாயாஜீத்'ன் அடிமை மாயா! சதா தன்னை தெரியாத ஆனால் மிக நன்றாகத் தெரிந்த வீரன் (unknown but very well known) என புரிந்து கொண்டு யுத்த மைதானத்தில் மாயாஜீத் ஆக இருந்து கொண்டிருக்கிறீர்களா? சாதாரண முறையில் அமர்வது, செல்வது, உண்பது ஆனால் போகும்போதும் வரும்போதும் மாயாவிடம் போர் புரிந்து வெற்றி அடைந்து கொண்டே செல்கிறீர்கள். வெளியில் என்ன வேண்டுமானாலும் செய்கிறீர்கள் ஆனால் உள்ளுக்குள் மாயா மீது வெற்றி அடைந்து உலக ராஜ்யத்தை அடைந்து கொண்டிருக்கிறீர்கள், எனில் தெரியாதவர் ஆகி விட்டீர்கள்தானே! எப்போது பிரத்யக்ஷம் ஆகிறதோ அப்போது அனைவரும் அனுபவம் செய்வார்கள் - நீங்கள் யார் மற்றும் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை. எவருடன் சர்வ சக்திவான் தந்தை இருக்கிறாரே அவரது வெற்றி நிச்சயிக்கப்பட்டது! பாண்டவர்களின் தலைவன் சர்வ சக்திவான் ஆவார் ஆதலால் அவர்கள் சதா வெற்றி பெற்றனர். துணையை விட்டு விடக்கூடாது, தனியாகி விட்டீர்கள் எனில் மாயா போரிடும். தந்தையுடன் கூடவே இருந்தீர்கள் என்றால் மாயா பலியாகி விடும். மாயாஜீத்'ன் முன் மாயா அடிமையாகி நமஸ்கரிக்கும். மாயாவின் கூட்டத்தில் தந்தையின் துணையை விட்டு விடக்கூடாது. ஒருவேளை துணைவனை விட்டு விட்டீர்கள் எனில் வழியை மறந்து விடுவீர்கள். பின்னர் கூச்சலிட வேண்டி வரும். சதா மாயாவை நமஸ்கரிக்க செய்வது என்றால் உள்ளுக்குள் யுத்தம் புரியாமல் தடுப்பது! நல்லது.

வரதானம்: இடைவிடாத யோகா விதி மூலம் இடைவிடாது பூஜைக்குரியவர் ஆகக்கூடிய உயர்ந்த மகான் ஆத்மா ஆகுக!

இன்றைய மகான் ஆத்மாக்கள் என்று சொல்லப்படுபவர்களாக யார் இருக்கிறார்களோ அவர்களுடைய பெயராக அகண்டானந்த் (இடைவிடாது ஆனந்தம் நிறைந்தவர்) என்றெல்லாம் வைக்கிறார்கள் ஆனால் அனைத்திலும் அகண்ட அதாவது இடைவிடாத சொரூபமோ நீங்கள் ஆவீர்கள் -ஆனந்தத்திலும் அகண்டம், சுகத்திலும் அகண்டம்.... தீய சேர்க்கையில் மட்டும் வராதீர்கள். மற்றவர்களின் அவகுணங்களைப் பார்த்து, கேட்டு அளவுகளைப் பொருட்படுத்தாதீர்கள். இந்த விசேஷம் மூலம் அகண்ட யோகி அதாவது இடைவிடாத யோகி ஆகி விடுவீர்கள். யார் அகண்ட யோகியோ அவர் தான் அகண்ட பூஜைக்குரியவராகவும் ஆகிறார். அப்படி நீங்கள் அந்த மாதிரி மகான் ஆத்மாக்கள் ஆவீர்கள். யார் அரைக்கல்பம் நீங்களே பூஜைக்குரிய சொரூபத்தில் இருக்கிறீர்கள். மேலும் அரைக்கல்பம் உங்களுடைய ஜட விக்கிரங்களுக்கு பூஜை நடக்கிறது.

**சுலோகன்: தெய்விக புத்தி தான் அமைதி சக்திக்கான ஆதாரமாகும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 23.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பவித்ரத்தின் (தூய்மையின்) மகத்துவம்!

பாப்தாதா தன்னுடைய அனைத்து மகான் ஆத்மாக்களை, தர்ம ஆத்மாக்களை, புண்ணிய ஆத்மாக்களை, மகான் பவித்திர (தூய்மையான) ஆத்மாக்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். பரமாத்மாவின் குழந்தைகள் பரம பவித்திர (மிகத் தூய்மையான) குழந்தைகள் ஆவார்கள். தூய்மைக்குத் தான் மகான் நிலை இருக்கிறது. தூய்மைக்குத் தான் மதிப்பு இருக்கிறது. தூய்மையின் காரணமாகத் தான் உயர்ந்த பூஜைக்குரிய மற்றும் மகிமைக்குரியவர்களாக ஆகிறார்கள். தூய்மை தான் உயர்ந்த தர்மம் அதாவது தாரணை ஆகும். இந்த ஈஸ்வரிய சேவையின் மிகப் பெரிய புண்ணியமானது தூய்மையின் தானம் கொடுப்பதாகும். தூய்மையாக ஆக்குவது தான் புண்ணிய ஆத்மாவாக ஆக்குவது. ஏனென்றால் எந்தவொரு ஆத்மாவையும் ஆத்ம வதையாகிய மிகப் பெரிய பாவத்திலிருந்து விடுவிக்கிறீர்கள். தூய்மையை இழப்பது ஆத்ம வதை செய்வதாகும். தூய்மை உயிர்தானம் கொடுப்பதாகும். தூய்மையாக ஆக்குவது என்றால் புண்ணிய ஆத்மா ஆக்குவது. கீதையின் ஞானத்தின் மற்றும் தற்சமயத்து பரமாத்மா ஞானம் என்னவாக இருக்கிறதோ அதன் சார ரூபத்தின் சுலோகன் உருவாக்குகிறீர்கள். அதில் கூட தூய்மையின் மகத்துவத்தைக் கூறுகிறீர்கள். தூய்மையாகுங்கள் யோகி ஆகுங்கள் என்ற இந்த சுலோகன் தான் மகான் ஆத்மா ஆவதற்கான ஆதாரம் ஆகும். பிராமண வாழ்க்கையின் முயற்சி செய்வதின் வரிசை எண் கூட தூய்மையின் ஆதாரத்தில் தான் உருவாகிறது. பக்தி மார்க்கத்தின் நினைவுச்சின்னம் கூட தூய்மையின் ஆதாரத்தில் தான் இருக்கிறது. எந்தவொரு பக்தனும் உங்களுடைய நினைவுச்சின்ன விக்ரகங்கள், படங்களை தூய்மையின்றி தொடக்கூட முடியாது. எந்த நாளில் விசேஷமாக தேவி மற்றும் தேவதைகளின் நாளாகக் கொண்டாடுகிறார்களோ அந்த நாளின் மகத்துவமும் எப்பொழுதும் தூய்மையாக இருப்பதின் மேல் தான் இருக்கிறது. அப்படி பக்தர்கள்

அற்ப காலத்திற்காக நியமத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். எப்படி நவராத்திரி, ஜென்மாஷ்டமி மற்றும் தீபாவளி அல்லது ஏதாவது விசேஷ உற்சவங்களை கொண்டாடுகிறார்கள் என்றால், தூய்மையின் நியமத்தை (விரதம்) அற்ப காலத்திற்காக அவசியம் கடைப்பிடிக்கிறார்கள். உடலின் தூய்மை மற்றும் ஆத்மாவின் நியமம். இரண்டு விதமான சுத்தத்தை அவசியம் கடைபிடிக்கிறார்கள்.

உங்களுடைய நினைவுச்சின்னமான வெற்றி மாலை இருக்கிறது. அதைக் கையில் எடுத்து மந்திரத்தை உச்சரித்தார்கள் என்றால் கூட தூய்மையாக இருந்து விதிப்பூர்வமாக செய்வார்கள். நீங்கள் சித்தி சொரூபமாக ஆகிறீர்கள், சித்தி சொரூப ஆத்மாக்களின் பூஜையும் விதிப்பூர்வமாக இருக்கும். தூய்மையின் மகத்துவத்தை தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே முதலில் முக்கியமான சோதனையாக தூய்மையை சோதனை செய்தோம். ஒவ்வொருவரும் தன்னுடைய தூய்மையின் சோதனையை சரிபார்த்தீர்களா? நிகழ்ச்சிக்கு ஏற்றபடி முன்னேற்றமோ செய்திருக்கிறீர்கள்.

டோட்டல் ரிசல்ட்டில் (மொத்த முடிவில் அனைத்தையும் விட அதிகமாக பெரும்பான்மையோர் கர்மனா சேவையில் (உடலால் செய்யும் சேவையில்) மதிப்பீடு சரியாக இருந்தது. வாய்மொழியில் கர்மனாவின் ரிசல்ட்டை விட 25-சதவிகிதம் குறைவாக இருந்தது. மனதால் செய்வதில் கர்மனாவின் ரிசல்ட்டை விட 50-ஈதவிகிதம் குறைவாக இருந்தது. மனதில் எழும் எண்ணம் மற்றும் கனவிற்கு இடையே கொஞ்சம் வேற்றுமை இருக்கிறது என்றால், அதில் கூட பிறந்த தேதியிலிருந்து இதுவரையிலான ரிசல்ட்டில் அனேகர்களின் முயற்சி செய்வதில் ஏற்றம் இறக்கம் இருந்தது, கரை படிந்தது மற்றும் அகற்றினீர்கள், சில நேரம் எண்ணம் வந்தது மேலும் அதை அகற்றினீர்கள். சில நேரம் வாய்மொழி சேவையின் கரை படிந்தது. பிறகு அகற்றினீர்கள். அகற்றுபவர்கள் மற்றும் அழிப்பவர்கள் அதிகமாக இருந்தார்கள் ஆனால் அந்த மாதிரி தீவிரமாக முயற்சி செய்யும் சிலரையும் பார்த்தோம், அவர்கள் சம்ஸ்காரங்களின் அந்த மாதிரி கரைகளையும் அகற்றினார்கள் அதனால் இன்று வரையில் முற்றிலும் தெளிவான சுத்தமான சோதனைத் தாளாக தென்பட்டது. அந்த மாதிரி கனவு வரையிலும் அகற்றியிருந்தார்கள். மதிப்புடன் தேர்ச்சி பெறும்

மகான் தூய்மையான ஆத்மாக்களையும் பார்த்தோம் அவர்களுடைய விசேஷமாக என்ன பார்த்தோம்?

எப்பொழுதிலிருந்து பிராமண ஜென்மம் கிடைத்ததோ அப்பொழுதிலிருந்து இதுவரையிலும் முயற்சி செய்வதற்கான அவசியம் இருக்கவில்லை ஆனால் பிராமண வாழ்க்கையின் விசேஷ லட்சணம் பிராமண ஆத்மாவின் அனாதி ஆதி சம்ஸ்காரம் ஆகும். அந்த மாதிரி இயற்கையான சம்ஸ்காரம் காரணமாக கனவிலும் மற்றும் எண்ணத்தில் கூட தூய்மையின்மை வெளிப்படவில்லை, எண்ணம் வந்தது, மேலும் வெற்றி அடைந்தீர்கள் என்ற இதையும் தாண்டி இயற்கையான சம்ஸ்கார ரூபத்தில் இருந்தார்கள். இந்த பாடத்தின் முயற்சி செய்வதற்கான அவசியம் இருக்கவில்லை. அந்த மாதிரி உயர்ந்த சம்ஸ்காரம் உள்ளவர்களையும் பார்த்தோம், ஆனால் மிகக் குறைவானவர்கள் அப்படி இருந்தார்கள். ஞானம் நிறைந்தவராக இருந்த போதிலும், மற்றவர்களுக்கு தூய்மையாவதின் விதியை கூறிக் கொண்டும், மற்றவர்களின் பலஹீனங்களைக் கேட்டுக் கொண்டும், அவர்களுக்கு தந்தையின் ஸ்ரீமத்தைக் கொடுத்துக் கொண்டும், அவரே எப்பொழுதும் ஏற்றுக் கொண்டும், தெரிந்து கொண்டும் எப்பொழுதும் சுத்தமாக இருந்தார்கள். அதாவது தூய்மையின் பாடத்தில் சித்தி சொரூபமாக இருந்தார்கள். எனவே அந்த மாதிரி பரம் பவித்திர ஆத்மாக்களின் பூஜையும் எப்பொழுதும் விதிப்பூர்வமாக நடக்கிறது. அஷ் தேவர்களின் ரூபத்திலும் பூஜை மற்றும் பக்தர்களின் இஷ்ட தேவதைகளின் ரூபத்திலும் பூஜை நடக்கிறது. அஷ்ட சக்திகளின் நடைமுறை சொரூபம் அஷ்ட தேவதைகள் பிரத்யக்ஷம் ஆகிறார்கள். அப்படி பரீட்சையின் ரிசல்ட்டை கேட்டீர்களா?

அப்படி மனதில் எழும் எண்ணங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். இதன் மேல் இரட்டை கவனம் கொடுங்கள். சம்பன்னம் ஆகும் வரை இந்த மாதிரி எண்ணங்களோ வரத்தான் செய்யும் என்று அப்படி நினைக்காதீர்கள். எண்ணம் அதாவது விதையையே யோக அக்னியில் எரித்து விட்டீர்கள் என்றால் பிறகு அரைக்கல்பம் வரை விதை பலன் கொடுக்க முடியாமல் ஆகி விடும். வோர்த்தைகள் என்ற இரண்டு முக்கிய இலைகள் கூட வெளிவர முடியாது. செய்யும் காரியங்கள் என்ற தண்டு மற்றும் கிளைகள் கூட உருவாக முடியாது, வெகு

காலமாக பஸ்பம் செய்யப்பட்ட விதை பல பிறவிகளுக்கு பலன் கொடுக்க முடியாது. இறுதி நேரத்தில் இந்த பாடத்தில் சம்பூர்ணம் ஆகி விடலாம் என்றிருக்க வேண்டாம் ஆனால் வெகுகாலத்து பயிற்சி தான் இறுதியில் தேர்ச்சி அடையச் செய்யும். இறுதியில் சம்பூர்ணம் ஆகி விடுவோம் என்ற இந்த எண்ணத்தையே முதலில் அழித்து விடுங்கள். இப்பொழுது ஆனீர்கள் என்றால் இறுதியிலும் ஆவீர்கள். இப்பொழுது ஆகவில்லை என்றால் இறுதியிலும் ஆக முடியாது. எனவே இந்த அலட்சிய தூக்கத்திலிருந்தும் விழித்தெழுந்து விடுங்கள். இதிலேயும் தூங்கினீர்கள் என்றால் இழந்தீர்கள் பின்பு நாங்களோ இறுதியில் சம்பூர்ணம் ஆவோம் என்று நினைத்தோம் என்ற முறையீட்டை சொல்லாதீர்கள். இறுதியில் சம்பூர்ணம் ஆவதின் அர்த்தத்தையும் புரிந்து கொள்ளுங்கள். ஏதாவது முக்கியமான பலஹீனத்தை இறுதியில் சம்பூர்ணம் ஆக்குவோம் என்ற எண்ணத்தை ஒருபொழுதும் கொண்டு வராதீர்கள். முயற்சி செய்து பிராமண வாழ்க்கையின் நகையைக் கூட இப்பொழுது தயாரிக்க வேண்டும். மரியாதைகள் மற்றும் நியமத்தைக் கடைப்பிடிக்கும் கற்களையும் இப்பொழுதே பதிக்க வேண்டும். பாலிஷும் இப்பொழுதே செய்ய வேண்டும். இறுகியிலோ பாலிஷ் செய்யபட்டதை லேசாக கையால் துடைக்க வேண்டும் அவ்வளவு தான். அந்த நேரம் பாலிஷும் செய்ய முடியாது. மற்ற ஆத்மாக்களின் உயர்ந்த சேவைக்காக மட்டும் நேரம் கிடைக்கும். அந்த நேரம் முயற்சி செய்பவரின் ரூபம் இருக்காது, மாஸ்டர் வள்ளலின் சொரூபம் இருக்கும். கொடுப்பது தான் பெறுவதாக இருக்கும். பெறுவது மட்டும் முடிந்து விட்டது என்றால் எப்படி பாலிஷ் செய்வீர்கள்? ஒருவேளை கைக்குள் கற்களை பதிப்பதிலேயே இருந்தீர்கள் என்றால் உலக நன்மை செய்யும் காரியத்தை செய்ய முடியாது. எனவே இப்பொழுது மாஸ்டர் படைப்பவர் ஆவதற்கான சம்ஸ்காரத்தை தன்னுள் தாரணை செய்யுங்கள். குழந்தைத்தனத்தின் சம்ஸ்காரத்தை முடிவு கட்டுங்கள். மாஸ்டர் படைப்பவராகி பிராப்தியாகியிருக்கும் ஈக்திகள், ஞானம், குணம் மற்றும் அனைத்து பொக்கிஷங்களை வரம் அளிக்கும் வள்ளலாகி, மகாஞானி ஆகி மற்றும் மகாவள்ளலாகி மற்றவர்களுக்காக கொடுத்துக் கொண்டே இருங்கள். வரமளிக்கும் வள்ளல் என்றால் தன்னுடைய சக்திகள் மூலமாக வாயுமண்டலம் மற்றும் எண்ண அலைகளின் பிரபாவத்தினால் ஆத்மாக்களைப் பரிவர்த்தனை செய்வது. மகாஞானி என்றால் வாய்மொழி மூலமாக

மற்றும் சேவையின் சாதனங்கள் மூலமாக ஆத்மாக்களை பரிவர்த்தனை செய்வது. மகாவள்ளல் என்றால் முற்றிலும் பலமற்ற, மனமுடைந்த சக்தியற்ற ஆத்மாக்களுக்கு அதிகப்படியான பலம் கொடுத்து ஆன்மீக இரக்க மனம் உடையவராவதாகும். மாயாவின் இரக்க மனம் உடையவராகவும் ஆக வேண்டியதாக இருக்கிறது. யாரோ தவறான காரியம் செய்து கொண்டிருக்கிறார். மேலும் நீங்கள் இரக்கப்படுகிறீர்கள் என்றால் இது மாயாவிடம் இரக்க மனமுடையவர் ஆவதாகும். அந்த மாதிரி நேரத்தில் அட்டப்படி நடப்பவராகவும் ஆக வேண்டியுள்ளது. ஏற்படுவது பற்றுதல் ஆகும் ஆனால் அதை இரக்கம் என்று நினைக்கிறீர்கள். இதைத் தான் மாயாவின் இரக்கம் என்று கூறுவது, அந்த மாதிரி இரக்க மனம் உடையவர் ஆகக்கூடாது. எனவே ஆன்மீக இரக்க மனம் உடையவர் என்று கூறினோம். இல்லை என்றால் வார்த்தைகளின் லாபத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி மகா வள்ளல் என்றால் முற்றிலும் நம்பிக்கை இழந்தவரிலும் நம்பிக்கையை உருவாக்குவதாகும். தன்னுடைய சக்திகளின் ஆதாரத்தினால் அவருக்கு சகயோகம் கொடுப்பது என்றால் பெரிய தானம் கொடுப்பது. இது பிரஜைக்காக செய்யப்படுகிறது. வாரிசு தரமுள்ளவர்களுக்காக பெரிய வள்ளல் ஆவது என்பதில்லை. தானம் எப்பொழுதும் ஏழைகளுக்கு வழங்கப்படுவதாகும். ஆதரவு அற்றவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்படுகிறது. அப்படி பிரஜைக்காக மகா வள்ளல் மற்றும் இறுதியில் பக்த ஆத்மாக்களுக்காக பெரிய வள்ளல் ஆவது. உங்களுக்குள் பிராமணன் ஒருவர் இன்னொருவருக்காக மகாவள்ளல் ஆவது என்பது இல்லை. நீங்களோ உங்களுக்குள் சகயோகியாக இருக்கும் துணைவர் ஆவீர்கள், சகோதரன் -சகோதரன் ஆவீர்கள் மற்றும் அனைவரும் முயற்சி செய்பவர்களாக இருக்கிறீர்கள். அவர்களுக்கு சகயோகம் கொடுங்கள். தானம் கொடுக்க மாட்டீர்கள். புரிந்ததா? எனவே இப்பொழுது இந்த எண்ணத்தையும் முடித்து விடுங்கள். எப்பொழுதாவது ஆகி விடும் என்ற இந்த 'எப்பொழுது' என்ற வார்த்தையையும் முடித்து விடுங்கள். தீவிரமாக முயற்சி செய்பவர்கள் 'எப்பொழுது என்று கூறமாட்டார்கள் ஆனால் இப்பொழுது என்று கூறுவார்கள். அப்படி எப்பொழுதும் தீவிர முயற்சி செய்பவர்களாக ஆகுங்கள்.

அந்த மாதிரி எப்பொழுதும் உலகிற்கு நன்மை செய்பவர். மகான் தூய்மையான ஆத்மாக்களுக்கு, கனவிலும் நினைவிலும் கூட தூய்மையின்மையிலிருந்து விலகியிருக்கக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த பூஜைக்குரிய எப்பொழுதும் மரியாதைக்கு மற்றும் மகிமைக்குரிய, கர்மயோகி, எப்பொழுதும் சுய எண்ணம் மற்றும் சுய ரூபம் மூலமாக சேவை செய்யும் அந்த மாதிரி புண்ணிய ஆத்மாக்களுக்கு வரமளிக்கும் மகாவள்ளல் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன்: 1) அனைவரும் எவரெடி (தயார் நிலையில் இருக்கும்) மற்றும் அல்ரவுண்டர் (அனைத்து சேவையும் தயங்காமல் செய்பவர்) ஆக இருக்கிறீர்களா?** எவரெடி என்றால் ஆர்டர் (ஆணை) வந்தது மற்றும் அதன்படி நடந்தீர்கள் அதாவது ஆர்டர் கிடைத்தது மற்றும் சரி அய்யா என்று கூறினீர்கள். என்ன செய்வது, எப்படி செய்வது என்ற இவை இல்லை. என்னவாகும், எப்படி ஆகும். செல்ல முடியுமா அல்லது செல்ல முடியாதா, அந்த மாதிரி எண்ணம் வந்தது என்றால் எவரெடி என்று கூற முடியாது. தீவிர முயற்சி செய்பவர்களின் விசேஷமே எவரெடி மற்றும் ஆல்ரவுண்டர் என்பதாகும். மனதால் செய்யும் சேவைக்கு வாய்ப்பு கிடைத்தாலும் அல்லது வாய்மொழி சேவைக்கான வாய்ப்பு கிடைத்தாலும் அல்லது கர்மனா (உடலால் காரியம் செய்யும்) சேவைக்கான வாய்ப்பு கிடைத்தாலும் ஒவ்வொரு பாடத்திலும் நம்பர் ஒன் ஆக இருக்க வேண்டும். வாய்மொழியில் நம்பர் ஒன், கர்மனா சேவையில் நம்பர் இரண்டு மற்றும் மனதால் செய்யும் சேவையில் நம்பர் மூன்று என்று அப்படி இருக்கக்கூடாது. எந்த அளவு அன்போடு வாய்மொழி சேவை செய்கிறீர்களோ அந்த அளவே மனதால் செய்யும் சேவையும் செய்ய முடியும். மனதால் செய்யும் சேவையின் பயிற்சியை அதிகப்படுத்துங்கள். வாய்மொழி சேவையோ ஏழு நாள் பாடம் எடுத்தவர்களும். இல்லறத்தில் இருப்பவர்களும் செய்ய முடியும். நீங்கள் செய்ய வேண்டிய காரியம் -வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்க வேண்டும், தன்னுடைய ஸ்தானத்தின், நகரத்தின், பாரதத்தின் மற்றும் உலகின் வாயுமண்டலத்தை சக்திசாலி ஆக்குங்கள். மனதால் செய்யும் சேவையில் வெற்றி கிடைக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். ஒருவேளை மனதால் செய்யும் சேவையிலும் வெற்றி கிடைக்கிறது என்றால் எப்பொழுதும் தானும் மற்றும் தன்னுடைய

சேவை நிலையமும் தடையற்றதாக மற்றும் முன்னேறிச் சென்று கொண்டிருப்பதாக இருக்கும். முன்னேறிச் செல்வது என்றால் அதிக எண்ணிக்கையை அடைந்திருக்கிறது என்பது மட்டும் அல்ல. முன்னேறும் கலை மாணவர்களின் எண்ணிக்கையிலும், தரத்திலும் மற்றும் வாயுமண்டலத்திலும் மேலும் தன்னிலும் மற்றும் உடன் இருப்பவர்களிலும் முன்னேறும் கலை. இதைத் தான் முன்னேறும் கலை என்று கூறுவது. அப்படியானால் அந்த மாதிரி அனுபவம் செய்கிறீர்களா? தன்னுடைய அமிர்தவேளை சக்திசாலியாக இருக்கிறதா? அமிர்தவேளையில் அலட்சியம் தடையாக ஆவதில்லையே? அந்த மாதிரி சக்திசாலியான அமிர்தவேளை இருக்க வேண்டும் அதன் மூலம் உலகிற்கு லைட் மற்றும் மைட்டின் வரதானம் கொடுக்க வேண்டும். அமிர்தவேளையின் நினைவின் மேல் நீங்கள் உங்கள் மேலேயே திருப்தியாக இருக்கிறீர்களா?

முக்கியமான பாடமே நினைவு தான். அமிர்தவேளையில் எப்பொழுது பாப்தாதா சுற்றி வருகிறாரோ அந்த நேரம் சக்திசாலியான வைப்ரேஷன் (எண்ண அலைகளின்) குறை தென்படுகிறது. நியமப்படி நடப்பவராக என்னவோ ஆகி விடுகிறீர்கள் ஆனால் அனுபவம் நிறைந்தவராகவும் ஆகுங்கள். நியமப்படி செய்வது என்பது வலுக்கட்டாயமாக ஆகி விட்டது இல்லையா? ஒருவேளை அனுபவம் ஆகி விட்டது என்றால் தன்னுடைய ஆர்வத்தோடு அமர்வார்கள். எந்த விஷயத்தின் அனுபவம் ஆகிறதோ அந்த விஷயம் விரும்பாவிட்டாலும் தன் பக்கம் ஈர்க்கும். எப்படி வாய்மொழி சேவை மூலம் குஷியின் அனுபவம் ஆகிறது என்றால் விரும்பாவிட்டால் கூட அந்தப் பக்கம் ஓடுகிறீர்கள் தான் இல்லையா? அதே போலவே அமிர்தவேளையை சக்திசாலி ஆக்குங்கள் அதன் மூலம் மனதால் செய்யும் சேவையின் அனுபவத்தை அதிகரிக்க முடியும். இறுதி நேரத்தில் வாய்மொழி சேவைக்கான வாய்ப்பு இருக்காது. மனதால் செய்யும் சேவையின் ஆதாரத்தில் சான்றிதழ் கிடைக்கும். ஏனென்றால் அந்த அளவு நீளமான வரிசையில் நிற்பார்கள். உங்களால் எதையுமே சொல்ல முடியாது. எப்படி இப்பொழுது கூட பெரிய மகாநாடு செய்கிறீர்கள் என்றால் அதிக கூட்ட நேரத்தில் என்ன செய்கிறீர்கள்? அமைதியோடு அவர்களுக்கு கப்பாவனை மற்றும் சுபவிருப்பங்களோடு திருஷ்டி கொடுக்கிறீர்கள் இல்லையா? அப்படி இறுதியிலும் எப்பொழுது பிரபாவம் ஏற்படுமோ அப்பொழுது

என்னவாகும்? இப்பொழுதோ ஸ்தூல் லைட்டின் பிரபாவத்தில் வருகிறார்கள். பின்பு அந்த நேரம் ஆத்மாக்கள் உங்களுடைய லைட்டின் பிரபாவம் இருக்கும். அந்த நேரம் மனசேவை செய்ய வேண்டியதாக இருக்கும். பார்வையாலேயே திருப்திபடுத்த வேண்டியதாக இருக்கும். தன்னுடைய உள் உணர்வு மூலமாக அவர்களுடைய உள்உணர்வை மாற்ற வேண்டியதாக இருக்கும். தன்னுடைய நினைவு மூலம் அவர்களை சக்திசாலியாக ஆக்க வேண்டியதாக இருக்கும். பின்பு அந்த நேரம் சொற்பொழிவு செய்வீர்களா என்ன? அப்படி மனசேவைக்கான பயிற்சி மிக அவசியம். அனுபவம் நிறைந்தவராகி விடுங்கள். மற்றவர்களுக்கு என்ன கூறுகிறீர்களோ அவை அனைத்தையும் அனுபவத்தின் ஆதாரத்தில் கூறுங்கள். புரிந்ததா? மனசேவையை அதிகப்படுத்துங்கள், இப்பொழுது தடையற்ற வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். அதன் மூலம் எந்தவொரு ஆத்மாவிற்கும் தடை ரூபம் ஆவதற்கான தைரியமே இல்லாத அளவிற்கு. தடை வந்தது அதை அகற்றினீர்கள். இதுவும் நேரம் வீணாவது தான். அப்படி இப்பொழுது கோட்டையை உறுதியாக்குங்கள். உங்களுக்குள் அன்பான சகயோகி ஆகி நடந்து கொண்டீர்கள் என்றால் அனைவரும், அதைப் பின்பற்றிச் செய்வார்கள். நீங்கள் என்ன செய்வீர்களோ அதை அனைவரும் பின்பற்றிச் செய்வார்கள்.

**2) அனைவரும் அங்கதனுக்கு சமமாக ஆடாமல் அசையாமல் இருப்பவர்கள் தான் இல்லையா?** இராவண இராஜ்யத்தின் எந்தவொரு சூழ்நிலை மற்றும் நபர் கொஞ்சம் கூட எண்ண ரூபத்தில் கூட அசைக்க முடியக்கூடாது. விரலையும் அசைக்க முடியக்கூடாது. எண்ணத்தில் ஆடுவது என்றால் விரலை அசைப்பது, அப்படி எண்ண ரூபத்தில் கூட நபரோ, சூழ்நிலையோ அசைக்கக் கூடாது. சில நேரம் ஏதோ ஒரு உறவினர் அல்லது தெய்வீக பரிவாரத்தில் கூட அந்த மாதிரி ஒருவர் காரணமாகி விடுகிறார், அவர் தடை ரூபம் ஆகி விடுகிறார் ஆனால் அங்கதனுக்குச் சமமாக எப்பொழுதும் ஆடாமல் அசையாமல் இருப்பவர் சுலபமாகவே தடையை மற்றும் சூழ்நிலைகளைக் கடந்து விடுவார். ஏனென்றால் ஞானம் நிறைந்தவராக இருக்கிறார். அவருக்குத் தெரியும் ஏன் இந்த தடை வந்திருக்கிறது என்று. இந்த தடை கீழே தள்ளுவதற்காக வரவில்லை ஆனால் இன்னும் உறுதியாக ஆக்குவதற்காக வந்திருக்கிறது. அவர் குழப்பம் அடைய மாட்டார்.

எப்படி பரீட்சை ஹாலில் கேள்வித் தாள் கிடைக்கிறது என்றால், பலவஹீனமான மாணவன் குழப்பம் அடைந்து விடுகிறார். மேலும் நல்ல மாணவன் பார்த்து குஷி அடைவார். ஏனென்றால், இந்த பரீட்சை எழுதி அடுத்த வகுப்பிற்குச் செல்வேன் என்பது புத்தியில் இருக்கும், அவருக்கு கடினமாக இருக்காது. பலஹீனமானவரோ கேள்விகளையே எண்ணிக் கொண்டே இருப்பார். ஏன் இந்த மாதிரி கேள்வி வந்திருக்கிறது? யார் இந்த மாதிரி கேள்வியை தேர்ந்தெடுத்தார்? ஏன் இந்த மாதிரி கேள்வி கேட்டிருக்கிறார்கள் என்று அந்த மாதிரி குழப்பத்திலேயே இருப்பார். இங்கேயும் யாராவது காரணமாகி சோதனை ரூபம் ஆகி வருகிறார் என்றால் இவர் ஏன் செய்கிறார், அந்த மாதிரி செய்யக்கூடாது என்ற இந்த கேள்வி எழக்கூடாது. என்ன நடந்ததோ நல்லதாக நடந்தது, நல்ல விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எப்படி அன்னப்பறவை முத்துக்களை பொறுக்குகிறது தான் இல்லையா? கூழாங்கற்களை ஒதுக்கி விடும். பால் மற்றும் தண்ணீரைப் பிரித்து விடும். பாலை மட்டும் எடுத்து விட்டு தண்ணீரை விட்டு விடும். அந்த மாதிரி ஏதாவது விஷயம் உங்கள் எதிரில் வருகிறது என்றால் தண்ணீர் என்று புரிந்து கொண்டு விட்டு விடுங்கள். யார் தண்ணீரை கலந்தது? ஏன் கலந்தார்? என்று இந்த மாதிரி கேள்விகள் எழ வேண்டாம். இதில் நேரம் வீணாகி விடுகிறது. ஒருவேளை ஏன், என்ன என்று கேட்டுக் கொண்டே பரீட்சைக்கான முடிவு நேரம் வந்து விட்டது என்றால், தோல்வி அடைந்து விடுவீர்கள். வீணாக்கினீர்கள் என்றால் தோல்வி அடைந்தீர்கள். ஏன், என்ன என்பதிலேயே சுவாசம் பிரிந்து விட்டது (உணர்ச்சி வசப்படுவது) என்றால் தோல்வி அடைந்து விட்டீர்கள். எந்தவொரு விஷயத்தையும் ஃபில் செய்வது என்றால் ஃபெயில் (தோல்வி) ஆவது. மாயா சிங்கத்தின் ரூபத்தில் வந்தால் கூட தன்னுடைய யோக அக்னியை எரிய வையுங்கள். அக்னியின் எதிரில் பயங்கரமான மிருகங்கள் சிங்கம் ஆகியவை கூட முன்னேறி வராது. யோக அக்னி அவ்வாறு எரிந்து கொண்டே இருக்கிறது என்றால், மாயா எந்த ரூபத்திலும் வர முடியாது. அனைத்து தடைகளும் முடிவடைந்து விடும்.

வரதானம்: அனைத்து குணங்கள் நிரம்பியவர் ஆவதின் கூடவே ஏதாவது ஒரு விசேஷத்தில் விசேஷ பிரபாவசாலியாக ஆகுங்கள்!

எப்படி டாக்டர்கள் பொதுவான நோய்களின் அறிவை வைத்தே இருப்பார்கள் ஆனால் கூடவே ஏதாவது விஷயத்தில் விசேஷ அறிவாற்றலில் புகழ் பெற்றவராகி விடுகிறார்கள். அதே போல் குழந்தைகள் நீங்கள் அனைத்து குணங்கள் நிரம்பியவராக ஆகத் தான் வேண்டும். இருந்தும் ஒரு விசேஷத்தை விசேஷ ரூபத்தில் அனுபவத்தில் கொண்டு வந்து சேவையில் ஈடுபடுத்தி முன்னேறிச் செல்லுங்கள். எப்படி சரஸ்வதியை கல்வியின் தேவி, லட்சுமியை செல்வத்தின் தேவி என்று கூறி பூஜை செய்கிறார்கள். அதே போல் தன்னில் அனைத்து குணங்கள், சக்திகள் இருந்த போதிலும் ஏதாவது ஒரு விசேஷத்தில் விசேஷமாக ஆராய்ச்சி செய்து தன்னை பிரபாவசாலி ஆக்குங்கள்.

சுலோகன்: விகாரங்கள் என்ற பாம்புகளை சகயோகத்தின் படுக்கை ஆக்கி விட்டீர்கள் என்றால் எப்பொழுதும் கவலையின்றி இருப்பீர்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 25.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிந்துவின் (ஞானக் கடல் பரமாத்மா) சந்திப்பு பிந்துவுடன் (ஆத்மா)!

இன்று பாப்தாதா சந்திப்பதற்காக வந்திருக்கிறார்கள். முரளியோ அதிகமாகக் கேட்டிருக்கிறீர்கள். அனைத்து முரளிகளின் சாரம் பிந்து (புள்ளி) என்ற ஒரே ஒரு வார்த்தை. அதில் அனைத்து விஸ்தாரமும் நிரம்பியிருக்கிறது. பிந்துவாகவோ ஆகி விட்டீர்கள் தான் இல்லையா? பிந்து ஆக வேண்டும், பிந்துவை நினைவு செய்ய வேண்டும். மேலும் என்னென்ன நடந்து முடிந்ததோ அதற்கு பிந்து (முற்றுப்புள்ளி) இட வேண்டும். இது சுலபமாக அனுடவமாகுகிறது தான் இல்லையா? இது மிகவும் சூட்சுமமான அதாவது கண்ணால் பார்க்க முடியாத மிக சக்திசாலியானது, அதன் மூலம் நீங்கள் அனைவருமே சூட்சும பரிஷ்தா ஆகி மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி தன்னுடைய பங்கைச் செய்கிறீர்கள். சாரம் சுலபமாக இருக்கிறது தானே அல்லது கடினமாக இருக்கிறதா? இரட்டை வெளிநாட்டினர் என்ன நினைக்கிறார்கள்? சலபமாக இருக்கிறதா அல்லது இரட்டை வெளிநாட்டினருக்கு இரட்டை சுலபமாக இருக்கிறதா? இப்பொழுதோ பாப்தாதா சார சொரூபத்தைப் பார்க்க விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையும் அந்த மாதிரி தெய்வீகக் கண்ணாடியாக இருக்க வேண்டும். அந்தக் கண்ணாடி மூலமாக ஒவ்வொரு மனித ஆத்மாவிற்கும் தன்னுடைய மூன்று காலங்களும் தென்பட வேண்டும். அந்த மாதிரி மூன்று காலங்களையும் காண்பிக்கக் கூடிய கண்ணாடியாக இருக்கிறீர்களா? அந்தக் கண்ணாடி மூலம் 'என்னவாக இருந்தேன்' மற்றும் 'இப்பொழுது என்னவாக இருக்கிறேன். மேலும் எதிர்காலத்தில் என்ன கிடைக்கப்போகிறது என்ற இந்த மூன்று காலங்களும் தெளிவாகத் தென்படுவதினால் சுலடமாகவே தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுவதற்காக ஈர்க்கப்பட்டு வருவார்கள். எப்பொழுது காட்சிகளை பார்ப்பார்களோ அதாவது எப்பொழுது தெரிந்து கொள்வார்களோ அப்பொழுது தெளிவாக நேருக்கு நேர் அனுபவம் ஆவது போல் தெரிந்து கொள்வார்கள். அவ்வாறு

எப்பொழுது தெரிந்து கொள்வார்களோ அதாவது அனுபவம் செய்வார்களோ மற்றும் அனேக பிறவிகளின் தாகம் மற்றும் விருப்பமாகிய ஆகிய முக்தி மற்றும் சொர்க்கத்திற்குச் செல்வதற்காக இருந்த ஆசைகள் இப்பொழுது நிறைவேறப் போகின்றன என்று தெரியவருகிறார்கள் என்றால், சுலபமாக ஈர்க்கப்பட்டு வந்து கொண்டே இருப்பார்கள். இரண்டு விதமான ஆத்மாக்கள் இருக்கிறார்கள். பக்த ஆத்மாக்கள் அன்பில் ஐக்கியமாக விரும்புகிறார்கள். மேலும் சில ஆத்மாக்கள் ஜோதியுடன் ஒன்றரக் கலந்து விட விரும்புகிறார்கள். இருவருமே ஐக்கியமாக விரும்புகிறார்கள். அந்த மாதிரியான ஆத்மாக்களுக்கு ஒரு நொடியில் தந்தையின் அறிமுகம், தந்தையின் மகிமை மற்றும் பிராப்தியைக் கூறி, பாபாவின் சம்மந்தத்தின் அன்பில் மூழ்கியிருக்கும் நிலையை அனுபவம் செய்வியுங்கள். அன்பில் ஐக்கியமாகி இருந்தார்கள் என்றால், சுலபமாகவே அன்பில் மூழ்கும் ஆகும் இரகசியத்தைப் புரிந்து கொள்வார்கள். அப்படி தற்சமயம் அன்பில் மூழ்கி இருக்கும் (லவ் லீன்) நிலையை அனுபவம் செய்வியுங்கள். எதிர்காலத்தில் மூழ்கி திளைப்பதற்கான வழியைக் கூறுங்கள். அப்பொழுது சலபமாகவே பிரஜைகளை உருவாக்கும் காரியம் நடந்து விடும். அந்த மாதிரி மூன்று காலங்களையும் தெரிந்தவராக ஆக்கும் தெய்வீகக் கண்ணாடியாக ஆகியிருக்கிறீர்களா? அந்த மாதிரி தெய்வீகக் கண்ணாடியில் தன்னுடைய முயற்சியின் ஒவ்வொரு நேரத்தின் முடிவில் (ரிசல்ட்) படத்தை சக்திசாலியாக இருந்தோமா அல்லது வீணானதில் சென்றோமா? என்று வரையுங்கள். வீணானதின் ரூபம் மற்றும் சக்திசாலியான ரூபம் இரண்டுமே தென்படும். சக்திசாலியான நிலை என்னவாக இருக்கும்? மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் இதயசிம்மானதாரி. வீணான நிலை என்னவாக இருக்கும்? எப்பொழுதுமே யுத்தம் செய்வதின் போராட்ட நிலையே இருக்கும். இதயசிம்மானதாரியாக இல்லை, ஆனால் யுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருக்கிறார், இதயசிம்மானதாரி வெற்றி அடைபவர் மற்றும் யுத்த ஸ்தலத்தில் நின்று கொண்டிருப்பவர் கடினமாக உழைப்பவராக இருப்பார். சின்ன விஷயத்தில் கூட கடினமான உழைத்துக் கொண்டே இருப்பார். அவர் நினைவின் சொரூபமாக இருப்பார், இவர் முறையீடுகளின் (புகார்) சொரூபமாக இருப்பார். அந்த மாதிரி தன்னுடைய சொரூபத்தையும் பார்த்துக் கொண்டே இருப்பார். மேலும் மற்றவர்களின் மூன்று காலங்களின் தரிசனத்தையும்

செய்வித்துக் கொண்டே இருப்பார். அந்த மாதிரி தெய்வீகக் கண்ணாடியாக ஆகுங்கள். புரிந்ததா?

இன்றோ இரட்டை வெளிநாட்டினர் மற்றும் குஜராத்தைச் சேர்ந்தவர்களை சந்திக்க வேண்டும். இருவர்களுக்கும் நடனம் ஆடும் விஷயத்தில் ராசி ஒன்றாகவே இருக்கிறது. அவர்களும் நடனம் ஆடுகிறார்கள் மற்றும் இவர்களும் மிக அதிகமாக நடனம் ஆடுபவர்கள். குஜராத்தைச் சேர்ந்தவர்களும் அன்பு சொரூபமானவர்கள் மற்றும் இரட்டை வெளிநாட்டினரும் அன்பின் அனுபவத்தின் ஆதாரத்தில் ஓடி வருகிறார்கள். ஞானத்தின் கூடவே அன்பும் கிடைத்திருக்கிறது. அந்த ஆன்மீக அன்பு தான் இவர்களை பிரபுவின் குழந்தைகளாக ஆக்கியது. இரட்டை அன்பு கிடைக்கிறது. ஒன்று தந்தையின் அன்பு, மற்றொன்று குடும்பத்தின் அன்பு. அப்படி அன்பின் அனுபவம் இவர்களை விட்டில் பூச்சி ஆக்கியது. வெளிநாட்டினரைப் பொருத்தவரை

அன்பு ஒரு காந்தத்தின் செயலைச் செய்கிறது. பிறகு கேட்பதற்கும் மற்றும் இறப்பதற்குக் கூட தயாராகி விடுகிறார்கள். இந்த மாதிரி இறப்பதில் விருப்பம் தான் இல்லைபா? இந்த இறப்பது என்றால் சொர்க்கத்தில் செல்வது. எனவே தான் இறந்தவர்களை சொர்க்கத்திற்குச் சென்றுவிட்டார் என்று (உலகினர்) கூறுகிறார்கள். அந்த இறந்தவர்கள் செல்வதில்லை, ஆனால் சங்கமயுகத்தில் யார் இறக்கிறாரோ அவர் சொர்க்கத்திற்குச் செல்கிறார். இதை காப்பி செய்து யார் உடலால் இறக்கிறாரோ அவருக்காக இன்னார் சொர்க்கத்தை அடைந்தார் என்று செய்தித் தாள்களிலும் போடுகிறார்கள். ஆக இருந்து கொண்டே இறப்பது விருப்பம் தான் இல்லையா? நீங்கள் விரும்பி இறந்தீர்கள் தான் இல்லையா, கட்டாயப்படுத்தப்பட்டு இறக்கவில்லை தானே? இந்த முழு சபையும் உடலில் இருந்து கொண்டே இறந்து மறுபிறவி எடுத்தவர்களினுடையது. பழைய உலகத்தில் எங்கேயுமே மூச்சு நின்று விடவில்லை தான் இல்லையா! யார் இறந்து விட்டார்களோ அவர்களும் சிரிக்கிறார்கள். இது தான் அதிசயம்! (பாபா கூறும் விஷயங்களை கேட்டு வெளிநாட்டினர் சிரித்துக் கொண்டிருந்தார்கள்). உங்களுடைய கிறிஸ்தவ தத்துவத்திலும் பிணத்தில் வந்து உயிரூட்டுகிறார் என்று இருக்கிறது. முதலில்

பிணமாக ஆனீர்கள், பிறகு உயிர் வந்தது. புது பிறவி ஏற்பட்டது. இந்த இறப்பதில் மகிழ்ச்சி இருக்கிறது, பயம் இல்லை.

தாதிகளுடன்: தற்சமயம் சூட்சும வதனத்தில் மகாவீரர்களின் விசேஷ சபை கூடுகிறது. ஏன் கூடுகிறது என்று தெரிந்திருக்கிறீர்களா? அன்றைய நாட்களில் பாப்தாதா எப்படி ஸ்தாபனை காரியத்தில் பிரம்மாவின் சம்பூர்ண சொரூபம் மூலமாக சாட்சாத்காரம் செய்விக்கும் சேவை செய்தார், அதே போல் இன்றைய நாட்களில் அஷ்ட ரத்தினமாக இருப்பவர்களிலிருந்து இஷ்ட ரத்தினம் ஆகுபவர்களாக இருப்பவர்களை சக்தியின் ரூபத்தில் கூடவே சாட்சாத்காரம் செய்விக்கும் சேவையை செய்விக்கிறார். ஸ்தூல உடல் மூலமாக ஸ்தூல ஈஸ்வரிய சேவையில் பிஸியாக இருக்கிறீர்கள் ஆனால் இன்றைய நாட்களில் நெருக்கமான உயர்ந்த ஆத்மாக்களின் இரட்டை சேவை நடந்து கொண்டிருக்கிறது. எப்படி பிரம்மா மூலமாக ஸ்தாபணையின் வளர்ச்சி ஏற்பட்டது. அதே போல் இப்பொழுது சிவ சக்தியின் இணைந்த சாட்சாத்காரம் மூலமாக சாட்சாத்காரம் மற்றும் செய்தி கிடைப்பதற்கான காரியம் உங்களுடைய சூட்சும உடல்கள் மூலமாகவும் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி பாப்தாதா நெருக்கமான குழந்தைகளை இந்த சேவையில் சகயோகி ஆக்குகிறார். எனவே சூட்சும சேவைக்கான நடைமுறை திட்டமிடும் காரணத்தினால் அங்கே சபை கூடுகிறது. எனவே மகாவீர குழந்தைகள் செயல்களைச் செய்து கொண்டே கர்ம பந்தனத்திலிருந்து விடுபட்டு அவ்வப்போது டபுள் லைட் ரூபத்தில் இருக்க வேண்டும். தந்தை சூட்சும வதனத்தில் வெளிப்படுத்தினார் (எமர்ஜ் செய்தார்) சேவை செய்வித்தார் என்ற அதன் அனுபவத்தை இன்னும் வரும் நாட்களில் அதிகமாகச் செய்வீர்கள், இரட்டை சேவையின் பங்கு நடந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா நெருக்கமான குழந்தைகளின் குழு மூலமாக பக்தர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு, டச்சிங் (உணர்த்துதல்) செய்விப்பதற்கான சேவையை செய்வித்துக் கொண்டிருக்கிறார். அவர்களில் நல்ல பக்தியின் சம்ஸ்காரத்தை நிரப்புகிறோம். அது அரைக் கல்பம் அவர்கள் பக்தி மார்க்கத்தை நடத்திக் கொண்டே இருப்பர். மேலும் விஞ்ஞானிகள் மாற்றம் செய்வது மற்றும் துல்லியமான சாதனங்கள் செய்வதில் மூழ்குவர். எந்த சாதனம் எந்த அளவு நிறைவாக, முழுமை பெறுமோ அதன் சுகத்தை சம்பூர்ண ஆத்மாக்கள் தான் பெறுவார்கள். இந்த

விஞ்ஞானிகளால் பெற முடியாது. அப்படி இரண்டு காரியங்களும் சூட்சும சேவை மூலமாக நடந்து கொண்டிருக்கிறது. புரிந்ததா?

முழு நாளில் சூட்சும வதனவாசியாக எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள்? அல்லது ஸ்தூல சேவை அதிகமாக இருக்கிறதா? நீங்கள் எவ்வளவு தான் பிஸியாக இருந்தாலும் தந்தையோ தன்னுடைய காரியத்தை செய்வித்தே விடுகிறார். தன்னுடைய சம்பூர்ண ஆகார சரீரத்தை (சூட்சும உடலை) அனுபவம் செய்திருக்கிறீர்களா. எப்படி சாகாரம் (ஸ்தூலம்) ஆகாரம் (சூட்சுமம்) ஆகி விட்டது, உங்கள் அனைவருக்கும் சம்பூர்ண ஆகாரி சொரூபம் இருக்கிறது. அதன் மூலம் வரிசைக்கிரமமாக ஒவ்வொருவரும் சாகாரத்தில் இருந்து ஆகாரம் ஆகி விடுவார்கள். ஆகாரம் ஆகி சேவை செய்வது நல்லதா அல்லது சாகார உடலை மாற்றம் செய்து சேவை செய்வது நல்லதா? அட்வான்ஸ் பார்ட்டியோ சாகார சரீரத்தை மாற்றம் செய்து சேவை செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் சிலருடைய பங்கு இறுதி வரையிலும் சாகார மற்றும் ஆகாரம் ரூபம் மூலமாக இருக்கும். உங்களுக்கு என்ன பங்கு இருக்கிறது? சிலருக்கு அட்வான்ஸ் பார்ட்டியில் பங்கு இருக்கிறது மற்றும் சிலருக்கு இறுதி வாகன உடல் (ஃபரிஷ்தா உடல்) மூலமாக சேவை செய்யும் பங்கு ருக்கிறது. இரண்டு பங்கிற்கும் அதன தனுடைய மகத்துவம் இருக்கிறது. முதல் நிலை, இரண்டாம் நிலை என்பதற்கான விஷயம் இல்லை. விதவிதமான பங்கிற்கான மகத்துவம் இருக்கிறது. அட்வான்ஸ் பார்ட்டிகள் செய்யும் காரியம் கூட ஒன்றும் குறைந்தது அல்ல. அவர்கள் மிக வேகமாக தங்களுடைய திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினோம் இல்லையா? அங்கேயும் பெயர் பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

**பார்ட்டிகளுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு: 1) அனைவரும் எப்பொழுதும் மணிக்குச் சமமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறீர்களா?** ஒவ்வொரு மணிக்கும் எவ்வளவு மதிப்பு இருக்கிறது. அது விலை மதிக்க முடியாத ரத்தினம். அதனுடைய விலையை இன்றைய மனிதன் ஒன்றும் நிர்ணயிக்க முடியாது. ஏனென்றால் தந்தையின் குழந்தையாக ஆகி விட்டார் இல்லையா?. யார் தந்தையின் குழந்தையாக ஆகி விட்டாரோ அவர் விலைமதிக்க முடியாத ரத்தினம் ஆகி விட்டார். முழு உலகில் அனைவரையும் விட உயர்ந்த ஆத்மா ஆகி விட்டார். அந்த

அளவு குஷி இருக்கிறதா? எப்படி உடல் சம்பந்த பதவி எப்பொழுதும் நினைவு இருக்கிறதோ. அதே போல் ஆத்மாவின் பதவியைக் கூட ஒருபொழுதும் மறக்கக்கூடாது. சங்கமயுகத்தின் உயர்ந்த பாக்கியமே தந்தையின் விலைமதிக்க முடியாத ரத்தினம் ஆகும். இந்த பாக்கியத்தை எப்படி மறக்க முடியும்? அனைவரும் சேவையில் சகயோகம் கொடுக்கிறீர்களா? ஆல்ரவுண்ட் சேலாதாரியா? சேலைக்கான வாய்ப்பு கிடைப்பது என்பது கூட டிராமாவில் ஒரு லி∴ப்ட் ஆகும். எந்த அளவு யக்ஞ சேவை செய்கிறார்களோ அந்த அளவு பிராப்திகளின் பிரசாதம் இயல்பாகவே கிடைத்து விடும். தடையற்று இருப்பார்கள். ஒரு தடவை சேவை செய்தார் மற்றும் நூறு தடவை சேவைக்கான பலன் பிராப்தி ஆகி விட்டது. எப்பொழுதுமே ஸ்தூலம் மற்றும் சூட்சும நங்கூரம் பாய்ச்சிய படியே இருக்க வேண்டும். யாரையாவது திருப்தி செய்வது என்பது அனைத்தையும் விட பெரிய சேவை ஆகும். விருந்தினராக இருந்து வாழ்வது என்ற இதுவோ மிகப் பெரிய பாக்கியமாகும். பாக்கியசாலியின் வீட்டில் தான் விருந்தினர்கள் வருவார்கள் என்று இதையும் கூறுகிறார்கள்.

**2) அனைவரும் மாயாவைத் தெரிந்து கொண்டு மாயாவிடமிருந்து ஒன்றும் தெரியாதவராக இருக்கிறீர்களா?** எப்படி தேவதைகள் மாயாவின் தாக்குதல் என்னவென்று தெரியாமல் இருப்பார்கள். மாயாவை பெயர் அடையாளமே இல்லாத அளவிற்கு அழித்து விடுங்கள். மாயா எப்பொழுதாவது விருந்தினராகவோ வருவதில்லை தான் இல்லையா? கதவு மூடப்பட்டிருக்கிறதா? ஒருவேளை கோட்டை உறுதியாக இருக்கிறது என்றால் எதிரிகள் வருவதில்லை. உயர்ந்த நிலையில் இருப்பது என்றால் உயர்ந்த மதில் சுவர் ஆகும். ஒருபொழுதும் கீழான நிலையில் வராதீர்கள். எப்பொழுது தந்தையின் குழந்தையாக ஆகி விட்டீர்கள் என்றால், தந்தையின் குழந்தை ஆவது என்றால் என்னுடையது என்பது முடிவடைவது. பற்றுதல் உருவாவதற்கான ஆதாரம் என்னுடையது என்பதாகும். என்னுடையது என்பது இல்லவே இல்லை என்றால் பற்றுதல் எங்கிருந்து வர முடியும்? உங்களை நீங்கள் எல்லைக்குட்பட்ட படைப்பவர் என்று நினைப்பதால் தான் விகாரங்கள் உருவாகிறது. எப்பொழுதும் சகோதரன் சகோதரன் என்னும் நினைவில் இருந்தீர்கள் என்றால், எந்தவொரு விகாரமும் உற்பத்தி ஆக முடியாது.

**3) எப்பொழுதும் தன்னை வெளியில் தெரியாத ஆனால் மிக நன்றாக அறியப்படும் போர் வீரன் என்று புரிந்து கொண்டு யுத்த மைதானத்தில் மாயாவை வென்றவராகி இருக்கிறீர்களா?** சாதாரண முறையில் அமருகிறீர்கள், நடந்து கொள்கிறீர்கள், சாப்பிடுகிறீர்கள், ஆனால் போகும் பொழுதும் வரும் பொழுதும் மாயாவிடம் யுத்தம் செய்து வெற்றி அடைபவர் ஆகிக் கொண்டே இருக்கிறீர்கள். வெளிப்படையாக என்ன செய்து கொண்டிருந்தாலும், உள்ளே மனதில் மாயாவின் மீது வெற்றி அடைந்து உலகத்தின் இராஜ்யத்தை அடைந்து கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் வெளியில் தெரியாதவர்களாக ஆகிறீர்கள் இல்லையா? எப்பொழுது பிரத்யக்ஷம் (வெளிப்பாடு) ஏற்படுமோ அப்பொழுது அனைவரும் இவர்கள் யார், மேலும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அனுபவம் செய்வார்கள். யாருடன் சர்வ சக்திவான் தந்தை இருக்கிறாரோ அவருடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டது. பாண்டவர்களின் பதி சர்வ சக்திலான் ஆவார். எனவே எப்பொழுதும் பாண்டவர்கள் வெற்றி அடைந்தவர்களாக இருந்தார்கள். துணையை ஒருபொழுதும் விடாதீர்கள். தனியாக ஆகி விட்டீர்கள் என்றால் மாயா தாக்குதல் செய்யும். தந்தையுடன் இருந்தீர்கள் என்றால் மாயா பலியாகி விடும். மாயாவை வென்றவரின் எதிரில் மாயா தாசியாகி நமஸ்காரம் செய்யும். மாயாவின் சந்திப்பில் தந்தையின் துணையை விட்டு விடாதீர்கள். ஒருவேளை துணைவனை விட்டீர்கள் என்றால் பாதை மறந்து விடும். பின்பு கதற வேண்டியதாக இருக்கும். எப்பொழுதும் மாயாவை நமஸ்காரம் செய்வியுங்கள், தாக்குதலுக்குள் வந்து விடாதீர்கள்.

வரதானம்: ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் ஈடுபடுத்தி வளர்ச்சி அடையக்கூடிய உயர்ந்த செல்வந்தன் மற்றும் புத்திசாலியாக ஆகுக!

புத்திசாலிக் குழந்தைகள் ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கான விதியைத் தெரிந்திருக்கிறார்கள். யார் எந்த அளவு சக்திகளை காரியத்தில் ஈடுபடுத்துகிறார்களோ அந்த அளவே அவர்களுடைய அந்த சக்திகளும் வளர்ச்சியை அடையும். எனவே அந்த மாதிரி ஈஸ்வரிய பட்ஜெட்டைத் தயாரியுங்கள் அதன் மூலம் உலகின் ஒவ்வொரு ஆத்மாவும் உங்கள் மூலமாக ஏதாவது பிராப்தி செய்து

உங்களை மகிமை பாடட்டும். அனைவருக்கும் ஏதாவது கொடுக்கத் தான் வேண்டும். முக்தி கொடுத்தாலும் சரி அல்லது ஜீவன்முக்தி கொடுத்தாலும் சரி. ஈஸ்ரிய பட்ஜெட்டைத் தயாரித்து அனைத்து சக்திகளையும் மிச்சப்படுத்தி சேமிப்பு செய்யுங்கள். மேலும் சேமிப்பக்கப்பட்ட சக்தி மூலமாக அனைவரையும் யாசிக்கும் நிலையிலிருந்து, துக்கம் அசாந்தியிலிருந்து விடுவியுங்கள்.

சுலோகன்: தூய்மையான எண்ணங்களை தன்னுடைய வாழ்க்கையின் விலைமதிக்க முடியாத பொக்கிஷமாக்கி விட்டீர்கள் என்றால், அனைத்து செல்வங்களும் நிறைந்தவராகி விடுவீர்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 28.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சம்பூர்ண பிரம்மாவிற்கும் மற்றும் பிராமணர்களின் சம்பூர்ண சொரூபத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்திற்கான காரணம் மற்றும் நிவாரணம்!

இன்று ஒவ்வொரு குழந்தையின் இரட்டை சொரூபத்தை பார்த்துக் கொண்டிருந்தோம். எந்த இரட்டை ரூபம்? ஒன்று தற்சமயத்தின் முயற்சி செய்பவரின் சொரூபம், இரண்டாவது தற்போதைய பிறவியின் இறுதிநிலையான சம்பூர்ண ஃபரிஷ்தா சொரூபம். இந்த நேரம் நான் தான் அது, அது தான் நான்' என்ற மந்திரத்தில் முதலில் நான் தான் அந்த ஃபரிஷ்தா சொரூபம் பிறகு எதிர்காலத்தில் நான் தான் அந்த தேவதா ரூபம் ஆவேன். இன்று சூட்சும வதனத்தில் அனைத்து குழந்தைகளின் வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் எந்த இறுதி ஃபரிஷ்தா சொரூபம் ஆக வேண்டுமோ அந்த ரூபத்தை எமர்ஜ் செய்தோம் (வெளிப் படுத்தினோம்). எப்படி சாகார பிரம்மா மற்றும் சம்பூர்ண பிரம்மா, இரண்டின் வேற்றுமையைப் பார்த்ததோடு முயற்சி செய்பவர் மற்றும் சம்பூர்ண நிலையில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை அனுபவம் செய்தாரோ. அந்த மாதிரி இன்று குழந்தைகளின் வித்தியாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அந்தக் காட்சி மிகவும் நன்றாக இருந்தது. கீழே தபஸ்வி அதாவது முயற்சி செய்பவரின் ரூபம், மேலே நின்று கொண்டிருக்கும் ஃபரிஷ்தா ரூபம். இவ்வாறு நீங்கள் தன்னுடைய ரூபத்தை எமர்ஜ் செய்ய முடியுமா? தன்னுடைய சம்பூர்ண ரூபம் தென்படுகிறதா? சம்பூர்ண பிரம்மா மற்றும் சம்பூர்ண பிராமணன். பிரம்மா மற்றும் தன்னுடைய சம்பூர்ண ரூபத்திற்கிடையே எவ்வளவு வித்தியாசம் இருக்கும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்கிறார்கள். வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் தான் இல்லையா? அங்கே என்ன

நடந்தது? வரிசைக்கிரமமான ஃபரிஷ்தா சொரூபத்தில் மிகப் பெரிய வட்டத்தில் இராஜ தர்பாரின் ரூபத்தில் வெளிப்பட்டிருந்தார்கள். ஒளியின் நிறத்தில் வேற்றுமை இருந்தது. சிலருடையது விசேஷமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ரூபம் இருந்தது. சிலருடையது மத்தியமாக பிரகாசிக்கும் ரூபம் இருந்தது ஆனால் முக்கியமான வேற்றுமையாக நெற்றியின் நடுவே பிரகாசித்துக் கொண்டிருக்கும் மணியின் ரூபத்தில் இருக்கும் ஆத்மாவினுடையதாக இருந்தது. சிலருடைய பிரகாசம் மற்றும் ஒளியின் பரவல் அதாவது ஒளி அதிகமாக பரவி இருந்தது. சிலருடையது பிரகாசிக்கும் ஒளியாக இருந்தது ஆனால் அதிகமாகப் பரவியிருக்கவில்லை. சிலருடைய ஒளியே குறைவாக இருந்தது. பாப்தாதா அனைத்து குழந்தைகளின் வித்தியாசத்தை சோதனை செய்தார். இயந்திரத்தின் வேகம் அதிகமாக இருப்பதாகப் பார்த்தார். முயற்சி செய்பவர் மற்றும் சம்பூர்ண நிலை இரண்டிற்குமான சமநிலையில் வித்தியாசமும் அதிகமாகத் தென்பட்டது. எப்படி அறிவியலின் இயந்திரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது, அதே போல் சமநிலைக்கான முயற்சி செய்வதின் வேகம் அதை விட குறைவாக இருந்தது.

இவ்வளவு வித்தியாசம் ஏன் இருக்கிறது என்று ரிசல்ட்டைப் பற்றி பாப்தாதாவிடையே ஆன்மீக உரையாடல் நடந்தது. பிரம்மாபாபா கூறினார் -எனது அனைத்து குழந்தைகளும் ஞானம் நிறைந்தவர்கள். சிவபாபா கூறினார் -ஞானம் நிறைந்தவர்களின் கூடவே மூன்று காலங்களையும் தெரிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். புரிந்து கொள்வதில் மற்றும் புரிய வைப்பதில் மிகவும் திறமை நிறைந்தவர்கள். தந்தையைப் பின்பற்றி நடப்பதிலும் திறமைசாலிகளாக இருக்கிறார்கள். கண்டுபிடிப்பவர்களாகவும் ஆகி விட்டர்கள். படைப்பவர்களாகவும் ஆகி விட்டார்கள். வேறு என்ன இன்னும் இருக்கிறது அதன் காரணமாக இந்த வித்தியாசம் பெரியதாக ஆகி விட்டது. இதற்கான காரணம் என்ன? காரணமோ மிகச் சிறியது தான். பிரம்மாபாபா கூறினார் -குழந்தைகளின் கிரகிக்கும் சக்தி மிகவும் அதிகமாக இருக்கிறது. எனவே ஞானம், குணம் மற்றும் சக்திகளைக் கிரகிப்பதில் கூடவே மற்றவர்களின் பலஹீனங்களையும் கிரகிக்கும் சக்தி அதிகமாக இருக்கிறது. கிரகிக்கும் சக்தியின் எதிரில் குணத்தை கிரகிக்கப்பவர் என்ற வார்த்தையை மறந்து விடுகிறார்கள். எனவே நல்லதின் கூடவே பலவனங்களையும் கிரகித்து

விடுகிறார்கள். பிறகு என்ன செய்கிறார்கள் -அங்கு ஒரு விளையாட்டு வெளிப்பட்டது. இங்கே உங்களுடைய படவிளக்கத்தில் ஒரு படமும் இருக்கிறது. உங்களுடைய படம் வேறு லட்சியத்தோடு உருவாக்கப்பட்டது ஆனால் ரூபம், வடிவம் அதுவே தான். அந்த படமாவது அமைதியின் வள்ளல் யார்? அந்த ரூபம் வடிவத்தோடு சில குழந்தைகள் வெளிப்பட்டார்கள். பிறகு என்ன ஆனது? ஏதோ ஒரு பலஹீனத்தின் விஷயம் முதல் எண்ணில் நின்று கொண்டிருக்கும் குழந்தைகளிடம் இந்த விஷயம் தீவிரமாக முயற்சி செய்பவர் என்ற கணக்குப்படி சரியில்லை என்று கூறப்பட்டது. பிறகு என்ன ஆனது? அவர் இன்னொரு பக்கம் இது என்னுடைய விஷயம் அல்ல; ஆனால் இவருடையது என்று சைகை காண்பித்தார். இரண்டாமவர் மூன்றாமவரும் அப்படியே செய்தனர், அதனால் நானும் செய்தேன் என்று கூறினார். நான்காமவர், இதை மகாரதிகளும் தான் செய்கிறார்கள் என்று கூறினார். ஐந்தாமவர் அந்த மாதிரி சம்பூர்ணமாக யார் ஆகியிருக்கிறார் என்று கூறினார், ஆறாமவர், இதுவோ நடக்கத்தான் செய்கிறது என்று கூறினார். ஏழாமவர் பிறகோ சம்பூரணம் ஆகி, சூட்சும வதனம் சென்று விடுவோமே என்று கூறினார். எட்டாமவர் பாப்தாதாவோ சமிக்ஞை கொடுத்துக் கொண்டிருக்கிறார். செய்யத்தான் வேண்டும் ஆனால் கூட்டாக இருக்கிறோம். விரும்பாவிட்டாலும் ஏதாவது சிலவற்றை செய்து விடுகிறோம் -அந்த மாதிரி முயற்சி செய்வதின் விஷயம் ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, அவர் காரணமாக விஷயமே மாறி விட்டது. அந்த மாதிரி இன்றைய நாட்களின் நடைமுறை விளையாட்டு அதிகமாக நடக்கிறது. மேலும் இதே விளையாட்டில் லட்சியம் மற்றும் லட்சணத்தில் மிகப் பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது. அப்படியானால் காரணம் என்ன? எந்த சம்ஸ்காரத்தின் காரணமாக சம்பூர்ண சம்ஸ்காரம் இது வரை வெளிப்பட முடியவில்லை. எனவே பாப்தாதா கூறினார் இந்த விளையாட்டின் காரணமாக முயற்சி செய்பவர் மற்றும் சம்பூர்ண நிலை சரியாக இணைய முடியாது. முக்கிய காரணம் கிரகிக்கும் சக்தி, ஆனால் குணத்தை கிரகிப்பவர் ஆவதற்கான சக்தி குறைவாக இருக்கிறது. இன்னொரு விஷயம் இந்த விளையாட்டு மூலமும் தன்னுடைய தவறை மற்றவர்கள் மேல் போடத் தெரிகிறது ஆனால் தன்னுடைய தவறை உணர்ந்து தன் மேல் அந்தக் குற்றத்தைப் போடத் தெரிவதில்லை என்று புரிய வந்து விட்டது. எனவே ஞானம்

நிறைந்தவர்களாக இருக்கிறார்கள், விடுவித்துக் கொள்வதில் திறமை நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் ஆனால் தன்னை மாற்றுவதில் குறை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று பாப்தாதா கூறினார். இன்னொரு காரணமும் வெளிவந்தது. அது என்னவாக இருக்கும்? அந்தக் காரணத்தினால் பிரத்யக்ஷம் ஏற்படுவதில் இன்னும் கொஞ்சம் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது.

அந்தக் காரணம் சுய சிந்தனை. சுயத்திற்காக சுய சிந்தனையாளர் மற்றும் மற்றவர்களுக்காக நற்சிந்தனையாளர். சுய சிந்தனை என்றால் சிந்தனை சக்தி மேலும் நற்சிந்தனையாளர் என்றால் சேவையில் சக்தி. வாய்மொழி சேவைக்கு முன்பு நற்சிந்தனை உடையவரின் பாவனையோடு எதுவரை நிலத்தை தயார் செய்யவில்லையோ அதுவரை வாய்மொழி சேவையின் பலனும் (பழமும்) உருவாகாது. எனவே முதலில் சேவைக்கான ஆதாரம் நற்சிந்தனையாளராக இருப்பது. இந்த பாவனை ஆத்மாக்களின் கிரகிக்கும் சக்தியை அதிகரிக்கிறது. தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரிக்கிறது. இந்தக் காரணத்தினால் வாய்மொழியின் சேவை சுலபமாகவும் ஆகி விடுகிறது மற்றும் வெற்றியும் அடைந்து விடுகிறீர்கள். அப்படி தனக்காக சுய சிந்தனை செய்பவர் எப்பொழுதும் மாயாவால் தாக்க முடியாத மற்றும் யாருடைய பலஹீனத்தையும் கிரகிக்க முடியாதவராக ஆகி விடுகிறார். நபர் மற்றும் சாதனங்களின் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு விடுகிறார். எனவே இரண்டாவது காரணத்தின் நிவாரண ரூபத்தில் நற்சிந்தனையாளர் மற்றும் சுயசிந்தனையாளர் ஆகுங்கள் என்று கூறினோம். மற்றவர்களைப் பார்க்காதீர்கள், தன்னைப் பாருங்கள். முயற்சி செய்பவர்கள் உங்கள் அனைவரின் சுலோகன் "என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள்" என்பது. மற்றவர்களைப் பார்த்து நான் செய்வேன் என்ற இது இல்லை. அப்படி என்ன ஆன்மீக உரையாடல் நடந்தது என்பதைக் கேட்டீர்களா?

இன்றைய நாட்களில் பாப்தாதா எந்தக் காரியம் செய்து கொண்டிருக்கிறார்? இறுதி மாலையை உருவாக்குவதற்கு முன்பு மணிகளை தேர்ந்தெடுப்பதின் பிரிவை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது தான் விரைவிலேயே மாலையில் உருளுவீர்கள் இல்லையா? அப்படி ஒவ்வொருவரும் நான் எந்த பிரிவில் இருக்கிறேன்

என்று தன்னைத் தானே பார்க்க வேண்டும். நம்பர் ஒன் 8-ரத்தினம், இரண்டாவது 100, மூன்றாவது 16,000, நம்பர்-1'ன் அடையாளம் என்ன? நம்பர்-1'ல் வருவதற்கான சுலபமான வழி நம்பர்-1 ஆக இருக்கும் பிரம்மாபாபாவை மட்டும் பாருங்கள். பார்ப்பதிலோ திறமைசாலிகள் தான் இல்லையா? அனேகர்களைப் பார்ப்பதற்குப் பதிலாக ஒருவரை மட்டுமே பாருங்கள். அப்படியானால் சுலபமானதாக ல்லது கடினமானதா? சுலபம் தான் இல்லையா? அப்படியானால் 8-ரத்தினங்களில் வந்து விடுவீர்கள். இரண்டாவது மற்றும் மூன்றாவதையோ தெரிந்தே இருக்கிறீர்கள்.

எப்படி பாக்கியத்தில் தன்னை முன்னுக்கு வைக்கிறீர்கள், அதே போல் தியாகத்திலும் 'முதலில் நான்'. எப்பொழுது தியாகம் செய்வதில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் 'முதலில் நான்' என்று கூறுகிறார் என்றால் பாக்கியத்தின் மாவை அனைவரின் கழுத்தில் விழுந்து விடும். உங்களுடைய சம்பூர்ண சொரூபம் வெற்றியின் மாலையை எடுத்துக் கொண்டு முயற்சி செய்பவர்களாகிய உங்களின் கழுத்தில் போடுவதற்காக அருகில் வந்து கொண்டிருக்கிறது. இடைவெளியை அகற்றி விடுங்கள். நான் தான் ஃபரிஷ்தாவாக இருந்தேன் என்ற மந்திரத்தை உறுதி செய்தீர்கள் என்றால் அறிவியலின் இயந்திரங்கள் தன்னுடைய காரியங்களைத் தொடங்கட்டும் மேலும் நான் தான் ஃபரிஷ்தா ஆகி பிறகு தேவதை ஆகி புது உலகில் அவதரிப்பேன். அந்த மாதிரி சாகார பாபாவைப் பின்பற்றி நடங்கள், சாகார பாபாவை பின்பற்றுவதோ சுலபம் தான் இல்லையா? அப்படி சம்பூர்ண ஃபரிஷ்தா என்றால் சாகார பாபாவைப் பின்பற்ற வேண்டும்.

இன்று கர்நாடகா மண்டலத்தைச் சேர்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். கர்நாடகத்திற்கு மிக நல்ல விசேஷம் இருக்கிறது. கர்நாடகத்தைச் சேர்ந்த விட்டில் பூச்சிகள் விளக்கொளியில் விழுந்து எரிவதில் திறமைசாலிகள். அங்கு விட்டில்பூச்சிகள் அதிகமாக இருக்கிறார்கள், எரிவதில் நம்பர் ஒன் ஆக இருக்கிறார்கள். எரிந்த பிறகு நடந்து கொள்வது இருக்கிறது. அப்படி நீங்கள் எரிவதில் மிகவும் திறமைசாலிகள் செல்வதில் கொஞ்சம், என்ன செய்கிறீர்கள். செல்வதில் சென்று கொண்டே பக்கத்து காட்சிகள் அதிகமாக காண்பிக்கிறார்கள். பாவனை நிறைந்தவர்களில் நம்பர் ஒன்.

அன்பானவர்களாகவும் சகயோகிகளாகவும் இருக்கிறார்கள். கர்நாடகத்தில் இருப்பவர்களின் விசேஷத்தில் படைப்பவர் ஆவதிலும் திறமை நிறைந்தவர்கள். விஷ்ணு ஆவது குறைவாக தெரிந்திருக்கிறார்கள், பிரம்மா ஆவது நன்றாகத் தெரியும். சங்கர் மற்றும் விஷ்ணு ஆவதை குறைவாகத் தெரியும். பிரம்மா ஆவது மிக நன்றாகத் தெரியும், சங்கர் ரூபம் என்றால் தடைகளை அழிப்பவர். அதற்கும் இப்பொழுது முயற்சி இன்னும் அதிகமாக வேண்டியதாக இருக்கிறது. இருந்தும் பாப்தாதா கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாழ்த்துகிறார். ஏன் வாழ்த்துக்கள் கொடுக்கிறார், ஏனென்றால் அன்பு சொரூபத்தில் மிக ஆர்வத்தோடு மூழ்கி இருப்பதில் நல்ல முயற்சி செய்பவர்களாக இருக்கிறீர்கள். இன்னும் வரும் நாட்களில் கர்நாடகா இதுவரை செய்யாததை என்ன செய்ய வேண்டும். கர்நாடகத்தின் பூமியும் மிகவும் விளைச்சல் கொடுக்கக்கூடியது. வி.ஐ.பி என்ற பழம் கொடுப்பதற்கும் தகுதியானது. மேலும் இன்னும் சுலபமாகவே சம்மந்தத்தில் வரக்கூடியவர்கள். வெள்ளி விழாவில் பிரத்யக்ஷ பலனைக் கொடுக்கவில்லை. வி.ஐ.பி குரூப்பை எங்கே அழைத்து வந்தீர்கள்? எப்படி சுலபமான பூமியாக இருக்கிறது அதே போல் பாரதத்தில் சப்தத்தை (செய்தி) பரப்புவதற்கு பொறுப்பாளர் ஆகும் ஆத்மாக்கள் அங்கிருந்து உருவாக முடியும். பாரதத்தின் சரித்திரத்தில் பெயர் பெற்ற ஆத்மாக்கள் கர்நாடகத்தில் அதிகமாக இருக்கிறார்கள். அந்த ஒருவர் மூலமாக அனேகர்களுக்கு சுலபமாக நன்மை ஏற்பட முடியும். வெள்ளி விழாவின் பரிசாக என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்? கர்நாடகா இப்பொழுது அதிசயம் காண்பிக்க வேண்டும்.

அந்த மாதிரி எப்பொழுதும் சுயசிந்தனையாளர் மற்றும் நற்சிந்தனையாளர். எப்பொழுதும் தந்தையைப் பின்பற்றுபவர், சுயமாற்றம் மூலம் உலக மாற்றம் செய்யக்கூடிய, அந்த மாதிரி உலக நன்மை செய்பவர், அனைத்து ஆத்மாக்கள் மூலமாக மரியாதை பெறுபவர், தியாகம் செய்வதில் எப்பொழுதும் முதலில் நான் என்று சொல்பவர், அந்த மாதிரி உயர்ந்த பாக்கியசாலி, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

# 1980 அவ்யக்த முரளி

**சேவைக்கான பாப்தாதாவின் விசேஷ பிரேரணைகள்:** இப்பொழுது சேவைக்கான நல்ல வாய்ப்பு வந்து கொண்டிருக்கிறது. சாகார (பாபா) மற்றும் நிராகார (பாபா) இருவர்களையும் பிரத்யக்ஷம் செய்வதற்கான நேரம் அருகில் வந்து கொண்டிருக்கிறது. இதில் என்ன புதுமை செய்வீர்கள்? ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஏதாவது புதுமையை செய்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி இந்த சிவராத்திரியில் என்ன விசேஷம் செய்வீர்கள்?

(1) எப்படி சென்ற தடவை ஒளி மற்றும் ஒலியின் (லைட் மற்றும் சவுண்ட்) நிகழ்ச்சியின் எண்ணம் வைத்து ஒவ்வொருவரும் அவரவர்களின் ஸ்தானத்தில் சக்திக்கு ஏற்றபடி செய்தீர்கள். சிவராத்திரி அன்று எப்படி கீதை சொன்ன பகவானை நிரூபிக்க வேண்டும் என்ற லட்சியம் வைக்கிறீர்கள் இல்லையா? ஆனால் (சிவபகவானை) இகழ்ச்சி செய்கிறீர்கள் என்றால், மக்களுக்குப் புரிவதில்லை. இதற்காக இந்த தடவை சிவராத்திரி அன்று இரண்டு படங்களை விசேஷமாக அலங்கரியுங்கள். ஒன்று நிராகார சிவனுடையது, இன்னொன்று ஸ்ரீகிருஷ்ணருடையது. விசேஷமாக இந்த இரண்டு படங்களையும் எப்படி கிரணங்களின் படத்தை உருவாக்குகிறீர்கள். அதே போல் அலங்கரித்து வையுங்கள். சிவனுடைய கிரணங்கள் அடங்கிய படமும் அலங்கரிக்கப்பட்டதாக இருக்கட்டும். மேலும் ஸ்ரீகிருஷ்ணருடையதும் கிரணங்களுடைய படமும் அலங்கரிக்கப்பட்டதாக இருக்கட்டும். விசேஷமாக இரண்டு படங்களின் கவர்ச்சி இருக்கட்டும். கிருஷ்ணருடைய படத்தின் மகிமை வேறு, சிவனின் மகிமை வேறு. இகழ்ச்சி செய்யாதீர்கள் ஆனால் இருவருக்கும் உள்ள வேற்றுமையை நிரூபணம் செய்யுங்கள். மேடையின் விசேஷ அலங்காரமாக இந்த இரண்டு படங்களும் இருக்கட்டும். எப்படி ஏதாவது மகாநாடு நடத்துகிறீர்கள் என்றால் மகாநாட்டிற்கான சிம்பள் (லோகோ) அலங்கரித்து வைக்கிறீர்கள். பிறகு அதற்கு திறப்பு விழா செய்கிறீர்கள். அதே போல் சிவராத்திரி அன்று ஏதாவது ஒரு வி.ஐ.பி மூலமாக இந்த இரண்டு படங்களின் திறப்பு விழா செய்யுங்கள். மேலும் முதலில் சுருக்கமாக இருவரின் வித்தியாசத்தைத் தெளிவு படுத்தி சொல்லுங்கள். மேலும் சபையிலும் இதே தலைப்பின் மேல் எந்த நேரம் சிவனின் மகிமை செய்கிறீர்களோ அந்த நேரம் சொற்பொழிவின் கூடவே இந்தப் படத்தையும் வையுங்கள். சொற்பொழிவு நிகழ்த்துபவர் கூடவே இந்தப்

படத்தில் இது இதுவாகும். இது இதுவாகும் என்று காண்பித்துக் கொண்டே செல்லட்டும். அப்பொழுது அனைவரின் கவனமும் செல்லும். முதலில் வேற்றுமையைக் கூறி பின்பு நீங்களே படைப்பவர் யார் மற்றும் படைப்பு யார் என்று தீர்மானியுங்கள் என்று அவர்களுக்குக் கூறுங்கள். அப்படியானால் கீதையின் ஞானத்தைப் படைப்பவர் கூறினாரா அல்லது படைப்பு கூறியதா? அப்படி இந்த சிவராத்திரி அன்று இந்த இரண்டு முக்கியமான படங்களுக்கும் மகத்துவம் தாருங்கள்.

2) எப்படி சென்ற தடவை லைட் மற்றும் சவுண்டின் டேப்பில் வர்ணனை (கமன்ட்ரி) நிரப்பப்பட்டிருந்தது, அந்த மாதிரி வேண்டாம் ஆனால் நிகழ்ச்சியின் இடையே சிவபாபாவின் அலங்கரிக்கப்பட்ட லைட்டின் படத்தை எதிரில் கொண்டு வாருங்கள். மேலும் எதிரில் வைத்துக் கொண்டே மற்ற அனைத்து விளக்குகளை அணைத்து விடுங்கள். அந்தப் படத்தின் லைட் மட்டும் இருக்கட்டும்; பிறகு மெது மெதுவாக நேரடியாக அந்த நேரம் தந்தையின் மகிமை செய்து கொண்டே செல்லுங்கள். மகிமை செய்து கொண்டே அவர்களையும் கூடவே (மானசீகமாய்) அழைத்துச் செல்லுங்கள். மகிமையைக் கூறிக் கொண்டே அனுபவம் செய்வியுங்கள். அமைதியின் கடல் என்று கூறினீர்கள் என்றால் அமைதியின் அலை பரவி விடட்டும். எந்த குணத்தை வர்ணனை செய்கிறீர்களோ அதன் அலை பரவி விடட்டும். அந்த நேரம் அனைத்து விளக்குகளும் அணைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த ஒரு படத்தின் பக்கம் மட்டும் அனைவரின் கவனம் இருக்கட்டும். மெது மெதுவாக அந்த மாதிரி அனுபவம் நிறைந்தவராகி மகிமை செய்யுங்கள். உடன் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறோம் என்று அப்படி இருக்க வேண்டும். அமைதியின் கடல் என்று கூறினீர்கள் என்றால் எப்படி அந்த கடலில் அனைவரும் குளித்துக் கொண்டிருப்பது போன்று, அந்த மாதிரி அனுபவம் செய்வியுங்கள். எப்படி யோகாவின் வர்ணனை மெது மெதுவாக செய்கிறீர்கள், அதே போல் அவர்களுக்கு லட்சியம் கொடுத்து அந்த முறையோடு அமர வைத்தீர்கள் என்றால் ஒன்று கவனம் செல்லும். மேலும் இன்னொன்று வேற்றுமை தெரிய வந்து விடும். அவர்களுடைய கருத்துக்களைத் துண்டிப்பதற்கான அவசியம் இருக்காது. இயல்பாகவே நிரூபணம் ஆகி விடும்.

ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் யோகப் பயிற்சி முகாமைப் பற்றி அவசியம் அறிவிப்பு செய்யுங்கள். ஒரு நாளுக்கான நிகழ்ச்சி செய்தாலும் கூட யோகா பயிற்சி முகாமிற்கான படிவத்தை நிரப்பி வாங்குங்கள். யோக பயிற்சி முகாமிற்காக தனிப்பட்ட மேஜை இருக்கட்டும். அதில் அருகாமையில் இருக்கும் இடங்களுக்காக படிவத்தை நிரப்பி வாங்குங்கள். அப்படி யார் பிறகு யோக பயிற்சி செய்ய வருவார்களோ அவர்கள் தொடர்பில் வந்து விடுவார்கள், யோகப் பயிற்சிக்கான படிவத்தை நிரப்பி அதற்கு பிறகும் அவருடைய தொடர்பை வைத்துக் கொண்டே இருங்கள். எந்த நிகழ்ச்சியை செய்தாலும் அதில் யோகப் பயிற்சி முகாமிற்காக விரேஷ மகத்துவம் தாருங்கள்.

4) எந்த வாய்ப்பு கிடைத்தாலும் மேலும் யாரெல்லாம் தொடர்பில் வந்திருக்கிறார்களோ, அல்லது ஏதாவது தடையின் காரணமாக கைவிட்டுச் சென்று விட்டார்களோ, அவர்களுக்கு அந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் விசேஷ அழைப்பிதழ் கொடுங்கள். யார் தன்னுடைய பலஹீனத்தின் காரணமாக பின் தங்கி விட்டார்களோ அவர்களை அன்போடு முன்னேறச் செய்ய வேண்டும். இந்த மாதிரி நிகழ்ச்சி மூலம் அவர்களிடமும் விழிப்புணர்வு ஏற்படும். அவர்களும் ஊக்கத்தில் வந்து விடுவார்கள்.

**வரதானம்: உறுதியாக நடக்கும் என்பதைத் தெரிந்து கொண்டு உயர்ந்த காரியத்திற்கு பிரத்யக்ஷ ரூபம் கொடுக்கக்கூடிய எப்பொழுதும் சக்திசாலியானவர் ஆகுக!**

புதிய உயர்ந்த உலகத்தை உருவாக்கும் விஷயம் தடுக்க முடியாததாக இருந்த போதிலும் சக்திசாலி ஆகுக என்ற வரம் பெற்ற குழந்தைகள் செய்யும் காரியம் மற்றும் பலனில். முயற்சி மற்றும் பிராப்தியில், கருவி மற்றும் படைப்பின் காரியத்தின் தத்துவத்தின் அனுசாரம் பொறுப்பாளராகி காரியம் செய்வார்கள். உலகத்தினருக்கு நம்பிக்கை தென்படுவதில்லை. மேலும் நீங்கள் இந்தக் காரியம் அனேக தடவை நடந்திருக்கிறது இப்பொழுதும் கண்டிப்பாக நடக்கும் என்று கூறுகிறீர்கள். ஏனென்றால் சுய பரிவர்த்தனைக்கான வெளிப்படை நிரூபணத்தின் எதிரில் வேறு எந்த நிரூபணத்திற்கும் அவசியம்

கிடையாது. கூடவே பரமாத்மாவின் காரியத்தில் எப்பொழுதும் வெற்றி கண்டிப்பாக இருக்கும்.

சுலோகன்: சொல்வது குறைவு, செய்வது அதிகம் என்ற இந்த உயர்ந்த லட்சியம் மகான் ஆக்கி விடும்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺ ✺✺✺✺✺✺✺✺

## 30.01.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அன்பு, உதவி மற்றும் சக்தி சொரூபத்தின் பரீட்சை தாள்களின் சோதனை மற்றும் அதன் முடிவு!

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள உயர்ந்த குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் அன்பு மற்றும் நினைவின் ஒரே ஒரு எண்ணம் தான் இருக்கிறது. நல்ல நல்ல சேவை செய்யும் மற்றும் சகயோகி குழந்தைகள் பாப்தாதாவின் கூடவே எப்பொழுதும் இருக்கிறார்கள். தூரமான இடத்தில் இருந்த போதிலும் அன்பின் ஆதாரத்தில் மிக அருகில் இருக்கிறார்கள். இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் அன்பு, உதவி செய்வது மற்றும் சக்தி சொரூபத்தின் உயர்ந்த ரூபத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தொடக்கத்தில் இருந்து இதுவரையிலும் இந்த மூன்று விசேஷங்களிலும் முக்கியமாக எத்தனை மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள். அன்பின் விஷயத்தில் மூன்று விஷயங்களைப் பார்த்தோம்.

துண்டிக்கப்படாத அன்பு: 1) சூழ்நிலைகள் மற்றும் நபர்கள் அன்பின் நூலை துண்டிப்பதற்கு எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஆனால் சூழ்நிலைகள் மற்றும் நபர்கள் என்ற உயர்ந்த மதில்சுவரையும் கடந்து எப்பொழுதும் அன்பின் நூலை துண்டுபடாமல் வைத்திருக்கிறார்களா? காரணம் மற்றும் பலஹீனம் என்ற முடிச்சை அடிக்கடி போடவில்லையே? அந்த மாதிரி துண்டிக்கப்படாத அன்பு இருந்ததா?

2) எப்பொழுதும் அனைத்து உறவுகளையும் வைத்து அதன்படி நடைமுறையில் நடந்து கொண்டாரா? ஏதேனும் ஒரு உறவின் அன்பை நடைமுறையில் கடைபிடிப்பதில் குறை இல்லையே?

3) அன்பின் பிரதிபலனாக தன்னுடைய அன்பு நிறைந்த நிலையின் மூலமாக எத்தனை பேர்களை தந்தையின் அன்பிற்குரியவர்களாக ஆக்கினார்கள். ஞானத்தின் மேல் அன்பு வைத்திருப்பவராக மட்டுமின்றி அல்லது தூய்மையின் மேல் அன்பு வைத்திருப்பவராக மட்டுமின்றி அல்லது குழந்தைகளின் வாழ்க்கை மாற்றத்தின் மேல் அன்பு வைத்திருப்பவராக மட்டுமின்றி அல்லது உயர்ந்த ஆத்மாக்களின் அன்பிற்குரியவராக மட்டுமின்றி, நேரடியாக தந்தையின் மீது அன்பிற்குரியவர். நீங்கள் மிக நல்லவர்கள், ஞானம் நன்றாக இருக்கிறது, வாழ்க்கை நன்றாக இருக்கிறது என்பது மட்டுமின்றி தந்தை அதைவிட நன்றாக இருக்கிறார் என்று உணர்வது. இதைத் தான் தந்தையின் அன்பிற்குரியவர் ஆவது என்பது, அப்படி அன்பில் இந்த மூன்று விஷயங்களின் சிறப்பைப் பார்த்தோம்.

<u>உதவி செய்வதில் முக்கியமான விஷயம்:</u> 1) சுயநலமற்று உதவி செய்பவரா? உதவி செய்வதில் 2) எண்ணம், சொல், செயல், உறவு மற்றும் தொடர்பில் இந்த அனைத்து ரூபங்களின் உதவியாளராக எப்பொழுதும் இருந்தாரா? 3) அந்த மாதிரி தகுதியான உண்மையான உதவியாளர்கள் எத்தனை பேரை உருவாக்கினார்?

<u>சக்தி சொரூபம்:</u> 1) மாஸ்டர் சர்வ சக்திவானாக ஆகியிருக்கிறாரா அல்லது வெறும் சக்திவானாகத் தான் இருக்கிறாரா? 2) தேவையான நேரத்தில் சக்திகளின் ஆயுதத்தின் லாபத்தை எடுக்க முடியுமா அல்லது ஆயதங்கள் பாதுகாப்பு பெட்டகத்தில் இருக்கின்றனவா? 3) தன்னுடைய சக்திகளின் பிராப்தி மூலமாக மற்றவர்களை மாஸ்டர் சர்வ சக்திவானாக எந்த அளவு ஆக்கியிருக்கிறார்?

விசேஷமாக இந்த மூன்று விஷயங்களை சோதனை செய்து கொண்டிருந்தோம். இன்றைய நாட்களில் பரீட்சை தாள்கள் சோதிக்கப்படுகின்றன என்று கூறியிருந்தோம். அப்படி இன்று இந்த பரீட்சை தாள் சோதனை செய்யப்பட்டது. முடிவு என்னவாக என்ன இருந்தது? மூன்றின் மொத்த மதிப்பெண்களில் முழுமையான தேர்ச்சி, தேர்ச்சி மற்றும் இரக்கப்பட்டு தேர்ச்சி அடைபவர் இப்படி மூன்று நிலையினரும் வரிசைக்கிரமமாக இருந்தார்கள். முழுமையாகத் தேர்ச்சி அடைபவர்கள் பாதி பேரையும் விட குறைவாக இருந்தார்கள்.

தேர்ச்சி அடைபவர்கள் 75-சதவிகிதமாக இருந்தார்கள். மேலும் இரக்கம் காட்டப்பட்டு தேர்ச்சி அடைபவர்களின் பட்டியல் மிக நீளமாக இருந்தது. இப்பொழுது வேறு என்ன செய்ய வேண்டும்?

இது தந்தையின் சொரூபத்திலிருந்து சோதிக்கப்பட்டதின் ரிசல்ட் ஆகும். இப்பொழுது கூட தந்தையின் ரூபத்தில் தான் சோதனை செய்து கொண்டிருந்தோம் ஆனால் இறுதி முடிவில் தந்தையின் கூடவே தர்மராஜும் இருப்பார். அந்த இறுதி முடிவுக்காக இப்பொழுது ஒரே ஒரு வாய்ப்புத் தான் இருக்கிறது. லாஸ்ட் சான்ஸ் அதாவது கடைசி வாய்ப்பு, அது என்ன? (1) ஒன்று, உள்ளப்பூர்வமான அழியாத வைராக்கியம் மூலமாக தனது கடந்த கால விஷயங்களை சம்ஸ்காரம் என்ற கடந்த காலத்து விஷயங்களை எரித்து விடுங்கள். இதை எரிப்பதற்காக யாகம் வளர்க்க வேண்டும். 2) இவ்வாறு எரிப்பதின் கூடவே அமிர்தவேளையில் தொடங்கி இரவு வரை ஈஸ்வரிய நியமங்கள் மற்றும் மரியாதைகளை எப்பொழுதும் கடைப்பிடிப்பதற்கான விரதம் எடுக்க வேண்டும். 3) நிரந்தர பெருவள்ளலாகி, புண்ணிய ஆத்மா ஆகி, பிரஜைகளுக்கு தானம் செய்ய வேண்டும். பிராமணர்கள் எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்யும் புண்ணிய காரியம் செய்ய வேண்டும். அழியாத தானம், புண்ணிய காரியம் நடந்து கொண்டே இருக்க வேண்டும். அது மனதின் எண்ணங்கள் மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ அல்லது உறவு தொடர்பின் மூலமாகவோ செய்ய வேண்டும். அந்த மாதிரி உயரம் தாண்டுபவர் டபுள் லைட் ஆகி, உயர்ந்த முயற்சி செய்வதின் மூலம் பறக்கும் பறவை ஆகி, ரிசல்ட் வரை சென்றடைய முடியும். அந்த மாதிரி இறுதி ரிசல்ட் வரை இந்த மாதிரி முயற்சி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. புரிந்ததா? எனவே கேட்டு மற்றும் புரிந்து கொண்டு இறுதி வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சோதனை நடந்து கொண்டிருக்கிறது.

பிரம்மாபாபா கூறினார் -சாகார ரூபம் மூலமாக பாலனை நடந்தது, அவ்யக்த ரூபம் மூலமாக பாலனை நடந்து கொண்டிருக்கிறது. எப்படி சாகார பாலனை பெற்றவர்களுக்கு அவ்வப்பொழுது நல்ல வாய்ப்பு கிடைத்தது, அதுபோன்று இப்பொழுது அவ்யக்த பாலனை பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கும் இந்த இறுதி வாய்ப்புக்கான விசேஷ உரிமை கிடைக்க வேண்டும். எனவே அவ்யக்த பாலனை பெற்றுக்

கொண்டிருப்பவர்களுக்கு மேலும் சாகார, ஆகார பாப்தாதா இருவர்களின் பாலனை பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு இருவர்களின் சோதனையில் மதிப்பெண் கொடுப்பதில் கொஞ்சம் வித்தியாசம் வைக்கப்பட்டிருக்கிறது. தொடக்க காலத்தில் வந்தவர்களின் பரீட்சை தாள்கள் மற்றும் அவ்யக்த பாலனை பெறுபவர்களின் பரீட்சை தாள்களை சோதனை செய்வதை விட பின்னால் வந்தவர்களுக்கு 25-சதவிகிதம் அதிகப்படியான மதிப்பெண்கள் கிடைக்கும். எனவே இறுதி வாய்ப்பில் என்ன விரும்புகிறீர்களோ அதைப் பெற முடியும். இப்பொழுது இருக்கையில் அமர்வதற்கான விசில் ஊதப்படவில்லை. எனவே வாய்ப்பை எடுங்கள். இருக்கையில் அமருங்கள்.

கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கையை பிடிப்பதில் திறமை நிறைந்தவர்கள். எப்படி இங்கே பாபாவின் (எதிரில்) அருகாமையின் இருக்கையை எடுக்க விரும்புகிறீர்கள். அதே போல் இறுதி முடிவிலும் அருகாமையின் இருக்கையை எடுத்துக் கொள்ளுங்கள். கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் சுலபமாகவே திருப்தி அடைபவர்கள் தான் இல்லையா? எப்பொழுதுமே ஞானத்தின் இரகசியம் தெரிந்து நடந்து கொள்பவர்களேயன்றி கோபப் படுபவர்கள் அல்ல. நல்லது.

அந்த மாதிரி எப்பொழுதும் இரகசியம் அறிந்து நடந்து கொள்ளும், யோக சொரூபமான, யுக்தியோடு காரியம் செய்யக்கூடிய அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சர்வ சக்திவான் தந்தையின் தொடர்பு என்ற பிரபாவத்தில் இருப்பவர்களுக்கு அந்த மாதிரி ஆன்மீக ஆத்மாக்களுக்கு, பெருவள்ளல், மகா புண்ணிய குழந்தைகள், ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வெளிநாட்டு சேவையில் வெற்றியாளராக ஆவதற்காக பாப்தாதாவின் சமிக்ஞைகள்: **1)** வெளிநாட்டு சேவையில் விசேஷமாக அமைதியின் சக்தி அதிகமாக பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால் அங்கே உள்ள ஆத்மாக்கள் ஒரு நொடியின் அமைதிக்காக கூட அங்கு இங்கு என்று அலைகிறார்கள். அந்த மாதிரி அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அமைதியையும், ஆத்மீக அன்பையும் கொடுங்கள். அன்போடு அமைதியையும் அனுபவம் செய்வியுங்கள். அன்பின்

குறைவு இருக்கிறது, அமைதியின் குறைவும் இருக்கிறது. எனவே என்ன நிகழ்ச்சி செய்தாலும் அதில் முதலிலோ தந்தையின் உறவின் அன்பின் மகிமை செய்யுங்கள். மேலும் பிறகு அந்த அன்பின் மூலம் ஆத்மாக்களை உறவில் இணைத்த பிறகு அமைதியின் அனுபவம் செய்வியுங்கள். அதற்காக நாடகம் செய்தாலும் சரி, சொற்பொழிவு நிகழ்த்தினாலும் சரி அந்த சொற்பொழிவும் அன்பு சொரூபமானதாக மற்றும் அமைதி சொரூபமானதாக இருக்க வேண்டும். இரண்டிலும் சமநிலை இருக்கட்டும். முக்கியமான தலைப்பு இதுவாக இருக்கட்டும். மற்றபடி விதவிதமான நிலை இருக்கட்டும். சொற்பொழிவு மூலமாகவும் அதையே அனுபவம் செய்வியுங்கள். மேலும் நாடகம் மூலமாகவும் அதையே அனுபவம் செய்வித்தீர்கள் என்றால் விதவிதமான வழிகளினால் ஒரே அனுபவத்தை செய்வித்தீர்கள் என்றால் முத்திரை இடப்பட்டு விடும். சிறு சிறு நிகழ்ச்சிகள் வைத்தாலும் சரி அல்லது பெரிய நிகழ்ச்சிகள் வைத்தாலும் சரி ஆனால் பெரிய நிகழ்ச்சி செய்வதற்கு முன்பு தொடர்பில் அருகாமையில் இருக்கும் அனேக விதமான ஆத்மாக்களை உருவாக்க வேண்டியது இருக்கும். அப்பொழுது என்னவாகும்? பலவிதமான ஆத்மாக்களுக்க சேவை செய்வதால் வித விதமான ஆத்மாக்கள் அதில் சேர்ந்து கொள்வார்கள். சகயோகி ஆகி விடுவார்கள் மேலும் நிகழ்ச்சியில் மிகவும் சுவாரஸ்யம் ஏற்பட்டு விடும். பொதுவாகவே பல வகை என்பது மிக நன்றாகவே இருக்கும் இல்லையா? அப்படி வகை வகையான துறையைச் சேர்ந்தவர்களின் தொடர்பு மற்றும் உறவை முன்டாகவே உருவாக்குவதினால் எந்தவொரு காரியமும் வெற்றி அடைந்து விடும். மற்றபடி வெளிநாட்டு சேவைக்காக பொறுப்பாளர் ஆகியிருப் பவர்களுக்கு விசேஷமாக சேவை மற்றும் அன்பிற்குப் பிரதிபலனாக பல கோடி மடங்கு அன்பு நினைவுகள் கொடுக்கிறோம்.

**2) ஞானம் என்ற சாவியைப் போடுவதினால் பாக்கியம் என்ற பொக்கிஷம் பிராப்தி ஆகி விடுகிறது:** இந்த சங்கமயுகத்தில் பாக்கியத்தை உருவாக்கும் ஞானம் என்ற சாவி கிடைக்கிறது. போடுங்கள். மேலும் எவ்வளவு பாக்கியத்தை உருவாக்க விரும்புகிறீர்களோ அந்த அளவு பாக்கியத்தின் சாவியைப் பொக்கிஷத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சாவி போடுவதிலோ அனைவருமே திறமைசாலிகள் தான் இல்லையா? சாவி கிடைத்தது,

உடன் அனைத்து செல்வங்கள் நிறைந்தவராகி விட்டீர்கள். எவ்வளவு அனைத்து செல்வந்தர் நிறைந்தவராகிக் கொண்டே இருக்கிறீர்களோ அந்த அளவு இயல்பாகவே குஷி இருக்கிறது. அப்படியானால் எப்படி ஒரு ஊற்றிலிருந்து தண்ணீர் வெளியாகிக் கொண்டே இருக்கிறதோ, அதே போன்று குஷி என்ற நீர் ஊற்று எப்பொழுதுமே குறைவின்றி மற்றும் அழியாததாக வந்து கொண்டே இருக்கிறது என்று அனைவரும் அப்படி அனுபவம் செய்கிறீர்களா? பாப்தாதாவும் எப்பொழுதும் அனைவரின் பாக்கியத்தின் நட்சத்திரத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்.

பொறியாளர்களின் குழுவுடன் அவ்யக்த பாப்தாதாவின் சந்திப்பு:

பொறியாளர் என்றால் திட்டமிடும் புத்தி உள்ளவர். பொறியாளர் எப்பொழுதும் திட்டத்தை முடிவு செய்து காரியத்தை செய்விப்பார்கள். அப்படி பொறியாளர் குழு என்றால் ஆன்மீக திட்டமிடும் குழு ஆகும். நீங்கள் அந்த மாதிரி இருக்கிறீர்களா? இந்த ஆன்மீக சேவையில் கூட திட்டமிடும் புத்தி உள்ளவராகி சேவைக்கான திட்டத்தை உருவாக்குகிறீர்களா? புதிய திட்டத்தை உருவாக்குகிறீர்களா அல்லது உருவாக்கப்பட்ட திட்டத்தை நடைமுறையில் கொண்டு வருகிறீர்களா? திட்டமிடும் புத்தி என்றால் திட்டத்தை உருவாக்காமல் இருக்க முடியாது, யாருக்கு என்ன வேலை இருக்குமோ அவர் விரும்பாவிட்டாலும் கூட அந்த காரியத்திலேயே எப்பொழுதும் பிஸியாக இருப்பார். எப்படி அந்த இலாக்காவின் கவனம் என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாம், எப்படி வெற்றி அடைவதாக ஆக்கலாம், எந்த விதியோடு வளர்ச்சி அடையச் செய்யலாம் என்று எப்பொழுதும் இருக்கும் இல்லையா? அப்படி ஆன்மீகப் பொறியாளர்களுக்கு ஈஸ்வரிய சேவைக்கான விதிப்பூர்வமான வளர்ச்சி எப்படி ஏற்படலாம் என்பதற்கான திட்டத்தை உருவாக்க வேண்டும். ஒருவேளை அனைவரும் தன்னுடைய புதிய திட்டத்தை தயார் செய்தீர்கள் என்றால், இவ்வளவு திட்டங்கள் மூலமாக புது உலகம் விரைவிலேயே வந்து விடும். இப்பொழுது குறைந்த செலவில் அதிக லாபம் அடையும் மாதிரியான திட்டத்தை உருவாக்குங்கள். எப்படி சாக்ரீன் என்பது ஒரு சொட்டு கூட அதிகக் காரியம் செய்யும். அதே போல் திட்டம் சக்திசாலியானதாக இருக்கட்டும் ஆனால் செலவு குறைவாக இருக்கட்டும். எப்படி இன்றைய நாட்களில் ஒரு

தொழிற்சாலை மூலமாக அனேகர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டத்தை யோசிக்கிறார்கள் என்றால், இங்கேயும் திட்டம் செலவு குறைந்ததாக இருக்கட்டும் மற்றும் செய்தி அனேகருக்கு கிடைத்து விடட்டும். எப்படி அங்கே அனேகருக்கு வேலை கிடைத்து விடட்டும் என்று நினைக்கிறார்கள். அதே போல் இங்கேயும் அனேகர்களுக்கு செய்தி கிடைத்து விடட்டும். இங்கே பொறியாளர்கள் அதிமாக வேண்டும். ஏனென்றால் சத்யுகத்தில் பொறியாளர்கள் குறைந்த காலத்தில் மிக அழகான பொருட்களை தயார் செய்வார்கள் என்றால், அந்த சம்ஸ்காரத்தை இங்கிருந்து தானே எடுத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது தான் அந்த மாதிரி திட்டத்தை உருவாக்குவீர்கள். நீங்கள் இராஜா ஆகிறீர்கள் என்றால் அனைத்து பொருட்களையும் தயாரிக்க வைப்பீர்கள் தான் இல்லையா? திட்டம் கொடுப்பீர்கள் தான் இல்லையா? அப்படி புது உலகிற்கான திட்டத்தை உருவாக்குவதற்காக மேலும் சேவையின் வெற்றியை அடைவதற்காகவும் பொறியாளர்கள் வேண்டும். அப்படி உங்களுக்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறது. அந்த மாதிரி தன்னை மகத்துவம் நிறைந்தவர் என்று புரிந்து நடக்கிறீர்களா? நான் வெற்றியின் நிரூபணம் கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் புதிய திட்டத்தை உருவாக்கி முதலில் அவரவர்களின் மண்டலத்தில் நடைமுறையில் கொண்டு வாருங்கள். பிறகு முழு உலகமும் உங்களைப் பின்பற்றிச் செய்யும். திட்டம் ஏற்றுக் கொள்ளப்படாததற்கான காரணம் செலவு குறைந்ததாக இருப்பதில்லை. ஒருவேளை குறைந்த செலவு மற்றும் வெற்றி பெறுவதற்கான திட்டமாக இருந்தது என்றால், அளைவரும் ஏற்றுக்கொள்வார்கள். அப்படி 60-பொறியாளர்கள் ஒருவேளை 60-திட்டங்களைக் கொண்டு வந்தீர்கள் என்றால், இந்த (80-வது) வருடத்திலேயே முடிவு ஏற்பட்டு விடும். முடிவு கூட ஒரு நொடியில் ஏற்படாது மெது மெதுவாக மாற்றம் ஏற்படும், ஆனால் தொடங்கி விட வேண்டும் மற்றும் அனைவரின் இதயத்திலிருந்தும் இப்பொழுது புது உலகம் வரப்போகிறது என்ற ஒலி வெளியாக வேண்டும். எப்படி அறிவியலைச் சேர்ந்தவர்கள் சந்திரன் வரைச் சென்று கொஞ்சம் அவர்களுடைய திறமையை காண்பித்தார்கள் என்றால், அனைவரும் அங்கு நிலம் வாங்குவதற்கான ஏற்பாடுகளை தொடங்கி விட்டார்கள். எனவே அமைதியின் சக்தி உள்ளவர்களோ குறைந்தபட்சம் புது உலகத்தில் நிலம் வாங்குவதற்கான தயாரிப்பை

செய்ய வேண்டும். முன்பதிவோ செய்து விடுங்கள். எப்படி அறிவியலின் ஏதாவது ஒரு கண்டுபிடிப்பை முதலில் நடைமுறையில் பயன்படுத்தி பின்பு அறிவிப்பு செய்வார்கள். அதே போல் நீங்களும் உங்களுடைய இலாக்காவின் இடங்களில் நடைமுறையில் கொண்டு வாருங்கள். பிறகு அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். திட்டத்தின் நடைமுறை வெற்றி கிடைக்க வேண்டும். யார் கண்காட்சி மற்றும் மகாநாடுகளை பார்த்து விட்டார்களோ அவர்களுக்காக புதிய திட்டம் வேண்டும். புதிய ஈர்ப்பு இருக்க வேண்டும். எனவே திட்டமிடும் புத்தி உள்ளவராகி திட்டத்தை உருவாக்குங்கள். நாடகத்தின்படி என்ன விசேஷம் கிடைத்திருக்கிறதோ அந்த விசேஷத்தை காரியத்தில் ஈடுபடுத்துவது என்றால் விசேஷ லாட்டரியை அடைவது, புதுப்புது வழிமுறைகளை உருவாக்குவதற்கான திட்டத்தை உருவாக்குங்கள். நோட்டுப்புத்தகத்தில் அல்ல நடைமுறையில்! அங்கேயோ காகிதத்தில் மட்டுமே திட்டங்கள் இருந்து விடுகின்றன ஆனால் இது நடைமுறைக்கான திட்டமாக இருக்கட்டும். நல்லது ஓம் சாந்தி

நீதிபதி-வழக்கறிஞர் குழுவுடன் பாப்தாதாவின் சந்திப்பு: அனைவரும் எப்பொழுதும் தன்னை சுதந்திரம் ஆக்கும் மற்றும் அனேக ஆத்மாக்களை அனேக பந்தனங்களிலிருந்து சுதந்திரம் ஆக்கும் சேவையில் எப்பொழுதும் பிஸியாக இருக்கிறீர்களா? உங்கள் அனைவருக்கும் எப்படி எங்காவது மாட்டிக் கொண்டிருப்பவரை விடுவிப்பதற்கான லௌகீக காரியம் இருக்கிறது. இந்த முழு குரூப்பும் யாரையும் விடுவிக்கும் குரூப் ஆகும். அவர்களோ அந்த அரசாங்கத்தின் கணக்குப்படி மாட்டிக் கொள்கிறார்கள் என்றால் நீங்கள் விடுவிக்க வேண்டும். மேலும் ஏதாவது நபர் விகாரங்களின் வசமாகி தீய காரியம் செய்கிறார் என்றால் விடுவிக்கிறீர்களா அல்லது மாட்டி வைக்கிறீர்களா? சில நேரம் உண்மை, சில நேரம் பொய். இங்கே ஆன்மீக காரியத்தில் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவையும் சுதந்திரமாக ஆக்கக் கூடியவர்கள் நீங்கள். எத்தனை ஆத்மாக்களை சுதந்திரமாக ஆக்கியிருக்கிறீர்கள்? இன்றோ ரிசல்ட்டை எடுக்கும் நாள். அப்படி எத்தனை பேரை சுதந்திரமாக ஆக்கியிருக்கிறீர்கள்? அந்த சேவை ஏதோ ஒரு காரணத்திற்காக ஈஸ்வரிய சேவைக்காக செய்கிறீர்கள். இல்லையென்றால் பாண்டவர்கள் அவர்களுக்கு சேவை செய்வதற்காக ஏன் நேரம் கொடுக்க வேண்டும். இதே சேவையில்

லாபம் எடுப்பதற்காக மறைமுக சேவாதாரி ஆகி சேவையில் இருக்கிறீர்கள். எப்படி பாண்டவர்கள் மறைந்து வாழ்ந்து சேவை செய்வதற்காக சென்றார்கள் என்ற வர்ணனை இருக்கிறது. அப்படி தண்ணீரை நிரப்புவதற்கும் அல்லது காலைப் பிடிப்பதற்காகவும் செல்லவில்லை, ஆனால் மாறு வேடத்தில் இராஜ்யத்தை மாற்றுவதற்காக சேவாதாரி ஆகிச் சென்றார்கள். அதே போலவே உலக இராஜ்யத்தை மாற்றம் செய்வதற்காக மாறு வேடத்தில் சென்றிருக்கிறீர்கள். அப்படியானால் இந்தக் காரியத்திலேயே எப்பொழுதும் இருக்கிறீர்களா? லௌகீக சேவை என்றால் தொடர்பை அதிகரிப்பதற்கான சேவை. அந்த மாதிரி லட்சியத்தை வைத்துக் கொண்டு இதே லட்சணத்துடன் எப்பொழுதும் சேவையில் இருக்கிறீர்களா? இப்பொழுது ஒவ்வொரு துறையினரும் தன்னைப் போன்றவர்களை அதிகரிக்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் குறைந்தது உங்கள் உடன் இருப்பவர்களுக்காவது நீங்கள் சொல்லியிருக்க வேண்டும் என்று அவசியம் புகார் சொல்வார்கள்.

இரட்டை சேவைக்கான வாய்ப்பை எடுத்துக் கொண்டே இருங்கள். எந்தெந்த ஆத்மாக்கள் தொடர்பில் வருகிறார்களோ அவர்களை தந்தையின் தொடர்பில் கொண்டு வாருங்கள். லௌகீக சேவையின் மூலமாகவும் சகயோகம் கொடுங்கள். மேலும் ஈஸ்வரிய சேவை மூலம் சுகம், சாந்திக்கான வழியைக் கூறுங்கள். அப்பொழுது அனைவரும் உங்களை மகான் புண்ணிய ஆத்மா என்னும் பார்வையில் பார்ப்பார்கள். நல்லது.

வரதானம்: என்னுடையது என்ற உணர்வை அகற்றக்கூடிய பிரம்மாபாபாவிற்குச் சமமான உயர்ந்த தியாகி ஆகுக!

உறவின் தியாகம், சாதனங்களின் தியாகம் ஒன்றும் பெரிய விஷயம் இல்லை ஆனால் ஒவ்வொரு காரியத்திலும், எண்ணத்திலும் மற்றவர்களை முன்னுக்கு வைக்க வேண்டும் என்ற பாவனை வைப்பது அதாவது தனக்கு என்பதை அகற்றி விடுவது, முதலில் நீங்கள் என்று சொல்வது என்ற இது தான் உயர்ந்த தியாகம் ஆகும். இதைத் தான் தன்னுடையது என்ற உணர்வை அகற்றி விடுவது என்று கூறப்படுவது,

எப்படி பிரம்மாபாபா எப்பொழுதும் குழந்தைகளை முன்னுக்கு வைத்தார் நான் முன்னுக்கு இருக்க வேண்டும் என்ற இதிலேயும் எப்பொழுதும் தியாகியாக இருந்தார். இந்த தியாகத்தின் காரணமாக அனைவரையும் விட முன்னுக்கு அதாவது நம்பர் ஒன்-ல் செல்வதற்கான பலன் கிடைத்தது. எனவே தந்தையைப் பின்பற்றி நடங்கள்.

சுலோகன்: சட்டென்று பிறருடைய குறைகளைக் கண்டுபிடிப்பது என்பது இதுவும் துக்கம் கொடுப்பது!

# 01.02.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சூட்சும வதனத்தின் காரிய நடவடிக்கைகள்!

இன்று பாப்தாதா விசேஷமாக அன்பு பாவனை நிறைந்த குழுந்தைகளை சந்திப்பதற்கு வந்திருக்கிறார்கள். எவ்வளவு அன்புணர்வு நிறைந்தவர்களோ அந்த அளவு பாக்கியம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். பாக்கியம் நிறைந்த குழந்தைகளை பாக்கியத்தை உருவாக்கும் தந்தை சந்திக்க வந்திருக்கிறார். பாப்தாதாவிடம் அனைத்து குழந்தைகளின் பாவனை (அன்புணர்வு), அன்பு மற்றும் சேவையின் முழுமையான சார்ட் (அனைத்து விஷயங்களும்) இருக்கிறது. எப்படி பழைய உலகத்து இராணுவ உயர் அதிகாரிகளிடம் தன்னுடைய பகுதி மற்றும் சேனையின் சார்ட் மற்றும் வரைபடம் இருக்கிறது. அதே போல் தந்தையிடமும் ஒவ்வொரு சேவை நிலையத்தின் மற்றும் சேவாதாரிகளின் சார்ட் மற்றும் வரைபடம் இருக்கிறது. அந்த சார்ட் மூலமாக ஒவ்வொரு நிலையத்தின் மற்றும் சேவாதாரிகளின் ஒவ்வொரு நேரத்தின் சேவையின் விதி மற்றும் முயற்சி செய்யும் வேகம் இரண்டையுமே ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டே பார்த்துக் கொண்டிருக்கிறோம். முழு நாளும் ஒவ்வொரு குழந்தைக்கும் தன்னுடைய என்னென்ன நிலை இருக்கிறது என்ற அதன் தெளிவான காட்சிகள் கிடைத்துக் கொண்டே இருக்கிறதா? சூட்சும வதனத்தின் அனைத்துக் காரிய நடவடிக்கைளும் எந்த சக்தியின் ஆதாரத்தில் நடக்கின்றன? எப்படி இந்த உலகத்தில் விதவிதமான சாதனங்கள் மூலமாக செயல்பாடுகள் நடைபெறுகின்றன. மேலும் சத்யுகத்தில் முக்கியமாக அணு சக்தி மூலமாக காரியங்கள் நடக்கும். சூட்சும வதனத்தின் காரிய நடவடிக்கைள் எப்படி நடக்கின்றன? எந்த சக்தியின் ஆதாரத்தில் நடக்கிறது. எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்திருக்கிறீர்களா? ஒளியினாலான வதனம் தான் என்றால் ஒளியான உலகத்தில் காரியங்கள் எப்படி நடக்கின்றன. லைட்டின் ஆதாரத்திலா அல்லது வேறு ஏதாவது ஆதாரத்திலா? இன்று

சோதனைத்தாள்களைப் பார்த்தோம், இன்று குழந்தைகள் எதிரில் வெளிப்பட்டார்கள். அப்படி இந்த விதவிதமான காரிய நடவடிக்கைகள் எப்படி நடக்கின்றன?

கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் வெகு காலத்திற்குப் பிறகு கிடைத்தவர்கள் இல்லையா! அப்படி வெகு காலத்திற்குப் பிறகு கிடைத்தவர்களுக்கு பிரத்யேகமாக நுணுக்கமான இரகசியங்கள் கூறப்படுகின்றன. கர்நாடகத்தின் சேவையில் ஜோடி கூட மஜேதாராக (சுவாரஸ்யமான) உருவாகியிருக்கிறது (இருதய புஷ்பா தாதி மற்றும் சந்திரமணி தாதி). செய்பவர் மற்றும் செய்விப்பவர் இருவர்களுடைய ஜோடி தான். அவர் அன்பு சொரூபமானவர், இவர் ஞான சொரூபமானவர். அவர் அன்பு மற்றும் சட்டம்படி நடப்பவர். இவர் அன்பு நிறைந்தவர் மட்டும். இருந்தாலும் கர்நாடகத்தின் மலர்த்தோட்டம் நன்றாக வளர்ந்து பூத்துக் குலுங்குகிறது. அனேக விதமான மிக நல்ல நல்ல சேவாதாரிகளும் இருக்கிறார்கள். எப்படி இரட்டை வெளிநாட்டினருக்கு பாப்தாதா அவர்களின் விசேஷத்தின் காரணமாய் விசேஷ அன்பு நினைவுகளைக் கூறுகிறார். வேறு மதத்தில் மாறிச் சென்று விட்ட போதிலும் தன்னுடைய பழமையான தர்மத்தை தெரிந்து கொண்டு மற்றும் அதை ஏற்று நடப்பதில் தீவிரமாக முயற்சி செய்பவர்களாகிச் சென்று கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையோர் அன்பு மற்றும் அமைதியின் பிராப்தியின் காரணமாக சந்தேக புத்தி உடையவர்கள் குறைவாக ஆகிறார்கள். இது இரட்டை வெளிநாட்டினரின் விசேஷம் ஆகும். இந்த விசேஷத்தின் காரணமாக பாப்தாதாவும் அதற்கு பிரதிபலனாக அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அதேபோன்று, கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களும் பாவனை மற்றும் அன்பின் காரணமாக சுலபமாகவே தந்தையின் குழந்தைகளாகி விடுகிறார்கள். அன்பின் காரணமாக வெகுளியாக இருக்கிறார்கள். பொதுவாக ஞானம் நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால் முதலில் அன்பின் காரணமாக அருகில் வருகிறார்கள். பிறகு ஞானம் கேட்டு முன்னேறிச் செல்கிறார்கள்.

சில பகுதிகள் ஞானத்தின் ஆதாரத்தில் முன்னுக்கு வந்து, பிறகு அன்பில் வருகிறார்கள். வேறு சிலர் முதலில் அன்பில் வந்து, பின்பு ஞானம் கேட்கிறார்கள். எனவே கள்ளம் கபடமற்ற தந்தையின் அன்பிற்கு உரியவர்களாக ஆகிறார்கள். புரிந்ததா? உங்கள்

அனைவருக்கும் கூட மகத்துவம் இருக்கிறது. எங்களுக்கு மொழி தெரியாது. எனவே பின்னால் இருக்கிறோம் என்று ஒருபொழுதும் அந்த மாதிரி நினைக்காதீர்கள் ஆனால் எப்பொழுதும் பாப்தாதாவின் அருகாமையில் இருக்கிறீர்கள். பாப்தாதா மொழியைப் பார்ப்பதில்லை, பாவனையைப் பார்க்கிறார்.

சூட்சும வதனத்தின் காரிய நடவடிக்கைகள் எப்படி நடக்கின்றன என்று நீங்கள் கூறுங்கள். எதன் ஆதாரத்தில் நடக்கின்றன? இங்கேயோ மின்சாரம் இல்லை என்றால் நீங்கள் மற்ற சாதனங்கள் மூலமாக காரியத்தை செய்கிறீர்கள் இல்லையா? ஜெனரேட்டர் இருக்கிறது. அதிலிருந்து மின்சாரம் வருகிறது, அப்படி அங்கே என்ன இருக்கிறது? எந்த சக்தி மூலமாக காரியங்கள் நடக்கின்றன. ஆகாரம் (சூட்சுமவதனம்) சாகாரத்தை தூண்டுகிறதா அல்லது சாகாரம் (ஸ்தூல, பௌதீக உலகம்) ஆகாரத்தைத் தூண்டுகிறதா? எப்படி காரியங்கள் நடக்கின்றன என்று கூறுங்கள். விசேஷமாக சூட்சும வதனத்தின் காரிய நடவடிக்கைகள் சுத்தமான எண்ணத்தின் ஆதாரத்தில் நடக்கின்றன. எப்படி பிரம்மா நினைத்தார் உடன் உலகத்தைப் படைத்தார் என்று வர்ணனை இருக்கிறது இல்லையா? அப்படி எண்ணம் வைத்தவுடன் வெளிப்பட்டது. உள்ளடங்கி இருப்பது மற்றும் வெளிப்படுவது அந்த மாதிரியான காட்சிகள். வடிவமைப்பு சமிக்ஞைகளுக்கானது, ஆனால் விசேஷ ஒளி வடிவமான உடல் ரூபமான காரிய நடவடிக்கைகள், மனோபலம் அல்லது எண்ணம் இவைகளின் ஆதாரத்தில் அங்கு நடக்கின்றது. பாப்தாதா எண்ணம் என்ற சுவிட்சை ஆன் செய்கிறார் என்றால் எல்லாம் வெளிப்பட்டு விடுகிறது. அவர்களுடைய காரிய நடவடிக்கைள் வயர்லஸ் மூலம் இருக்கும். மேலும் இங்கிருந்து மூன்று உலகம் வரை தூய்மையான சக்தி மூலமாக தொடர்பு செய்ய முடியும். புத்தியின் நினைவு முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். சூட்சும வதனம் வரை எண்ணம் சென்றடைய வேண்டும் என்பதற்காக மிகத் துல்லியமான, அனைத்து உறவுகளின் சாரம் நிறைந்த நினைவாக இருக்க வேண்டும். இது தான் அனைத்தையும் விட சக்திசாலியான இணைப்புக் கம்பி ஆகும். இதில் இடையில் மாயா இடையூறு செய்ய முடியாது.

அங்கு பாப்தாதாவின் காரிய நடவடிக்கைள் மிக அதிகம். இந்த உலகம் மாதிரி இருக்காது (மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்பட்டது. முழுக் கல்பத்திலும் இந்த நேரம் தான் சூட்சும வதனம் வெளிப்படுகிறது. எனவே சூட்சும வதனத்தின் செயல்பாடுகளும் இந்த நேரத்தில் தான் இருக்கிறது. பிறகு சொர்க்கத்தின் காரிய நடவடிக்கைள் உங்களுக்காக இருக்கும். இங்கே அமர்ந்து கொண்டே சூட்சும வதனத்தின் அனுபவத்தைச் செய்ய முடியுமா? அனுபவத்தையோ குழந்தைகள் தான் செய்வார்கள். அந்த வதனம் இருப்பதே குழந்தை களுக்காகத் தான். வேறு எந்த ஆத்மாவும் சூட்சும வளத்தின் அனுபவத்தை செய்யவே முடியாது என்றால் பிரம்மா மற்றும் பிராமணர்களின் சம்மந்தம் தான். பக்தர்கள் ஏதாவது விசேஷ காட்சிகளின் சாட்சாத்காரத்தை மட்டும் பார்க்க முடியும் ஆனால் சூட்சும வதனம் நம்முடைய வீடு, பிரம்மாபாபாவின் ஸ்தானமாக இருக்கிறது என்றால், நம்முடைய ஸ்தானமும் தான். சூட்சும வதனத்தின் சிறப்புக்களின் அனுபவம், சந்திப்பின் அனுபவம், கலகலட்டாகும் அனுபவத்தை பிராமணர்கள் மட்டும் தான் செய்ய முடியும்.

(வெளிநாட்டினர் கீழே அமர்ந்து முரளி கேட்டுக் கொண்டிருந்தார்கள்). இன்று இரட்டை வெளிநாட்டினரின் எண்ணம் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. கீழே இருந்த போதிலும் தந்தையின் எதிரில் இருக்கிறார்கள். எனவே இரட்டை வெளிநாட்டினருக்கு பாப்தாதா விசேஷ அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். கூடவே நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் யாரெல்லாம் தூர இடத்தில் இருந்தபோதிலும் எண்ணத்தின் சக்தி மூலம் தன்னை அருகாமையில் அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்களோ அவர்களையும் சேர்த்து கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் சேர்த்து பிரத்யேமாக அன்பு நினைவுகள். மதுபனைச் சேர்ந்தவர்களோ இருக்கவே இருக்கிறார்கள். அடுப்படியில் இருப்பவர்களிலிருந்து இதயத்தில் இருப்பவர்கள்'. சுடச்சுட மதுபனைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கிறது. சேவையில் களைப்பற்றவராகி, நல்ல நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பான்மையோர் தூக்கத்தை வெல்லும் குணத்திலும் நல்ல ரிசல்ட்டைக் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இரவில் தூக்கத்தை விட்டு விட்டும் சேவையில் நல்ல சகயோகிகளாக இருக்கிறார்கள். சரிங்க... சரி இதோ வந்து விட்டேன் என்ற பங்கை மிக நன்றாகச் செய்து

கொண்டிருக்கிறார்கள். எனவே மதுபனின் சேவாதாரிகளுக்கு வரிசைக்கிரமமாக சேவையின் நிரூபணம் கொடுப்பவர்களுக்கு விசேஷ அன்பு நினைவுகள். நல்லது - அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**பார்ட்டிகளுடன் சந்திப்பு: 1) வெற்றியின் ஆதாரம்-விலகியிருக்கும் நிலை!** அனைவரும் எப்பொழுதும் தன்னுடைய உலக நன்மை செய்யும் நிலையில் நிலைத்திருந்து சேவையின் பங்கை செய்து வருகிறீர்களா? உலகிற்கு நன்மை செய்பவர் என்றால், எல்லைக்கப்பாற்பட்ட சேவாதாரி, எந்த விதமான எல்லைக்குள்ளும் வர முடியாது. உலகம் எல்லைக்கு அப்பாற்பட்டது என்றால் உலக சேவாதரி என்றாலே எல்லைக்கப்பாற்பட்ட நிலையில் நிலைத்திருப்பவர். உலகிற்கு நன்மை செய்பவர், எப்பொழுதும் சேவை செய்து கொண்டும் விலகியிருப்பவராக மற்றும் எப்பொழுதும் தந்தையின் அன்பிற்கு உரியவராக இருப்பார். சேவையின் பற்றுதலிலிருந்தும் விலகியிருக்கும் நிலை. சேவையின் பற்றுதல் கூட தங்கச் சங்கிலி ஆகும். இந்த பந்தனமும் எல்லைக்கப்பாற்பட்ட நிலையிலிருந்து எல்லைக்குள் கொண்டு வந்து விடுகிறது. எனவே எப்பொழுதும் சேவையில் விலகியிருப்பவராக மற்றும் தந்தையின் அன்பிற்குரியவராக ஆகி இருங்கள். அந்த மாதிரி நிலையில் இருப்பவர் எப்பொழுதும் வெற்றி அடைபவராக இருப்பார். வெற்றிக்கான சுலபமான வழி விலகியிருப்பவராக மற்றும் அன்பானவராக ஆவது. எங்கேயாவது வெற்றியின் குறைவு இருக்கிறது என்றால் இதற்கான காரணம் விலகியிருப்பவராக ஆவதில் குறை இருக்கிறது. விலகியிருப்பவர் என்றால் உடலின் நினைவிலிருந்தும் விலகியிருப்பவர், ஈஸ்வரிய சம்மந்தத்தின் பற்றுதலிலிருந்தும் விலகியிருப்பவர் மற்றும் ஈஸ்வரிய சேவையின் சாதனங்களின் பற்றுதலிலிருந்தும் விலகியிருப்பவர். எப்பொழுது அந்த மாதிரி விலகிய நிலையின் குறை ஏற்படுகிறதோ அப்பொழுது வெற்றியின் குறை ஏற்படுகிறது. எனவே தன்னை எப்பொழுதும் வெற்றி அடைபவர் என்று நினைக்கிறீர்களா? அல்லது தன்னை சிறியவர் என்று நினைக்கிறீர்களா? ஏதாவது டைரக்ஷன் கிடைக்கிறது என்றால், அந்த டைரக்ஷனை நடைமுறையில் கொண்டு வரும் நேரத்தில் சிறியவர் என்று நினைப்பது சரி தான் ஆனால் சேவை செய்வதில் பெரியவராகி சேவை செய்யுங்கள். டைரக்ஷன் கிடைக்கும்

நேரத்தில் சிறியவர் என்று புரிந்து கொண்டீர்கள் என்றால் எப்பொழுதும் வெற்றி அடைவீர்கள். பெரியவர் என்றால் எல்லைக்கப்பாற்பட் உள் உணர்வு உடையவர், புரிந்ததா?

அனைவரும் திருப்தியாக இருக்கிறீர்களா? என்ன நடந்தாலும் சரி, ஏதாவது விஷயம் மனதில் வருகிறது என்றால் அதைக் கூறுவதில் எந்தத் தடையும் இல்லை ஆனால் கூறிய பிறகு பெரியவர்கள் என்ன டைரக்ஷன் கொடுக்கிறார்களோ அதன்படி நடப்பதற்காக எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். கூறிவிட்டீர்கள் என்றால் உங்களுடைய பொறுப்பு முடிவடைந்தது. பிறகு பெரியவர்களின் பொறுப்பாக ஆகி விடுகிறது. எனவே கூறுவது அவசியமாகும் ஆனால் கூறுவதின் கூடவே டைரக்ஷன்படி நடப்பதும் அவசியம் ஆகும். எந்தவொரு விஷயத்தையும் மனதிற்குள்ளே வைக்காதீர்கள். கூறிவிட்டு லேசாகி விடுங்கள். இல்லை என்றால், மனதில் ஏதாவது விஷயம் இருந்துக் கொண்டு இருந்தால். சேவை மற்றும் சுய முன்னேற்றத்தில் அடிக்கடி தடை ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும். எனவே லேசாக இருப்பதும் அவசியம் ஆகும். டைரக்ஷன் கிடைத்தவுடன் அதை அமல் படுத்தினீர்கள் மேலும் லேசாகி விட்டீர்கள். இதற்காக விசேஷமாக எந்த சக்தி தேவையாக இருக்கிறது? தன்னை மாற்றம் செய்யும் சக்தி தேவையாக இருக்கிறது. ஒருவேளை மாற்றம் செய்யும் சக்தி இருக்கிறது என்றால், எங்கே இருந்தாலும் வெற்றி அடைவீர்கள். எப்பொழுதும் சுயமாற்றத்திற்கான லட்சியத்தை வையுங்கள். மற்றவர்கள் மாறினால் நான் மாறுவேன் என்று அப்படி இருக்கக்கூடாது. மற்றவர்கள் மாறினாலும், மாறாவிட்டாலும் நான் மாற வேண்டும், முதலில் செய்பவரே 'அர்ஜுன்' அப்படி நான் ஆக வேண்டும். எப்பொழுதும் மாற்றம் செய்வதில் முதலில் நான் எப்பொழுது இதில் 'முதலில் நான்' என்று செய்வீர்களோ அப்பொழுது உங்களுடையது முதல் எண்ணாக ஆகி விடும்.

தன்னை மோல்ட் செய்வது (திருத்திக் கொள்வது) என்றால் ரியல் கோல்ட் (உண்மையான தங்கம்) ஆவது. மற்றவர்களை மோல்ட் செய்வது என்றால் கலப்படமான கோல்ட் ஆவது அப்படி நீங்கள் அனைவருமே ரியல் கோல்ட் ஆக இருக்கிறீர்களா?ரியலுக்கு மதிப்பு இருக்கும். கலப்படத்திற்கு மதிப்பு குறைந்து விடுகிறது. எனவே தன்னை

எப்பொழுதும் உண்மையான தங்கத்தின் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள்.

2) பிறந்ததிலிருந்தே வைஷ்ணவன் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பது! எந்தக் குழந்தைகள் பிறந்ததிலிருந்தே விசேஷமாக எந்தவொரு பலவீனத்தையும் தொடவே இல்லை என்றால், அவர் பிறந்ததிலிருந்தே வைஷ்ணவர் ஆனார். ஒரு சில குழந்தைகள் பிறந்ததிலிருந்தே சாத்வீக சம்ஸ்காரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். சிலர் ரஜோகுண சாத்வீகமானவர்களாக ஆகிறார்கள். சிலர் தமோகுணியிலிருந்து ரஜோகுணியாக ஆகிறார்கள், சிலர் மூன்றிலும் கலப்படமானவர்களாக இருக்கிறார்கள். பிறந்ததிலிருந்தே வைஷ்ணவன் என்றால் எப்பொழுதும் பாதுகாப்பாக இருப்பது.

3) மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருப்பதினால் வீணானவையின் கணக்கு முடிவடைதல்! அனைவரும் தன்னை பல கோடி மடங்கு பாக்கியம் நிறைந்தவர் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு எண்ணம் மற்றும் காரியத்தை செய்து கொண்டே இருக்கிறீர்களா? உயர்ந்த எண்ணம், வார்த்தை மற்றும் செயலின் கூடவே விணானவை மற்றும் பயனுள்ளவை இரண்டுமே சேர்ந்து இருக்கவில்லையே? இந்த நேரம் வீணானவை, அடுத்த நேரம் பயனுள்ளவை அந்த மாதிரியான விளையாட்டு நடந்து கொண்டிருக்கவில்லையே? வீணானவை ஒரு நொடியில் பல மடங்கு நஷ்டத்தை ஏற்படுத்திவிடுகிறது. பயனுள்ளது ஒரு விநாடியில் பல மடங்கு வருமானத்தைத் தருகிறது. ஒரு நொடியின் வீணானது கூட வருமானத்தில் மிகுந்த நஷ்டத்தை ஏற்படுத்தி விடும். எப்படி வருமானத்தின் கணக்கு சேமிப்பாகிறதோ அதே போல் நஷ்டத்தின் கணக்கும் சேமிப்பாகிறது. நஷ்டத்தின் கணக்கு அதிகமாக இருக்கிறது என்றால் வருமானம் அதில் மறைந்து விடுகிறது. அப்படி வீணானவை முடிந்து விட்டதா அல்லது இப்பொழுது கூட உடன் இருக்கிறதா? எப்பொழுது மூன்று காலங்களின் நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால் வீணானவை சுலபமாகவே முடிவடைந்து விடும். எப்பொழுது மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் இருந்து கீழே வந்து ஒரு காலத்தைத் தெரிந்தவராகி காரியம் செய்கிறீர்களோ அப்பொழுது வீணானவை உருவாகிறது. அப்படியானால் நீங்கள் யாராக

இருக்கிறீர்கள்? மூன்று காலங்களையும் தெரிந்தவரா அல்லது ஒரு காலத்தை மட்டும் தெரிந்தவரா? எப்பொழுதும் மூன்று காலங்களையும் தெரிந்த நிலையில் நிலைத்திருந்தீர்கள் என்றால், எப்பொழுதும் வெற்றி அடைபவர்களாக இருப்பீர்கள். புரிந்ததா?

யார் எப்பொழுதும் ஆடாத அசையாதவராகி உயர்ந்த பங்கை செய்பவரோ அவரைத் தான் விரேஷ பாத்திரம் ஏற்று செய்பவர் என்று அழைக்க முடியும். நீங்கள் அப்படி விசேஷ பாத்திரம் ஏற்று செய்யவர்களா அல்லது சாதாரணமானவர்களா? விசேஷ பாத்திரம் ஏற்று செய்பவர்களின் விசேஷ குணமாவது: சுய சேவை மற்றும் உலக சேவை இரண்டின் சமநிலை இருப்பது.

4) உடல் மற்றும் உடலின் உறவுகளிலிருந்து பற்றுதலை வென்றவராக ஆகுங்கள்! பழைய உலகில் இருந்து கொண்டே தன்னை சங்கமயுக பிராமணன் என்று புரிந்து நடக்கிறீர்களா? சங்கமயுக பிராமணன் கலியுக உள் உணர்விலிருந்து விலகி இருக்கிறார். எனவே அவருடைய கண் பழைய உலகின் பக்கம் ஒருபொழுதும் செல்ல முடியாது. பழைய உலகம். பழைய உடல் அல்லது உறவினர் யார் பக்கமும் ஈர்ப்பு இருக்க வேண்டாம். பொதுவாகவே அரசாங்கத்தின் பாஸ்போர்ட் இல்லாமல் யாராவது வெளிநாட்டிற்கு சென்று விட்டார் என்றால், அவரை கைதி ஆக்கி விடுவார்கள். அதே போல் இங்கேயும் எப்பொழுது தந்தையின் அனுமதி இல்லை என்றால், ஒருவேளை அனுமதியின்றி சென்றீர்கள் என்றால் மாயா கைதி ஆக்கி விடுகிறது. ஒருபொழுதும் உடலின் உறவின் நினைவோ வரவில்லையே? பற்றுதலை வென்றவராக ஆகி விட்டீர்களா? ஒருவேளை கொஞ்சமாவது பற்றுதல் இருக்கிறது என்றால் எப்படி முதலை முதலில் லேசாக பிடிக்கும் பிறகு முழுமையாக கவ்விக் கொள்ளும். அதே போல் மாயாவும் அனைத்தையும் பிடித்து விடுகிறது. எனவே கொஞ்சம் கூட பற்றுதல் இருக்க வேண்டாம். எப்பொழுதுமே பற்றுதல் இல்லாதவராக இருங்கள்.

5) சேவாதாரி சகோதர சகோதரிகளுடன்! அனேக ஜென்மங்களுக்கான வருமானத்தை சேமித்துக் கொண்டே செல்கிறீர்களா? மதுபன் என்றால் வரதான பூமி வரதான பூமியிலிருந்து வரதானங்களின் பையை நிரப்பிச் செல்கிறீர்களா? அனேக பிறவிகளுக்காக சேமிப்பு செய்திருக்கிறீர்களா?

இங்கே உள்ள சூழ்நிலை, இங்கே உள்ள அனுபவத்தை எப்பொழுதும் உடன் வைத்துக் கொள்வீர்களா அல்லது ஒரு வருடம், அரை வருடம் வரை உங்களுடன் இருக்குமா? எப்பொழுதும் இதே சூழ்நிலையை நினைவில் வைத்துக் கொண்டே தன்னை சக்திசாலி ஆக்க வேண்டும். சூழ்நிலை எப்படியாக இருந்தாலும், நினைவு சக்திசாலியாக இருக்கிறது என்றால் சூழ்நிலையை மாற்றம் செய்து விடுவீர்கள். அந்த மாதிரி மகாவீரன் ஆகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது கொஞ்ச காலத்திற்குப் பிறகு 'மாயா வந்து விட்டது' என்று எழுதுவீர்களா? சூழ்நிலையை நீங்கள் மாற்றுபவர்களேயன்றி, சூழ்நிலையில் மாறுபவர்கள் அல்ல. அனைத்து மகாவீரர்களும் தன்னுடைய தொடர்பின் வண்ணம் என்ற பாதிப்பை மற்றவர்கள் மேல் ஏற்படுத்திக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எங்கே சென்றாலும் அங்கே ஒளி வீசும் ஜோதியின் காரியம் செய்யும். எப்பொழுதும் விழித்திருப்பவர்கள் மற்றவர்களையும் எழுப்புவார்கள்.

**6) வெளிநாட்டு சகோதர சகோதரிகளுடன்!** அனைவரும் தன்னை லைட் ஹவுஸ் என்று நினைக்கிறீர்களா? லைட் ஹவுஸ் அனைவருக்கும் வழிகாட்டும் காரியம் செய்கிறது. அப்படி நான் லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவு ஆகிச் சென்று கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? அலைந்து கொண்டிருக்கும் எவ்வித ஆத்மாக்களுக்கும் சுலபமாகவே யதார்த்த இலக்கை காண்பிக்கச் சென்று கொண்டிருக்கிறீர்கள். இதற்காக விசேஷமாக இரண்டு விஷயங்களை கவனத்தில் வைக்க வேண்டும். ஒன்று, எப்பொழுதும் பகுத்தறியும் சக்தியை கடைபிடித்து ஆத்மாவின் விருப்பத்தை பகுத்தறிய வேண்டும். யார் நாடித்துடிப்பை தெரிந்திருக்கிறாரோ அவரைத் தான் தகுதியான டாக்டர் என்று கூறலாம். அப்படி பகுத்தறியும் சக்தியை எப்பொழுதும் உபயோகம் செய்து கொண்டே இருங்கள். இன்னொரு விஷயம் எப்பொழுதும் தன்னிடம் அனைத்து பொக்கிஷங்களின் அனுபவத்தை நிலைத்திருக்க வைக்க வேண்டும். அனைத்து பொக்கிஷங்களின் அனுபவம் நிறைந்தவர் மற்றவர்களுக்கும் சுலபமாக அனுபவம் செய்விக்க முடியும். எனவே எப்பொழுதுமே சொல்ல வேண்டும் என்றில்லாமல் அனுபவம் செய்விக்க வேண்டும் என்ற லட்சியத்தை வைக்க வேண்டும். அப்படியானால் அனைவரும் அனுபவம் நிறைந்தவர்களாகி சென்று கொண்டிருக்கிறீர்களா? வெறும்

பேச்சாளர் அல்ல, அனுபவம் நிறைந்தவர். அனைத்து உறவுகள் மற்றும் அனைத்து சக்திகளின் அனுபவம் நிறைந்தவர். அப்படியானால் உங்களுடைய பட்டம் என்னவாக ஆகி விடும்? சக்திகளை அனுபவிக்கும் பட்டமாக மாஸ்டர் சர்வ சக்திவான் மற்றும் குணங்களை அனுபவிக்கும் குணம் நிறைந்தவர் என்ற பட்டம். அனைத்து உறவுகளையும் அனுபவிக்கும் அன்பு நிறைந்தவர் என்ற பட்டம். இப்படி எத்தனை பட்டங்கள் ஆகி விட்டன. இந்த அனைத்து பட்டங்களையும் எடுத்துச் சென்று கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? எப்படி அந்த வெளியுலக ஞானத்தைப் படிப்பவர்களுக்கு அல்லது ஏதாவது துறையில் காரியம் செய்பவர்களுக்கு ஏதாவது மெடலை பெற்றுக் கொண்டே இருக்கிறார்கள் என்றால் உங்களுக்கு எத்தனை மெடல்கள் கிடைத்திருக்கின்றன? அனைத்து மெடல்களையும் பெற்று விட்டீர்களா? எவ்வளவிற்கு அதிகமான மெடல்கள் இருக்குமோ அந்த அளவு அனைவரின் கவனம் செல்லும் இல்லையா? அதே போல் உங்களுடைய நெற்றியிலிருந்து, கண்களிலிருந்து இவர் அனைத்து பிராப்தி சொரூபமானவர் என்று தென்பட வேண்டும். அந்த மாதிரி ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? நல்லது.

வரதானம்: அனைவருக்காக நல்லுணர்வு மற்றும் உயர்ந்த பாவனையை தாரணை செய்யக்கூடிய அன்னப்பறவை புத்தி உடைய புனித அன்னப்பறவை ஆகுக!

அன்னப்பறவை புத்தி என்றால் எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவிற்காக உயர்ந்ததாக மற்றும் நல்லதையே நினைப்பவர். முதலில் ஒவ்வொரு ஆத்மாவின் உணர்வை பகுத்தறிபவர். பிறகு தாரணை செய்பவர். ஒருபொழுதும் புத்தியில் எந்த ஆத்மாவிற்காகவும் தீய மற்றும் சாதாரண உணர்வுகள் தாரணை ஆக வேண்டாம். எப்பொழுதும் நல் உணர்வு மற்றும் நல்ல பாவனை வைப்பவர் தான் புனித அன்னப்பறவை ஆவார். அவர் எவரேனும் ஆத்மாவின் தீய விஷயங்களைக் கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும் இருக்கிற போதிலும் தீயவற்றை நன்மை பயக்கும் உள்உணர்வில் மாற்றி விடுவார். அவருடைய பார்வை ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் உயர்ந்த, சுத்தமான, அன்பானதாக இருக்கும்.

**சுலோகன்: அன்பால் நிரம்பிய அந்த மாதிரி கங்கை ஆகுங்கள் அதன் மூலம் உங்களிடமிருந்து அன்பின் கடல் தந்தை தென்படட்டும்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 04.02.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாக்கிய விதாதா பாபா மற்றும் பாக்கியசாலி குழந்தைகள்!

இன்று ஞான வள்ளல் பாக்கியத்ததை வழங்கும் வள்ளல் பாபா குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். மிக உயர்ந்த ஆத்மாக்களின் பாக்கியம் எவ்வளவு உயர்ந்தது. மேலும் எப்படி உயர்ந்தது. தாங்கள் அனைவரும் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்கும் போது 6-சிறப்பான விஷயங்களைக் கூறுகிறீர்கள், அதன் மூலமாக பாபாவின் அறிமுகத்தைத் தெளிவு படுத்துகிறீர்கள். இந்த 6-விஷயங்களை ஆத்மா அறிந்துக் கொண்டால் உயர்ந்த பதவியைப் பெற முடியும். நிகழ்காலம் மற்றும் எதிர் காலம், இரண்டிலும் அனைத்து பிராட்திகளுக்கும் அதிகாரி ஆக முடியும். இவ்வாறு பாப்தாதா கூட குழந்தைகளின் பாக்கியத்தை 6-விஷயங்களின் ஆதாரத்தில் பார்த்துக் கொண்டிருந்தார். 6-விஷயங்களை நன்கு அறிந்திருக்கிறீர்களா?

உயர்ந்த ஆத்மாக்களாகிய தங்களின் பெயருக்கு கூட பாக்கியம் இருக்கிறது. தங்களின் பெயரை இப்போது வரை உலகத்தில் உள்ள ஆத்மாக்கள் வர்ணிக்கிறார்கள். பிராமணன் குடுமியை போன்ற என்று. தங்களின் பிராமணன் என்ற பெயரினால் இன்று பெயருக்கு பிராமணன் எனப்படுபவர்கள், கடைசி நேரம் வரை கூட உயர்ந்தவர்கள் என போற்றப்படுகிறார்கள். இப்போதோ வேலை மாறி விட்டது ஆனால் பெயருக்கு மரியாதை கிடைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறே பாண்டவ சேனையரும். இன்று வரை கூட இந்த பாண்டவர் என்ற பெயரினால் மனச்சோர்வு அடைந்த ஆத்மா தனக்கு உற்சாகத்தைக் கொடுத்துக் கொள்கிறது. அதாவது பஞ்ச பாண்டவர்களுக்குச் சமமாக பாபாவை உடன் வைத்திருப்பதால் வெற்றியாளர் ஆகி விடுவார்கள். சிவராக இருந்தாலும் பரவாயில்லை. பாண்டவர்கள் சதா வெற்றியாளராக இருக்கிறார்கள். நாமும் வெற்றியாளர் ஆக முடியும்.

இவ்விதமாகவே கோப கோபிகைகள். இன்று கூட கோப் கோபிகைகளின் மகிமை செய்யும் போது குஷி அடைகிறார்கள். பெயரைக் கேட்கும் போதே அன்பில் மூழ்கிப் போகிறார்கள். இவ்விதமாக தங்களின் பெயருக்கும் கூட பாக்கியம் இருக்கிறது.

ரூபத்திற்கும் பாக்கியம் இருக்கிறது -சக்திகளின் ரூபத்தில் இது வரை பக்தர்கள் தரிசனத்திற்காக வெயில் குளிரை பொறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயோ ஓய்வாக இருக்கிறீர்கள். அவர்கள் ஆகாயம், மற்றும் பூமிக்கிடையில் நின்றுக் கொண்டே தவம் செய்கிறார்கள். எனவே சக்திகளின் ரூபத்தில் தேவி தேவதைகளின் ரூபத்தில் பூஜைக்குரியவராகக் கூடிய பாக்கியம் இருக்கிறது. இரண்டு ரூபத்திலும் பூஜைக்குரியவர் ஆகிறீர்கள். எனவே ரூபத்திற்கும் கூட மகிமையும் பூஜையும் இருக்கிறது. சிறப்பு பூஜையின் பாக்கியம் இருக்கிறது.

தங்களின் குணங்களுக்கும் பாக்கியம் இருக்கிறது -இன்று வரை கீர்த்தனை ரூபத்தில் வர்ணனை செய்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களின் குணங்களின் பாக்கியத்தின் தாக்கம் அல்ப காலத்திற்குப் புகழ் பாடுபவர்களுக்கு கூட அமைதி மற்றும் குஷி, ஆனந்தத்தின் அனுபவம் ஏற்படுகிறது என வர்ணனை செய்கிறார் கள். இதுவே குணங்களின் பாக்கியம் ஆகும். அடுத்து செல்லுங்கள்.

கடமையின் பாக்கியம் -இன்று வரை வருடம் முழுவதும் வித விதமாக உற்சவங்களைக் கொண்டாடு கிறார்கள். தாங்கள் சிரேஷ்ட ஆத்மாக்கள் பல்வேறு விதமான சாதனைகள் மூலமாக உற்சாகத்தைக் கொடுத்துள்ளீர். ஆகவே, கடமையின் பாக்கியத்தின் அடையாளமாக விழா கொண்பாடுகிறார்கள். அடுத்து...

வசிக்கும் இடம் -வசிக்கும் இடம் என்றால் இருக்கக் கூடிய இடம் அதனுடைய அடையாளம் தீர்த்த ஸ்தலம் ஆகும். தங்கள் இடத்திற்கு கூட எவ்வளவு பாக்கியம் இருக்கிறது. அந்த ஸ்தலம் தீர்த்த ஸ்தலமாகி விடுகிறது. அந்த மண்ணிற்கு கூட பாக்கியம் இருக்கிறது. அந்த தீர்த்த ஸ்தலத்தின் மண்ணை கூட நெற்றியில் வைக்கிறார்கள் என்றால்

தன்னை பாக்கியசாலி என நினைக்கிறார்கள். அந்த இடத்திற்கும் பாக்கியம் இருக்கிறது.

இந்த சங்கமத்தின் நேரத்தைப் பற்றிய பாக்கியத்தின் வர்ணனை குறிப்பாக அமிர்த வேளை ரூபத்தில் பாடப்படுகிறது. அமிர்த வேளை என்றால் அமிர்தம் மூலமாக அமரர்களாக மாறக் கூடிய நேரம். கூடவே தர்ம யுகம், புருஷோத்தம யுகம். மாலை நேரம் கூட உயர்ந்த பாக்கியமாக ஏற்றுக் கொள்கிறார்கள். நேரத்தைப் பற்றிய பெருமைகள் அனைத்தும் இச்சமயத்தில் தங்களின் பெருமைகள் ஆகும். உங்களுடைய உயர்ந்த பாக்கியம் புரிந்ததா?

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் பாக்கியத்திலும் விஷேசமாக இந்த 6-விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். இந்த 6 விதமான பாக்கியமும் எந்த சதவீதத்தில் உருவாகி இருந்தது? தங்களின் உயர்ந்த பெயரின் நினைவில் எது வரை இருக்கிறீர்கள்? எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள்? மேலும் எந்த நிலையில் இருக்கிறீர்கள்? தங்களின் தெய்வீக குணங்கள் நிறைந்த தேவதா ரூபம் அல்லது மாஸ்டர் சர்வ சக்திவான் சக்தி ரூபம் இரண்டிலும் சக்தி சொரூபம் எதுவரை இருக்கின்றது? இப்படி ஒவ்வொரு விஷயத்தின் ரிசல்டைப் பார்த்தார். சூட்சும வதனத்தில் சோதித்து பார்ப்பதில் உழைக்க வேண்டியதில்லை. எண்ணம் என்ற பொத்தானை அழுத்தியதும் ஒவ்வொருவரின் மொத்த விஷயமும் வெளிப்படுகிறது. சாகார உலகத்தைப் போன்று கஷ்டப்பட வேண்டியதில்லை. இச்சமயம் தோன்றிக் கொண்டிருக்கும் விஞ்ஞானத்தின் சாதனங்களின் நுணுக்கமான வடிவம் முதலில் இருந்தே அங்கே இருக்கிறது. இந்த டி.வி. இப்போது தோன்றியது ஆனால் குழந்தைகளுக்கு சூட்சும வதனத்தில் ஸ்தூலவதனத்தின் காட்சி ஸ்தாபனையின் ஆரம்பத்திலேயே காண்பிக்கபட்டு அனுபவம் செய்விக்கப்பட்டது. விஞ்ஞானிகள் உழைக்கக் கூடிய குழந்தைகள். இப்போது நட்சத்திரங்கள் வரை உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். சந்திரனில் ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் உண்மையில் நட்சத்திரம் தான் ஆனால் குழந்தைகளாகிய தாங்கள் அமைதியின் சக்தியினால் நட்சத்திரங்களையும் கடந்து பரந்தாமத்தின் அனுபவத்தை ஆரம்பத்திலிருந்து செய்துக் கொண்டிருக்கிறீர்கள். இருப்பினும்

ஒவ்வொரு குழந்தைக்கும் உழைப்பின் பலன் நிச்சயம் கிடைக்கிறது. அவர்களுக்குக் கூட உலகத்தில் டெயர், புகழ், மரியாதை, மற்றும் வெற்றியின் அல்பகால குஷி கிடைக்கிறது, நாடகத்திற்குள் பரவசமாகி இருக்கின்றனர். அதாவது நடிப்பின் வசமாக இருக்கின்றனர். தேவதைகளுக்கு முன்பு இயற்கை வைரம், ரத்தினங்களின் தட்டுக்களை நிரப்பிக் கொண்டு வந்தது என பாடப்பட்டிருக்கிறது. பூமி மற்றும் கடல் தங்களுக்காக நாலாபுறமும் பரவி இருக்கின்ற தங்கம், முத்து, வைரங்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்ப்பதற்கு கருவியாக இருக்கும். இதற்குத் தான் தட்டுகளை நிரப்பிக் கொண்டு வந்தனர் என்று கூறப்படுகிறது. சிதறிக் கிடக்கும் பொருள்கள் தட்டில் ஒன்று சேர்க்கப்படுகிறது அல்லவா, எனவே இந்த பாரதம் மற்றும் அருகில் உள்ள இடங்கள் தட்டாகி விடும், சேவகனாகி உலகத்தின் அதிபதிகளுக்கு ஏற்பாடுகளை செய்து தங்களுக்கு முன்பு இருப்பார்கள். இவ்வாறே தேவதைகளுக்கு அனைத்து ரித்தி சித்திகளும் சேவையாளர் ஆகின்றது. விதவிதமாக சாதனங்கள் மூலமாக வெற்றி அதாவது சித்தி அடைகிறார்கள், இந்த சித்திகள் என்றால் விஞ்ஞானத்தின் நுணுக்கமானரி்ஃபைன வடிவம், வெற்றி ரூபம், சித்தி ரூபத்தில் தங்களின் சேவையாளர் ஆகின்றது. இப்போது விபத்துக்களும் இருக்கிறது. பிராப்தியும் இருக்கிறது ஆனால் நுணுக்கமான சித்தி ரூபத்தில் துக்கத்தின் காரணங்கள் முடிந்து சதா சுகம் மற்றும் வெற்றி ரூபமாக மாறுகின்றது. பல்வேறு துறையினர்கள் தங்களின் ஞானத்தின் சித்தி கண்டுபிடிப்பின் சித்தி, ஆகியவற்றை தங்களின் சேவையில் ஈடுபடுத்துவார்கள். இதற்குத் தான் இயற்கையும் வேலைக்காரனாகவும், அனைத்து ரித்தி சித்திகளும் பிராப்தியாகவும் கிடைக்கிறது என்று கூறப்படுகிறது. கட்டளை இட்டதும் காரியம் நடந்தது. இதற்கு சித்தி சொரூபம் என்று பெயர். உங்களின் பாக்கியம் எவ்வளவு பெரியது என்று புரிந்ததா? பாபாவின் பாக்கியத்தை ஆத்மாக்கள் வர்ணனை செய்கிறார்கள் ஆனால் தங்களின் பாக்கியத்தை பாபா வர்ணனை செய்கிறார், இதை விட பெரிய பாக்கியம் கிடைத்ததில்லை, கிடைக்காது. இப்போது அனைவருக்கும் பாக்கியத்தின் நட்சத்திரம் தெரிந்து கொண்டிருக்கிறது. இப்போது எப்படி தெளிவாகத் தெரிகிறதோ அவ்வாறே எப்போதும் தங்களின் பாக்கியத்தின் நட்சத்திரம் மின்னுவதை பாருங்கள்.

இப்படிப்பட்ட உயர்ந்த பாக்கியசாலி, அனைத்து ஆத்மாக்களின் பாக்கியத்தை உருவாக்குவதற்கு நிமித்தமாக இருக்கக் கூடிய ஆத்மாக்கள், சதா இயற்கையை வென்றவராகி இயற்கையை சேவையாளராக மாற்றக் கூடிய, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆகி சக்திகளின் ஆதாரத்தில் அனைத்து ரித்தி சித்திகளை அடையக் கூடிய, சதா சர்வ சக்திவான் ஆகி விஷ்வ கல்யாண்காரி ஆகி, உலகத்திலுள்ள அனைத்து ஆத்மாக்களுக்கு மகாதானமும் வரதானமும் வழங்கக் கூடிய ஞான வள்ளல் பாக்கிய விதாதாவின் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

நிமித்த சேவாதாரி டீச்சர் சகோதரிகளுக்கு முன்பு: வாயுமண்டலத்தை சக்திசாலியாக்குவது தான் எல்லையற்ற சேவை! சேவாதாரி குழந்தைகளின் சிறப்பம்சமே சேவை தான்- தானும் நிரம்பி இருத்தல் மற்றும் அனைவரையும் நிரப்புதல், சக்தி சொரூபமாக இருத்தல், சக்தி சொரூபமாக மாற்றுதல். இந்த காரியத்தில் பிஸியாக உள்ளீர்கள், ஞான பாடம் எடுத்தல், சொற்பொழிவு ஆற்றுதல், இவைகளை 7-நாள் மாணவர்கள் கூட செய்து விடுவார்கள். எந்த காரியத்தை யாருமே செய்ய முடியாதோ அதை தாங்கள் செய்ய வேண்டும். தங்களை விஷேச காரியத்திற்காக நிமித்தமாக்கி இருக்கிறார். பாபா மூலமாக கிடைத்திருக்கின்ற சிறப்பம்சங்களை பலமற்ற ஆத்மாக்களுக்கு தன்னுடைய சுபபாவனை மற்றும் உயர்ந்த விருப்பத்தால் நிரப்புவதே விஷேச காரியம் ஆகும். தங்களின் காரியமே எப்போதும் சுப பாவனை மற்றும் உயர்ந்த விருப்பத்தின் சொரூபமாக மாறுதல். உயர்ந்த பாவனை என்றால் மற்றவர்கள் மீது பாவனை வைத்து வைத்து அவர்களின் பக்கமாக சென்று விடுதல் என்பது கிடையாது. இந்த தவறை செய்ய வேண்டாம். ஏனென்றால் போகப்போக தலைகீழாக செய்துச் விடுகிறார்கள். பரவணையை உடையவர் ஆவது என்றால், அவர்களின் பக்தர்களாக ஆவதாகும். அதாவது அவர்களின் குளங்களுக்கு அர்ப்பணம் ஆகி விடுதல், என்றால் பக்தராகி விடுதலாகும். எனவே, சுப பாவனை கூட எல்லையற்றதாக இருக்கட்டும். ஒருவர் மீது மட்டும் தனி பாவனை வைப்பது கூட எல்லைக்குட்பட்டதாகும். எல்லைக்குட்பட்டதில் நஷ்டம் இருக்கிறது. எல்லைக்கப்பாற் பட்டதில் இல்லை. இச்சமயம் குழந்தைகளாகிய உங்களின் கடமை என்னவென்றால் பலமற்ற ஆத்மாக்களை தாங்கள்

அடைந்துள்ள சக்திகளின் ஆதாரத்தில் தூய்மையான அதிர்வுகள், வாயுமண்டலத்தின் மூலமாக சக்திசாலியாக மாற்றுதல் ஆகும். இந்த செயலில் எப்போதும் பிஸியாக இருக்கிறீர்களா? கோர்ஸ் எடுக்கும் நேரம் இப்போது போய்விட்டது. இப்போது ஃபோர்ஸின்(வேகம்) கோர்ஸ் எடுக்க வேண்டும். கோர்ஸ் எடுப்பதற்கு மற்றவர்கள் கூட தயாராகி விட்டனர். ஆகவே தாங்கள் வாயுமண்டலத்தை சக்திசாலியாக மாற்றக் கூடிய சேவை செய்யுங்கள். ஏனென்றால் உலகத்தின் வாயுமண்டலம் ஒவ்வொரு நாளும் மாயாவியாக மாறிக் கொண்டே இருக்கும். மாயை கூட கடைசி நேரத்தில் தன்னுடைய மாய மந்திரம் மற்றும் தந்திரத்தைப் பயன்படுத்தும். தாக்கும் அல்லவா? அப்படியே விடை பெறாது. ஆகவே, இப்படிப்பட்ட வாயுமண்டலத்திற்கு இடையில் தன்னுடைய சேவை நிலையங்களின் வாயுமண்டலத்தை மிகவும் அவ்யக்தமாகவும் சக்திசாலியாகவும் மாற்றுங்கள். தங்களின் ஜட கோவில்களின் வாயுமண்டலமானது எப்படிப்பட்ட ஆத்மாவையும் தன் பக்கம் இழுக்கிறது அல்ப காலத்திற்கு அசாந்தியிலிருந்து சாந்தம் அடைகிறார்கள். ஜட சிலைகள் இருக்கும் இடங்களின் வாயுமண்டலம் இவ்வாறு இருக்கும் போது சைத்தன்ய சேவை நிலையங்களின் வாயுமண்டலம் எவ்வளவு சக்திசாலியாக இருக்க வேண்டும்? இன்றைய வாயுமண்டலம் சக்திசாலியாக இருந்ததா? என்று சோதியுங்கள். யார் வந்தாலும் அவர்கள் வீணான மற்றும் உலகியல் விஷயங்களிலில் இருந்து விடுபடட்டும். போகப்போக பல்வேறு விதமான தடைகள் ஏற்படும். அல்லது தேசு உணர்வில் வருகின்றோம் என்றால் அதற்கு காரணம் வாயுமண்டலத்தில் தேக உணர்வு இருக்கிறது. ஒருவேளை அவ்யக்தமாகி விட்டால் யாராவது தேக உணர்வின் விஷயங்களை எடுத்து வந்தாலும் மாறிவிடும். ஜடக் கோவில்களில் அல்ப காலத்திற்கு மாறுகிறார்கள் அல்லவா. இது சதா காலத்தின் விஷயமாகும். ஏனென்றால் அது ஜடமாகும். இது உயிரோட்டமுடையதாகும். ஆகவே, இப்போது சொற்பொழிவு மற்றும் பட கண்காட்சிகளின் பட்டியலை மட்டும் உருவாக்காதீர், ஆனால், கூடவே சக்திசாலி வாயுமண்டலத்தையும் சோதியுங்கள்.

வாயுமண்டலத்தை சக்திசாலியாக மாற்றுவதற்கான வழி என்ன? தன்னுடைய அவ்யக்த சொரூபத்தின் சாதனை செய்ய வேண்டும். இதுவே வழியாகும். இதன் மீது அடிக்கடி கவனம் வையுங்கள். எந்த

விஷயத்தை பற்றி சாதனை செய்கிறீர்களோ அதை பற்றி முழு கவனம் இருக்கிறது அல்லவா? ஒருவேளை ஒரு காலில் நிற்பதற்காக சாதனை செய்தால் அடிக்கடி அந்த கவனம் இருக்கும். ஆகவே இந்த சாதனை என்றால் அடிக்கடி கவனம் என்ற தவம் வேண்டும். நான் அவ்யக்த பரிஸ்தா என்று சோதனை செய்யுங்கள். தானே மாறவில்லை என்றால் மற்றவர்களை எப்படி மாற்ற முடியும். பாபாவிடமிருந்து என்னென்ன சமிக்ஞைகள் கிடைக்கிறதோ அந்த சமிக்ஞைகளை புரிந்து கொண்டு சென்று கொண்டே இருங்கள். எப்படி முயற்சி செய்வது என்று இப்போது கேட்கக் கூடிய நேரம் போய்விட்டது. தாங்களே கேட்பீர்கள் என்றால் வரக்கூடியவர்கள் என்ன கூறுவார்கள். ஆகவே, விதவிதமாக முயற்சியின் யுக்திகளைக் கேட்டிருக்கிறீர்கள். அதில் ஒரு யுக்தியை தன்னுடையதாக்கிக் கொண்டால் தானும் வெற்றி அடைவீர்கள், மற்றவர்களையும் வெற்றி அடையச் செய்யலாம்.

எனவே, இப்போது என்ன செய்வேன் எப்படி செய்வேன் என்ற மொழியை நிறுத்துங்கள். முரளியில் தினந்தோறும் என்ன செய்வேன் எப்படி செய்வேன் என்ற விஷயங்களுக்குப் பதில் கிடைக்கிறது. அப்படி இருந்தும் கேட்கிறீர்கள் என்றால் முரளியை நடை முறையில் கொண்டு வருவதில் சக்தி குறைவாக இருக்கிறது. இருப்பினும் அனைத்து சேவாதாரி குழந்தைகளையும் பாப்தாதா தனக்குச் சமமான துணைவர் அதாவது நண்பர்கள் என நினைக்கின்றார். ஆகவே நண்பர்களுக்கு வாழ்த்து ஆனால் தன்னுடைய நண்பருக்கு சமமாக சதா வெற்றி மூர்த்தி ஆகுங்கள். ஒருவேளை ஒரு நண்பர் சதா வெற்றி மூர்த்தியாகவும், இன்னொருவர் மெல்ல மெல்ல செல்லக் கூடியவராக இருந்தால் கையோடு கை கோர்த்து எப்படி செல்வீர்கள்? நண்பன் என்றாலே துணைவர். பின்னால் கூடவே வரக் கூடியவர்களை நண்பன் என கூற முடியாது. பாபா குறிக்கோளுக்கு அருகில் இருக்கிறார். மேலும் குழந்தைகள் நிற்பவர்களாகவும் நடப்பவர்களாகவும் இருந்தால் அடைவதற்குப் பதிலாக பார்ப்பவர்களின் வரிசையில் வந்து விடுவார்கள். இப்படி இல்லை அல்லவா? கூடவே வரக் கூடியவர்கள் அல்லவா?

**பார்ட்டிகளிடம்: அனைவரும் தன்னை அதிர்ஷ்டசாலி என நினைக்கிறீர்களா?** எதை பார்த்தோமோ. நாம் எதை பெற்றோமோ அது

உலகத்தில் உள்ள ஆத்மாக்கள் பெற முடியாது என அனுபவம் செய்கிறீர்களா? அவர்கள் ஒரு துளிக்காக தாகத்தில் இருக்கிறார்கள் ஆனால் தாங்கள் அனைவரும் மாஸ்டர் கடலாகி விட்டீர்கள் என்றால் மிகவும் அதிர்ஷ்டசாலி அல்லவா? இவ்வாறு தனது பாக்கியத்தைப் புரிந்து கொண்டு எப்போதும் நடக்கிறீர்களா? முழு நாளும் நினைவிருக்கிறதா? அல்லது உலகப் பற்றில் மறந்து போகிறீர்களா, எந்த பொருள் தன்னுடையதோ அதை மறக்க முடியாது. தன் பொருள் மீது அதிகாரம் இருக்கிறது அல்லவா? பாபாவை தன்னுடையவராக்கி விட்டீர்கள். ஆகவே தன்னுடையவர் மீது அதிகாரம் இருக்கிறது அல்லவா. அதிகாரி ஒரு போதும் மறக்க முடியாது. நினைவில் நிரந்தரமாக இருப்பதற்கான எளிய வழி இல்லறத்தில் இருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும். விடுபட்ட விருத்தி என்றால் ஆத்மீக ரூபம் ஆகும். இப்படி ஆத்மீக ரூபத்தில் இருக்கக் கூடியவர் எப்போதும் பற்றற்றவராகவும் தந்தைக்குப் பிரியமானவராகவும் இருப்பார். எது செய்தாலும் இது வேலையே இல்லை, ஆனால் விளையாடியதைப் போன்று உணர்வார்கள். விளையாட்டில் ஆனந்தம் வருகிறது அல்லவா? ஆகவே எளிதாக இருக்கிறது. இல்லறத்தில் இருந்துக் கொண்டே விளையாடிக் கொண்டிருக்கிறீர்கள், பந்தனம் இல்லை. அன்பு மற்றும் எளிய யோகத்தின் கூடவே சக்தியையும் சேர்த்துக் கொண்டால் மூன்றின் சமநிலையால் உயரத் தாவி விடுவார்கள்.

இந்த புதிய வருடத்தில் விஷேசமாக தன்னை சாட்சாத் தந்தைக்குச் சமமாக மாற்றிக் கொண்டு நாலாப்புறங்களிலும் ஆத்மாக்களுக்கு லைட் அவுஸ், மைட் அவுஸாகி (சக்தி) வழிக் காட்டிக் கொண்டே செல்லுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் நிச்சயம் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற லட்சியம் வையுங்கள். முக்தியாக இருக்கட்டும், ஜீவன் முக்தியாக இருக்கட்டும். முக்தி வேண்டுமென்பவர்களாக இருந்தாலும் கூட அவர்களுக்கு தந்தையின் அறிமுகத்தைக் கொடுத்து முக்தியின் வரத்தை அளியுங்கள். அனைவருக்கும் மகாதாளியாகவும் வரதானியாகவும் ஆகி விடுவீர்கள். அவரவர் இடத்தில் சேவை செய்கிறீர்கள் ஆனால் இப்போது எல்லயைற்ற விஷ்வ கல்யாணகாரி ஆகுங்கள். ஒரே இடத்தில் இருந்தாலும் மனதின் சக்தி மூலமாக வாயுமண்டலம் மற்றும் அதிர்வுகள் மூலமாக உலகியல் சேவை

செய்யலாம். இப்படி சக்தி சாலி உள்ளுணர்வை உருவாக்கினால் வாயுமண்டலமும் உருவாகும்

வரதானம்: அனைத்து ஆத்மாக்களுக்கும் உண்மையான அழிவற்ற உதவியை செய்யக் கூடிய ஆதார உத்தார (முன்னேற்ற) மூர்த்தி ஆகுக!

நிகழ்காலத்தில் உலகின் நாலாபுறங்களிலும் ஏதாவது ஒரு அலைச்சல் இருக்கிறது. சில இடங்களில் மனதில் பல்வேறு விதமான டென்ஷனின் அலைச்சல் இருக்கிறது. சில இடங்களில் இயற்கையின் தமோபிர தானமான வாயுமண்டலத்தின் காரணமாக அலைச்சல் இருக்கிறது. அல்ப கால சாதனங்கள் அனைவரையும் கவலை என்ற சிதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, அல்ப காலத்தின் ஆதாரம், பிராப்தி, விதியினால் களைத்து உண்மையான உதவியைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆதாரமான மற்றும் முன்னேற்ற கூடிய மூர்த்தி ஆத்மாக்களாகிய தாங்கள் அவர்களுக்கு உயர்ந்த அழிவற்ற பிராப்திகளின் உண்மையான, அழிவற்ற உதவியை அனுபவம் செய்வியுங்கள்.

சுலோகன்: நேரம் என்பது விலை மதிப்பற்ற பொக்கிஷமாகும். ஆகவே, அதை இழப்பதற்குப் பதிலாக உடனடியாக தீர்மானித்து வெற்றி அடையுங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 06.02.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அசரீரி ஆவதற்கான சுலபமான விதி!

இன்று சென்ற கல்பத்து மீண்டும் கண்டெடுக்கப்பட்ட அருமையான மிகச் செல்லமான, அன்பான மேலும் சகடோகி சக்தி சொரூப குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறோம். பாப்தாதா தனது சகயோகி குழந்தைகளுடன் தான் இருக்கிறார். சகயோகம் மற்றும் அன்பின் கயிறு அறுந்து போகாமல் எப்பொழுதும் அழியாததாக இருக்கிறது. இன்று வதனத்தில் பாப்தாதா மிக மிகப் பிரியமான குழந்தைகளின் அன்பின் மாலையைச் கோர்த்துக் கொண்டிருந்தார். அனைவரும் அன்பானவர்கள் தான் இருந்தாலும் வரிசைக்கிரமம் என்று தான் சொல்லுவோம். இன்று ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தின் ஆதாரத்தில் வரிசை எண் தயார் செய்து கொண்டிருந்தோம். அனேசு குழந்தைகளில் அவ்வளவு அதிகமாக விசேஷங்களை பார்த்தோம், அவர்கள் முற்றிலும் தந்தைக்குச் சமமாக நெருக்கமான ரத்தினமாக பார்த்தோம். சில குழந்தைகள் விசேஷங்களை நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் கடின முயற்சி செய்பவர்களையும் பர்த்தோம். அந்த கடின உழைப்பைப் பார்த்து தந்தைக்கும் இரக்கம் வருகிறது. என்னுடைய குழந்தைகள் மேலும் கடின உழைப்பு செய்பவர்கள். ஏனென்றால் அசரீரி ஆவதில் தான் கடின உழைப்பு செய்வதை பார்த்தோம்.

அசரீரி ஆத்மாவிற்கு அசரீரி ஆவதில் ஏன் கடின உழைப்பு செய்ய வேண்டியதிருக்கிறது? என்று பாப்தாதா அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். 84-பிறவிகள் உடல் என்ற ஆடை அணிந்து வாழ்க்கைப் பங்கை செய்த காரணத்தினால், பங்கைச் செய்து, செய்து உடல் உள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள் -என்று பிரம்மாபாபா கூறினார். சிவபாபா கூறினார் -பங்கைச் செய்தார்கள் ஆனால் இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் நேரம் எது?' நேரத்தின் நினைவுக்கு ஏற்றபடி செய்யும் காரியமும் இயல்பாக அந்த மாதிரி ஆகி விடுகிறது. இந்தப் பயிற்சியோ

இருக்கிறது தான் இல்லையா? இப்பொழுது தன்னுடைய பங்கை முடித்து வீட்டு வீடு செல்ல வேண்டும் என்று தந்தை கூறினார். ஏற்றுச் செய்த பாகத்தின் வேஷத்தையோ அதாவது ஆடையை விட வேண்டும் இல்லையா? வீடு செல்ல வேண்டும் என்றாலும் இந்த பழைய உடலை விட வேண்டும். ராஜ்யத்தில் அதாவது சொர்க்கத்தில் செல்ல வேண்டும் என்றாலும் இந்தப் பழைய உடலை விட வேண்டும். அப்படி எப்பொழுது கண்டிப்பாக செல்லவே வேண்டும் என்றால் மறப்பது ஏன் கடினமாக இருக்கிறது? செல்ல வேண்டும் என்ற இதை மறந்து விடுகிறீர்களா என்ன? நீங்கள் அனைவருமோ செல்வதற்குத் தயார் நிலையில் இருப்பவர்கள் தான் இல்லையா? அல்லது இப்பொழுது கூட சில கயிறுகள் கட்டப்பட்டிருக்கின்றனவா? தயார் நிலையில் இருக்கிறீர்கள் தான் இல்லையா? இதுவோ பாப்தாதா சேவைக்காக நேரம் கொடுத்திருக்கிறார்கள். சேவாதாரியின் பங்கைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே இந்த உடலின் பந்தனம் இல்லையே? மேலும் இந்த ஆடை (உடல்) மிகவும் இருக்கமாக இல்லையே? என்று உங்களை நீங்களே பாருங்கள். இருக்கமான ஆடையை விரும்புவது இல்லை தானே? ஆடை இருக்கமாக இருந்தது என்றால் தயார் நிலையில் இருப்பவராக இருக்க மாட்டீர்கள். பந்தனமுக்த் என்றால் இருக்கமற்ற, இலகுவான ஆடை, கட்டளை கிடைத்தவுடன் ஒரு நொடியில் சென்று விட்டார். அந்த மாதிரி பந்தனமுக்த், யோக சொரூபமாக ஆகி இருக்கிறீர்களா? எப்பொழுது ஒரு தந்தையைத் தவிர இன்னொருவர் யாருமில்லை என்ற உறுதிமொழி இருக்கிறது என்றால், பந்தனமுக்த் ஆகி விட்டீர்கள் இல்லையா? அசரீரி ஆவதற்காக 4-விஷயங்களின் மீது கவனம் வையுங்கள் :

1) எப்பொழுதாவது தன்னைத் தானே மறக்க வேண்டியதாக இருந்தால், உலகத்தில் கூட ஒரு உண்மையான அன்பில் தன்னையே மறந்து விடுவார்கள். அப்படி உண்மையான அன்பு தான் மறப்பதற்கான சுலபமான வழி அன்பு உலகை மறப்பதற்கான சாதனம், உடலை மறப்பதற்கான சாதனம்.

2) இரண்டாவது விஷயம் -உண்மையான நட்பு கூட உலகை மறப்பதற்கான சாதனமாகும். ஒருவேளை இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள் என்றால் தன்னுடைய நினைவும் இருக்காது, நேரத்தின் நினைவும் இருக்காது.

3) மூன்றாவது விஷயம் -உள்ளத்தின் பாடல் ஒருவேளை யாராவது உள்ளப்பூர்வமாக பாடல் பாடுகிறார் என்றால் அந்த நேரத்தில் தன்னையும் நேரத்தையும் மறந்தவராக இருப்பார்.
4) நான்காவது விஷயம் -சரியான முறை. ஒருவேளை மிகச்சரியான முறை இருக்கிறது என்றால் அசரீரி ஆவது மிக சுலபம். முறை தெரியவில்லை என்றால் கடினமாகிறது.

அப்படி 1) அன்பு, 2) நட்பு 3) பாடல் மற்றும் 4) முறை. நீங்கள் அனைவரும் இந்த நான்கு விஷயங்களின் அனுபவிகள் தான் இல்லையா? அன்பின் அனுபவியாகவும் இருக்கிறீர்கள். தந்தை மற்றும் நீங்கள். மூன்றாமவர் யாரும் இல்லை. தந்தை கிடைத்து விட்டார் என்றால், அனைத்தும் கிடைத்து விட்டது. வேறு மிச்சம் என்ன தான் இருக்கிறது? பிரபுவின் அன்பைப் பற்றியோ பக்தர்கள் இன்று வரையிலும் கீர்த்தனை பாடிக் கொண்டே இருக்கிறார்கள். அன்பின் பாடலிலேயே தன்னையே மறந்து விடுகிறார்கள் என்றால் அன்பு வைத்து நடந்து கொள்பவர்கள் எவ்வளவு மறந்து இருப்பவர்களாக இருப்பார்கள். அன்பின் அனுபவியாகவோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? விபரீத புத்தியுடையவரிலிருந்து அன்பான புத்தியுடையவராகி விட்டீர்கள் தான் இல்லையா? அப்படி எங்கு பிரபுவின் அன்பு இருக்கிறதோ அங்கு அசரீரி ஆவது என்ன பெரிய காரியமா? அன்பின் எதிரில் அசரீரி ஆவது ஒரு விநாடியின் விளையாட்டிற்குச் சமமானது. பாபா என்று கூறினீர்கள் மற்றும் உடல் மறந்தது. பாபா என்ற வார்த்தை தான் பழைய உலகை மறப்பதற்கான அணு குண்டாகும். (மின்சாரம் தடைபட்டது) எப்படி இந்த மின்சார பொத்தான் மாறிய காட்சியைப் பார்த்தீர்கள். அதே போல் தான் நினைவின் பொத்தானும், பாபாவின் சுவிட்ச் (பொத்தான்) இயக்கப்பட்டவுடன் உடல், உடல் உலக நினைவின் சுவிட்ச் செயலிழந்து விடும். இது ஒரு நொடியின் விளையாட்டு. வாய் மூலம் பாபா என்று சொல்வதற்குக் கூட நேரம் எடுக்கும், ஆனால் நினைவில் கொண்டு வருவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? அப்படி அன்பில் இருப்பது என்றால் சுலபமாக அசரீரி ஆவது.

அப்படி மிக உண்மையான நண்பன் என்றால் சுடுகாட்டிற்குப் பிறகும் உடன் வர வேண்டும். உடலுள்ள நண்பர்கள் சுடுகாடு வரை தான் செல்வார்கள் என்றால் அவர்கள் துக்கத்தை நீக்குபவர்களாகவோ, சுகம்

கொடுப்பவர்களாகவோ ஆக முடியாது. துக்கமான நேரத்தில் கொஞ்சம் சகயோகியாக ஆக முடியும். சகயோகம் கொடுக்க முடியும் ஆனால் துக்கத்தை நீக்க முடியாது. அப்படி உண்மையான நண்பர் கிடைத்து விட்டார் இல்லையா? எப்பொழுதும் இந்த அழியாத நண்பனோடே இருந்தீர்கள் என்றால் அன்பில் கடின உழைப்பு முடிவடைந்து விடும். எப்பொழுது அன்பு செய்யத் தெரியும் என்றால் ஏன் கடின உழைப்பு செய்கிறீர்கள்? பாப்தாதாவிற்கு சில நேரம் சிரிப்பு வருகிறது. யாருக்காவது சுமையை தூக்குவதற்கான பழக்கம் இருக்கிறது என்றால், அவரை ஒரு வேலையுமில்லாமல் சும்மா அமர வைத்தீர்கள் என்றால், அவரால் முடியாது. அடிக்கடி சுமையின் பக்கம் ஓடுவார் மேலும் பெருமூச்சு வாங்குவார், பின்பு விடுவியுங்கள் என்று அழைப்பார். எனவே எப்பொழுதும் அன்பு மற்றும் நட்பில் இருந்தீர்கள் என்றால் கடின உழைப்பு முடிவடைந்து விடும். நண்பனிடமிருந்து விலகாதீர்கள். நிரந்தர துணைவனாக்கி நடந்து கொள்ளுங்கள்.

அதே போலவே பாப்தாதா மூலமாக கிடைத்திருக்கும் அனைத்து பிராப்திகளின் மகிமையை பாடலாகப் பாடிக் கொண்டே இருங்கள். தந்தையின் மகிமை மற்றும் உங்களின் மகிமையின் எத்தனை பாடல்கள் இருக்கின்றன? இந்த பாடல்களுக்கு இசையும் தானாக ஒலித்துக் கொண்டே இருக்கும். எவ்வளவிற்கு குணங்களின் மகிமையின் பாடலை பாடிக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு குஷியின் இசை சேர்ந்தே தானாக ஒலித்துக் கொண்டே இருக்கும். பாடல் பாடுபவர்களும் வந்திருக்கிறார்கள் (பரத் வியாஸ் ஆகியோர் வந்திருக்கிறார்கள்). உங்களுடைய இசையோ வேறு. இது குஷியின் இசையாகும். இது ஒருபொழுதும் கெட்டுப் போகாது, பின்பு சரி செய்ய வேண்டும் என்றும் இருக்காது. எனவே எப்பொழுகும் அந்த மாதிரி பாடலை பாடிக் கொண்டே இருங்கள். இந்தப் பாடலைப் பாடுவது அனைவருக்கும் தெரியும் தான் இல்லையா? அப்படி எப்பொழுதும் இந்தப் பாடலை பாடிக் கொண்டே இருந்தீர்கள் என்றால் சுலபமாகவே அசரீரி ஆகி விடுவீர்கள். அடுத்து, முறை சரியான முறை என்பது ஒரு நொடியின் முறை ஆகும். நான் அசரீரி ஆத்மா என்ற இது தான் அனைத்தையும் விட சுலபமான சரியான முறை ஆகும். சுலபம் தான் இல்லையா? தந்தையின் மகிமையாக கடினத்தை சுலபம் ஆக்குபவர் என்று இருக்கிறது. அதே போன்று தந்தைக்குச் சமமான குழந்தைகள்

கடினத்தை சுலபமாக ஆக்குபவர்கள். யார் உலகத்தின் கடினத்தை சுலபமாக ஆக்குபவரோ அவரே கடினத்தை அனுபவம் செய்கிறார் என்ற இது எப்படி இருக்க முடியும்? எனவே அனைவரும் எப்பொழுதும் சகஜயோகி, சங்கம யுக பிராமணர்களின் வாயிலிருந்து இது கடினமானது என்ற வார்த்தை வாயிலிருந்து என்ன, எண்ணத்தில் கூட வர முடியாது. அப்படி இந்த வருடத்திற்கான விசேஷ கவனம் 'எப்பொழுதும் சகஜயோகி. எப்படி தந்தைக்கு குழந்தைகள் மேல் இரக்கம் வருகிறது, அதே போல் தன் மேலும் இரக்கம் காட்டுங்கள் மற்றும் அனைவருக்காகவும் இரக்க மனமுடையவர் ஆகுங்கள். பட்டம் இரக்க மனமுடையவராக இருக்கிறது என்றால் உங்கள் அனைவருக்கும் தான் இல்லையா? தன்னுடைய பட்டம் நினைவில் இருக்கிறது தான் இல்லையா? ஆனால் இரக்க மனமுடையவர் ஆவதற்குப் பதிலாக ஒரு சிறிய தவறு செய்கிறீர்கள். இரக்க உணர்விற்குப் பதிலாக அகம்பாவத்தில் வந்து விடுகிறீர்கள். அப்படி இரக்கத்தை மறந்து விடுகிறீர்கள். சிலர் அகம்பாவத்தில் வந்து விடுகிறார்கள். சிலர் சந்தேகத்தில் வந்து விடுகிறார்கள். சென்றடைய முடியுமா அல்லது முடியாதா தெரியவில்லையே, இது யதார்த்த மார்க்கமா அல்லது இல்லையா அப்படி அனேக விதமான சந்தேக உணர்வில் தன் மீது சில நேரம் ஞானத்தின் மீதும் வந்து விடுகிறார்கள். எனவே இரக்க உணர்வு மாறி விடுகிறது. புரிந்ததா? மனம் உடைந்தவராக ஆகாதீர்கள் ஆனால் எப்பொழுதும் இதயத்தில் அமர்ந்திருப்பவராக ஆகுங்கள். அப்படி இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இந்த வருடத்திற்கான வீட்டுப் பாடம் கொடுக்கிறோம். சகஜயோகி ஆகுங்கள், இரக்க மனமுடையவர் ஆகுங்கள் மற்றும் இதயசிம்மாசனதாரி ஆகுங்கள். பின்பு எப்பொழுதும் பாக்கியத்தை உருவாக்கும் தந்தை அந்த மாதிரி கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு அமிர்தவேளையில் தினசரி வெற்றித்திலகம் இட்டுக் கொண்டே இருப்பார். பக்தர்களுக்கு பகவான் திலகமிட வந்தார் என்று திலகத்தின் வர்ணனையும் இருக்கிறது இல்லையா? அப்படி இந்த வருடம் கட்டளைப்படி நடக்கும் குழந்தைகளுக்கு தந்தை அவரே உங்களுடைய சேவை நிலையங்களுக்கு அதாவது தீர்த்த ஸ்தானத்தில் வெற்றித் திலகம் இட வருவார். தந்தையோ தினசரி சுற்றி வலம் வரத்தான் செய்கிறார். ஒருவேளை குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் இது அவர்களுடைய அலட்சியம்.

எப்படி தீபாவளி அன்று அங்கங்கு தீபம் ஏற்றி வைப்பார்கள், சுத்தப்படுத்தவும் செய்கிறார்கள், ஆவாஹனமும் செய்கிறார்கள். சுத்தம், பிரகாசம் மற்றும் ஆவாஹனம் அவர்கள் லட்சுமியை ஆவாஹனம் செய்கிறார்கள். மேலும் இது லட்சுமியைப் படைப்பவரின் ஆவாஹனம் ஆகும். எனவே ஜோதியை எரிய வைத்து அமர்ந்தீர்கள் என்றால் அப்பொழுது தான் தந்தை வருவார். அனேகர்களை எழுப்பவும் செய்கிறார், இருந்தும் பிறகு அவர்கள் தூங்கி விடுகிறார்கள். தந்தை எழுப்பும் சப்தத்தையும் அனுபவம் செய்கிறார்கள். இருந்தும் அலட்சியத்தின் தூக்கத்தில் தூங்கி விடுகிறார்கள். சத்யுகத்தில் தூக்கமே தூக்கம் தான். இரட்டை தூக்கமாகும். எனவே இப்பொழுது விழிப்புற்று இருக்கும் ஜோதி ஆகுங்கள். தூங்கும் சம்ஸ்காரம் மூலம் அங்கு தங்கம் கிடைக்கும் என்று அப்படியில்லை. யார் எழுந்திருப்பாரோ அவர் தங்கத்தை அடைவார். அலட்சியத்தின் தூக்கம் கூட எப்பொழுது விநாஷ காலத்தை மறந்து விடுகிறார்களோ அப்பொழுது வருகிறது. பக்தர்களின் கூக்குரலைக் கேளுங்கள். துக்கமான ஆத்மாக்களின் துக்கத்தின் கூக்குரலைக் கேளுங்கள். தாகமான ஆத்மாக்களின் பிரார்த்தனையின் சப்தத்தைக் கேளுங்கள். பின்பு ஒருபொழுதும் தூக்கம் வராது. அப்படி இந்த வருடம் அலட்சியத்தின் தூக்கத்திற்கு விவாகரத்து கொடுக்க வேண்டும். அப்பொழுது பக்தர்கள், காட்சியளிக்கும் உங்களுடைய காட்சிகளைப் பார்ப்பார்கள். அப்படி இந்த வருடம் காட்சி அளிப்பவர்களாகி பக்தர்களுக்கு காட்சிகளைக் காண்பியங்கள். அந்த மாதிரி சக்கரவர்த்தி ஆகுங்கள்.

அப்படி எப்பொழுதும் அன்பு வைத்து நடந்து கொள்ளக்கூடிய, எப்பொழுதும் உண்மையான நண்பனின் துணையில் இருக்கக்கூடிய எப்பொழுதும் பிராப்திகள் மற்றும் குணங்களின் மகிமையின் பாடல் பாடக்கூடிய, எப்பொழுதும் ஒரு நொடியின் யதார்த்த முறையின் மூலமாக சகஜயோகி ஆகக்கூடிய, அந்த மாதிரி எப்பொழுதும் இரக்க மனமுடைய, கடினத்தை சுலபமாக்கக்கூடிய, தூக்கத்தை வென்ற, சக்கரவர்த்தி குழந்தைகளுக்குப் பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 07.02.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# விசித்திரமான இராஜ தர்பார்!

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் ரூபம் மற்றும் நிரம்பிய நிலை இரண்டின் சமநிலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிரம்பிய நிலை ஆக வேண்டும் மற்றும் ரூபத்தில் நிலைத்து இருக்க வேண்டும். இரண்டின் சமநிலை இருக்கிறதா அதாவது நிரம்பிய நிலை என்றால் வாய்மொழியில் வருவதற்கான மிகுந்த பயிற்சி இருக்கிறது, அதே போல் வார்த்தைகளையும் தாண்டிச் செல்வதற்கான பயிற்சி இருக்கிறதா? அனைத்து கர்மேந்திரியங்களின் காரியத்தின் நினைவிலிருந்து விலகி ஒரே ஒரு ஆத்மீக சொரூபத்தில் நிலைத்திருக்க முடியுமா? காரியம் இழுக்கிறதா அல்லது கர்மாதீத் நிலை (காரியத்தின் பந்தனமற்ற நிலை இழுக்கிறதா? பார்ப்பது, கேட்பது, சொல்வது -இந்த விசேஷ காரியங்கள் கலபமாக பயிற்சியில் வந்து விட்டது போல் ஆகி விட்டன, அதே போலவே கர்மாதீத் ஆவதற்கான நிலை அதாவது காரியத்தை சுருக்கத்தில் கொண்டு வருவதற்கான சக்தி மூலம் அகர்மி செயலில் விளைவுகளைக் கடந்த! அதாவது கர்மாதீத் ஆக முடியுமா? ஒன்று காரியத்தின் அடிமை என்ற நிலை, இன்னொன்று கர்மாதீத் அதாவது சங்கம யுகத்தில் கர்மேந்திரியங்களை வெற்றி அடைந்த சுய ராஜ்யம் உள்ளவர். இராஜ்ய அதிகாரி இராஜாக்களிடம் கேட்கிறார். ஒவ்வொரு இராஜ்ய நடவடிக்கைகளும் சரியாக நடந்து கொண்டிருக்கின்றனவா? ஒவ்வொரு இராஜ்ய அதிகாரியும் தினசரி தன்னுடைய இராஜ தர்பாரைக் கூட்டுகிறாரா? இராஜ தர்பாரில் இராஜ காரியம் செய்பவர்கள் தங்களுடைய காரியத்தின் ரிசல்ட்டை கொடுப்பார்கள். ஒவ்வொரு காரியம் செய்பவர்களும் உங்களுடைய இராஜ்ய அதிகாரியின் கட்டளைக்குள் இருக்கிறார்களா? எந்தவொரு காரியம் செய்பவரும் ஏமாற்றுதல் மற்றும் கலப்படமோ மற்றும் எந்த

விதமான குழப்பமோ செய்யவில்லையே? இராஜ்ய அதிகாரி உங்களை எப்பொழுதாவது ஏமாற்றம் செய்வதில்லையே? நடந்து கொள்வதற்குப் பதிலாக நடத்து விப்பதிலோ ஈடுபட்டு விடவில்லையே? இராஜ்ய அதிகாரிகள் உங்களுடைய இராஜ்யமாக இருக்கிறதா அல்லது பிரஜைகளின் இராஜ்யமாக இருக்கிறதா? அந்த மாதிரி சோதனை செய்கிறீர்களா? அல்லது எதிரி எப்பொழுது வருகிறானோ அப்பொழுது உணர்வு வருகிறதா? தினசரி தன்னுடைய தர்பாரைக் கூட்டுகிறீர்களா? அல்லது எப்பொழுதாவது தர்பாரைக் கூட்டுகிறீர்களா? உங்களுடைய இராஜ தர்பாரில் இருப்பவர்களுடைய நிலைமை என்னவாக இருக்கிறது? இராஜ்ய நடவடிக்கைகள் சரியாக இருக்கிறதா? அந்த அளவு கவனம் கொடுக்கிறீர்களா? இப்பொழுதைய இராஜா தான் பல பிறவிகளுக்கு இராஜா ஆவார். உங்களுடைய வேலையாள் சரியாக காரியம் செய்து கொண்டிருக்கிறாரா? அனைவரையும் விட மிகப் பெரிய வேலைக்காரர் -இயற்கை. இயற்கை என்ற வேலையாள் சரியாக காரியம் செய்து கொண்டிருக்கிறாரா? இயற்கையை வென்றவரின் கட்டளைப்படி தன்னுடைய காரியம் செய்து கொண்டிருக்கிறதா? இயற்கையை வென்றவர் இயற்கையின் கட்டளைக்குள்ளோ வந்து விடவில்லையே? உங்களுடைய இராஜ தர்பாரின் முக்கியமான 8-சகயோகி சக்திகள் உங்களுடைய காரியத்தில் சக்யோகம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்களா? இராஜ காரியங்களின் அழகே இந்த அஷ்ட சக்திகள் அதாவது அஷ்ட இரத்தினம். அஷ்ட சகயோகி. அப்படி இந்த 8-பேருமே சரியாக இருக்கிறார்களா? தன்னுடைய ரிசல்ட்டை சோதனை செய்யுங்கள். இராஜ்ய காரிய நடவடிக்கைகளை செய்யத் தெரியுமா? ஒருவேளை இராஜ அதிகாரி அலட்சியத்தின் தூக்கத்தில் மற்றும் அற்ப காலத்தின் பிராப்தியின் போதையில் மற்றும் வீணான எண்ணங்களின் நாட்டிய நடனத்தில் மூழ்கியிருக்கிறார் என்றால் சகயோகி சக்திகளும் தேவையான நேரத்தில் சகயோகம் கொடுக்க மாட்டார்கள். அப்படியானால் ரிசல்ட்டாக என்ன புரிந்து கொள்வது? இன்றைய நாட்களில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் ரிசல்ட்டையும் வேறு வேறு ரூபத்தில் சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உங்களுடைய ரிசல்ட்டையும் சோதனை செய்கிறீர்களா? முதலிலோ எண்ணத்தின் சக்தி, நிர்ணய சக்தி மற்றும் சம்ஸ்கார சக்தி -மூன்று சக்திகளுமே கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா? பிறகு 8-சக்திகளும் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா? இந்த மூன்று

சக்திகள் மகாமந்திரிகள். அப்படி மந்திரி சபை சரியாக இருக்கிறதா அல்லது அசைகிறதா? உங்களுடைய மந்திரி கூட கட்சி மாற்றத்தையோ செய்யவில்லையே? எப்பொழுதாவது மாயாவின் சீடனாக ஆகவில்லையே?

ஒருவேளை இதுவரையிலும் கூட கட்டுப்படுத்தும் சக்தி இல்லை என்றால் இறுதி முடிவில் என்னவாகும்? அபராதத்தைக் கட்டுவதற்காக தர்மராஜ்புரியில் செல்ல வேண்டியதாக இருக்கும். இந்த தண்டனைகள் தான் அபராதம் ஆகும். முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டவராகி விட்டீர்கள் என்றால் அபராதம் கட்ட வேண்டியது இருக்காது. இப்பொழுது வரை யாருடைய இராஜ தர்பார் சரியாக இருக்கிறதோ அவர் தர்மராஜின் தர்பாரில் வர மாட்டார். தர்மராஜரும் அவரை வரவேற்பார். வரவேற்பு செய்ய வேண்டுமா அல்லது அடிக்கடி அடி வாங்க வேண்டுமா? இப்பொழுது செய்ய மாட்டோம். இப்பொழுது செய்ய மாட்டோம் என்ற இதை அடிக்கடி கூற வேண்டியதாக இருக்கும். தன்னுடைய இறுதி முடிவை எடுத்து விட்டீர்களா அல்லது கோப்புகளின் குவியல் நிரம்பியிருக்கிறதா? கணக்கை முடித்து விட்டீர்களா அல்லது நெற்றி என்ற மேஜை மேல் இதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்ற கோப்புகள் தங்கிப் போய்விட்டனவா? ஒருவேளை இதுவரையிலும் கூட பழைய கணக்கு வழக்குகளை முடிக்காமல் அதிகரித்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் முடிவாக என்ன இருக்கும். எவ்வளவு பழைய கணக்கை வைத்துக் கொண்டே இருப்பீர்களோ அந்த அளவு கதற வேண்டியது இருக்கும். இந்தக் கதறுதல் மிகவும் வேதனை தரக்கூடியது. ஒவ்வொரு விநாடியும் ஒரு வருடத்திற்குச் சமமாக அனுபவம் ஆகும். எனவே இப்பொழுது கூட 'சிவ மந்திரம்' மூலமாக சமர்ப்பணம் செய்து விடுங்கள், இப்பொழுது அனேகர்களின் கணக்கு பஸ்மம் ஆகவில்லை. இப்பொழுது பழைய கணக்கையே வைத்து நடந்து கொண்டிருக்கிறார்கள். அனேகர்களுக்கு மூன்று சக்திகள் இப்பொழுது கூட தந்தையின் அனைத்து பொக்கிஷங்களில் ஏமாற்றுக் காரியம் செய்து கொண்டிருக்கின்றன என்று கூறினோம் இல்லையா? தந்தை சுயநன்மை மற்றும் உலக நன்மைக்காக பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கிறார், ஆனால் வீணான பக்கம் ஈடுபடுத்துவது, தீமை பயக்கும் காரியத்தில் ஈடுபடுத்துவது என்ற இது நம்பிக்கையில் கொடுக்கப்பட்ட சொத்தின்

மேல் ஏமாற்றுக் காரியம் செய்வது. ஸ்ரீமத்தின் கூடவே மற்றவர்கள் சொல்லும் வழி மற்றும் மனிதர்கள் சொல்லும் வழியின் கலப்படம் ஆகிக் கொண்டிருக்கிறது. கலப்படம் செய்வதில் மிகவும் திறமை நிறைந்தவர்களும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் காரியத்தின் ரூபத்தையும் ஸ்ரீமத்படி செய்து கொண்டிருக்கிறோம் என்றே வைத்துக் கொள்கிறார்கள். வார்த்தைகளை முரளியில் இருந்து தான் எடுப்பார்கள் ஆனால் உள்ளே அந்த அளவு இருக்கும் எப்படி சிவம் மற்றும் சவம். சிவபாபாவிற்கு பதிலாக சபத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறர்கள். அவர்களுடைய பேச்சு மிகுந்த ராயல் தன்மையுடன் இருக்கும். எப்பொழுதும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, யார் செய்தது யார் பார்க்கிறார்... அந்த மாதிரி ஆறுதலோடு தன்னை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் ஆனால் தன்னுடைய துக்கத்தை சேமித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிற்கு 100-மடங்காக சேமிப்பு ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே ஏமாற்றுதல் மற்றும் கலப்படத்தை முடிவு கட்டுங்கள். ஆன்மீகத் தன்மை மற்றும் இரக்கத்தை தாரணை செய்யுங்கள். தன் மேலும் மற்றும் அனைவரின் மேலும் இரக்க மனமுடையவர் ஆகுங்கள். தன்னைப் பாருங்கள் தந்தையைப் பாருங்கள் மற்றவர்களைப் பார்க்காதீர்கள். 'ஹே அர்ஜுன்' (முதலில் செய்பவர்) ஆகுங்கள். யார் முதலில் செய்கிறாரோ அவர் அர்ஜுனன் ஆகிறார். சொல்லிக் கற்றுக்கொடுக்கக்கூடாது செய்து கற்றுக் கொடுக்க வேண்டும். உயர்ந்த காரியம் செய்து கற்றுக் கொடுக்க வேண்டும் இந்த சுலோகனை எப்பொழுதும் நினைவில் வையுங்கள். தவறாக கற்றுக் கொடுக்காதீர்கள். நான் மாறி அனைவரையும் மாற்றிக் காண்பிப்பேன். வீணான விஷயங்களை கேட்டுக் கொண்டும், பார்த்துக் கொண்டும் புனித அன்னப்பறவை ஆகி, பயனற்றதை விட்டு விட்டு பயனுள்ளதை தாரணை செய்யுங்கள். எப்பொழுதுமே மின்னிக் கொண்டிருக்கும் ஆடையில் அலங்கரிக்கப்பட்ட நிரந்தர சுமங்கலியாக இருங்கள். தந்தை மற்றும் நான், மூன்றாமவர் ஒருவர் கூட இல்லை. எப்பொழுதும் ஊஞ்சலில் ஆடுங்கள். தந்தையின் மடியில் ஊஞ்சலாடுங்கள் அல்லது அனைத்து பிராப்திகளின் ஊஞ்சலில் ஆடுங்கள். எண்ணம் என்ற நகம் கூட மண்ணில் பட வேண்டாம். இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? இல்லை என்றால் மண்ணை துடைத்து கொண்டே

இருப்பீர்கள், தலைவன் சென்றடைந்து விடுவார். அவர் இலக்கை சென்றடைந்து விடுவார். மேலும் நீங்கள் துடைத்துக் கொண்டே தங்கிப்போய் விடுவீர்கள். ஊர்வலத்தினரின் பட்டியலில் வந்து விடுவீர்கள். நேரத்திற்காக காத்திருக்காதீர்கள். நான் தயாராக இருக்கிறேன் என்று எப்பொழுதும் முன்னுக்கு வாருங்கள். இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா?

கடந்து சென்ற வருடத்தின் ரிசல்ட்டில் இப்பொழுது அனேகர்களின் கணக்கு முடிக்கப்படவில்லை. இதுவரையிலும் பழைய பழைய கதைகள் அனேகரிடம் இன்னும் இருக்கின்றன. ரப்பரை வைத்து அழிக்கவும் செய்கிறார்கள், பிறகு கறையை ஏற்படுத்தி விடுகிறார்கள். அனேகர்களுக்கோ முதலில் சின்னக் கறையாக இருந்தது ஆனால் மறைத்து மறைத்து பெரியதாக்கி விட்டார்கள். சிலர் மறைக்கிறார்கள் மேலும் சிலர் மிகவும் சாதுர்யமாக நடந்து கொள்கிறார்கள் எனவே ஆழமான கறையாக ஆகிக் கொண்டே இருக்கிறது. எப்படி மிக ஆழமான கறை இருக்கிறது என்றால் எந்தப் பொருளின் மேல் கறை ஏற்படுகிறதோ அது கிழிந்து விடும், அது காகிதமானாலும் துணியானாலும் சரி. அதே போல் இங்கேயும் ஆழமான கறை உள்ளவர்கள் இதயத்தை கிழித்து அழ வேண்டியதாக இருக்கிறது. இதை நான் செய்தேன், இதை நான் செய்தேன் என்று அந்த மாதிரி இதயத்தை கிழித்து அழ வேண்டியதாக இருக்கும். ஒருவேளை ஒரு விநாடியாவது அந்தக் காட்சியைப் பார்த்தீர்கள் என்றால் விநாஷ காலத்தையும் விட அதிக வேதனை அளிக்கும், எனவே உண்மையானவர் ஆகுங்கள். பாப்தாதாவிற்கு இப்பொழுது கூட இரக்கம் வருகிறது. எனவே தினசரி தன்னுடைய இராஜதர்பாரை கூட்டுங்கள், நீதிமன்றத்தைக் கூட்டுங்கள், உங்களை சோதனை செய்யும் போது மாற்றம் ஆகி விடுவீர்கள். நல்லது !

அந்த மாதிரி சுயமாற்றம் மூலம் உலகமாற்றம் செய்யக்கூடிய எப்பொழுதும் இராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஆன்மீகம் மற்றும் இரக்க உள்உணர்வு உடையவர்களுக்கு, உலகில் எப்பொழுதும் சுகம் நிறைந்த அமைதி நிறைந்த வாயுமண்டலத்தை உருவாக்கக்கூடிய, அலைந்து கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்காக லைட் ஹவுஸ் மற்றும் மைட் ஹவுஸ் மாதிரி திடமான எண்ணம்

வைக்கக்கூடிய, பழைய உலகத்தின் கவர்ச்சியிலிருந்து தூரமாக இருக்கக்கூடிய, அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

சேவாதாரி சகோதர சகோதரிகளுடன்: சேவாதாரி என்றால் தந்தைக்குச் சமமானவர். தந்தையும் சேவாதாரி ஆகி வருகிறார். சேவாதாரி ஆவது என்றால் தந்தைக்குச் சமமாக ஆவது. அப்படி நாடகத்தின் லாட்டரியில் பெயர் வெளியாகிறது என்று அப்படியும் நினைத்துக் கொள்ளுங்கள். சேவைக்கான வாய்ப்பு கிடைக்கிறது என்றால் லாட்டரியில் பெயர் வெளியாவது. எப்பொழுதும் சேவைக்கான வாய்ப்பை எடுத்துக் கொண்டே இருங்கள். அனைவரின் ரிசல்ட் மிக நன்றாக இருக்கிறது. வாழ்த்துக்கள். நல்லது.

தனிப்பட்ட சந்திப்பு பார்ட்டிகளுடன்: ஒவ்வொரு குழந்தையையும் பாப்தாதா எப்பொழுதும் எந்தப் பார்வையோடு பார்க்கிறார்? பாப்தாதாவின் பார்வை ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தின் மேல் செல்கிறது. மேலும் அந்த மாதிரி யாருமே இருக்க முடியாது, யாரிடம் எந்த விசேஷமும் இல்லை என்பது போல். விசேஷம் இருக்கிறது அதனால் தான் விசேஷ ஆத்மாவாக ஆகி பிராமண பரிவாரத்தில் வந்திருக்கிறீர்கள். நீங்களும் எப்பொழுது யாருடைய தொடர்பில் வருகிறீர்கள் என்றால் அவர்களின் விசேஷத்தின் மேல் தான் பார்வை செல்ல வேண்டும். விசேஷத்தின் மூலம் அவர் மூலமாக அந்தக் காரியத்தை செய்விக்க முடியும், மேலும் லாபத்தை எடுக்க முடியும். எப்படி தந்தை நம்பிக்கையற்றவரையும் நம்பிக்கையுள்ளவராக ஆக்கி விடுகிறாரோ அப்படி யாராக இருந்தாலும், எப்படி இருந்தாலும் அவர் மூலமாக காரியத்தை செய்விக்க வேண்டும். இது தான் சங்கமயுகத்து பிராமணர்களின் விசேஷம் ஆகும். எப்படி நகை வியாபாரியின் பார்வை எப்பொழுதும் வைரத்தின் மேல் இருக்கிறது, அதே போல் நீங்களும் நகை வியாபாரிகள், உங்களுடைய பார்வை கற்களின் மேல் செல்லாமல் வைரத்தின் மேல் செல்ல வேண்டும். சங்கமயுகமே வைரத்திற்குச் சமமான யுகம். உங்களுடைய பங்கும் கதாநாயகனுக்கு (ஹீரோ) உரியது, யுகமும் வைரத்திற்கு (ஹீரே) சமமானது என்றால் வைரத்தை (ஹீராவை) மட்டும் பாருங்கள். பிறகு உங்களுடைய மனநிலை எதுவாக இருக்கும்? உங்களுடைய சுப பாவனையின்

கிரணங்களை அனைத்து பக்கங்களிலும் பரப்பிக் கொண்டே இருப்பீர்கள். தற்சமயம் இந்த விஷயத்தின் மேல் விசேஷ கவனம் வேண்டும். அந்த மாதிரி முயற்சி செய்பவரைத் தான் தீவிரமாக முயற்சி செய்பவர் என்று கூறுவது. அந்த மாதிரி முயற்சி செய்பவருக்கு கடின உழைப்பு செய்ய வேண்டியது இருக்காது, அனைத்துமே சுலபமாகி விடும். சகஜயோகியின் எதிரில் எவ்வளவு தான் பெரிய விஷயம் வந்தாலும் ஒன்றுமே இல்லாதது போல், ஈட்டியாக வந்தது முள் மாதிரி சிறியதாகியது. அப்படி சுலபமாக ஆகி விடுகிறது. அப்படி நீங்களும் அந்த மாதிரி சகஜயோகி தான் இல்லையா? குழந்தைப் பருவத்தில் எப்பொழுது நடக்கக் கற்றுக் கொள்கிறார்களோ அப்பொழுது கடின அனுபவம் ஆகும், அப்படி கடின உழைப்பின் காரியமும் குழந்தை பருவத்தின் விஷயம் ஆகும். இப்பொழுது கடின உழைப்பை முடித்து விட்டு அனைத்திலும் சுலபம் இருக்க வேண்டும். எங்காவது ஏதாவது கடினம் அனுபவம் ஆகிறது என்றால் அங்கே அந்த இடத்தில் பாபாவை வைத்து விடுங்கள். சுமையைத் தன் மேல் வைக்கிறீர்கள் என்றால் தான் கடினம் அனுபவம் ஆகிறது. தந்தை மேல் வைத்தீர்கள் என்றால் தந்தை, சுமையை அகற்றி விடுவார். எப்படி கடலில் குப்பையை போட்டீர்கள் என்றால் அது தனக்குள் வைத்துக் கொள்வதில்லை. கரையில் ஒதுக்கி விடும். அந்த மாதிரி தந்தையும் சுமையை அகற்றி விடுவார். எப்பொழுது வழிகாட்டி என்பதை மறந்து விடுகிறீர்களோ அப்பொழுது கடினமான பாதையாக அனுபவம் ஆகிறது. கடின உழைப்பில் நேரம் வீணாகிறது. இப்பொழுது மனசேவை செய்யுங்கள், நற்சிந்தனை செய்யுங்கள். சிந்தனை சக்தியை அதிகரியுங்கள். கடின உழைப்பை கூலியாட்கள் செய்வார்கள் நீங்களோ அதிகாரிகள்.

பிராமண வாழ்க்கையின் விசேஷம் அனுபவம் ஆகும். ஞானத்தின் கூடவே ஒவ்வொரு குணத்தின் அனுபவம் ஆக வேண்டும். ஒருவேளை ஒரு குணத்தின் மற்றும் சக்தியின் அனுபவம் இல்லை என்றால் எப்பொழுதாவது தடையின் வசமாகி விடுவீர்கள். இப்பொழுது அனுபவத்தின் பாடத்தைத் தொடங்குங்கள். ஒவ்வொரு குணம் மற்றும் சக்தி என்ற பொக்கிஷத்தை உபயோகப்படுத்துங்கள். எந்த நேரம் எந்த குணத்தின் அவசியம் இருக்கிறதோ அந்த நேரம் அதன் சொரூபம் ஆகி விடுங்கள், எப்படி ஆத்மாவின் குணம் அன்பு சொரூபமானது. அன்பு மட்டும் இல்லை ஆனால் அன்பு சொரூபத்தில் வர வேண்டும். எந்த

ஆத்மாவைப் பார்த்தாலும் அவருக்கு ஆன்மீக அன்பின் அனுபவம் ஆக வேண்டும். ஒருவேளை தனக்கு மற்றும் மற்றவர்களுக்கு அனுபவம் ஆகவில்லை என்றால் என்ன கிடைத்திருக்கிறதோ அதை உபயோகிக்கவில்லை. எப்படி இன்றைய நாட்களிலும் பொக்கிஷம் லாக்கரில் இருந்தால் குஷி இருக்காது. அதே போல் ஞானத்தின் முறையில் பத்தியின் லாக்கரில் பொக்கிஷத்தை வைத்து விடாதீர்கள், உபயோகப்படுத்துங்கள். பிறகு இந்த பிராமண வாழ்க்கை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது என்று பாருங்கள். பிறகு ஆஹா நான்! என்ற பாடலை பாடிக் கொண்டே இருப்பீர்கள். அனுபவம் நிறைந்தவரின் வார்த்தை மற்றும் ஞானம் நிறைந்தவரின் வார்த்தையில் வித்தியாசம் இருக்கும். ஞானம் மட்டும் நிறைந்தவர் அனுபவத்தை செய்விக்க முடியாது. எனவே நான் எந்த அளவு அனுபவியாக ஆகியிருக்கிறேன் என்று சோதனை செய்யுங்கள், எந்த சக்தியை எத்தனை சதவிகிதத்தில் பிராப்தி செய்திருக்கிறேன்? மேலும் தேவையான நேரத்தில் காரியத்தில் ஈடுபடுத்த முடிகிறதா அல்லது இல்லையா? எதிரி வந்து விட்டான் வாளே வீசப்படவில்லை, கேடயத்தின் நேரத்தில் வாளும் மற்றும் வாளின் நேரத்தில் கேடயமும் நினைவு வருகிறது என்று அப்படி இருக்க வேண்டாம். எந்த நேரம் எந்தப் பொருளின் அவசியம் இருக்கிறதோ அதையே உபயோகியுங்கள் அப்பொழுது வெற்றி அடைபவர் ஆக முடியும். நல்லது.

வரதானம்: அன்பு மற்றும் அன்பில் ஐக்கியமான நிலையின் அனுபவம் மூலமாக அனைத்தையும் மறக்கக் கூடிய நிரந்தர ஆத்ம அபிமானி ஆகுக!

காரியத்தில், பேச்சில் தொடர்பில் மற்றும் உறவில் அன்பு மற்றும் நினைவு மற்றும் மனநிலையில் அன்பில் ஐக்கியமாகி இருந்தீர்கள் என்றால் அனைத்தையும் மறந்து ஆத்ம அபிமானி ஆகி விடுவீர்கள். அன்பு தான் தந்தையின் நெருங்கிய சம்மந்தத்தில் கொண்டு வருகிறது, அனைத்தையும் தியாகம் செய்தவராக ஆக்குகிறது. இந்த அன்பின் விசேஷம் மூலம் மற்றும் அன்பில் ஐக்கியமாகி இருப்பதின் நிலையில் இருப்பதினால் தான் அனைத்து ஆத்மாக்களின் பாக்கியத்தை மற்றும் அதிர்ஷ்டத்தை எழுப்ப முடியும். இந்த அன்பு தான் அதிர்ஷ்டத்தின் பெட்டகத்தின் சாவி ஆகும். இது தான் மாஸ்டர் கீ (தலைமை சாவி)

ஆகும். இதன் மூலம் எப்படிபட்ட துர்பாக்கியசாலி ஆத்மாவையும் பாக்கியசாலியாக ஆக்க முடியும்.

சுலோகன்: தன்னை மாற்றம் செய்வதின் நேரத்தை நிச்சயித்தீர்கள் என்றால், உலக மாற்றம் தானாக ஆகி விடும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.02.1980 அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மதுபன் நிவாசிகளின் சிறப்பு!

இன்று பாப்தாதா, விசேஷ மதுபன் நிவாசிகளான பாக்கியசாலி ஆத்மாக்களை சந்திக்க வந்திருக்கிறார். இன்றும் மதுபன் நிவாசிகளின் மகிமையை, பக்தர்களும் புகழ் பாடுகின்றனர், பிராம்மணர்களும் புகழ்கின்றனர். ஏனெனில், மதுபன் பூமிக்கு மகிமையிருக்கும் போது, அந்த பூமியில் வாழ்பவர்களும், மகிமை பெற்று, மகான் ஆகி விடுகிறார்கள். நாடகப்படி மதுபன்வாசிகளுக்கு, எல்லாவற்றிலும், விசேஷ சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. பாப்தாதாவின் சரித்திர பூமி, கர்ம பூமியான காரணத்தினால், அந்த ஸ்தலத்தின் ஸ்திதி மிகவும் பிரபலமாயுள்ளது. அவ்வாறே சுயஸ்திதியில் சிரேஷ்டத்தை ஏற்படுத்த, தீவிர முயற்சி செய்யக்கூடிய ஸ்தலமானதால் மதுபன் வாசிகளுக்கு விசேஷ சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மனம், விசேஷ கல்யாணகாரி உணர்வில், சக்திசாலி ஆவதன் மூலம், விசேஷ சேவைக்கு மதுபன் முக்கிய ஸ்தலமாக விளங்குகிறது. மதுபன் வந்து விட்டால், மனம், வாக்கு, பொருள் மூலம் செய்யும் சேவையுடன் ஒருங்கிணைந்து, ஆத்மீக அவ்யக்த சூழ்நிலையை உண்டாக்குவதற்கான சேவைக்கு விசேஷ சந்தர்ப்பம் உள்ளது. சகல ஆத்மாக்களும் மதுபன்வாசிகளை சகஜமாக பின்பற்றக் கற்றுக் கொள்கின்றனர். எல்லையற்றதாக மதுபன் விளங்குவது போல், மதுபன்வாசிகளும் எல்லையற்ற சேவைக்கான சந்தர்ப்பத்தை அடைகின்றனர்.

ஆத்மா தனது செயலுக்கேற்ற பலனை அடைகிறது ஆனால் அத்துடன், இங்கு வரும் ஆத்மாக்களுக்குப் புரியும் உதவிகள் மூலம், அந்த ஆத்மாக்கள் அடையும் திருப்தியில் ஒரு பங்கு, மதுபன்வாசிகளை அடைகிறது. வீட்டிலிருந்து கொண்டே சேவையின் பலனில் ஒரு பங்கை நீங்கள் அடைவது ஒரு விசேஷம் அல்லவா? ஆகவே மதுபன் வாசிகள் பிரத்யட்ச பலனை உடனே அடைகிறார்கள். வருங்காலத்திற்கான பலனும் ஏற்படுகிறது.

மதுபன் வாசிகள் இன்னும் ஒரு விசேஷ லிப்டும் (Lift) அடைகிறார்கள். பாப்தாதாவினால் பரிபாலிக்கப்படுகிறார்கள், அத்துடன், சாகார உருவில், நிமித்தமாக உள்ள சிரேஷ்ட ஆத்மாக்களிடமிருந்தும் போஷாக்கு அடைகிறார்கள். இத்தகைய இரட்டை போஷாக்கு என்கிற லிப்ட் இருக்கிறது. மேலும் வெளியுலகில் செய்யப்படுகின்ற விஷேஷ சாதனங்களும் இங்கு வருகின்றன. ஆகவே அத்தகைய சிரேஷ்ட பாக்கியசாலிகளான நீங்கள், உங்கள் சிரேஷ்ட பாக்கியத்தை உணர்ந்து நடக்கிறீர்களா? உழைப்பதில் சோர்வடையாத சேவாதாரி என்கிற நற்சான்றிதழைப் பெற்றிருப்பதைப்போல், தீவிர புருஷார்த்தி, நிரந்த சகஜ யோகி என்கிற நற்சான்றுகளையும் பெற்றிருக்கிறீர்களா? இந்த இரு நற்சான்றிதழ்களையும் அடையும் போது, யக்ஞத்தின் முடிவு வெகு அருகில் உள்ளது என்பது பொருள்.

எல்லோரும் நன்கு முயற்சி செய்து வருகின்றனர். உங்களுடைய உடல், பொருள், சக்தி ஆகிய கஜானா மூலம் இரவு பகலாக குழந்தைகள் செய்து வருகின்ற சேவைக்கு பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். தியாகம் செய்பவர்களின் பாக்கியம், இயற்கையான குஷியின் உருவிலும், லேசாக இருக்கும் அனுபவத்தின் உருவிலும், பிராப்தி ஆகிக் கொண்டேயிருக்கும். இந்த அடையாளத்தின் மூலம், உங்கள் ஒவ்வொருவருடைய முடிவையும் சோதனை செய்து, தியாகம், நிஷ்காம பாவனையில் எவ்வளவு காலம் இருந்தீர்கள், நிமித்த பாவனையில் எவ்வளவு காலம் இருந்தீர்கள் என்று பாருங்கள். இத்துடன் எந்த நேரத்திலாவது, வேறு பாவனை கலந்திருந்ததா?

சோதனை செய்வது முன்னேற்றத்திற்கு வழியாகும். இது தான் சர்த்திகலா (உயர்வுக்கு) ஸ்திதி அடைய உதவும் விசேஷ முயற்சி. ஒவ்வொருவரும் ஒரு விசேஷ குணத்தை, எப்பொழுதும், சகஜமாக தாரணை செய்து உங்களுடைய குணமாக்கிக் கொள்ளுங்கள். இது உங்களுடைய இயற்கையான குணமாக மாறும்போது, முயற்சிக்கே அவசியமில்லாமல், இயற்கையான வாழ்க்கை முறையாகி விடுகிறது.

ஒருவர் மற்றவர்களின் பலவீனத்தைக் கிரஹிக்காமலும், அதுபற்றி பேசாமலும் இருப்பதுதான் அந்த ஒரு விசேஷ குணம். பலவீனத்தை

வர்ணிக்கும்போது. அது சுற்றுப் புறமெங்கும் பரவுகிறது. வேறு யாராவது அது பற்றிப் பேசும்போது, நீங்கள் சுபபாவனையுடன், அந்த இடத்தை விட்டே அகன்றுவிடுங்கள். நான் பேசவில்லை. அவர் தான் பேசினார் என்று கூறுவதில் பயனில்லை. நீங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் அல்லவா, சொன்னவர், கேட்டவர் ஆகிய இருவருக்குமே, ஒரு கணக்கு ஏற்பட்டு விட்டது. கணக்கின் அளவில் வித்தியாசம் இருக்கலாம், ஆனால் இருவருக்குமே கணக்கு உண்டு.

வீண் எண்ணங்களோ, பலவீனங்களின் தொடர்ச்சியோ இருக்கலாகாது. கருணை உள்ளம் கொண்டு, நடந்தவற்றை சுருக்கி விடுங்கள். சுருக்குவதன் மூலம் ஏற்படுகின்ற சுப சங்கல்பம், சுப பாவனைகளினால், மனதினால் நீங்கள் சேவை செய்யலாம். மற்ற ஆத்மா பலவீன சமஸ்காரத்தினால், தவறாகப் பேசியிருந்தாலும், செய்திருந்தாலும், நீங்களே முதலில் பரிவர்த்தனை ஆவது அவசியம். வீண் எண்ணங்கள் என்கிற தீபமாலை ஒருவரிடமிருந்து. மற்றவர்களுக்குப் பரவாமல் தடுத்து விடுங்கள்.

நான் அனாவசியமாகப் பேசக்கூடாது, கேட்கக்கூடாது, எல்லாவற்றையும் சுருக்கி விடவேண்டும் என்கிற ஒரே குணத்தைப் பின்பற்றுங்கள். சகயோகியாகி, மனம், வாக்குமூலம் மற்றவர்களை முன்னேறச் செய்யுங்கள். வீண்பேச்சுப் பேச ஒவ்வொருவருக்கும் ஒரு நண்பர் உண்டு ஆனால் இது இரண்டாவது நபர், மூன்றாவது நபர் என்று பரவி, வீண் எண்ணங்களாகிய பெரிய மாலையாகி, சுற்றிலும் பரவிவிடும். ஆகவே இத்தகைய விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்துங்கள்.

மதுபன்னில் உள்ள பாண்டவர்களின் ஒற்றுமையும் விசேஷமானது. தற்சமயம், விக்னங்களே இல்லாத ஸ்திதியில் (நிர்விக்ன), வரதானி ஆகியுள்ளீர்கள். சேவையிலும் வெற்றியடைந்து விட்டீர்கள். அதை சேவையென்று நினைக்காமல், ஆரோக்கியமான உணவை உட்கொண்ட உணர்வே உங்களுக்கு ஏற்பட்டது. முழு பிராம்மண பரிவாரத்தின் ஆசீர்வாதத்தை அடைவது, ஆரோக்கியமான உணவை உட்கொள்வதைப் போலாகும். இல்லை, சேவை செய்து விட்டதாக உணர்கிறீர்களா?

இந்த ஆண்டு செய்யவேண்டிய விசேஷ சேவை என்ன? ஒரு புதிய இடத்தில் சேவையைத் துவங்கும்போது, அங்கு உள்ள ஆத்மாக்களையே சேவையில் நிமித்தமாக்கவேண்டும் என்ற குறிக்கோளைக் கொள்ளுங்கள். யோகப்பட்டி, அல்லது பொருட்காட்சி ஆக எதை நடத்தினாலும், சிறிது காலம் அங்கேயே தங்கியிருந்து, பிறகு அங்குள்ள ஆத்மாக்களையே நிமித்தமாக்குங்கள். இவ்வாறு பல கிளை நிலையங்களை ஆரம்பித்தால், ஒரு சில ஆத்மாக்களின் உதவியுடன் மிகுந்த சேவை செய்ய இயலும். அனுபவம் வாய்ந்த ஆத்மாக்கள், அடிக்கடி இந்தக் கிளை நிலையங்களுக்குச் சென்று மேற்பார்வை பார்க்கட்டும். இவ்வாறு நிமித்தமான கருவி ஒவ்வொன்றும், 10, 15 கிளை நிலையங்களை நடத்தி வரலாம். ஆகவே எல்லாத் துறைகளிலும் சேவை செய்யத் தகுந்த சேவாதாரி ஆகுங்கள். புதிய கரங்களை பொறுப்பேற்கத் தயார் செய்யுங்கள். கரங்கள் குறைவாக இருந்தால் சேவை பெருகாது, அந்த சந்தர்ப்பத்தில், அங்குள்ள கிரஹஸ்திகள் பொறுப்பாக இருந்து, ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்தில் அங்கு சென்று, வகுப்புகள் நடத்திவரட்டும். பல வயது முதிர்ந்த கிரஹஸ்திகள் சேவையில் முழுவதும் அர்ப்பணித்துக் கொள்ள இயலாமல் இருக்கிறார்கள் ஆனால் அவர்கள் இச்சேவையில் அவ்வப்பொழுது ஒத்துழைப்பார்கள். பொறுப்பு கிரஹஸ்திகள் மீது இருக்கட்டும். நல்ல குமாரர்களும், அங்கு சென்று வகுப்பு நடத்தி வரலாம். அவர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை அளிக்கலாம். அவ்வாறு சேவை ஸ்தலங்கள் உள்ள வரைபடத்தை பாபாவிடம் காட்டுங்கள். இவ்வாறு இப்பொழுது குஜராத் மாகாணத்தில்தான் நடைபெறுகிறது. மதுபன்வாசிகள் இத்தகைய சேவையை ராஜஸ்தானில் செய்யட்டும். உங்களுடைய எடுத்துக்காட்டைப் பார்த்து, மற்ற பகுதிகளில் உள்ள ஆத்மாக்களும், அவ்வாறே செய்வார்கள். உள்ளூர்க்காரர்கள், உள்ளூர் மக்கள் இந்த சேவைக்கு நிமித்தமாகவேண்டும். இவ்வாறு வெளிநாட்டில் சேவை விரிவடைந்து வருகிறது. ஆகவே இந்த ஆண்டு, பல கிளை நிலையங்களைத் திறந்து வையுங்கள். அருகில் உள்ள இடங்களுக்குச் செய்தியை அறிவிக்க ஒரு குழு இருக்கட்டும். புதிய இடங்களுக்குச் சென்று, சென்று முதலில் செய்தியை அறிவித்து வெள்ளோட்டம்

பாருங்கள். பிறகு சேவையை அதிகரியுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து யாரும் சேவைக்கு முன்வராவிட்டால், வேறு இடத்திற்குச் செல்லுங்கள். இன்னும் சேவை செய்ய பல இடங்கள் உள்ளன. புதிய இடத்திற்குச் செல்லும்போது, அங்கு நல்ல நிலையம் இருக்கவேண்டும். பல அறைகள் இருக்கவேண்டும் என்று விரும்பாதீர்கள். முதலில் யாராவது ஒருவரின் இல்லத்தில் துவங்குங்கள். பிறகு 10, 12 ஆத்மாக்கள் தயாரானவுடன், அவர்களே சேவையை அதிகரிப்பார்கள். இவ்வாறு எல்லா இடங்களிலும் செய்தியை வெளியிடுங்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏதாவது பலன் கிடைக்குமா என்று பாருங்கள், பிறகு வேறு இடத்திற்குச் செல்லுங்கள். ஒரு இடத்தில் தங்கியிருக்கும்போது, பல இடங்களிலிருந்து அழைப்புகள் தாமாக உங்களைத் தேடி வரும். இவ்வாறு குறைந்த செலவில், அதிக வெற்றி தரும் திட்டங்களைத் தயாரியுங்கள். எல்லா இடங்களிலும் செய்தியை அளிக்கும் குறிக்கோளைக் கொள்ளுங்கள். பிறகு இறுதியில், ஒரு மாபெரும் நிகழ்ச்சியை நடத்துங்கள். ஆண்டு முழுவதும் சிறிய நிகழ்ச்சிகள் நடைபெறட்டும். ஒவ்வொரு நிலையமும் சுற்றுவட்டாரத்தை முழுவதுமாக ஏற்றுக் கொண்டால், சேவை பெருகும், எல்லா ஆத்மாக்களும் சேவையில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருப்பார்கள். சிறிய விழாக்களும் சிறந்த பலனை ஏற்படுத்தும்.

டில்லியில், முழு பிராம்மண பரிவாரம் கலந்துகொள்ளும் பெரிய நிகழ்ச்சி ஒன்றை நடத்துங்கள். இந்த சிரேஷ்ட வித்தியாலயத்தின் புகழ்க்கொடியை உயர்த்தவல்ல நிகழ்ச்சியை நடத்துங்கள். சக்திசேனையின் புகழ் மிகவும் உயர்ந்தது, மாதர்களுக்காக வந்தே மாதரம் என்று சொல்லப்படுகின்ற புகழும் இருக்கிறது.

மற்ற ஸ்தாபனங்களில், அதன் ஸ்தாபகர் மறைந்தவுடன் குழப்பங்களும் சண்டைகளும் ஏற்படுகின்றன. தாய்மார்களால் சந்தோஷத்துடன் நடத்தப்படும் இந்த வித்யாலயத்தை மக்கள் பார்க்கும்போது, அவர்களுடைய கவனம் இதன் மது திரும்புகிறது. இத்தகைய மாபெரும் கூட்டத்தில் ஆத்மீக அலைகளை உணர்ந்ததும், ஸ்தூலக்கருவி மறைந்த பின்னும், கன்னிகைகளும், தாய்மார்களும், இத்தகைய சிரேஷ்ட காரியத்தைச் செய்யும் நிமித்தமாகி விட்டனர் என்று

அவர்களுடைய கண்கள் திறக்கும், சக்தி அவதாரத்தின் புகழ் பாடப்படும். இதற்காக நீங்கள் பெரிய விழாக்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெரிய விழாக்கள் அமைப்பதென்றால் அரசாங்கத்துடன் தொடர்பு வேண்டிருக்கும். இதற்காக உங்களுடைய குடும்பத்திலிருந்து இந்த சேவைக்காக பணத்தையும், நேரத்தையும் சேமித்து வையுங்கள். உங்கள் வயிற்றுக்கு வேண்டிய 4-ரொட்டிகளில், ஒன்றைத் தனியாக சேவைக்காக ஒதுக்கினாலும் அதற்கு கோடி மடங்கு பலன் கிடைக்கும் என்று பாப்தாதா யக்ஞம் ஆரம்பித்த போதே கூறியுள்ளார்.

பெயரைப் பரப்புவதற்கு, விளம்பரத்திற்கு பொருட்செலவு ஏற்படும். சிரேஷ்ட ஆத்மாக்களான எல்லா பிராம்மண ஆத்மாக்களும் சாலிக்கிராமங்கள். இங்கு எவ்வளவு சாலிக்கிராமங்கள் உள்ளன? 60,000ம் மேல்! உலகில் மனிதர்கள் ருத்ர யக்ஞம் ஆரம்பிக்கும்போது நூறு ஆயிரம் சாலிக்கிராமங்களை உண்டாக்குகிறார்கள். நூறு ஆயிரம் சாலிக்கிராமங்களை ஏன் வணங்க வேண்டும்? யக்ஞ சேவையில் எல்லா சாலிக்கிராமங்களும் ஒருங்கிணைந்து நிமித்தம் (கருவி) ஆவதனால், ஆகவே முழு குழுவும் வணங்கப்படுகிறது. எனவே இச்செய்தி பரவுவதற்கு அடிக்கடி, இந்த விசேஷ யக்ஞம் உண்டாக்கப்படுகிறது. ஒன்று கவனத்தைக் கவருவதற்கு, ரண்டாவது, இந்த வழி மூலம் விரைவில் பரவும். இரு வழி முறைகளும் மிகவும் அவசியம். இவ்விதம் எல்லோருடைய குறை சொல்வதும் முடிவடையும். ஆரம்பத்தில் மனிதர்கள் கேட்டார்கள் ஏன் இன்னும் மைதானத்தில் இறங்குவதற்கு தயாராகவில்லை? என்று. இப்பொழுது நீங்கள் மைதானத்தில் இருக்கிறீர்கள். எல்லா இடங்களிலும் பெரிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆகவே குறையின் ஒலி நின்று விட்டது. முக்கியமாக வெவ்வேறு துறைகளிலிருந்து விசேஷ ஆத்மாக்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அந்தத் துறையிலுள்ளவர்களுக்கு செய்தியை அளிக்க, அத்துறையில் உள்ளவர்களுக்காக விசேஷ நிகழ்ச்சிகளை நடத்துங்கள். நீங்கள் எங்களை அழைக்கவில்லையே என்று எந்தத் துறையினரும் குறை கூறக்கூடாது. பெரிய நிகழ்ச்சிகளுக்கு முன், தொழில் துறையுள்ளவர்களின் குழுக்களுக்கு சேவை செய்யுங்கள். அவர்கள் தினமும் வகுப்புக்குத் தவறாமல் வரும் மாணவர்களாக மாட்டார்கள்,

ஆனால் மிக நெருங்கி வந்து அவர்கள் நண்பர்களாக சகயோகிகளாக உதவுவார்கள்.

இந்த ஆண்டு நீங்கள் செய்ய வேண்டியதை புரிந்து கொண்டீர்களா? முக்கியமாக வெவ்வேறு தொழில் துறையில் உள்ளவர்களுக்கு சேவை செய்யுங்கள். இரண்டாவதாக, பல கிளை நிலையங்களைத் தொடர்ந்து ஆரம்பித்து வையுங்கள். இறுதியில், பெயரைப் புகழ் பாட யக்ஞ சேவைக்காக எல்லா சாலிக்கிராமங்களும் ஒருங்கிணையட்டும். சுற்றுப்புறம் எங்கும் சேவையில் சகயோகம் என்கிற தியாகம் பெருகியிருக்கும்போது சிரேஷ்ட யக்ஞம் வெற்றி பெறும். ஒவ்வொரு பிராந்தியமும், ஒவ்வொரு சேவைக் கேந்திரமும், இந்த மகா யக்ஞத்தில், சகயோகம் என்கிற தியாகத்தை எல்லோரும் ஒருங்கிணைந்து இட வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்போது வெற்றி முழக்கம் ஏற்படும்.

ஒவ்வொரு பிராம்மணனும் நிச்சயம் தியாகம் செய்ய வேண்டும் ராஜதானியின் உரிமையை அடையுமுன், ராஜதானியின் தலைநகரில் தன் மனம், உடல், பொருள் மூலம் சேவை செய்வதனால் அஸ்திவாரம் இடவேண்டும். தலைநகருக்கு எல்லாருக்கும் உரிமை உண்டு. ஆகவே எல்லோருடைய சகயோகம் என்கிற தியாகம் அவசியம். ஒன்றும் செய்ய இயலாவிட்டாலும், வெகு தூரத்தில் இருப்பினும், உங்களுடைய நம்பிக்கை, உற்சாகத்தை இந்த யக்ஞத்தில் தியாகம் செய்யுங்கள், அப்பொழுது வெற்றி ஒலி எழும்பும். எங்கு அத்தகைய விசேஷ காரியம் நடந்தாலும், ஒவ்வொரு பிராம்மணனின் நம்பிக்கை, உற்சாகத்தை தியாகத்திற்காக அளியுங்கள். ஒவ்வொரு பிராம்மணனிடமிருந்தும் மற்ற ஆத்மாக்களின் நன்மைக்காக சுப சங்கல்பத்தின் பங்கு இருத்தல் அவசியம். பக்தி மார்க்கத்தில், சிரேஷ்ட காரியங்களை செய்யும்போதோ அல்லது விசேஷ யக்ஞத்தை நடத்தும்போது எல்லா பிராம்மணர்களுக்கும் ஒரு பங்கை ஒதுக்கிவைக்கிறார்கள். எல்லா பிராம்மணர்களின் பெயராலும் தியாகம் செய்கிறார்கள். அந்த நியமங்கள் இங்குதான் துவங்கின.

உங்களுக்குப் புரிந்ததா? புதிய ஆத்மாக்களை நட்பு கொண்டு, மதுபன்னிற்கு அழைத்து வாருங்கள், பிறகு சேவைக்கு அழைத்து

வாருங்கள். யோகப்பயிற்சிக்காக அவர்களை மதுபன் அழைத்து வருகிறீர்கள் அல்லவா? முதலில் தொடர்பு கொள்ளுங்கள், பிறகு யோகப் பயிற்சிக்கு மதுபன் அழைத்து பாருங்கள், பிறகு அவர்கள் யக்ஞ சேவைக்கு சகயோகிகளாவார்கள். ஒவ்வொரு வரும் எந்த அளவு சகயோகியாகயிருந்தனர் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அச்சா, மதுபன்வாசிகளின் கேள்விகள் முடிந்து விட்டனவா இல்லையா? சம்பூர்ண ஸ்திதி, சம்பூர்ண முற்றுப்புள்ளி. ஆத்மா எல்லாப் பிராப்திகளாலும் நிரம்பியிருந்தால், தானாக முற்றுப்புள்ளி வைக்கும். ஏதாவது ஒரு பகுதியில் பலகீனம் இருந்தால், கேள்விகள் தோன்றும். மனம் திறந்து பேசுவது ஒரு வகை, கேள்விகள் கேட்பது வேறு வகை.

இரட்டை அயல்நாட்டவர், பாரதவாசிகள் இருசாரார் மிகவும் பாக்கியம் செய்தவர்கள். பாபாவைச் சந்திக்கும் சந்தர்ப்பமும், அவருடன் மனம் திறந்து பேசுகின்ற சம்பாஷணையும் முன் அறிவிப்பின்றி திடீரென்று முடிந்து விடும். பாபாவின் ஸ்தல பங்கு முடிவதைப் பற்றி ஏதாவது முன் எச்சரிக்கை அளிக்கப்பட்டதா? முடிவு எப்பொழுது வரும் என்பதை அறிவிக்க இயலாது. ஆகவே அது முடியும்போது, இறுதி முடிவும் வரும். நிகழ்ச்சிகளை நடத்த இயலாதவாறு இருக்கும். அது திடீரென்று ஏற்படும். ஆகவே நீங்கள் செய்யவேண்டியதை இப்பொழுதே செய்து விடுங்கள். சேவையின் சந்தர்ப்பத்தை உபயோகித்து, நீங்கள் விரும்பும் அளவு பிரஜைகளை உற்பத்தி செய்யுங்கள். பிரஜைக்குப் பிறகு, பக்தர்களின் மாலை ஆரம்பம் ஆகும்போது, பிரஜைகளின் உற்பத்தி முடிந்து விடும், வாரிசுகளை உண்டாக்க முடியாது. அந்தக் காலம் முடிந்து விட்டது. இப்பொழுது வருவோரில் பெரும்பாலோர். வாரிசுக்கு உரியவர்கள் அல்லர். செல்வந்தர் பிரஜைகள், சாதாரண பிரஜைகள், பிறகு சேவகர் சேவியர். பிறகு சேவகர்களுக்கு சேவை செய்யும் சேவகர்கள், பிறகு பக்தர்கள், ராஜதானியை நடத்துவதில் சகயோகம் தரும் பிரஜைகளும் வருவார்.கள். அவர்கள் ராஜ சபையில் இடம் பெறுவார்கள், பெயரளவில்தான் பிரஜைகள், அவர்கள், ஆனால் ராஜ குடும்பத்திற்கு சமமானவர்கள். அவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க மாட்டார்கள் ஆனால் அரச குடும்பத்தினருடன் மிகவும் நெருங்கியிருப்பார்கள். பெரும்பாலானவர்கள் பிரஜைகள்

ஆனால் மிக சில வாரிசுகளே தோன்றும் காலம் இது. வாரிசுகள் தோன்றும் காலம் முடிந்து விட்டபோதிலும், இன்னும் 'காலம் கடந்து விட்டது' (late) என்ற அறிவிப்பு வெளியாகாததால், சில பிரஜைகள் தோன்றுவதற்கு இன்னும் உள்ளது.

பிரஜைகளை உண்டாக்கும் காலம் இது ஆனால் இந்த காலமும் முடியும் நேரம் வரும். இது உண்டாக்க நல்ல சமயம் ஆனால் பிறகு பக்தர்களின் மாலை துவங்கும்போது, சாதாரண பிரஜைகள் வெகு சிலரே தோன்றுவார்கள். ஆகவே இன்னும் நல்ல சந்தர்ப்பம் உள்ளது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 28.11.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சம்பூர்ண நிலை அடையும் வழி!

இன்று ஒவ்வொரு குழந்தையின் இரட்டை சொரூபங் கள் காணப்படுகின்றன. எந்த இரட்டை சொரூபங்கள்? முதலாவது தற்சமயம் முயற்சிப்பவரின் உருவம், இரண்டாவது இப்பிறவியின் இறுதியில் அடையும் சம்பூர்ண பரிஸ்தா சொரூபம். "நான் எப்படி இருந்தேன், நான் எப்படி இருப்பேன்" என்கிற தற்சமயம் உள்ள மந்திரம், முதலில் 'நான் பரிஸ்தா'. வருங்காலத்தில் 'நான் தேவதை' என்பதையேக் குறிக்கிறது.

இன்று சூட்சும வதனத்தில், எல்லா குழந்தைகளும் முயற்சியின் 'கிரமப்படி' பரிஸ்தா உருவத்தில் தோன்றுகின்றனர். முயற்சிப்பவரின் நிலைக்கும், சம்பூர்ண நிலைக்கும் உள்ள வேறுபாட்டை, சாகார பிரம்மாவுக்கும் சம்பூர்ண பிரம்மாவுக்கும் உள்ள வேறுபாட்டிலிருந்து உணரலாம். அது போல, குழந்தைகளின் இன்றுள்ள நிலைக்கும். வருங் கால நிலைக்கும் இடையில் மாறுபாடு உள்ளது. காட்சி மிக அழகாக இருந்தது. கீழே முயற்சிப்பவரான தபஸ்வி யின் உருவம், மேலே எழுந்தருளியிருப்பது பரிஸ்தா உருவம்.

உங்களுடைய இந்த இரு உருவங்களையும் வெளிக் கொணர முடிகிறதா?... உயிருடைய சம்பூர்ண உருவம் தெரிகின்றதா?... சம்பூர்ண பிரம்மா. சம்பூர்ண பிராம்மணர்கள். பிரம்மாவின் சம்பூர்ண உருவிற்கும் உங்களுடைய சம்பூர்ண உருவத்திற்கும் உள்ள வித்தியாசத் திற்குக் காரணம் எல்லோரும் கிரமப்படி இருப்பது என்பதை எல்லோரும் உணரலாம்.

அங்கு என்ன நடந்தது? வரிசைப்படி பரிஸ்தா சொரு. பத்தில், அரசவையில் இருப்பதைப் போன்று பெரிய வட்ட மாக தோன்றினர். ஒளியில் வித்தியாசம் காணப்பட்டது. சிலருடையது மிகுந்த

பிரகாசமாகவும், சிலருடையது தடுத் தரமான ஒளியுடனும் இருந்தன. இந்த வித்தியாசம் முக்கியமாக நெற்றியில் ஒளி வீசும் ரத்தினமான ஆத்மா வின் ஒளியில் காணப்பட்டது. சிலருடைய ஒளி சுற்றுப் புறத்தில் வெகுதூரம் பரவவில்லை. மற்றும் சிலருடைய ஒளியே மங்கலாகக் காணப்பட்டது. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் ஒளியிலுள்ள வித்தியாசத்தையும் பார்வை யிட்டார். (உடல்) இயந்திர சாதனங்களின் மிகவும் அதிகம். வேகம் ஆனால் முயற்சிப்பவரின் ஸ்திதிக்கும், சம்பூர்ண ஸ்திதிக்கும் இடையில் மிகுந்த வித்தியாசம் காணப்பட்டது. விஞ்ஞான சாதனங்களின் வேகம் மிகுந்திருப்பதுபோல் காணப்பட்டது. இல்லாமல், முயற்சி குறைவாகக் காணப்பட்டது.

**வெறும் கிரஹிக்கும் சக்தி அல்ல, குணங்களை கிரஹிக்கும் சக்தி!**
இந்த முடிவு பற்றி பாப்தாதா மனம் விட்டுப் பேசினார். கூறினார் பிரம்மாபாபா கூறினார் "என் எல்லாக் குழந்தைகளும் ஞானம் நிறைந்தவர்கள்". சிவபாபா 'ஞானம் நிறைந்திருப்பது மட்டுமின்றி, திரிகால தரிசி யாகவும் இருக்கிறார்கள்". அவர்கள் புரிந்து கொள்வதிலும், புரியவைப்பதிலும் மிகவும் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். தந்தையைப் பின்பற்றுவதிலும் கெட்டிக்காரர்கள் அவர்கள். அவர்கள் படைப்பவர்களாகவும், கண்டு பிடிப்பவர்களாகவும் மாறியுள்ளனர். ஆகவே பாக்கி என்ன இருக்கிறது? இருப்பினும் ஏன் மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது? இதன் காரணம் என்ன? மிகச் சிறிய விஷயம்தான் காரணம். பிரம்மாபாபா கூறினார் "குழந்தைகளிடம் கிரஹிக்கும் சக்தி மிகுந்துள்ளது! அதனால் ஞானம், குணம், சக்திகளை மட்டும் கிரஹிப்ப தோடு நிற்காமல், மற்றவர்களின் பலஹீனங்களையும் குறைகளையும் கிரஹித்துக்கொள்ளும் மிகுந்த சக்தி கொண்டிருக்கிறார்கள். கிரஹிக்கும் சக்திக்குமுன், 'நற்குணம்' என்ற சொல்லை வைக்க மறந்து விடுகிறார்கள். இதனால் நற்குணங்களை கிரஹித்துக் கொள்ளும்போது, பலவீனங்களையும் சேர்த்து கிரஹித்து விடுகிறார்கள்.

பிறகு என்ன செய்கிறார்கள்?...... பிறகு ஒரு விளையாட்டு அங்கு நடைபெறுகிறது. உங்களுடைய பொருட்காட்சி சாலையில் ஒரு சித்திரம் உள்ளது. அந்தச் சித்திரம் ஒரே மாதிரி இருந்தாலும், உங்களுடைய சித்திரம் வேறு ஒரு லட்சியத்திற்காக

வரையப்பட்டுள்ளது. சாந்தி தாதா யார் என்பதே அந்த சித்திரம். அவ்வாறே சில குழந்தைகளும் தோன்றுகின்றனர். பிறகு என்ன ஆயிற்று? முதல் எண்ணில் வரும் குழந்தையிடம் உள்ள குறையை எடுத்துக் காட்டி முயற்சிப்பவரான அவரிடம் இக்குறை இருக்கச் கூடாது என்று சொல்லப்பட்டது. பிறகு என்ன நடந்தது? அவர் மற்றவர்களை நோக்கி கை அசைத்து, 'அக்குறை என்னுடையதல்ல, அது மற்றவர்களுடையது' என்றார்.

இரண்டாமவர் கூறினார் -மூன்றாமவர் அவ்வாறு செய்தார், ஆகவே நானும் அவ்வாறே செய்தேன்.

நான்காமவர் கூறினார் -மகாரதிகளும் இதைச்செய்கிறார்களே!

ஐந்தாமவர் கூறினார் "யார் சம்பூர்ண நிலையை இது வரை அடைந்துள்ளனர்?

ஆறாமவர் கூறினார் "இது இப்படித்தான் நடக்கும்".

ஏழாவது குழந்தை கூறினார் “நாம் சம்பூர்ணம் அடைந்திருந்தால், இப்பொழுது சூட்சும வதனம் சென்றிருப்போம்."

எட்டாவது குழந்தை கூறினார், "பாப்தாதா சமிக்ஞை புரிகிறார், நாம் செய்யவும் வேண்டும், ஆனால் நாம் விரும்பாவிட்டாலும் இப்பெரிய கூட்டத்தில் ஏதாவது ஒன்று நிச்சயமாக நிகழும்'.

லட்சியம், லட்சணம்! ஆகவே முயற்சிக்கும்போது, மற்றவர்களிடம் குறை காண ஆரம்பித்து விடுவதால், அந்த முயற்சியே மறந்து விடுகிறது. இப்பொழுது இவ்வாறான விளையாட்டு அதிகம் காணப்படுகிறது. இதன் 'காரணமாக லட்சியத்திற்கும், லட்சணத்திற்கும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. ஆகவே இதன் விளைவு என்ன? இக்குறை காணும் சமஸ்காரம் இருப்பதால், சம்பூர்ண சமஸ்காரங்கள் தோன்றுவதில்லை. ஆகவே பாப்தாதா கூறினார், இந்த விளையாட்டின் காரணமாக, முயற்சிப்பவர் சம்பூர்ணமாவதில்லை. மூல காரணம் கிரஹிக்கும் சக்தி, ஆனால், குண கிரஹண சக்தி குறைவாக உள்ளது. இரண்டாவது காரணம் தனது தவறை உணர்ந்து ஏற்றுக் கொள்ளாமல், மற்றவர் மீது பழி சுமத்துவது, ஆகவே பாப்தாதா கூறுகிறார், ஞானம் நிறைந்து குழந்தைகள் விளங்குகிறார்கள். ஆகவே தாங்கள் தப்பித்துக் கொள்வதில் புத்திசாலிகளாக இருக்கிறார்களே தவிர தங்களை மாற்றிக் கொள்வதில்லை. மேலும் ஒரு காரணமும் உண்டு. அது எது? இக் காரணத்தினால் பிரத்யட்சப்படுத்துவதில் மிகுந்த தாமதம் ஏற்படுகிறது.

**சுய சிந்தனை, சுப சிந்தனை செய்!** அக்காரணமாவது சுய சிந்தனை. தனக்காக சுய சிந்தனை. மற்றவர்களுக்காக சுப சிந்தனை. சுய சிந்தனை என்றால் விசார சாகர மந்தன். சுப சிந்தனை என்றால் மற்றவர்களுக்கு புரியும் சேவை.

வாய்மூலம் சேவை செய்யுமுன், சுப சிந்தனைமூலம் முன்னேற்பாடு செய்யும்வரை, வாய்மூலம் பலன் கிட்டாது. ஆகவே சுபசிந்தனைதான் ஆதாரம். இந்த சுபபாவனை மற்ற சேவையின் சேவையின் ஆத்மாக்களின் கிரஹிக்கும் சக்தியை அதிகரிக்கும், தங்களுடைய சக்தியை யும் அதிகரிக்கச் செய்யும். இதன் காரணமாக வாய்மூலம் செய்யும் சேவை சகஜமாகவும், வெற்றி அடைவதாகவும் ஆகும். ஆகவே சதா சுபசிந்தனை உள்ளவர்கள், மாயா ஃப்ரூப் (proof) ஆகவும், மற்றவர்களின் பலவீனங்களை கிருஹிப்பதிலும் ஃப்ரூப் ஆகிறார்கள், மற்றவர்களானாலும், மற்றவைகளாலும் கவரப்படுவதிலும் ஃப்ரூப் ஆகிறார்கள்.

இவ்வாறு இரண்டாவது காரணத்திற்கும் நிவாரணம் தரப்பட்டுள்ளது -சுப சிந்தனை, சுயசிந்தனை செய்யுங்கள். மற்றவர்களைப் பார்க்காதீர்கள். உங்களையே பார்த்துக் கொள்ளுங்கள். முயற்சிப்பவர்களான உங்கள் எல்லோ ருடைய சுலோகம் “என்னைப் பார்த்து, மற்றவர் செய்வார்' என்பதே தவிர 'மற்றவர்கள் செய்த பிறகு நான் செய்வேன்' என்பதல்ல.

இச்சமயம் பாப்தாதா என்ன காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்? இறுதி மாலையைத் தொடுப்பதற்கு சுலபமாக, மணிகளை தனித்தனிப் பிரிவுகளில் பிரித்துவைக் கிறார். இதனால் குறுகிய காலத்தில் மாலையைத் தொடுத்து விடலாம் அல்லவா? எப்பகுதியில் நீங்கள் வருகிறீர்கள் என்பதுபற்றி நீங்களே உங்களை சோதனை செய்துகொள்ளுங்கள். முதல் பிரிவு அஷ்டரத்தினங்கள், இரண்டாவது நூறு, மூன்றாவது பதினாறு ஆயிரம். முதல் பிரிவின் அடையாளம் என்ன? முதல் எண் பிரம்மாபாபா, அவரையே பாருங்கள். பார்ப்பதிலும் நீங்கள் புத்திசாலிகள் அல்லவா, எல்லோரையும் கவனிப்பதை விட்டுவிட்டு ஒருவரையே கவனியுங்கள். இது சகஜமான காரியமா, இல்லை சிரமமானதா? சகஜம் அல்லவா! ஆகவே அஷ்ட

ரத்தினங்களில் வந்து விடுவீர்கள். ஏற்கனவே இரண்டாவது, மூன்றாவது பிரிவுகளைப் பற்றி, நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

பாக்கியங்களை அடைவதில் முதலில் நிற்பதுபோல், தியாகத்திலும் 'நான் முதலில்' என்று இருங்கள். எல்லா பிராம்மண ஆத்மாக்களும் தியாகம் செய்யும்போது 'நான் முதலில்' என்று எப்பொழுது முன்வருகிறார்களோ, அப்பொழுது பாக்யம் என்கிற மாலை எல்லோருடைய கழுத் திலும் சூட்டப்படும். வெற்றி மாலையை எடுத்துக் கொண்டு முயற்சிப்பவரின் கழுத்தில் சூட்டினால், உங்களுடைய சம்பூர்ண சொரூபம் அருகாமையில் வரும். அந்த சொரூபம் உங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. நான் ஒரு ஃபரிஸ்தா என்ற மந்திரத்தை உறுதி செய்து கொண்டால், விஞ்ஞான யந்திரங்கள் தங்கள் கடமையைச் செய்யத் துவங்கும். "நான் இப்பொழுது ஒரு ஃபரிஸ்தா. இனி நான் ஒரு தேவதையாக புதிய உலகில் அவதாரம் செய்வேன்." இவ்வாறு சாகார பாபாவை பின்பற்றுங்கள். சாகார பாபாவை பின்பற்றுவது சுலபம் அல்லவா! ஆகவே சம்பூர்ண பரிஸ்தா நிலை அடைவதென்றால், சாகார பாபாவை பின்பற்றுவதே.

இவ்வாறு சுயசிந்தனை, சுப சிந்தனை கொண்டுள்ள, சதா தந்தையைப் பின்பற்றும், சுய பரிவர்த்தனை மூலம் விஸ்வ பரிவர்த்தனை செய்யும், விஸ்வ கல்யாணகாரி, சர்வ ஆத்மாக்களிடமும் மரியாதை செலுத்தும், தியாகத்தின் முன்னிலையில் நிற்கும், அத்தகைய சிரேஷ்ட பாக்கியசாலி, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின், நினைவு, அன்பு, நமஸ்தே! ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 30.12.1980 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிநேகம், சகயோகம், மற்றும் சக்தி சொரூபத்தின் சோதனைத்தாள், அதன் முடிவும்!

இன்று பாப்தாதா சுற்றிலும் உயர்ந்த குழந்தைகளைக் காண்கிறார். நிறைந்த அன்புடனும், நினைவுடனும், வெகு தூரத்தில் இருந்தாலும், அன்பின் ஆதாரத்தினால் மிக அருகாமையில் குழந்தைகளின் எண்ணங்கள் காணப்படுகின்றன. நன்கு சேவை புரியும், ஒத்துழைக்கும் குழந்தைகள் எப்பொழுதும் பாப்தாதாவுடன் கூடவே இருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய அன்பின், சினேகத்தின் ஆதாரத்தில், சகயோகம், சக்தி சொரூபமாக விளங்கும் மிக உயர்ந்த உருவத்தை பாப்தாதா காண்கிறார். மூன்று விசேஷங்களிலும், ஆரம்பத்திலிருந்து குழந்தைகள் அடைந்துள்ள மதிப்பெண்களை பாப்தாதா பார்க்கிறார். அன்பு -இதில் மூன்று விசேஷங்கள் காணப்பட்டன.

முதலாவது, இடைவிடாத அன்பு: எத்தனை இன்னல்கள் ஏற்பட்டாலும், அன்பு என்கிற நூலிழையை யார் துண்டிக்க எத்தனித்தாலும், அந்த மதில்சுவர்களை ஆத்மா தாண்டி, அன்பு என்கிற நூலிழையை துண்டிக்க விடாமல் வைத்திருக்கின்றனர். காரணம் அல்லது பலவீனங்கொண்டு திரும்பத்திரும்ப முடிச்சுகளைப் போட வேண்டிய அவசியம் இல்லை. அதைகைய இடையறாத அன்பு ஆகும்.

இரண்டாவது, சர்வசம்பந்தங்கள்: அந்த ஒன்றிடம் உள்ள சகல சம்பந்தங்களின் பிராப்திகளால் சதா நிரம்பிக் காண்கிறார்கள், எந்த சம்பந்தமும் குறைவில்லை.

மூன்றாவது, அன்பின் சொரூபம்: தாங்கள் அன்பின் சொரூபமாகத் திகழ்வதின் மூலம் ஞானத்தின் மீதுள்ள அன்பினால் மட்டும்

ஈர்க்கப்படாமல், பவித்திரத்தின் மீதுள்ள அன்பினால் மட்டும் வசீகரிக்கப்படாமல், குழந்தையின் வாழ்வின் பரிவர்த்தனையின் அன்பின் காரணமாக மட்டுமல்லாமல், உயர்ந்த ஆத்மாக்களின் மீதுள்ள அன்பின் காரணமாக மட்டுமல்லாமல், மற்ற ஆத்மாக்கள் நேரடியாக பாபாவின்மீது சிநேகம் ஏற்படச் செய்வது ஆகும். நீங்கள் நல்லவர்', நன்றாக உள்ளது', அல்லது 'இவ்வாழ்க்கை நன்றாக ஞானம் உள்ளது என்று கூறச் செய்யாமல், எல்லாவற்றிலும் சிறந்தவர் பாபா என்று கூறும்படி செய்வது சாலச் சிறந்தது. மற்றவரை பாபாவிடம் அன்பு கொள்ளச்செய்வது என்பது இதுதான். அன்பு என்கிற விசேஷத்தில் இந்த மூன்று சிறப்புகள் காணப்படுகின்றன.

சகயோகம்: என்கிற விசேஷத்திலும் 3-சிறப்புகள் காணப்படுகின்றன. முதலில், ஆசையில்லாமை சகயோகம் அளித்தார்களா?
இரண்டாவதாக, மனம், வாக்கு, செயல், உறவுகள், தொடர்புகள் ஆகிய அளித்தார்களா? எல்லா வகையிலும் சகயோகம்?
மூன்றாவதாக, எத்தனை ஆத்மாக்களை இத்தகைய தகுதி வாய்ந்த உண்மையான சகயோக ஆத்மாக்களாக மாற்றினார்?

மூன்றாவது மிகவும் விசேஷமானது, சக்தி சொருபம்: முதலில் வெறும் சக்தி அடைந்திருக்கிறார்களா அல்லது மாஸ்டர் சர்வ சக்திவானாக உள்ளவரா?
இரண்டாவது, தேவைப்படும்போது என்கிற இரண்டாவது ஆயுதத்தினால் ஒளியை அடைகின்றனரா இல்லை ஆயுதங்களைப் பூட்டி வைத்து விட்டனரா?
மூன்றாவதாக, தாங்களே சர்வசக்திகளையும் அடைந்த ஆதாரத்தினால், மற்றவர்களை மாஸ்டர் சர்வ சக்திவானாக எந்த அளவு மாற்றியுள்ளனர்?

முடிவு: இந்த மூன்று விஷயங்களிலும் உள்ள விசேஷமும் சோதிக்கப்பட்டது. சோதனைத்தாள்கள் எவ்வாறு சோதிக்கப்படுகின்றன என்பது தெரியும். இன்று பற்றி உனக்குத் இந்த விடைத்தாள் சோதிக்கப்படுகிறது. இதன் முடிவு என்ன?... இந்த மூன்று பாடங்களிலும், சிலர் முழு மதிப்பெண்கள் பெற்று வெற்றி அடைந்துள்ளனர், சிலர் சாதாரண வெற்றிதான். சிலர் கருணையினால்

வெற்றி பெற்றுள்ளனர். இந்த மூன்று பாடங்களிலும் வரிசைப்படி வெற்றி பெற்றுள்ளனர். முழு வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை பாதிக்கும் குறைவு. சிலர் 70% பெற்று வென்றனர் ஆனால் பெரும்பான்மையோர் கருணை காட்டியதன் மூலம் வெற்றியடைய முடிந்தது.

வருங்காலத்தில் செய்ய வேண்டியதென்ன? தந்தையின் உருவத்தில் பாபா அளிக்கும் முடிவு இதுதான். இப்பொழுது தந்தையாக இருந்து மதிப்பீடு செய்கிறார் ஆனால் இறுதித் தேர்வில் தந்தையுடன், தர்மராஜ் இருப்பார். இறுதி முடிவுக்கு முன் ஒரே ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இறுதிச் சந்தர்ப்பம் இது. அது எது?

முதலில் அழிக்க இயலாத தியாகத்தை இதயத்தில் படுத்துவதன் மூலம், பழைய செயல்களின் சமஸ்கார எரித்து விடுவது இரண்டாவது, தியாக நெருப்பை எரிய வைப்பதுடன், ஈஸ்வரிய மரியாதைகளையும், பண்பாடுகளையும், அதிகாலை அமிர்த வேளை முதல், இரவு வரை சதா பின்பற்றுவதாக பிரத்யக்யையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக சதா மஹாதானியாகி, பிரஜைகளுக்குத் தானம் அளிக்கும் வள்ளல் ஆக மாறுங்கள், பிராம்மணர்களுக்கு சதா சகயோகம் அளிக்கும் வள்ளல் ஆக மாறுங்கள். அழியாத தான தர்மங்களை சதா செய்து வாருங்கள், மனம், வாக்கு, செயல், உறவு ஆகியவற்றின் மூலம், தாண்டிக் குதித்து இரட்டை ஒளி ஆகுங்கள். இத்தகைய உயர்ந்த முயற்சியின் மூலம் பறக்கும் பறவையாகி, உயர்ந்த குறிக்கோளை அடையுங்கள். அத்தகைய முயற்சிகள் மூலம், உயர்ந்த குறிக்கோளை அடைய இன்னும் ஒரு சந்தர்ப்பம்தான்உள்ளது, புரிகிறதா?

ஆத்மாக்கள், கேட்டு, புரிந்து கொண்டு, இந்த இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவே இந்த சோதனை நடத்தப்பட்டது. பிரம்மாபாபா கூறினார் -முதலில் சாகார உருவின் மூலம் வளர்க்கப்படுகின்றனர், இப்பொழுது அவ்யக்த உருவம் மூலம் வளர்க்கப்படுகின்றனர். சாகார உருவின் மூலம் பல நேரங்களில், பல சந்தர்ப்பங்கள் பலருக்கு கிடைத்தன. இப்பொழுது சிலர் சூட்சும உருவில்

பேணப்படுகின்றனர் இன்னும் சிலர் சாகார, சூட்சுமம் ஆகிய இரு உருவங்களிலும் நன்மை அடைந்துள்ளனர்.

முதலில் வந்தவர்களைவிட, சூட்சும உருவின் மூலம் பேணப்படும் இறுதியில் வந்துள்ளவர்களுக்கு, இந்த சோதனையில் 25% அதிக மதிப்பெண்கள் அளிக்கப்படுகிறது. ஆகவே இறுதி சந்தர்ப்பத்தை யார் விரும்பினாலும் உபயோகப்படுத்தலாம். இறுதி பதவியை அடைவதற்கான விசில் இன்னும் ஊதப்படவில்லை. ஆகவே இச்சந்தர்ப்பத்தை உபயோகித்து, இருக்கையை அடையுங்கள்.

அச்சா, எல்லா ரகசியங்களையும் அறிந்துள்ள, சதா யோக யுக்தி நிலையில் உள்ள, எல்லாச் செயல்களையும் சீராகச் செய்யும், அத்தகைய சதா உயர்ந்துள்ள ஆத்மாக்களுக்கு; சதா சர்வ சக்தியுள்ள பாபாவுடன் இருக்கின்ற; அத்தகைய உள்ளத்தினால் வசீகரிக்கப்பட்டுள்ள, அத்தகைய ஆத்மீக ஆத்மாக்களுக்கு மகாதானி, வரதானியாக உள்ள ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு, நினைவு, நமஸ்தே. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂